# உதயன்

பக்கங்கள்

விலை ரூபா 30.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 062 வள்ளுவர் ஆண்டு 2044 தை 14 ஞாயிற்றுக்கிழமை (27/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily





ஆசியை வீழ்த்தியது இலங்கை 22

சிரமத்தின் மத்தியில் அறுவடை 07

8,935 வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு 05


## ஜெனிவாவுக்கு முன் இந்தியாவுக்கு மஹிந்த

கொழும்பு, ஜன. 27

எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடருக்கு முன்னதாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகிறது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக இந்திய அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஐ.ஏ.என்.எஸ். செய்திச் சேவை தகவல் வெளியிட்டுள்ளது.

புத்தகாயாவில் உள்ள மகாபோதி ஆலயத்தில், வழிபாடு நடத்தவே மஹிந்த ராஜபக்ஷ இந்தியா செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்ட போதிலும், ஜெனிவா அமர்வுகளை முன்வைத்தே அவர் இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதாக புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஆண்டு இடம்பெற்ற ஐ.நா. மனித உரிமை

பார்க்க பக்கம் 04

# கடுமையான பிரேரணை வருகின்றது இம்முறை

## இலங்கை வந்த அமெ. பிரதிநிதிகள் கூட்டமைப்புடன் கூடி ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜனவரி 27

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கடந்த ஆண்டு கூட்டத்தொடரின் போது இலங்கை மீது அமெரிக்காவினால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிரேரணையை இலங்கை தொடர்ந்தும் உதாசீனம் செய்து வருகின்றது. இதனால் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கை மீது நிறைவேற்றப்படவுள்ள பிரேரணை மிகக் கடுமையானதாக அமையவுள்ளது. அந்தப் பிரேரணையில் என்ன விடயங்களை உள்ளடக்குவது என்பது தொடர்பில் இலங்கை வந்துள்ள அமெரிக்க உயர்மட்டக் குழு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஆராய்ந்துள்ளது.

இலங்கை வந்துள்ள அமெரிக்க உயர்மட்டக் குழுவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் கொழும்பில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட

பார்க்க பக்கம் 04

## படகு விபத்தில் சிறுவர்கள் சாவு

குச்சவெளி, ஜன. 27

திருகோணமலை குச்சவெளி கடற் பிரதேசத்தில் படகு ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்கள் இருவர் நேற்று உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தின் போது உயிரிழந்தவர்கள் 13 வயதான சிறுமியும் 7 வயதான சிறுவனும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விபத்தின் போது பாதிக்கப்பட்ட இவர்களது தந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ரு 5)

## இந்திய மீனவரின் அத்துமீறலுக்கு எதிராகப் பேரணி

வவுனியா, ஜன.27

இந்திய மீனவர்களின் அத்துமீறலினால் வடது வளங்களும் மீனவ மக்களின் வாழ்க்கை முறையும் பாதிப்படைவதாகவும் அதனை தடுக்க கோரி போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பினரால் இன்று பேரணி நடத்தப்படவுள்ளது.

வவுனியா அம்மன் கோயில் வீதி பண்டாரிகுளத்தில் உள்ள போரால் பாதிக்கப்பட்ட மக்கள் அமைப்பினரை

பார்க்க பக்கம் 04

## அமெரிக்காவில் பயிற்சிக்குத் தடை; போர்க்குற்றச்சாட்டுகளே காரணம்

கொழும்பு, ஜன. 27

இலங்கைப் படையினர் மீதான போர்க்குற்றச்சாட்டுகளின் எதிரொலியாகவே, அமெரிக்காவில் இலங்கைப் படையினருக்கான பயிற்சிகள் மறுக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் லெஹி சட்டத்தின் அடிப்படையிலேயே, இலங்கையின் உயர்மட்டப் படை அதிகாரிகளுக்கான கட்டளைப் பயிற்சிநெறி வாய்ப்புக்களை அமெரிக்கா நிறுத்தியுள்ளது.

இந்தச் சட்டம், மனித உரிமைகளை மீறிய - போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகிய - வெளிநாட்டுப் படையினருக்கான அமெரிக்காவின் இராணுவ உதவிகளைத் தடை செய்கிறது. இந்தச் சட்டத்தின் மூலம் இலங்கைக்

பார்க்க பக்கம் 04



இந்தியாவின் 63 ஆவது குடியரசு தினம் யாழ்ப்பாணம், நல்லூர், மருதடி வீதியில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தில் கொண்டாடப்பட்டது. இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம் இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்து வணக்கம் செலுத்துகிறார். (ம-13)

## இந்தோனேஷிய முகாமிலிருந்து இலங்கையர்கள் வேறுதீவுக்கு

கொழும்பு, ஜன. 27

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவுக்கு செல்லும்போது கைது செய்யப்பட்டு இந்தோனேஷிய முகாமிலிருந்து இலங்கையர்கள் சிலர் வேறு தீவுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்தோனேஷியாவின்பாடன்

பார்க்க பக்கம் 04

## கண்ணிவெடியில் சிக்கி இளைஞர் சிதறிச் சாவு

### அவருடன் சென்ற ஒருவர் கைது; மற்றொருவர் மாயம்

வடமராட்சி, ஜன.27

கண்ணிவெடிகள் நிறைந்துள்ள நாகர்கோவில் கிழக்குப் பகுதியில் பழைய இரும்பு, தேக்கங் கட்டைகளைச் சேகரிக்கச் சென்ற மூன்று இளைஞர்களில் ஒருவர் கண்ணிவெடி வெடித்ததில் உயிரிழந்தார். மற்றைய இருவரில் ஒருவர் மருத்திதுறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மூன்றாமவர் தலைமறைவாகியுள்ளார்.

பார்க்க பக்கம் 04

## ஆஸ்திரேலிய எதிர்க்கட்சியின் பிரதித் தலைவர் யாழ். வருகிறார்

கொழும்பு, ஜன. 27

ஆஸ்திரேலியாவின் எதிர் கட்சி பிரதித் தலைவர் ஜூலி பிஷப் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து இங்குள்ள நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு வார காலப் பயணமாக இலங்கைக்கு இன்று ஞாயிற்றுக் கிழமை வரும், ஆஸ்திரேலியாவின் எதிர்க் கட்சி பிரதித் தலைவர் ஜூலி பிஷப், இலங்கையில் இடம்பெறும் ஆள்கடத்தல்

பார்க்க பக்கம் 04

## தேயிலை வியாபாரத்திலும் மூக்கை நுழைக்கிறது சீனா!

கொழும்பு, ஜன. 27

இலங்கையின் முக்கிய ஏற்றுமதி வர்த்தகமாக திகழும் தேயிலை வியாபாரத்திலும் சீனா களமிறங்கியுள்ளது. தனது நாட்டுக்குத் தேவையான விசேட தேயிலை, இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் சீனா உற்பத்தி செய்யவுள்

பார்க்க பக்கம் 04

## இலங்கை மீதான அமெரிக்க பிரேரணையை ஜெனிவாவில் இந்தியா ஆதரிக்க வேண்டும்

### தி.மு.க. தலைவர் கருணாநிதி வலியுறுத்து

சென்னை, ஜன. 27

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கை மீது கண்டனப் பிரேரணை நிறைவேற்றப்படவுள்ளது. உலக நாடுகள் ஒன்று சேர்ந்து இலங்கையின் மனித உரிமை மீறல்களையும், அங்குள்ள ஈழத் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் கேள்வி எழுப்பவுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் எம்முறையாவது இந்திய அரசு, இலங்கை அரசுக்கு எதிராகச் செயற்பட வேண்டும். தமிழகத்திலுள்ள தமிழர்களின் எதிர்பார்ப்பு இதுவாகத்தான் இருக்கின்றது. இந்த விருப்புக்கு இந்திய அரசு செவிசாய்க்க வேண்டும்.

இவ்வாறு தி.மு.க தலைவர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதி, டெசோ மாநாடு மீண்டும் கூட்டப்படவுள்ளது. இந்த மாநாடு தொடர்பில் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு

பார்க்க பக்கம் 04






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிகாயத்துக்கு உள்ளான பல்கலை. மாணவி சிகிச்சை பயனின்றி சாவு

யாழ்ப்பாணம், ஜன. 27

எரிகாயங்களுக்கு உள்ளாகி ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவி சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது. சம்பவத்தில் யாழ். புகையிரத நிலைய வீதியைச் சேர்ந்த துரைராஜா துளசிகா (வயது 23) என்பவரே உயிரிழந்தார்.

இவர் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவியாவார்.

தனது வீட்டில் மண்ணெண்ணெயை ஊற்றித் தனக்குத்தானே தீ மூட்டிக்கொண்டார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

உடல் முழுதும் எரிகாயங்களுக்குள்ளான அவரை உடனடியாகவே உறவினர்கள் வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர்.

எனினும் சிகிச்சை பயனளிக்கவில்லை. நேற்றுப் பிற்பகல் 2.30 மணி அளவில் அவர் உயிரிழந்தார். சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-4-86)

## டெங்கு, நெருப்புக் காய்ச்சலுக்கு 17 பேர் இலக்கு

யாழ்ப்பாணம், ஜன. 27

டெங்கு மற்றும் நெருப்புக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுக் கடந்தவாரம் 17 பேர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதில் டெங்கு காய்ச்சலினால் 9 பேரும், நெருப்புக் காய்ச்சலினால் 8 பேரும் பீடிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், சங்கானை, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவுகளிலிருந்து டெங்கு, நெருப்புக் காய்ச்சலினால் இவர்கள் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலைத் தரப்பு கூறுகிறது. (ஐ-4)

## கச்சதீவு அந்தோனியார் உற்சவம் முன்னேற்பாடு குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம்,ஜன.27

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி சனிக்கிழமை முதல் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவத்துக்கான ஏற்பாடுகள் தொடர்பான கூட்டம் நேற்று சனிக்கிழமை யாழ். செயலகத்தில் யாழ்.அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்த முறை உற்சவ காலத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து ஏற்பாடுகள் குறித்தும் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இந்த வருடம் உற்சவத்துக்கு கடந்த காலங்களை விட கூடுதலான யாத்திரிகர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால், இந்தியத் தரப்பில் இருந்து வரக்கூடிய பக்தர்களின் விவரங்களை முன்னதாகவே தமக்கு அறியத் தரும்படியும் இந்தியத் தூதுவராலய உதவி அதிகாரியிடம் கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் வவுனியா நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையுடன் தொடர்பு கொண்டு இரண்டு குழாய்க் கிணறுகளை அமைப்பது குறித்து நடவடிக்கை எடுப்பது, கோயிலுக்கு வரும் யாத்திரிகர்களது சுகாதார வசதிகளை உரியமுறையில் கவனிப்பது, போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்துவது, இதற்கென கடற்படையினரின் கண்காணிப்பு மற்றும் உதவி வழங்குதல் என்பனவும் கோரப்பட்டது.

அத்துடன் எதிர்வரும் திங்கட்கிழமை கச்சதீவுக்குச் சென்று அங்கு மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் குறித்து பார்வையிட்டுத் திரும்பவும் தீர்மானிக்கப்பட்டது.

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடபகுதிக் கடற்படைக் கட்டளை அதிகாரி, யாழ்.குருமுதல்வர், நெடுந்தீவுப் பங்குத் தந்தை, இந்தியத் தூதுவராலய அதிகாரி, நெடுந்தீவு கடற்படை அதிகாரி, திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஐ-07)

## காங்கேசன் துறைமுக ஆழமாக்கும் பணிகள் விரைவில் ஆரம்பமாகும்

### துணைத் தூதர் மகாலிங்கம் உரை

யாழ்ப்பாணம்,ஜன.27

காங்கேசன்துறை முகத்தினை ஆழமாக்கும் செயற்றிட்டமும் மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. துறைமுகம் புனரமைக்கப்பட்டால் அங்கு 10 கப்பல்கள் தரித்து நிற்க வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இவ்வாறு தெரிவித்தார் இந்தியத் துணைத் தூதர் வி.மகாலிங்கம்.

இந்தியாவின் 63 ஆவது குடியரசு தினம் நேற்று மருதடி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் கொண்டாடப்பட்டது.

அந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்புப் பணிகளில் இந்தியா தனது பங்களிப்பை வழங்கியுள்ளது. இதன்போது எமக்கு ஆதரவாக இருந்து செயற்பட்ட இலங்கை அரசுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

கடந்தவருடம்ஜூலை மாதத்தில் இந்திய அரசால் வழங்கப்பட்ட துரித வீடமைப்புத் திட்டத்தின் முதற்கட்ட பணிகள் நிறைவடைந்துள்ளன.

இரண்டாவது கட்டத்தில் வடபகுதியில் 40 ஆயிரம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இந்தத் திட்டம் கடந்த ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதே போன்று இந்த வருடம் மார்ச் மாதத்தில் 11 ஆயிரம் வீடுகளுக்கான முதற்கட்ட வேலைகளை பூர்த்தி செய்ய தீர்மானித்துள்ளோம்.

இந்திய அரசின் உதவியுடன் வடபகுதிக்கான ரயில் பாதை நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அந்தப் பணிகள் இந்தாண்டு டிசெம்பர் மாதத்தில் பூர்த்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளுக்கு ரூபா 110 மில்லியன் இலங்கை ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கபட் டுள்ளன.

கடந்த டிசெம்பர் மாதத்தில் மன்னார் மாவட்டத்தில் உள்ள 175 மீன்பிடி பயனாளிகளுக்கு மீன்பிடி வள்ளங்கள் வழங்கப்பட்டன.

இந்தியன் வங்கி வட்டுக்கோட்டை வடக்கில் இரண்டாவது கிராமம் ஒன்றினை உருவாக்கியுள்ளது- என்றார். (ஐ-13)

# புலம்பெயர் தமிழரின் அழுத்தங்களை ஏற்று சர்வதேசம் செயற்படக்கூடாது

## வெளிவிவகார அமைச்சர் கோரிக்கை

டில்லி, ஜன. 27

புலம் பெயர் தமிழர்கள் வழங்கும் அழுத்தங்களை ஏற்றுக் கொண்டு சர்வதேசம் செயற்படக் கூடாது. புலம் பெயர் தமிழர்கள் தாங்கள் வாழுகின்ற நாடுகளில், தங்களது நாட்டு அரசுக்கு இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொள்ள அழுத்தம் கொடுக்கின்றனர்.

எனவே இந்த அழுத்தங்களினால், எமது நாட்டின் உள்விவகாரங்களில் சர்வதேசம் தலையிடுவதை ஒரு போதும் நாம் ஏற்றுக் கொள்ளமாட்டோம்.

இவ்வாறு இந்தியா சென்றுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



இலங்கையின் உள்விவகாரங்களில் சர்வதேச தலையீடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. சில நாடுகளில் பெரும் எண்ணிக்கையிலான புலம்பெயர் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் அழுத்தங்கள் காரணமாக, சில நாடுகள் இலங்கை மீது கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன.

எனினும், வெளிநாட்டு சக்திகளின் அரசியல் உதைபந்தாக இலங்கை செயற்படாது. பெரிய வளங்கள் மற்றும் ஊடக வலையமைப்பின் ஊடாக இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகிக்க சில சக்திகள் முயற்சித்து செய்து வருகின்றன. பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கிய நாடு என்ற ரீதியில் உலக சமூகம் இலங்கைக்கு அனுதாபத்துடன் கூடிய ஒத்துழைப்பையே வழங்க வேண்டும்.

வெளிநாடுகளில் உள்ளவர்களின் நோக்கங்களின் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுக்க இடமளிக்க முடியாது.

13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்பது குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலமே தீர்வு காண முடியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பின்றி நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் பணிகளைத் தொடர முடியாது என்று ஜி.எல்.பீரிஸ் அந்த நேர்காணலில் கூறியுள்ளார். (த-5)

# புதிய ஊழியர்கள் நியமனம் குறித்து துணைவேந்தரின் நிலைப்பாடு என்ன?

## பகிரங்கப்படுத்த யாழ்.பல்கலை ஊழியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.பல்கலைக் கழகத்துக்கு கடந்த வருட இறுதியில் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவான 40 ஊழியர்களின் நியமனம் இடைநிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் துணைவேந்தர் தனது நிலைப்பாட்டை பகிரங்கமாகத் தெரிவிக்கவேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சங்கத் தலைவர் சி.தங்கராஜா அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

உயர் கல்வி அமைச்சு வழங்கிய பட்டியலிலிருந்து உரிய 40 பேர் வரையிலான கல்வித் தகைமை கொண்டோர் அனைவரும் பரீட்சைகள் மற்றும் நேர்முகத் தேர்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு அவர்களிலிருந்து 40 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்தப் பரீட்சைகளையும் நேர்முகத் தேர்வுகளையும் நடத்தியவர்கள் பல்கலைக் கழகத்தின் உயர் கல்வியாளர்களும் பீடாதிபதிகளுமே.

இந்த நியமனங்களுக்கு கடந்த செப்ரெம்பர் இடம்பெற்ற பல்கலைக்கழக பேரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்திருக்க வேண்டும், ஆனால் உயர்கல்வி அமைச்சு அலுவலகத்திலிருந்து தொலைபேசி அறிவுறுத்தல் கிடைத்ததாகக் கூறி இந்நியமனங்கள் பேரவையின் அங்கீகாரம் பெறப்படவில்லை.

கடந்த செப்ரெம்பர் மாதம் இவ்வாறு கூறிய எமது பல்கலைக்கழக நிர்வாகிகள் நவம்பர் மாதம் உயர்கல்வி அமைச்சின் செயலாளர் தமக்கு கிடைத்த சில புகார்களினைத் தொடர்ந்து இந்த விடயம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை இடைநிறுத்தி வைக்குமாறு கடிதம் மூலம் தெரிவித்ததாக கூறினார்.

எனினும் 2 மாதங்கள் கடந்த பின்னரும் அப்புகார்களில் கூறப்பட்ட குற்றச்சாட்டுகள் என்ன என்பது பற்றியோ, அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பது பற்றியோ எதுவும் கூறமுடியாத கையாகாத நிலையிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகம் காணப்படுகின்றது. தனது பல்கலைக்கழகத்தின் உயர் கல்வியாளர்களும், பீடாதிகளும் மேற்கொண்ட தெரிவுகள் குறித்து சந்தேகம் எழுப்பப்படுகின்ற போதும் துணைவேந்தர் தொடர்ந்தும் வாளாதிருப்பது உயர்கல்வி அமைச்சின் செயலாளரின் சந்தேகத்தை துணைவேந்தரும் உறுதி செய்கிறார் என்ற தோற்றப்பாட்டையே ஏற்படுத்தும்.

இது குறித்து துணைவேந்தர் தனது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த வேண்டியது அவசியம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-16)

## தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவராக கெங்காதரன்

யாழ்ப்பாணம்,ஜன.26

இலங்கை தனியார் பஸ் சங்க உபதலைவராக பொ. கெங்காதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவராவார்.

இலங்கை தனியார் பஸ் சங்க பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நேற்று முன்தினம் கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் இடம் பெற்றது.

இதன் போது தலைவராக மீண்டும் கெமுனு விஜயரட்ணவும் உப தலைவராக கெங்காதரனும் தெரிவாகினர். (16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட நெற் செய்கையில் இந்த வருடம் எதிர்பாராத பாதிப்பு

## விளைச்சலில் பெரும் வீழ்ச்சி நிலை

அச்சுவேலி,ஜன.27

*யாழ். மாவட்ட நெற்செய்கையில் இந்த வருடம் எதிர்பாராத பாதிப்பு ஏற்பட்டிருப்பதால் விளைச்சலில் கணிசமான அளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.*

இதனை விவசாயத் திணைக்கள மதிப்பீடுகளும் உறுதி செய்துள்ளன. வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வருடம் விவசாயிகளின் எதிர்பார்ப்புக்கு மாறான வகையில் பருவ மழை காலம் தப்பிப் பெய்துள்ளது. பருவ மழை உரிய வேளையில் பெய்யாமல் இருந்து காலம் தாழ்த்தி பெய்தமையால் உரிய காலப் பகுதியில் நெல் விதைக்கப்படாமல் காலம் தாழ்த்தி விதைக்கப்பட்டது.

நெல் முளைத்துவரும் போது மழை வெள்ளம் ஏற்பட்டமையால் நெற்பயிர் அழுகி சேதமடைந்தது.

இந்த வகையில் 400 ஹெக்ரேயர் பரப்பளவில் நெற்பயிர் சேதமடைந்தது.

பின்னர் கடும் வறட்சியும் கடும் காற்றும் வீசியதால் உரியவேளை உரப்பசளை இடமுடியாத நிலை ஏற்பட்டது. இதனால் நெற்பயிர் ''மறிச்சுக்கட்டி', ''எரிபந்த'' நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகி சேதமடைந்தது. தற்போது தாழ் நில வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் விளைந்த நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தென்மராட்சியில் மறவன் புலவு, தச்சன் தோப்பு பகுதியிலும் வலிகாமத்தில் கந்தரோடை, சங்குவேயிலும் வயல் நிலங்களில் வெள்ளம் காணப்படுவதால் அறுவடையில் தடங்கல் ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஒரு ஹெக்ரேயர் நிலப்பரப்புக்கு 3.5 மெற்றிக் தொன், ஒரு ஏக்கருக்கு 70 புசல் வரையிலான நெல் விளைச்சல் பெறப்பட்டது.

இந்த வருடம் நெற்பயிரில் ஏற்பட்ட நோய்த் தாக்கம் மற்றும் வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால் ஒரு ஹெக்ரேயருக்கு 2.75 மெற்றிக் தொன்னுக்கு குறையவே விளைச்சலைப் பெறமுடியும் என்று கூறப்படுகின்றது. இதனை விவசாயத் திணைக்கள மதிப்பீடுகளும் உறுதிசெய்கின்றன.

இந்த வருடம் உற்பத்திச் செலவின் அதிகரிப்பு 35 வீதம் மட்டில் அதிகரித்திருந்ததோடு விளைச்சலில் கணிசமான அளவு வீழ்ச்சி கண்டிருப்பது தங்களை எதிர்பாராத பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக்கி இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ம-11)

## அரச நடனப் பயிற்சிப் பட்டறை நேற்று வீரசிங்கம் மண்டபத்தில்



யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.மாவட்ட அரச நடனப் பயிற்சிப் பட்டறை நேற்று சனிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வசந்த எக்கநாயக்கா கலந்துகொண்டு சிங்கள நடனக் கலையின் பிதா எனப்படும் சித்திரசேனவின் உருவப் படத்துக்கு மாலை அணிவித்தார்.

பயிற்சிப் பட்டறையில் அரச நடனம் மற்றும் நாட்டிய நாடகக் குழுவின் தலைவர் விஜித கணுகல யாழ். பல்கலைக்கழக நுண் கலைப் பீடக் கலைஞர் கலாபூஷணம், சாந்தி சிவனேசன், நடனக் கலைஞர் நிர் மலா ஜோண் ஆகியோர் உரையாற்றினர்.

அரச நடனக்குழு மற்றும் யாழ்.மாவட்ட நடன மாணவ மாணவிகள் ஆகியோரது கலாசார நடனநிகழ்வும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன. (ம-7)

## கட்டாக்காலி நாய்களை பிடிக்கும் பணி தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.மாநகரப் பகுதியில் கட்டாக்காலிகளாக நடமாடும் நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

யாழ். நகரிலும் அதனை அண்டிய குருநகர், ஈச்சமோட்டை, பாசையூர், சுண்டுக்குளி போன்ற பகுதிகளில் கட்டாக்காலிகளைப் பிடிக்கும் நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பகுதியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட நாய்கள் இவ்வாறு பிடிக்கப் பட்டன. தொடர்ந்து இந்த கட்டாக்காலி தெரு நாய்கள் பிடிக்கப்படும் எனவும் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும் கூறப்பட்டுள்ளது.

தற்போது மாநகரப் பகுதியில் நாய்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## மயங்கி வீழ்ந்த பெண் சாவு

தென்மராட்சி,ஜன.27

வீட்டு வேலை செய்து கொண்டிருந்த வேளையில் மயங்கி விழுந்த குடும்பப் பெண் மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை இடம்பெற்றது. மயங்கி விழுந்ததால் சாவகச்சேரி வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த வைரவன் அழகேஸ்வரி (வயது-50) என்னும் குடும்பப் பெண்ணே மரண மானவராவார். இவரது சடலம் சாவகச்சேரி வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## இரு கிராமங்களுக்கு மின் விநியோகம்

பளை,ஜன.27

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் மேலும் இரு கிராமங்கள் மின் வெளிச்சம் பெறவுள்ளன.

சோரன்பற்று, கோயில் வயல் ஆகிய பகுதிகளுக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இரு மின் மாற்றிகள் பொருத்தப்படவுள்ளன.

இந்த மின்மாற்றிகள் விரைவில் செயற்பட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் விரைவில் மின் வெளிச்சத்தைப் பெறவுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகிறது. (ம-9)


## வலி. தெற்கு பிரதேச வீதிகளுக்கு மின் விளக்குகள்

வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் பெரும்பாலான வீதி களுக்கு வீதி விளக்குகள் பொருத்தப் பட்டுள்ளன. இவ்வாறு 680 வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது.

பிரதான வீதிகள் மற்றும் மக்கள் அதிகம் பயன்படுத்தும் வீதிகளுக்கு இவை பொருத்தப் பட்டுள்ளன. சபையின் தலைவர் தி.பிரகாஷ் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சபையின் நிதி உதவியுடன் இந்த வீதி விளக் குகள் பொருந்தும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும். இன்றும் அனேகமான பகுதிகளுக்கு இந்த வீதி விளக்குகள் பொருத்தப்பட வுள்ளன என்று மேலும் கூறினார். (ம-17)



*நவாலி வழுக்கையாற்றை அண்டிய பகுதியில் உள்ள பனை வடலிகளின் உள்ள ஓலைகளை விஷமிகள் இரவில் வெட்டிச் செல்கின்றனர். இந்தப் பகுதியில் வளரும் இந்த பனைகள் வெட்டை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளன. (ம-17)*

## கோவையாகிறது பயனாளிகள் விவரம்

வலி.தென்மேற்கு,ஜன.27

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் இந்திய வீட்டுத் திட்டம் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இந்தத் திட்டத்தில் தெரிவு செய்யப் பட்ட பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்குவதற்கு வசதியாக தனித்தனிக் கோவைகள் தயாரிக்கும் பணியில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் இந்திய வீட்டுத் திட்டத்துக்கு 28 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் முதற்கட்டமாக ஆனைக்கோட்டை, சாவல்கட்டு, உயரப்புலம், பண்டத்தரிப்பு, மாதகல் கிழக்கு, மாதகல் மேற்கு, பெரிய விளான், மாரீசன்கூடல் ஆகிய எட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ். அரச அதிபரால் முதற்கட்டமாக வலி.தென்மேற்குப் பிரதேசத்துக்கு 510 வீடுகள் மட்டும் ஒதுக்கப் பட்டிருந்தன. ஆனால் 2500 இற்கும் அதிகமான மக்கள் இந்திய வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இந்த எட்டுக் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் [illegible] யில் மாதகல் கிழக்கு, மாதகல் மேற்கு, மாரீசன்கூடல் ஆகிய மூன்று கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டத்துக்கான கொடுப்பனவுகளை படிப்படியாக வழங்குவதற்கு வசதியாக அவர்கள் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய கோவைகள் தயாரிக்கப்படுகின்றன.

செஞ்சிலுவைச் சங்க தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து கோவைகளைத் தயாரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

## நிகழ்வுகள் இன்று

**பொதுக்கூட்டம்**

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்புக் கடன் நிவர்த்திச் சங்கத்தின் 52 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் காலை 9.30 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவ சிகிச்சை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

* * *

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் சாரதி பயிற்சிப் பாடசாலை களின் பயிற்றுவிப்பாளர்களுக் கான பொதுக்கூட்டம் காலை 9 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**திறப்பு விழா**

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் தியான- யாத்திரிக மண்டபத் திறப்பு விழா காலை 9.30 மணிக்கு பொன்னாலை தியான யாத்திரிக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

**பாராட்டு விழா**

இலங்கை கலாசார, கலை அலுவல்கள் அமைச்சின், கலாபூஷணம் விருதுபெற்ற கலாபூஷணம் பொன்.மகாதேவாவுக்கு பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச கலைஞர்களும், விளையாட்டு வீரர்களும் இணைந்து நடத்தும் பாராட்டு விழா பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலயப் பர்வதவர்த்தனி கலா மண்டபத்தில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மூத்த பிரஜைகள் பேரவைத் தலைவர் சிவா. கிருஷ்ண மூர்த்தி தலைமையில் நடை பெறும் இந்த விழாவில் வட மாகாண பகிரங்கசேவை ஆணைக்குழு உறுப்பினர் இரா.தர்மகுலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ம-8)

**நூல் வெளியீடு**

''நாவற்குழி சித்திர வேலாயுதர் தேவஸ்தானத்து ஆதிசிவன்'' என்ற தலைப்பிலான நூல் வெளியீடு பிற்பகல் ஒரு மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் வீ.யோகேஸ்வரன் தலைமையில்இடம்பெறவுள்ளது.

இந்தநூலின்ஆய்வுரையை கவிஞர் செ.குமாரசாமியும், தொகுப்புரையை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் சி.முகுந்தனும் நிகழ்த்தவுள்ளனர். (ம)

**இருநூல்கள் வெளியீடு**

மருத்துவர் ஆ.பேரின்பநாதன் எழுதிய சமூக நல நூல்களான '' சிறுவர் துஷ்பிரயோகம்'', ''மதுவும் அடிமை நிலையும்'' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம் கலந்து கொள்வார். (ம-14)

**அங்குரார்ப்பணம்**

சுமத்ரயோ தொண்டு நிறுவனத்தின் 11 ஆவது கிளையான கைகொடுக்கும் நண்பர்கள் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு இல 104, நான்காம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது. யாழ்.பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத் தலைவர் கலாநிதி.ச.பாலகுமார் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பார்.(ம-14)

**கவிதை நூல் வெளியீடு**

ஜெ.உமாசுதனின் '' குருடு'' கவிதை நூல் வெளியீட்டு விழா பிற்பகல் 2.30 மணிக்கு பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பாடசாலை வைத்திய அதிகாரி மருத்துவர் வை.யோகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (ம-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் குடியரசு தின நிகழ்வில் ஒலித்த சிங்களத் தேசிய கீதம்

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகத்தால் ஒழுங்குசெய்து நடத்தப்பட்ட இந்திய குடியரசுதின நிகழ்வில் இலங்கையின் தேசிய கீதம் தனித்து சிங்கள மொழியிலேயே இசைக்கவிடப்பட்டது. தமிழ் மக்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கவிடப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்திய அரசின் 64 ஆவது குடியரசு தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றன.

குடியரசு தின நிகழ்வின் மாலை நிகழ்வு கொக்குவிலிலுள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் இலங்கையின் தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டும் இசைக்கப்பட்டது. தொடர்ந்து இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தமிழ் மக்களே பெரும்பான்மையாகக் கலந்துகொண்ட நிகழ்வில் சிங்கள மொழியில் தேசிய கீதம் ஒலிக்கவிடப்பட்டது அங்கிருந்தவர்களை முகம் சுழிக்க வைத்தது.

இந்த நிகழ்வில் தந்தை செல்வநாயகத்தின் புதல்வர் சாருஹாசன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின், நீதிபதிகள், வைத்தியர்கள், வடமாகாணத் திணைக்களத் தலைவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ-5)

## ஆஸ்திரேலியா..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சம்பவங்கள் குறித்து கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆஸ்திரேலிய எதிர்க்கட்சி பிரதித் தலைவருடன், ஆஸ்திரேலிய எல்லை பாதுகாப்பு பேச்சாளர் மைக்கல் கீன், லிபிரல் கட்சியின் பேச்சாளர் பிஷப் ஆகியோரும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகப் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடுவர் எனவும் தெரியவருகிறது. (த-5)

## கண்ணிவெடியில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

நாகர்கோவில் பகுதியைச் சேர்ந்த ஒருவருடன் இரு வெளியூர்வாசிகள் ஒன்றிணைந்து கடந்த வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் பழைய இரும்பு மற்றும் தேக்கங் கட்டைகளைச் சேகரிப்பதற்கு கண்ணிவெடி அகற்றப்படாத நாகர்கோவில் கிழக்குப் பிரதேசத்துக்குச் சென்றுள்ளார்கள். அதன் பின்னர் அன்று இரவு சுமார் 7 மணியளவில் பயங்கர வெடிச்சத்தம் கேட்டதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அந்தப் பகுதிக்குச் சென்ற மூவரும் திரும்பிவராததையடுத்து அப்பகுதி மக்களிடையே சந்தேகம் ஏற்பட்டது. அங்கு சென்ற மூவரில் ஒருவர் கண்ணிவெடிக்குள் சிக்குண்டு உயிரிழந்ததாகவும் கூடச் சென்ற இருவரும் தலைமறைவானதாகவும் நேற்றுக் காலை அங்கு தகவல் பரவியது.

இது குறித்து அந்தப் பகுதி மக்கள் மருதங்கேணி பிரதேச செயலாளரின் கவனத்துக்கு கொண்டுவந்தனர் இதனையடுத்து கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபடும் நிறுவனம் ஒன்றுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் அங்கு விரைந்து தேடுதல் மேற்கொண்டனர். அதேவேளை பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் அறிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் தேடுதல் நடத்திய போதும் எந்த இடத்தில் கண்ணிவெடி வெடித்தது என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. இதனால் உயிரிழந்த இளைஞருடன் கூடச்சென்ற நாகர்கோவிலைச் சேர்ந்த அருள்தாஸ் என்பவரை பருத்தித்துறை பொலிஸார் கைதுசெய்தனர். கைது செய்யப்பட்டவரைக் கொண்டு சம்பவ இடத்தைக் கண்டறியும் முயற்சியில் பொலிஸார் இறங்கினர். இதனையடுத்து சம்பவ இடம் இனங்காணப்பட்டது.

கண்ணிவெடி பிரதேசத்துக்குச் சென்ற மூவரில் கண்ணிவெடி வெடித்து உயிரிழந்தவர் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த தவசீலன் என்றும் அவர் சுமார் 32 வயது மதிக்கத்தக்கவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தலைமறைவான வெளியூர்வாசியான மூன்றவாது நபர் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று கூறப்பட்டது. (த-8-253)

## கருணையான..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அமெரிக்கப் பிரதிநிதிகள் மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கை மீது மற்றுமொரு பிரேரணையைக் கொண்டுவருவது உறுதியென்று கூட்டமைப்பிடம் தெரிவித்துள்ளனர். அத்துடன் அந்தப் பிரேரணையில் என்ன விடயங்களை உள்ளடக்கலாம் என்பது தொடர்பில் கூட்டமைப்பின் கருத்துக்களை கேட்டறிந்துள்ளனர்.

ஆசிய பசுபிக் பிராந்திய பாதுகாப்பு அலுவலகத்தின் தெற்கு மற்றும் தெற்காசியப் பர்துகாப்பு விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் விக்ரம் ஜே சிங், அமெரிக்க துணை இராஜாங்கச் செயலாளர்களான ஜேம்ஸ் மூர், ஜேம்ஸிம்பர்மன் ஆகியோரை உள்ளடக்கிய அமெரிக்க உயர்மட்டக் குழு நேற்று சனிக்கிழமை இலங்கை வந்தது.

நேற்று வருகை தந்த உடனேயே முதலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரை இந்தக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறீதரன் ஆகியோர் பங்கு கொண்டனர்.

ஒருமணி நேரத்துக்கும் மேலாக இடம்பெற்ற இந்தச் சந்திப்புத் தொடர்பில் கருத்து வெளியிட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது-

கடந்த வருடம் மார்ச் மாதம் இடம்பெற்ற மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட பிரேரணை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட மேற்படி பிரேரணையை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு பின்னடிப்பதை ஆதாரங்களுடன் அமெரிக்க அதிகாரிகளுக்கு சுட்டிக் காட்டியிருந்தோம்.

மேலும் தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு, கிழக்கில் இலங்கை அரசால் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சிங்களக் குடியேற்றங்கள், இராணுவ விஸ்தரிப்பு, இராணுவத்தால் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அராஜக நடவடிக்கைகள் என்பன தொடர்பிலும் விளக்கமாக எடுத்துரைத்தோம்.

இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட குழுவினால் வெளியிடப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளையே நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. பொறுப்புக் கூறுதலுக்கான முயற்சியை இலங்கை இன்னமும் உருவாக்கவில்லை.

இலங்கை அரசால் கடந்த வருடம் தயாரிக்கப்பட்ட செயற்திட்டத்தில் இலங்கை இராணுவமும் பங்குவகித்தது. ஆனால் தற்போது தங்களால் குறித்த செயற்திட்டத்துக்கு அமைவாக செயற்பட முடியாது என்று அவர்கள் தெரிவித்துள்ளமை தொடர்பிலும் அமெரிக்க குழுவுக்கு சுட்டிக் காட்டினோம்.

மார்ச் மாதம் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவருவதில் அமெரிக்கா உறுதியாகவுள்ளது. இருப்பினும் கடந்த ஆண்டு கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையே இலங்கை அரசு உதாசீனம் செய்து வருவதால், புதிய தீர்மானம் எப்படிக் கொண்டுவரப்பட வேண்டும் என்பது தொடர்பில் எமது கருத்துக்களை அமெரிக்கப் பிரதிநிதிகள் உள்வாங்கிக்கொண்டனர்-என்றார். (த-5)

## இலங்கை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வலியுறுத்தியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கைப் படையினருக்கு இந்தியாவிலே எந்தப் பகுதியிலும் பயிற்சி அளிக்கக் கூடாது என்பதுதான் தமிழகத்திலே உணர்வுள்ள தமிழர்களின் கோரிக்கை - வேண்டுகோள். அந்த வேண்டுகோளை இந்திய அரசிடம் நாம் பலமுறை எடுத்து விளக்கியுள்ளோம்.

**இந்திய அரசால் முடியாது**

இந்தியாவிலே இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளிக்கமாட்டோம் என்று இந்திய மத்திய அரசின் சார்பில் திட்டவட்டமாக தெரிவிக்க இயலவில்லை. அதற்கு மாறாக இலங்கை அரசை திருப்திப்படுத்தும் விதத்திலேயே செயற்படுகின்றனர்.

மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி, இலங்கையில் தமிழர் மறுவாழ்வு பணிகள் எதிர்பார்த்த வேகத்தில் இல்லை என்று கூறியிருக்கிறார். ஆனால் தமிழகம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இலங்கைப் படையினருக்குப் பயிற்சி வழங்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார்.

**பேபி, யோகி, புதுவை ரத்தினதுரை கதி என்ன?**

சில நாள்களுக்கு முன்பு இலங்கையில் இருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா, லண்டனில் இருந்து கண்ணன், நோர்வேயிலிருந்து சிவகணேசன் ஆகியோர் எனக்கு ஒரு தகவலை அனுப்பியிருந்தனர். அதன்படி, 2009 போர் முடிந்தவுடன் இளங்குமரன் என்ற பேபி சுப்பிரமணியம், யோகி, கவிஞர் புதுவை ரத்தினதுரை, பாலகுமாரன், இளம்பரிதி ஆகியோருடன் 18 ஆயிரம் தமிழர்கள் சிறை வைக்கப்பட்டனர்.

அவர்களுடைய தற்போதைய நிலை என்ன என்று தெரியவில்லை. இதுகுறித்து யோகியின் மனைவி, கவலையுடன் கேள்வி எழுப்பியிருந்தார். தற்போது, ஈழக் கவிஞர் புதுவை ரத்தினதுரை எங்குள்ளார், என்று தெரியவில்லை என்றும், ஒரு சிலர் அவர் சாகடிக்கப்பட்டு விட்டார் என்றும் சொல்கின்றனர்.

**[illegible]**

மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனிதஉரிமை ஆணைக் குழுவின் கூட்டத்தொடர் இலங்கை தமிழர் பிரச்சினை பற்றி விரிவாக விவாதிக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது. உலக நாடுகளின் கடுமையான கண்டனங்கள் இலங்கை அரசுக்கு எதிராக அப்போது தெரிவிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நம்முடைய இந்தியா, இலங்கை தமிழர்களுக்கு ஆதரவாக உறுதியான நிலைப்பாட்டினை மேற்கொள்ள வேண்டுமென்பதே தமிழகத்தில் வாழும் தமிழர்களின் விருப்பமும் வேண்டுகோளுமாகும்.

**நல்லொளி பரவிட நல்ல முடிவுகளை எடுப்போம்**

இதைப்பற்றியெல்லாம் விரிவாக விவாதித்திடத்தான் எதிர்வரும் 4 ஆம் திகதி அண்ணா அறிவாலயத்தில் டெசோ உறுப்பினர்களின் கலந்துரையாடல் கூட்டம் ஏற்பாடாகி உள்ளது. நான் எழுதியுள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அந்த கூட்டத்தில் விவாதித்து துன்பச் சூறாவளியில் துவண்டு கொண்டிருக்கும் இலங்கை தமிழர்களின் வாழ்வில் நல்லொளி பரவிட உகந்த முடிவுகளை எடுப்போம் - என்றுள்ளது. (த-5)

## இந்திய மீனவரின்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அந்த அமைப்பின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்ததாவது:-

இந்திய மீனவர்களின் அத்து மீறலினால் இருபத்தோராயிரம் கோடிக்கு மேல் நட்டம் ஏற்படுவதாகவும் இராமேஸ்வரம் காரைக்கால் நாகபட்டினம் முதலான இடங்களில் உள்ள மீனவர்களே 3000 றோலர்களில் வந்த தமது பிரதேசத்தில் அத்து மீறி மீன் பிடிப்பதாகவும் குற்றஞ்சாட்டினார். இதற்குரிய நட வடிக்கைகளை எடுப்பதற்கு ஒரு மாதகால அவகாசம் தருமாறு யாழ்.அரச அதிபர் முன்னர் கேட்டிருந்தார்.

ஆனால் ஒரு மாத காலக்கெடு முடிவடைந்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஆதலால் இந்திய மீனவர்களின் அத்துமீறலை தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் கரையோர இயற்கை வளங்களை பாதுகாக்கக் கோரியும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க கோரியும் இன்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் முள்ளிக்குளத்தில் பேரணி தொடங்கி அடுத்த மாதம் இரண்டாம் திகதி கொக்கிளாய் முல்லைத் தீவில் நிறைவுபெறும்.

எனவே வடமாகாணத்தில் இயங்கும் 225 மீனவர் சங்கங்கள் மற்றும் 16 சமாசங்களில் 60000 அங்கத்தவர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் கலந்து பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - என்றார். (த-400)

## தேயிலை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ளது. ஆசியப் பிராந்தியத்தில், இந்திய, சீனப் போட்டி நிலவுகின்றது. இந்தப் போட்டிக்கு களமாக இலங்கை ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கையிலுள்ள பெரும்பான்மையான தேயிலைத் தோட்டங்கள் இந்திய நிறுவனங்களுக்கே சொந்தமாகவுள்ளன. இந்த நிலையிலேயே சீனாவும் தேயிலை உற்பத்தியில் களமிறங்குகின்றது.

இலங்கையுடன் இணைந்து கூட்டு முயற்சியாக மேற்கொள்ளப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கு முதலீட்டுச்சபை அனுமதி அளித்துள்ளது. எல்பிட்டிய பிளான்டேசன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து, சீனாவின் யுன்னான் டியன்ஹொங் குழுமத்தைச் சேர்ந்த யென்ஹொங் அனைத்துலக நிறுவனம் இந்தச் சிறப்புத் தேயிலையை உற்பத்தி செய்யவுள்ளது.

இந்தக் கூட்டுமுயற்சி நிறுவனம், உயர் தரம் வாய்ந்த சீன சிறப்புத் தேயிலையை உற்பத்தி செய்து, தனது நாட்டின் சந்தைக்கு அவற்றை ஏற்றுமதி செய்யவுள்ளது. சீன சிறப்புத் தேயிலை, எல்பிட்டிய பிளான்டேசன்ஸ் நிறுவனத்தினால் நிர்வகிக்கப் படும் மலையகத் தோட்டங்களில் பயிரிடப் படவுள்ளது.

இந்தக் கூட்டுமுயற்சி, வெளிநாட்டு முதலீடுகளை கவர்வதாகவும், சீனச் சந்தைக்கு கூடுதல் தேயிலையை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் என்றும் இலங்கை அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (த-5)

## ஜெனிவா..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கள் கூட்டத் தொடரில், இலங்கைக்கு எதிராக, அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணைக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்திய எடுத்திருந்தது. இதனால் குறித்த பிரேரணை நிறைவேறியது.

இந்த ஆண்டு மார்ச் மாதம் இடம்பெறும் ஐ.நா. கூட்டத் தொடரிலும் அமெரிக்காவின் புதிய பிரேரணை சமர்பிக்கப்படவுள்ள நிலையில், அதனை இந்தியா எதிர்க்க வேண்டும் என்று இந்தப் பயணத்தின் போது ஜனாதிபதி மஹிந்த புதுடில்லி அரசியல் வட்டாரங்களைக் கேட்டுக் கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கடந்த ஆண்டு மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள சாஞ்சியில் பௌத்த பல்கலைக்கழகத்துக்கு அடிக்கல் நாட்டும் விழாவுக்கு சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்தவுக்கு, தமிழ்நாட்டில் இருந்து கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதனால், பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலேயே இவர் சாஞ்சி சென்று திரும்பினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-5)

## அமெரிக்காவில்..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கான அனைத்து இராணுவ உதவிகளையும் நிறுத்தி வைக்கவும் முடியும்.

இதனால், அமெரிக்க அரசினால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவர்களின் பெயர்களை மட்டுமே பயிற்சிக்காக தருமாறும் இலங்கை அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக, கொழும்பு வந்த தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்திய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலகத்தைச் சேர்ந்த பிரதி உதவிச் செயலர்கள் ஜேம்ஸ் மூர், விக்ரம்சிங், ஜேன் சிம்மர்மன் ஆகியோரிடம் பேசவுள்ளதாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## இந்தோனேஷியா..

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தீவில் இருந்த 13 பேரே சுமாத்ரா தீவிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த மாத முற்பகுதியில் ஆஸ்திரேலியாவிற்கு செல்ல முற்பட்ட வேளையில் கைது செய்யப்பட்ட 40 பேர் இந்தோனேஷிய முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

எனினும் குறித்த முகாமில் 20 பேர் வரை மட்டுமே இருப்பதற்கான வசதிகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் காரணமாக 13 பேர் வேறு முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நாட்டின் நலன் நாடி செயற்படும் போக்கு இனி எப்போது..?

இலங்கை மக்களுக்கு இந்த ஆண்டு பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடிகளையும் மிகுந்த கஷ்ட நிலையையும் உண்டாக்கும் என்று பொருளியல் துறைசார் வட்டாரங்கள் எதிர்வுகூறுகின்றன. அந்த எச்சரிக்கை சார் எதிர்வுகூறலை பொருட்படுத்தப்படாத ஒன்றாகக் கொள்வதற்கில்லை.

நாட்டுக்கு ஏற்றுமதி மூலம் கிடைக்கும் வருமானம் வீழ்ச்சி கண்டு வருகிறது. மக்களின் அத்தியாவசியப் பாவனைப் பொருள்களின் விலைகள் 15 சதவீதம் தொடக்கம் 25 சதவீதம் வரை உயர்ந்துவிட்டது. அதேவேளை, இளைஞர்கள் மத்தியில் வேலைவாய்ப்பின்மையும் அதிகரித்து வருகிறது.

இத்தகைய பின்னணியில், தமிழ் மக்களின் பொருளாதார நிலை தத்தளித்துத் தாழ்வுறும் நிலையை நோக்கிச் செல்கிறது.

போர்க்காலத்தைய பாதிப்பு, அதுவும் இறுதிப் போரின் போது சகலதையும் இழந்து உயிரை மட்டும் மிகுதியாகக் கொண்டுவரும் நிலைக்குத் தள்ளப்பட்ட இலட்சக்கணக்கான தமிழர்களின் நிலைமை அப்பட்டமாக முழுமையாக எழுத்தில் வடிக்க முடியாத ஒன்று.

தமிழர் சமூகத்தின் பொருளாதார வளங்கள் அழிந்தும் அழிக்கப்பட்டும் சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளன.

ஆகையால் இப்போதைய பொருளாதார நெருக்கடியில் வடக்கு, கிழக்கு மக்களையும் நாட்டின் ஏனைய பிரதேச மக்களையும் ஒரே தட்டில் வைத்து சமன் தூக்க முடியாது; அவ்விதம் நினைத்துப் பார்க்கவும் இயலாதன்றோ...!

போர் முடிவுக்கு வந்து, இன்னும் சில மாதங்களில் நான்கு வருடங்கள் நெருங்குகின்றன. அரசாங்கத்தின் ஆதார ஆதரவு, மீளக்குடியமர்த்தலிலும் சரி, புனர்வாழ்வுத் துறையிலும் சரி 25 சதவீதத்தைத் தானும் எட்டிப்பிடிக்கவில்லை. ஆனால் மேற்கூறிய இரண்டு துறைகளிலும் மிக உயரச் சென்றுவிட்டதாக அனைத்துலக நாடுகளுக்கு எடுத்துக்கூறி, நிதி உதவிகளைப் பெறுவதிலேயே அரசு அதிக நாட்டம் காட்டி வருகிறது. மொத்தத்தில் போரினால் பல்வேறு பாதிப்புகளை அனுபவிக்கும் தமிழ் மக்களின் வாழ்க்கையைச் சீரான நிலைக்குக் கொண்டுவர ஊன்றுகோலாகச் செயற்பட வேண்டிய அரசு, அதில் அக்கறை காட்டுவதாக இல்லை.

இன்னொரு புறத்தில் இயற்கையும் தமிழ் மக்களை அடிக்கடி சோதிக்கிறது. பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதற்கு உதாரணமாக அமைவது போல, தமிழ்ப் பிரதேசங்களின் விவசாயத்துறை அடிக்கடி அதிக மழை, கடும் வறட்சி என்று மாறிமாறிப் பாதிப்புக்கு உள்ளாகிறது.

விவசாய உற்பத்திப் பொருள்கள் குறுகிய கால இடைவெளிகளில் விலை உயர்ந்து செல்வதாலும், தமிழ்ப் பிரதேச விவசாயிகள், நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளை விட பல வகைத் தாக்கங்களையும் பின்னடைவையும் எதிர் கொள்ள நேரிடுகிறது.

மறுபுறத்தில் படித்த தமிழ் இளைஞர்கள் அரச துறைகளிலும் சரி, தனியார் துறைகளிலும் சரி வேலைவாய்ப்புப் பெறுவதில் புறக்கணிப்புக்களையும், பல தடங்கல்களையும் எதிர்கொள்கிறார்கள்.

ஒட்டுமொத்தமாக நோக்குவோமாயின், இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியில் மட்டுமன்றி அரசியல், கலாசாரத் துறைகளிலும் திட்டமிட்டும், வெளியே கண்ணுக்குப் புலப்படாத விதத்திலும் நலிவுறுத்தப்படுகின்றனர்.

வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் என்ற பிரசாரம் நாடிய கோஷங்களை அரசு முன்னெடுத்த போதிலும் தமிழ் மக்களின் வாழ்வியலை சீராக்குவதிலோ, அன்றாட வாழ்க்கை நிலையை உயர்த்துவதிலோ அர்ப்பணிப்பான செயலாக்கங்கள் தென்படவில்லை.

தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரஜைகளே, அவர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளைப் பிசிறின்றி வழங்கி, வாழ்க்கை நிலையை உயர்த்துவதன் மூலம் நாட்டை வெளியார் தலையீடோ, குறுக்கீடுகளோ இன்றி முன்னேற்றலாம் என்ற முற்போக்கான எண்ணம் அரசுக்குப் பிறக்க வேண்டும். அதனைச் செயலாக்காத வரை இந்த நாடு ஜனநாயக நாடொன்றின் வளர்ச்சியை வெறும் சொற்களில் மட்டுமன்றி செயல் வடிவில் காண்பது பகற்கனவாகவே அமையும். இதனைச் சர்வாதிகாரப் பாதையை நாடும் தனது அண்மைக் காலச் செயற்பாடுகள் மூலம் கோடி காட்டி வரும் அரசாங்கம் காதில் விழுத்துமா என்பது பென்னம்பெரிய வினாவாக உயர்ந்து எழுந்து நிற்கிறது...

யாழ். தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில்

# 8, 935 வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு

## கடந்த ஆண்டில் 'வடக்கின் வசந்தம்' மூலம்

கிளிநொச்சி,ஜன.27

வடக்கின் வசந்தம் திட்டத்தின் வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் கடந்த வருடத்தில் 8 ஆயிரத்து 935 வீடுகளுக்கு இலவச மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன என கிளிநொச்சி மாவட்ட பிரதான மின் பொறியியலாளர் எஸ். பிரபாகரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் வீடுகளுக்கு இலவச மின் இணைப்புக்களை வழங்கி வருகிறோம்.

8 ஆயிரத்து 935 வீடுகளுக்கு 277.186 மில்லியன் ரூபா செலவில் இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 752 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக 47.700 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4ஆயிரத்து 171 வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டன. இதற்காக 125.79 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் ஆயிரத்து 724 வீடுகளுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டன. இதற்காக 42.95 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 288 வீடுகளுக்கு இணைப்புக்கள் வழங்கப்பட்டன. இதற்காக 60.739 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

இந்த ஆண்டும் இலவச மின் இணைப்புகளை வழங்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (த-13)

# சோயா அவரை இறக்குமதியை முற்றாக நிறுத்தத் திட்டம்

கொழும்பு,ஜன.27

இந்த ஆண்டில் இருந்து சோயா அவரை இறக்குமதியை முற்றாக நிறுத்திவிடுவதற்கும் உள்நாட்டு விவசாயிகளை ஊக்குவிப்பதன் மூலம் சோயா அவரைப் பயிர்ச் செய்கையை விரிவுபடுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று விவசாயத் துறை அமைச்சர் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு தொழில் நுட்ப அறிவை ஊட்டுவது மட்டுமல்லாது விதைகள், உரவகைகள் போன்ற அனைத்தையும் வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விவசாயத்தை மேம்படுத்துவதை முன்னிட்டு உருவாக்கப்பட்டுள்ள சோளத்தை ஏற்றுமதி செய்யும் கிராமங்கள் மற்றும் சோயா அவரைப் பயிர்ச் செய்கைகளின் தற்போதைய நிலைப்பாட்டைப் பரிசீலிப்பது தொடர்பாக அனுராதபுர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பின் போதே அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தார்.

ஏற்றுமதிக் கிராமங்கள் செயற்றிட்டத்தை அரசு வெற்றிகரமாக செயற்படுத்தியுள்ளது.

இருந்த போதிலும் கால நிலை மாற்றங்களுக்கு முகம் கொடுக்க வேண்டி நேர்வதன் காரணமாக மேலதிகப் பயிர்ச் செய்கை தொடர்பாக அரசு விசேட கவனத்தை செலுத்தியுள்ளது.

உணவு வகைகளின் இறக்குமதியை நிறுத்திவிடுவதற்கு ஜனாதிபதி வழங்கி இருக்கும் ஒத்துழைப்பை நாம் பாராட்ட வேண்டியுள்ளது.

அது தொடர்பாக எதிர்காலத்திலும் விவசாயிகளின் ஒத்துழைப்பை வேண்டியுள்ளோம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

முப்பது ஆண்டுகளாகக் கைவிடப்பட்டிருந்த பிரதேசங்களை மீள அபிவிருத்தி செய்வது என்பது சிரமமான விடயமே.

அது தொடர்பாக சிங்களவர், தமிழர் என்ற வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்றுவது அத்தியாவசியமானது.

மேலதிக பயிர்ச் செய்கைகளை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நிதித் தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தனியார்துறை சார்ந்த சிறு தொழில் முயற்சியாளர்கள் ஊடாக விவசாயிகளின் விளைச்சல்களைக் கொள்வனவு செய்வதற்கான செயற்றிட்டங்கள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-22)

# 4 லட்சம் வரையான தென்னைகள் வறட்சியால் அழிவு

கொழும்பு,ஜன.27

கடந்த காலத்தில் நிலவிய வறட்சியால் குருநாகல் மாவட்டத்தில் 6 ஆயிரத்து 177 ஏக்கர்களில் 3 லட்சத்து 95 ஆயிரத்து 362 தென்னை மரங்கள் அழிவடைந்துள்ளன.

இவ்வாறு 18 பிரதேச செயலர் பிரிவுகளில் இத்தகைய இடர் ஏற்பட்டுள்ளது.

அண்மையில் குருநாகல் மாவட்டத்தின் மாவட்ட தொடர்பாடல் குழுவின் கூட்டத்தில் வைத்து இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தென்னை அபிவிருத்திச்சபை மற்றும் தென்னை பயிர்ச் செய்கைச் சபை மூலமாக மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வு ஒன்றிலிருந்து இந்தத் தகவல்கள் பெறப்பட்டன.

இவ்வாறு அழிவுற்றவற்றுள் 199,222 இளம் தென்னை மரங்களும் 131,794 வளர்ந்த தென்னை மரங்களும் அடங்கும்.

பெருமளவிலான தென்னை மரங்கள் மஹவ, கொட்டவெஹெர மற்றும் அம்பன்பொல பிரதேச செயலர் பிரிவுகளிலேயே அழிந்துபோயுள்ளன.

குருநாகல் மாவட்டத்தின் தென்னை அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக மாகாண நிதி ஒதுக்கீடுகளின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை 1,867 மில்லியன் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-22)

# ஒரே வலையமைப்புக்குள் சமுர்த்தி வங்கிக் கிளைகள்

யாழ்ப்பாணம்,ஜன.27

நாடு முழுவதும் உள்ள சமுர்த்தி வங்கிக் கிளைகள் யாவும் ஒரே வலையமைப்பின் கீழ் உள்வாங்கப்படவுள்ளன.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்துடன் இணைந்த வகையில் சமுர்த்தி வங்கிகள் ஒன்றிணைக்கப்படவுள்ளன.

திவிநெகும திட்டத்தின் கீழ் சமுர்த்தி வங்கிக் கிளைகளை விஸ்தரித்து மக்களுக்கான சேவைத் திட்டங்கள் அதிகரிக்கப்படுவதற்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை தற்போது நாடு தழுவிய ரீதியில் சிறப்பாக செயற்படும் சமுர்த்தி வங்கிகளின் விவரம் மாவட்ட செயலாளர்கள் ஊடாக திரட்டப்பட்டு வருகின்றன.

டிஜிற்றல் வலையமைப்பு வேலைத் திட்டம் விரைவில் ஆரம்பமாகவுள்ளது என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டது. (ம-50)

# பட்டதாரி பயிலுநர்களின் சுயவிவரம் ஒழுங்கமைப்பு

## ஒவ்வொருவருக்கும் நான்கு சேவைகள்

அச்சுவேலி,ஜன.27

பட்டதாரி பயிலுநர்களின் சுயவிவரக் கோவைகள் பிரதேச செயலகங்களில் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

பட்டதாரி பயிலுநர்களின் நியமனக் கடிதம், பட்டச்சான்றிதழ்கள், பிறப்புச்சான்றிதழ், தேசிய அடையாள அட்டையின் போட்டோ பிரதி உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை உள்ளடக்கியதாக சுயவிவரக் கோவைகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

பட்டதாரிகள் வெவ்வேறு திணைக்களங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், பிரதேச செயலகங்கள் ஊடாகவே மாதாந்த கொடுப்பனவுப் படி வழங்கப்படுகின்றது.

மாதாந்த கொடுப்பனவு வழங்கப்படும் பிரதேச செயலகங்கள் சுயவிவரக் கோவைகளையும் ஒழுங்கமைப்புச் செய்கின்றன.

பட்டதாரி பயிலுநர்கள் விவரங்களை உள்ளடக்கியதாக ஒவ்வொருவருக்கும் நான்கு கோவைகள் தயார் செய்யப்பட்டு ஒரு கோவை அவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவை வழங்கும் பிரதேச செயலகங்களில் இருக்க ஏனைய மூன்றும் மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன.

பட்டதாரிப் பயிலுநர்கள் பத்தாயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவுடன் பன்னிரண்டு மாதங்களுக்கு பயிற்சி பெற வேண்டும். அதன் பின்னர் அவர்கள் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் சேவையில் உள்ளீர்ப்பு செய்யப்படவுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. (ம-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவநகர் தமிழ் வித்தியாலயத்தில் இரு நிகழ்வுகள்

கிளிநொச்சி சிவநகர் தமிழ் வித்தியாலயத்தின் கால்கோள் விழா மற்றும் மதிய உணவு தின விழா என்பன சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட உருத்திரபுரம் சிவநகர் அ.த.க. பாடசாலையின் கால்கோள் விழாவும், புதிய ஆண்டுக்கான மதிய உணவு தின விழாவும் கடந்த 18 ஆம் திகதி பாடசாலை அதிபர் ஐ.இராஜரட்ணம் தலைமையில் இடம்பெற்றன. பிரதம விருந்தினராக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் உடற்கல்விப் பாடத்துக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.விஷ்ணு கலந்து கொண்டார்.

தொடர்ந்து பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. இதில் தலைவராக பாடசாலை அதிபர் ஐ.இராஜரட்ணமும், செயலாளராக ச.விக்னேஸ்வரராஜாவும், பொருளாளராக ஆசிரியர் வி.தவரூபனும் தெரிவு செய்யப்பட்டனர். (க-6)

## வவுனியாவில் சிறப்புற நடந்த கண்ணப்ப நாயனார் குருபூசை

நெளுக்குளம்,ஜன.27

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீசிந்தாமணி விநாயகர் ஆலய பரிபாலன சபையும், வவுனியா சேக்கிழார் மன்றமும் இணைந்து கண்ணப்ப நாயனார் குருபூசையைச் சிறப்பாக நடத்தின.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் பொ.நல்லையா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா சேக்கிழார் மன்ற உபதலைவர் யோகா சோமசுந்தரம் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்.

நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக உரை ஓவியம் தீட்டும் நிகழ்வு இடம்பெற்றது. தமிழ்மணி அகளங்கன், ஏ.லோகேஸ்வரன், நிறைமதி தர்மலிங்கம், பா.பாலசுந்தரம் ஆகியோர் இந்த நிகழ்வில் உரையாற்றினர்.

தொடர்ந்து பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

(க-402-400)

# அக்கராயன் மகாவித்தியாலயத்தில் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் அவசியம்

## வருடாந்தக் கூட்டத்தில் பெற்றோர் வேண்டுகோள்

அக்கராயன், ஜன. 27

அக்கராயன் மகாவித்தியாலயத்தின் உயர்தர வகுப்புக்களில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளை ஏற்படுத்துமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற பாடசாலையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் வைத்து பெற்றோர்களால் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகள் கடந்துள்ளன. தற்போது கிளிநொச்சி கல்வி வலயத்தில் உள்ள முக்கிய பாடசாலைகளில் ஒன்றாக இது விளங்கி வருகின்றது. இடம்பெயர்வின்போது கிளிநொச்சிக் கல்வி வலயம் அக்கராயன் மகாவித்தியாலயத்தில் இயங்கி வந்தது. இங்கிருந்து கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள ஏனைய பாட சாலைகளின் நடவடிக்கைகள் கையாளப்பட்டு வந்தன.

தற்போது இந்தப் பாடசாலை, கல்வி, விளையாட்டு என சகல துறைகளிலும் சிறப்பாக மிளிர்ந்து வருகின்றது.

மேலும் ஆண்டு தோறும் இங்கிருந்து இடை நிலைத் தேர்வுகளில் தோற்றி சித்தியடைந்து உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் கற்கக் கூடிய மாணவர்களும் சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி நகரம் அல்லது வெகு தொலைவிலுள்ள யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் வசதி குறைந்த மாணவர்கள் இந்தப் பாடசாலையில் கலை, வர்த்தக பிரிவுகளில் கல்வி பயில வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே மாணவர்களின் நன்மை கருதி இந்த ஆண்டிலாவது அக்கராயன் மகாவித்தியாலயத்தின் உயர்தர வகுப்புகளில் கணித, விஞ்ஞான பிரிவுகளை உருவாக்குமாறு பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## செட்டிகுளம் பிரதேசத்தில்
# இந்திய வீட்டுத் திட்டத்தில் முறைகேடாம் ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு

வவுனியா,ஜன.27

செட்டிகுளம் பிரதேசத்தில் இந்திய வீட்டுத் திட்டத்தில் முறைகேடுகள் இடம்பெறுவதாகக் கண்டித்து எதிர்வரும் 30 ஆம் திகதி வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது.

செட்டிகுளம் பிரதேச மீளக்குடியமர்ந்தோர் நலன் பேணும் அமைப்பு இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளதாக அந்த அமைப்பின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கென செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்கு 5 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன. அவற்றில் 800 வீடுகள் தற்போது அமைக்கப்படுகின்றன. இவற்றில் 650 வீடுகள் முஸ்லிம் குடும்பங்களுக்கு 150 வீடுகள் தமிழ் குடும்பங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

உண்மையில் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு குறைந்த எண்ணிக்கையான வீடுகள் செட்டிகுளம் பிரதேச செயலகத்தால் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனைக் கண்டித்து இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, இந்த முறைகேடான செயற்பாடு தொடர்பாக இந்த அமைப்பினால் நேற்றுமுன்தினம் செட்டிகுளம் பிரதேச செயலரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. (ம-400)

## வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ் துணுக்காயில் ஆயிரம் பயனாளிகள்

அக்கராயன்,ஜன.27

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் வாழ்வு எழுச்சி திட்டத்தின் கீழ் ஆயிரம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

இங்குள்ள 20 கிராமங்களில் இருந்து தலா 50 பேர் வீதம் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை மாந்தை கிழக்கில் 15 கிராமங்களில் இருந்து வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ் 750 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்று மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன் தெரிவித்தார்.

இந்த இரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் வாழ்வின் எழுச்சி அறிமுகக் கூட்டங்கள் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

## கிராஞ்சி அ.த.க. பாடசாலையில் சித்தியடைந்த மாணவருக்கு கௌரவம்

அக்கராயன்,ஜன.27


கிளிநொச்சி, பூநகரி கிராஞ்சி அ.த.க. பாடசாலையிலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

பாடசாலை அதிபர் ஐ.கேசவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம் கலந்து கொண்டார். வேரவில் மருத்துவமனையின் மருத்துவர் எஸ்.பன்னீர்ச்செல்வம், வேரவில் பங்குத் தந்தை ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

பூநகரி கல்விக் கோட்டத்திலேயே அதிகமானவர்கள் சித்தியடைந்த பாடசாலையாக இந்தப் பாடசாலை விளங்குகிறது.

மேலும் 13 மாணவர்கள் 70 புள்ளிகள் பெற்றதுடன், இரு மாணவர்கள் அடைவு மட்டத்தை தாண்டிச் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

# வங்காலை வீதி புனரமைப்பு



மன்னார், ஜன.27

கடந்த வருடம் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வங்காலை பிரதான வீதிகள் செப்பனிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு சில வீதிகள் மட்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட நிலையில் ஏனைய வீதிகளின் செப்பனிடும் பணிகள் மந்தகதியிலே நடைபெற்று வந்தன.

இதனால் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர். இந்த நிலையில் தற்போது குன்றும் குழியுமாக காணப்பட்ட வங்காலையின் பிரதான வீதியும் புதிதாக செப்பனிடப்பட்டு போக்குவரத்துக்கு ஓரளவு ஏற்ற இடமாகவும் மக்கள் நடமாடக் கூடியதாகவும் காணப்படுகின்றது.

குறித்த வீதியில் அவல நிலை தொடர்பாக அதிகாரிகள் எவரும் நடவடிக்கை எடுக்காத நிலையில் மக்களின் முறைப்பாடுகள் ஊடகங்கள் வாயிலாக இந்த வீதி தொடர்பான செய்தி வெளிவந்த நிலையில் புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுள்ளன. (ம-12)

## பயணிக்க முடியாத நிலையில் வீதி

மன்னார், ஜன.27

மன்னார் மாவட்டம் முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட இலந்தைக்குளம் வெளிமலை பிரதான வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது. பெரிய குன்றும் குழியுமாக இந்த வீதி காணப்படுகிறது என்று குறித்த கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

போரால் பாதிக்கப்பட்ட குறித்த பிரதேசம் படிப்படியாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்ற போதும் குறித்த வீதிகள் புனரமைப்புச் செய்யாத நிலையில் காட்சியளிக்கின்றன.

இதனால் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள், வயோதிபர்கள், கர்ப்பிணித் தாய்மார் என பலதரப்பட்டோரும் குறித்த வீதியால் பயணிக்கும் போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

முசலி பிரதேசத்தில் சுற்றுலாத் தலமாக காணப்படும் அல்லிராணிக் கோட்டையைப் பார்வையிடுவதற்காக நாள்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலாத் துறையினர் குறித்த வீதியூடாகவே சென்று வருகின்றனமை குறிப்பிடத்தக்கது. (ம-12)

## கிளிநொச்சி செலான் வங்கிக் கிளையால் 100 சிறுவர்களுக்கு சேமிப்புக் கணக்குகள்

கிளிநொச்சி,ஜன.27

செலான் வங்கி கிளிநொச்சிக் கிளையால் முன்னெடுக்கப்பட்ட சமூக அபிவிருத்திக்கான பங்களிப்பின் கீழ் தாய், தந்தையரை இழந்த நூறு சிறுவர்களுக்கு ''டிக்கிரி'' பிளஸ் சிறுவர் சேமிப்பு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சிறுவர் இல்லத்துக்கான பெயர்ப் பலகையும் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

செலான் வங்கி கிளிநொச்சிக் கிளையால் முன்னெடுக்கப்பட்ட சமூக அபிவிருத்திக்கான பங்களிப்பின் கீழ் கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சைவச் சிறுவர் இல்லத்தில் தாய், தந்தையரை இழந்த நிலையில் பராமரிக்கப்பட்டுவரும் நூறு சிறுவர்களுக்கு ''டிக்கிரி பிளஸ்'' சிறுவர் சேமிப்பு கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்கு வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை, சைவச் சிறுவர் இல்லத்துக்கான பெயர்ப் பலகையையும் ஏ-9 வீதி கந்தசுவாமி கோயில் முன்பாக திரை நீக்கம் செய்து வைத்துள்ளனர். தொடர்ந்து சிறுவர் இல்ல வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகளும் நடப்பட்டன.

இந்த நிகழ்வுகளில் செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளை முகாமையாளர் இ.சதாகரன் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள், சைவச் சிறுவர் இல்ல சிறுவர்கள் மற்றும் சிறுவர் இல்ல நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ம-6)

## கெங்காதரன் குடியிருப்பின் பிரதான வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

அக்கராயன்,ஜன.27

கிளிநொச்சி அக்கராயன் கெங்காதரன் குடியிருப்பு மக்கள் தமது கிராமத்தின் பிரதான வீதியைப் புனரமைத்து வழங்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் கீழான கிராம அபிவிருத்தி அமைப்பின் கலந்துரையாடல் இடம்பெற்ற போது இந்தக் கோரிக்கையை கிராம மக்கள் விடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட மீள் எழுச்சித்திட்டப் பணிப்பாளர் அ.விஜயகிருஷ்ணனிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் குடியிருப்புக்கள் உருவாக்கப்பட்டதில் இருந்து இந்த முதன்மை வீதி மோசமான நிலையிலேயே உள்ளது. இதனையே புனரமைத்துத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளர், ''தற்போது கிராம அபிவிருத்தி அமைப்பிடம் 5 லட்சம் ரூபா நிதியுள்ளது. ஆனால் இந்த நிதி வீதிப் புனரமைப்புக்குப் போதாது உள்ளது.

சுமார் ஒரு கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்த வீதியில் அரைவாசிப் பகுதியையாவது புனரமைக்கமுடியுமா என்பது தொடர்பாக சிந்திக்க வேண்டும்'' என்று தெரிவித்தார்.

(க-18)

## மகாதேவா ஆச்சிரமத்துக்கான புதிய கட்டடம் மார்ச்சில் திறப்பு

கிளிநொச்சி,ஜன.27

யாழ். மாவட்ட வர்த்தகர்களால் வழங்கப்பட்ட 70 மில்லியன் ரூபா நிதியுதவியில் அமைக்கப்பட்டுவரும் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமத்துக்கான கட்டடம் எதிர்வரும் மார்ச் மாதம் திறந்து வைக்கப்படும் என யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தாய், தந்தையை இழந்த மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத சிறார்களின் பாதுகாப்புக்காக கிளிநொச்சியில் மகாதேவா ஆச்சிரமத்துக்கான கட்டடம் வர்த்தகர்களின் நிதியுதவியுடன் கடந்த வருடம் முதல் அமைக்கப்பட்டு வருகிறது.

350 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் தங்கக்கூடிய வகையில் இல்லத்தின் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் மார்ச் மாதத்துக்கிடையில் அதன் பணிகள் நிறைவடைந்ததுடன் இல்லத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த இல்லத்தின் பணிகளுக்காக முற்று முழுதாக வர்த்தகர்களே நிதியுதவியை வழங்கியுள்ளனர்.

இந்த இல்லத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் பாதுகாப்பில்லாத பெற்றோரை இழந்த சிறுவர்கள் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்படுவர். - என்றார்.

(ம-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L கணக்கீடு- 2014, 2015
## S.காந்தன்
(ஆசிரியர் M/G/H/S)
ஆரம்பம்: 27.01.2013 4p.m.
தொ.இல- 0750437570
நெ.ம.ம.வி. வீதி, நெல்லியடி.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி பிரார்த்தனையும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1951 | 2013 |
| 02 | 01 |
| 16 | 03 |

### அமரர் திரு.சரவணமுத்து சிவலிங்கம்
(முன்னாள் சமுல சேவை உத்தியோகத்தர் - டார்வின் லங்கா/ கல்யாண மாலை திருமணசேவை உரிமையாளர்)

அன்புடையீர்,
எங்கள் அன்புத்தெய்வமாகிய எம் குடும்பத்தலைவர் திரு.சரவணமுத்து சிவலிங்கம் அவர்கள் கடந்த 03.01.2013 வியாழக்கிழமை சிவபதமடைந்ததை முன்னிட்டு தமிழ் தை 20 ஆம் திகதி சனிக்கிழமை (02.02.2013) அன்று எமது இல்லத்தில் நடைபெறும் பிரார்த்தனை யிலும் பகல் 12 மணிமுதல் நடைபெறும் மஸேவர பூசையிலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு வேண்டிக்கொள் கின்றோம்.

அன்னாரின் இறுதி கிரியையில் கலந்து கொண் டவர்களுக்கும், அனுதாப செய்தி தெரிவித்தவர்க ளுக்கும், எமக்கு அனைத்து வழிகளிலும் உதவி செய்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள் கின்றோம்.

இல.46/8/E, வெலிகடமுல்ல வீதி,
சித்தார்த்த தெரு, மாபோலை,
வத்தளை.

இங்ஙனம்,
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**071 2974650, 072 9106007**


## காணி விற்பனைக்கு
மருதனார் மடம் கைதடி வீதியில்
இராமநாதன் நுண்கலைக்
கல்லூரிக்கு முன்பாக
3 பரப்புக் காணி விற்பனைக்கு.
தொடர்பு T.P :0718584908

## கணினி திருத்தம் Computer Repair
உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள் -0779086737 GUNAA
BEST PC 52, HOSPITAL ROAD, JAFFNA.

## தொழிற் கல்வி
உள்நாட்டிலும் சர்வதேசத்திலும்
உயர்வருமானம் தரும் தொழிற்கல்வி
★ கணினி திருத்துதல் -computer Hardware Engineering
★ மின் இணைப்பு - Electricle Wiring
★ கையடக்கத்தொலைபேசி திருத்துதல் - Mobile phone Repairing
குறுகிய காலத்தில் குறுகிய முதலீட்டில் உடனடித் தொழில் வாய்ப்பை உறுதிப்படுத்தும் சான்றிதழ் கற்கை நெறி
(2013 ஜனவரி மாதத்துக்கான புதிய பிரிவுகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதால் பதிவுகளுக்கு முந்துங்கள்)

IISEEES NALLUR CAMPUS
762, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
0212224728, 0777444225

# Vacancy
## Accountant
Required by the leading hotel in the North
- Control of financial accounts, and management reports.
- Overall cost management.
- Excellent prospect, and remuneration

Salary according to age, and experience.
Please forward your CV before 06th of Feb 2013.
E.Mail:citystarkb@gmail.com

*Tilko Jaffna City Hotel (Pvt) Ltd,*
*70/6, K.K.S. Road,*
*Jaffna.*

## தேவை
தனியார் கல்வி நிலையத்தில் அலுவலக உதவியாளர் (clerk) தேவை.யாழ். மாநகரசபைக்கு உட்பட்டவராகவும் A/L படித்தவராகவும் இருத்தல் வேண்டும்.
தொடர்பு; 07549003095


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10 | 19 |
| 08 | 01 |
| 1931 | 2003 |

### அமரர்
### நல்லதம்பி நடராசா
(இளைப்பாறிய ஆசிரியர்)
*திதி:பிரதமை(27.01.2013)*

எம் வாழ்வே தம் வாழ்வென
என்றென்றும் எண்ணி வாழ்ந்த
எம் உள்ளத்தில் குடி கொண்ட
எம் அப்பா எம்மை
ஆறாத்துயரில் விட்டுச்சென்று
ஆண்டு பத்து ஆன போதும்
ஆறாது எம் துயர் அழியாது உம் புகழ்
சாந்தி! சாந்தி! சாந்தி!

அளவெட்டி. குடும்பத்தினர்.

(28699)

## மரண அறிவித்தல்
### மயில்வாகனம் நந்தீஸ்வரன்
(அகில இலங்கை சமாதான நீதிவான், தொழில்நுட்ப உத்தியோகத்தர், உடற்கூற்றியல் துறை, மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)



வேளாதோப்பு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மயில்வாகனம் நந்தீஸ்வரன் நேற்று (26.01.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேளாதோப்பு, யாழ்ப்பாணம். தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### தனராஜா துளசிகா
(3ஆம் வருட மாணவி கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்)

இல.64/8, 2ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட துரைராஜா துளசிகா நேற்று (26.01.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தனராஜா- பத்மிநிஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், அபிலேஷன், லக்ஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01..2013) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 5.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

64/8, 2ஆம் ஒழுங்கை , பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்: சி.தனராதா (உரிமையாளர்- தனராதா இரும்புத் தொழிற்சாலை , இல.201, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.)


## நாட்டிய கலாகேந்திரா
## NATYA KALAKENDRA

கடந்த காலங்களில் பல சிறந்த நடனக் கலைஞர்களை உருவாக்கியதோடல் லாமல் பல்வேறு நாட்டிய நிகழ்வுகளை இலங்கையின் பல பாகங்களிலும் நடத்தி ஆடற்கலையின் தெய்வீகச் சிறப்பை பறைசாற்றிய வகையில் ''நாட்டிய கலாகேந்திரா'' தனக்கென ஓர் உயரிய இடத்தை வகித்துள்ளதனை நாட்டிய ஆர்வலர்களும், கலைஞர்களும் அறிவர்.

இதன் இயக்குநர் திருமதி கிருசாந்தி இரவீந்திரா அவர்கள், கடந்த காலங்களில் பல்கலைக்கழகத்தின் நடனத்துறையில் முக்கிய பொறுப்புக்களை வகித்த நிலையில் ''நாட்டிய கலாகேந்திரா'' வின் செயற்பாடுகளில் முனைந்து செயற்படமுடியவில்லை.


தற்போதைய இளம்சமுதாயத்தினருக்கு பரதக்கலையினை முறைப்படி பயிற்றுவித்து எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணிக் கலைப் பங்காற்றவேண்டிய ஒரு தேவை உருவாகியுள்ள சூழலில் அதனைச் செயற்படுத்த வேண்டிய கடப்பாடு மூத்த நாட்டியக் கலைவல்லுநர்களுக்கு உள்ளதை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே ''நாட்டிய கலாகேந்திரா'' மீண்டும் புதுப்பொலிவுடன் தன் கலைப் பணியை ஆற்றவேண்டி, இயக்குநர் திருமதி கிருசாந்தி இரவீந்திரா அவர்களின் வழிகாட்டலிலும் துணை இயக்குநர் திருமதி துஸ்யந்தி சுகுணன் அவர்களின் நெறிப்படுத்தலிலும் தைப்பூச நன்னாளில் ஆடல்வல்லான் ஆசியுடன் மங்களகரமாக தன் கலைப் பயணத்தைத் தொடர விளைகின்றது என்ற செய்தியை இத்தால் அறியத்தருகின்றது.

நாட்டிய ஆர்வலர்கள், பெற்றோர்கள், நடன மாணவர்கள், பழைய மாணவர்கள், பட்டம் பெற்றவர்கள் அனைவரும் தமது ஒத்துழைப்பை நல்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதுடன் நடனப் பயில்வுக்கான பதிவுகள் பற்றிய விவரத்தையும், ஆலோசனைகளையும் கீழ்க்குறிப்பிட்ட நிறுவன விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

இடம்:
*நாட்டிய கலாகேந்திரா*
இல. 7, துன்மாலை வீதி (லவ் லேன்) உடுவில், சுன்னாகம்.
காலம்:
27.01.2013 ஞாயிறு (தைப்பூசம்) - நேரம் இன்று பி.ப. 4 மணி தொடக்கம் பதிவுகள் ஆரம்பம்.
(C8639)


## மரண அறிவித்தல்
### சிவசம்பு இரத்தினசபாவதி (குணம்)



சங்கானை மாளிகாவத்தையைப் பிறப்பிடமாகவும், வேப்பங்குளம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு இரத்தினசபாபதி (குணம்) கடந்த 24.01.2013 வியாழக்கிழமை சவுதிஅரேபியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு- மனோரஞ்சிதம் தம்பதியரின் அன்பு மகனும், தியாகேஸ்வரியின் (கீதா) அன்புக் கணவரும், சரண்ஜன், சனோஜன், கஜானி, அபிநயன், அனுஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சரோஜினிதேவி (ஜேர்மனி), செல்வரட்ணம் (ஜேர்மனி), யோகேஸ்வரி (அமெரிக்கா), மகேஸ்வரன் (ஜேர்மனி), சிவமலர் (ஜேர்மனி), கலாவதி (லண்டன்), விக்னேஸ்வரன் (ஜேர்மனி), சுபாஜினிதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible]1, மன்னார் வீதி,
வேப்பங்குளம், வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்



**பிரம்மஸ்ரீ ஸ்ரீரங்கநாத சர்மா மகாகணபதி குருக்கள் (ராஜன்)**

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும்கொண்ட பிரம்மஸ்ரீ ஸ்ரீரங்காநாத சர்மா மகாகணபதி குருக்கள் 23.01.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாகணபதி குருக்கள் (நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்னாள் பிரதம குரு) மற்றும் கமலாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சண்முகரத்தினக் குருக்கள்-நாகரத்தின அம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பாமாதேவி அவர்களின் அன்புக் கணவரும், கிருஷ்ணா அவர்களின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணிய குருக்கள் (இலங்கை), காலஞ்சென்ற நடராஜ குருக்கள் ஆகியோரின் பெறா மகனும், சித்ராங்கி அவர்களின் மருமகனும், மகேஸ்வரி (கனடா), நகுலேஸ்வரி (கனடா), குகராஜ சர்மா (சுவிஸ்), குமரேச சர்மா (கனடா), குகவர்த்தன சர்மா (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலகுமார் (கனடா), சிவயோக சர்மா (இலங்கை), சுகுமார சர்மா (கனடா), வாணி (சுவிஸ்), அமன் (கனடா), கலைச்செல்வி (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும், ஹரீஸ், ஜது, தரன், ப்ரித்தி, லவன் ஆகியோரின் பெரியப்பாவும், சிவகௌரி, சிவப்பிரியா, மயூரன், சுஜீவன், சிந்துஜா, கல்யாணி, சாரங்கா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக 7732 Mavis Rd, Brampton இல் அமைந்துள்ள Meadowvale Cemetery Crematorium & Mausoleum இல் 26.01.2013 சனிக்கிழமை மாலை 5 மணி இரவு 9 மணி வரையும் இன்று (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.30 பிற்பகல் 2.30 மணி வரையும் வைக்கப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் ஈமக் கிரியைகள் நடைபெற்று தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
பாமாதேவி (மனைவி) கனடா-9058241185, 4166699650
குமரேசன் (சகோதரன்) கனடா - 4164144183
குகராஜசர்மா (சகோதரன்) சுவிஸ்சர்லாந்து - 01141435387686
குகவர்த்தனசர்மா (சகோதரன்) இலங்கை - 01194 772583359
மகேஸ்வரி (சகோதரி) கனடா - 6475016105
நகுலேஸ்வரி (சகோதரி) கனடா - 6474008721
பாலகுமார் (மைத்துனர்) கனடா - 9057851281, 6478824441

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/6071)



**சின்னையா துரைராசா**

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னையா துரைராசா நேற்றுமுன்தினம் (25.01.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்றவர்களான செல்லையா-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சரோஜினிதேவி, சாந்தகுமாரி (கனடா), சிவசக்தி (பொறியியல் சேவைகள் உட்கட்டமைப்பு-திருகோணமலை), சிவகுமார் (லண்டன்), சாரதா (ஆசிரியை யா/குளமங்கால் றோ.க.வி.-மல்லாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமிர்தலிங்கம் (மருந்துக் கடை), சண்முகநாதன் (கனடா), தவபாலன் (கட்டார்), குமாரசிவந்தினி (லண்டன்), ஜீவானந்தம் (தெ/ப.நோ.கூ. சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனும், கிருஜன், நிகர்ஷினி, நிகர்சன், நிகர்னன், சரண்ணியா, தனுஜன், கஜானி, சதுர்ஜா, நிவேதன், லோஜிதன், சுபங்கரி ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2013) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இணுவில் பூவோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
இணுவில் மேற்கு.

(28695)

தகவல்:
குடும்பத்தினர்.

## பத்மபூஷணம் விருது கமல் 'அவுட்'

இந்தியாவின் மிக உயரிய விருதுகளான பத்ம பூஷணவிருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த 108 பேருக்கு இந்தமுறை பத்ம விருதுகள் வழங்கப்படவுள்ளன. இதில் நடிகர் கமலஹாசனின் பெயர் ஆரம்பத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் விஸ்பரூபம் சர்சையால் அவரது பெயர் நீக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரபல பாடகி எஸ்.ஜானகி தனக்கு கிடைத்திருக்கும் இந்த விருதை பெற்றுக்கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்திருக்கின்றார்.

சமூக சேவை, பொது விவகாரம், அறிவியல், தொழில்நுட்பத் துறை, வர்த்தகம், தொழிற்துறை, மருத்துவம், இலக்கியம், கல்வி, விளையாட்டு, இந்திய அரசுப் பணி உள்ளிட்டவற்றில் சிறப்பாக செயலாற்றியவர்களை கௌரவிக்கும் வகையில் பத்ம பூஷண விருதுகள் வழங்கப்படுகின்றன.

கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட், குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம், உள்ளிட்ட 24 பேருக்கு பத்ம பூஷண விருது வழங்கப்படுகிறது. நடிகை ஸ்ரீதேவி, நானா படேகர், திரைப்பட இயக்குநர் ரமேஷ் சிப்பி உள்ளிட்ட 80 பேருக்கு பத்மஸ்ரீ விருது வழங்கப்படவுள்ளது.

மத்திய அரசு அறிவித்த பத்மபூஷண விருதுகள் பெரும்பாலும் வட இந்திய கலைஞர்களுக்கே அதிகம் வழங்கப்பட்டதைக் கண்டித்து தனக்கு வழங்கப்படும் பத்மபூஷண விருதை வாங்கப் போவதில்லை என்று பிரபல பாடகி எஸ். ஜானகி அறிவித்திருக்கிறார்.

## நூலகர், நூலக உதவியாளர் தேவை

இணுவில் பொதுநூலகத்தில் பணியாற்றுவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 03.02.2013, ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு தங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமூகம் தரவும்.

மேலதிகத் தொடர்புகளுக்கு: **021 224 1930**

இணுவில் பொதுநூலகம் சனசமூக நிலையம்,
மானிப்பாய் வீதி, இணுவில்.

(C/6064)







## மரண அறிவித்தல்

### முத்து பொன்னுத்துரை

உடுவில் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், பாரதி வீதி, பத்தமேனியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்து பொன்னுத்துரை (இலங்கை போக்குவரத்துச் சபை ஓய்வுபெற்ற சாரதி, சமாதான நீதிவான், ஆயுர்வேத வைத்தியர், பிரபல சமூக சேவையாளர்) நேற்று (26-01-2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமணியின் கணவரும், ஜெயந்திமலர், ஸ்ரீஜீவகன் (ஜேர்மனி), ஸ்ரீபாலகௌரி, ஸ்ரீபவன் (மதுவரித் திணைக்களம், சாவகச்சேரி), ஜெயகௌரி லெனின் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாரதிமோகன் மற்றும் வாசுகி, பாரதிச்செல்வன் (மன்னார்), ஜீவதயாளன் (மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரான்சிஸ் சேவியர் (வவுனியா), விஜயகுமார், கிளி (ஜேர்மனி), சூரியகலா (ஆசிரியை), சிங்கரத்தினம், நிர்மலா (பிரான்ஸ்), உதயகுமார், அனுரா, றூபி (மன்னார்) ஆகியோரின் அன்பு மாமனும் கெங்காதரன் (கனடா), யாழினி, நளாயினி (மட்டக்களப்பு பல்கலைக்கழகம்), ராகுலன் (ஜேர்மனி), ராகவன் (ஜேர்மனி), ரஜீவா (ஜேர்மனி), சேதுபன், நஜீபன், ரஜீகா, ரஜீபவன் (பல்கலைக்கழகம் மொறட்டுவ), சரத்பவன், சுஜீவா, ரஜீந்திரன், றெனோல்ட், றீக்கா, கௌதமி, கயூரன், கலிஸ்ரா, கௌதமன், சுஜீக்கா, சுஜீவன், சுஜானி (பிரான்ஸ்), டிசாளன், மதுளினி, நிசாளினி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-01-2013) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீத்தாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதி வீதி,
பத்தமேனி.

(C/6066)

தகவல் :
குடும்பத்தினர்.

### வீடு விற்பனைக்கு

வெங்கடேசா வீதி,
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள
புதிய வீடு
(1½ பரப்பு) விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0757100884

(28862)

### காணி விற்பனைக்கு

சுண்டுக்குளி, விதான்ஸ் ஒழுங்கையில் 3 பரப்பும், 1½ குழியுமுள்ள காணி விற்பனைக்குண்டு. சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கும் St.John's கல்லூரிக்கும், கச்சேரிக்கும் அண்மையில் இக் காணி உண்டு.

தொடர்பு: 0776705157,
46, விதான்ஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி

(சி-6818)

### கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்கும் வழிகாட்டி நூலும்

கருத்தரங்கு ஒவ்வொரு சனியும் 12.30மணி தொடக்கம் 4.30 மணி வரை யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் நடைபெறும் பரீட்சைக்கான தவரேசுர் ஆசிரியரின் வழிகாட்டி நூலை வகுப்பிலும் பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-6067)

### Car For Sale



Toyota Corolla,
AE-110, First
Registration 2002
Brand New
Full Option, 1500CC, A/C
White Colour, Mint Condition,
WPGR-XXXX

**Contact- 0770853530**
**0774412200**

### மணமகன் தேவை (UK Citizen)

யாழ். இந்து கௌரவ குடும்பம்
1). 18.05.1985 கேட்டை நட்சத்திரம்
கி.பாவம் 25
I.T Engineer Hig. - 5'6"
2). 12.01.1977 அத்த நட்சத்திரம்
கி.பாவம் 42 உயரம் 5'5"
Company work
T.P No: UK Miss call போடவும்
00447833819736
FAX: 00442085488847

(28612)

### வீட்டுப் பணிப்பெண் தேவை

கௌரவ, படித்த, சிறிய வைத்திய குடும்பம் ஒன்றுக்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. வீட்டில் தங்கியிருந்து வேலை செய்தல் விரும்பத்தக்கது.

தொடர்பு:
0773276502, 021 222 2594

### வேலையாள் தேவை

ஒரு பெண்மணியின் தலைமையின் கீழ் வீட்டில் இருந்தவாறு கேக் தயாரிப்பில் ஈடுபட ஆர்வமுள்ள மற்றும் பழக விரும்பும் 18-30 வயதுக்கு இடைப்பட்ட பெண் பிள்ளைகள் உடன் தேவை நியாயமான ஊதியமும் தங்குமிட வசதி 3 வேளை உணவும் இலவசம் (A/L, O/L) முடித்து வீட்டில் இருப்பவர்களும் வேலை செய்ய முடியும்

மேலதிக விவரங்கள்-0777563627

### வீடு விற்பனைக்கு

அராலி வீதி, சங்கானையில் பத்துப் பரப்புக் காணியில் கிணறு, சகல வசதிகளுடன் கூடிய நல்ல நிலையில் உள்ள நாச்சார வீடு ஒன்று விற்பனைக்குண்டு.

தொடர்பு: 021 222 1329
077 473 3893
077 625 3040

(28773)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை எப்போது திறக்கப்படும்?

## மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்

பளை,ஜன.27

பளை நகர்ப் பகுதியில் சுகாதாரத் திணைக்களத்தால் நிர்மாணிக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒன்றரை வருடங்களாகியும் திறக்கப்படாமல் உள்ளது.

தனியார் வீடொன்றில் தற்காலிகமாக இயங்கி வரும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும் குழந்தைகள் கிளினிக் மற்றும் கர்ப்பிணிகள் கிளினிக் ஆகியவற்றுக்குச் செல்வோர் வசதிகள் அற்ற நிலையில் வெயில் மழையில் நிற்க வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

**சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒன்றரை வருடங்களாகியும் திறக்கப்படாமல் உள்ளது.**

பளை நகர்ப்பகுதியில் நீண்ட காலமாக தனித்து இயங்கி வந்த பிரசவ விடுதி போர் வேளையில் முற்றாகச் சேதமடைந்தது.

பளை வைத்தியசாலைக் கட்டடமும் முற்றாகச் சேதமடைந்ததால் புதிதாக வைத்தியசாலைக்கு கட்டடங்கள் அமைக்கும் போது பிரசவ விடுதியையும் அந்த வளாகத்தில் அமைப்பதற்காக முன்னர் பிரசவ விடுதி இருந்த வளாகத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் வைத்திய அதிகாரி விடுதியும் நிர்மாணிக்கப்பட்டன.

கிளிநொச்சி சுகாதார திணைக்களத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தக் கட்டடங்கள் ஒன்றரை வருடங்களாகியும் திறக்கப்படாமை குறித்து பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர். (ம-9)

## கிணறுகளை திருத்த நடவடிக்கை

நீர்வேலி,ஜன.27

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஜே/152 மாதகல் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் மீளக் குடியமர்ந்த 125 குடும்பங்களின் சிதைவடைந்த கிணறுகளை வை.ஆர்.ஓ. நிறுவனம் திருத்தி அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளது.

இவர்களில் தற்போது 50 குடும்பங்களே நிரந்தரமாக தங்கியுள்ளன என்று பிரதேச செயலர் முரளீதரன் தெரிவித்துள்ளார். (ம-100)

## குருநகர் ஆஸ்பத்திரியில் வாராந்த கிளினிக்குகள்

குருநகர்,ஜன.27

குருநகர் பிரதேச வைத்தியசாலையில் மாதத்தின் முதலாம், மூன்றாம் புதன் கிழமைகளில் சிறுவர்களுக்கான சிகிச்சையும் இரண்டாம், நான்காம் புதன்கிழமைகளில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிகிச்சையும் இடம் பெறுகின்றன.

முதலாவது செவ்வாய்க் கிழமை சுகவனிதையர் சிகிச்சைக் கிளினிக்கும் சலரோக சிகிச்சையும் வியாழக்கிழமைகளில் குடும்ப நல சிகிச்சையும் நடைபெற்று வருகின்றனர் என்று குருநகர் பிரதேச வைத்திய அதிகாரி எஸ்.சீவரட்ணம் தகவல் தெரிவித்தார். (ம-51)

## அன்னதானமடம் மீள் நிர்மாணம்

வடமராட்சி,ஜன.27

தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தெற்கு வீதியில் இருந்த கந்தன் கருணை அன்னதான மடம் கோடிக் கணக்கான ரூபா செலவில் புதிதாக நிர்மாணம் செய்யப் படவுள்ளது.

கடந்தகால போரால் முற்றாகச் சேதமடைந்திருந்த அந்த மடத்தை புனரமைப்புச் செய்ய மடத்தை பாதுகாத்து வந்தோர்களால் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டு மடத்தை புதிதாக நிர்மாணிக்க நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

அதே இடத்தில் புதிய மடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை தைப்பூச தினத்தன்று நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் ந.அனந்தராஜ், பருத்தித்துறை பிரதேச செயலக இந்து கலாசார அமைச்சின் உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதற்கென இடிபாடுகள் அகற்றப்பட்டு பற்றைகள், புற்கள் வெட்டப்பட்டு மடம் அமைக்கப்படும் காணி ஏற்கனவே துப்புரவு செய்யப் பட்டுள்ளது. (ம-8)

## சிக்கன கடன் வழங்கும் கூ. சங்கக் கிளைகளைத் திறக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.மாவட்டத்தில் சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களை பிரதேச ரீதியாகத் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலிகாமம் மேற்கு மற்றும் தென்மராட்சிப் பகுதியில் இந்த சங்கக் கிளைகளைத் திறப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சமாசம் தெரிவித்தது.

அதனை விட ஏற்கனவே சமாசத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்காமல் இருக்கும் இந்த சங்கங்களை மீள் இயங்க வைப்பதற்கும் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

அதே வேளை நல்லூர் கலாஜோதி கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் மீள அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## வடமராட்சி வயல்களில் அறுவடை தாமதமாகியது

வடமராட்சி,ஜன.27

வடமராட்சி பிரதேசத்தில் உள்ள நெல் வயல்களில் மழை நீர் தேங்கி நிற்பதால் அறுவடை தாமதமாகியுள்ளது.

கடைசியாகப் பெய்த பெருமழையால் வடமராட்சிப் பிரதேசத்தில் வல்லை, கரவெட்டி, குடத்தனை ஆகிய பகுதிகளில் உள்ள வயல்களில் மழை நீர் தேங்கி நிற்கின்றது.

சுமாரான விளைச்சலைத் தந்துள்ள இந்த நெல் வயல்களில் புதிர் எடுக்கப்பட்ட போதிலும், மழை நீர்தேங்கி நிற்பதால் அறுவடையை ஆரம்பிக்க முடியவில்லை என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

மழை நீர் வற்றிய பின்னரே இந்தப் பிரதேசத்தில் அறுவடை தாமதமின்றி இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-8)

## சிரமத்தின் மத்தியில் அறுவடை



நவாலி,ஜன.27

நவாலிப் பகுதியில் சில விவசாயிகள் நெல்லை வெள்ளத்துக்கு மத்தியில் சிரமப்பட்டு அறுவடைசெய்து வருகின்றனர்.

குறைந்த மாதத்தில் விளைச்சலைத் தரக்கூடிய 402 இன விதை நெல்லை பயிரிட்ட விவசாயிகளே இந்த நெல்லை வயல்களில் இருந்து அறுவடை செய்து வருகின்றனர்.

சுமார் மூன்றரை மாதங்களில் விளைச்சலை தரக்கூடிய இந்த நெல், வயல்களில் வெள்ளத்தில் காய்ந்ததை அடுத்து அவை அறுவடை செய்யப்பட்டு மேட்டு நிலங்களில் பரப்பி உலர வைக்கப்பட்டு வருகின்றன. இதேவேளை, ஏனைய வயல்களில் நெற்கதிர்கள் காய்ந்த நிலையில் காணப் படுவதாகவும் கூறப்பட்டது. (ம-17)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி முன் வாகனங்கள் நிறுத்தத் தடை

தென்மராட்சி,ஜன.27

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்புற வாயில் பகுதியில் வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

வீதி அகலிப்பு பணிக்காக ஒரு வழிப் பாதையாக ஏ-9 வீதி பாவிக்கப்படுவதால் வாகனங்கள் இரு பக்கமும் நிறுத்தப்பட்டு தொடராக அனுப்பப்படுகின்றன.

இவ்வாறு நிறுத்தப்படும் போது ஒரு பக்கத்தில் நிறுத்தப்படும் வாகனங்கள் வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வாயிலை தடை செய்து நிற்கின்றன.

இதனால் வைத்தியசாலைக்கு உள்வரும் வாகனங்களும் வெளிச்செல்லும் வாகனங்களும் ஏ-9 வீதியில் நிறுத்தப்படும் வாகனங்கள் செல்லும்வரை வைத்தியசாலை வளாகத்தில் காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

**வைத்தியசாலை வாயிலை மூடி வாகனம் நிறுத்தப்படுவதால் நெருக்கடி நிலவியது**

இந்த நிலையில் அவசர நோயாளர்களுடன் புறப்பட்ட சாவகச்சேரி வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனம் 15 நிமிடங்கள் காத்திருந்ததை சுட்டிக் காட்டி உதயனில் செய்தி வெளியாகியிருந்தது.

இதனை அடுத்து வைத்தியசாலையின் பிரதான வாயில் பகுதியில் வாகனங்கள் நிறுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. (ம-9)

## வர்த்தக நிலையங்கள் வீதியோரம் பொருள்களை வைத்து விற்கத் தடை

யாழ்ப்பாணம்,ஜன 26

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கடைகளின் முன்பாக நடை பாதை, கால்வாய்கள் அமைக்கும் நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. எனவே வீதியோரம் வைத்து பொருள்கள் விற்பனை செய்வதை வர்த்தகர்கள் நிறுத்த வேண்டும்.

யாழ். மாநகர சபை, வர்த்தகர்களுக்கு இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இதனை மீறிச் செயற்படுவோர் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது. (ம-ரி)

## தூக்கி வீசப்பட்ட குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சிம்,ஜன.27

வீதியில் காணப்பட்ட குழியினுள் மோட்டார் சைக்கிள் சில்லு இறங்கி தூக்கி வீசப்பட்டதில் குடும்பஸ்தர் ஒருவருக்கு கையில் பாதிப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை தாவளை இயற்றாலையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இந்திரன் (வயது-35) என்பவரே கையில் பாதிப்பு ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

முன்பள்ளியில் கற்கும் பிள்ளையை ஏற்றிச் சென்ற வேளையில் விபத்து இடம் பெற்றதாகத் தெரிவிக்கப் பட்டது. (ம-9)

## தீவுப் பகுதி வீதிகளின் பணிகளுக்கு இரு றோளர்

யாழ்ப்பாணம்,ஜன.27

தீவுப்பகுதியில் வீதி திருத்தப் பணிகளை இலகுபடுத்துவதற்காக இரண்டு றோளர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண சபையால் 11 மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்த இந்த றோளர்கள் அங்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன.

இதில் ஒரு றோளர் நெடுந்தீவு பிரதேச சபைக்கும் மற்றையது ஊர்காவற்றுறை மற்றும் வேலணை பிரதேச சபைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

தீவுப் பகுதியில் வீதி புனரமைப்புப் பணிகளை மிகவும் துரிதப்படுத்தவும் அங்கு மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாணப் பணிகளுக்கும் இவை பெரும் உதவியாக இருக்கும் என்று கூறப்பட்டது. (ம-17)

## இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட இளைஞன்

கொடிகாமம், ஜன.27

இரவு வேளையில் வீதியில் நடந்து சென்ற இளைஞர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது.

மிருசுவில் உசன் பகுதியில் இடம்பெற்ற சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் சசிகாந் (வயது-26) என்பவர் தாக்குதலுக்கு ஆளான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## குருநகர் பிரதேச ஆஸ்பத்திரியில் 2012 இல் 31,700 பேர் சிகிச்சை

குருநகர்,ஜன.27

குருநகர் பிரதேச வைத்தியசாலையில் 2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பல்வேறு நோய்களுக்குமாக வெளிநோயாளர் பிரிவில் 31 ஆயிரத்து 700 பேர் சிகிச்சை பெற்றுள்ளார்கள் என்று இந்த வைத்தியசாலைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

2012 ஜனவரி மாதம் 2 ஆயிரத்து 404 பேரும் , பெப்ரவரி மாதம் 2 ஆயிரத்து 267 பேரும், மார்ச் மாதம் 2 ஆயிரத்து 665 பேரும், ஏப்ரல் மாதம் 2 ஆயிரத்து 469 பேரும், மே மாதத்தில் 2 ஆயிரத்து 456 பேரும், ஜூன் மாதத்தில் 2 ஆயிரத்து 614 பேரும் ஜூலை மாதத்தில் 2 ஆயிரத்து 508 பேரும், ஓகஸ்ட் மாதத்தில் 2 ஆயிரத்து 564 பேரும், செப்ரெம்பர் மாதத்தில் 2 ஆயிரத்து 389 பேரும், ஒக்ரோபர் மாதத்தில் 2 ஆயிரத்து 955 பேரும், நவம்பர் மாதத்தில் 3 ஆயிரத்து 785 பேரும் டிசெம்பர் மாதத்தில் 2 ஆயிரத்து 624 பேரும் இவ்வாறு சிகிச்சை பெற்றுள்ளார்கள். (ம-51)

## குடிதண்ணீர் விநியோக திட்டம் கையளிப்பு

அரச, மாகாண நன்கொடைத் திட்டத்தின் கீழ் 1.8 மில்லியன் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள கரணவாய் செல்வபுரம் குடிதண்ணீர் விநியோகத்திட்டம் கரவெட்டி பிரதேசபையால் கரணவாய் இளங்கோ சனசமூக நிலையத்திடம் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்குக் கையளிக்கப்படவுள்ளது.

கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசுவால் இந்தத் திட்டம் கையளிக்கும் நிகழ்வில் பிரதேசசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

கரவெட்டிப் பிரதேசசபையால் நிறை வேற்றப்பட்ட இந்தத் திட்டத்தால் செல்வபுரம், மணல்பாதி, மணியகாரன் தோட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான குடும்பஸ்தர் பயனடைவர் என்று கூறப்பட்டது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**31 ஆம் நாளில் நினைவஞ்சலி**

மண்சிறக்க 05.05.1965

விண்சிறக்க 28.12.2012

## அமரர் கந்தசாமி கருணாகரன் (ஸ்ரீ)

(கருணா ஸ்ரோர் – கினிகத்தேனை)

(நவாலி வடக்கை பிறப்பிடமாகவும் கினிகத்தேனையை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

காலமெல்லாம் ஒன்றாக வாழ்வோமெனக்
கண்டிருந்த கனவுகளைக் கலைத்துவிட்டு
கண்ணிமைக்கும் நேரத்தில்ஏன் எம் சோதரனே.
காற்றோடு காற்றாகக் கலந்தனையோ?

எண்ணிய எண்ணங்கள் ஏக்கமுடன் உள்ளத்தில்
ஏற்றி வைத்த ஆசைகள் கட்டிவைத்த கனவெல்லாம்
எட்டிவரும் தருணத்தில் என்னவரே
விதிவிட்டு வைக்க வில்லை ஐயா
நீர் நடந்த பாதை இருந்த இடம்

இறுமாறு வார்த்தை என் மகனே
இதயத்தைப் பிளந்து இருளாக்கி விட்டதடா
நீ நடமாடும் வீட்டில் நிழற்படமாகத் தொங்க நினைந்ததனால்
நஞ்சுண்ட கண்டன் பதமலரில் என்றும்
இன்புற்றிருக்க வேண்டுகிறோம்.

கடந்த 28.12.2012 வெள்ளிக்கிழமை அன்பு மகனின் மரணச் செய்தி அறிந்து நேரிலும், மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

"கௌரி வாசம்"
நாச்சிமார் கோயிலடி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

உடன் பிறப்புக்கள்

## வீதிக்கு மின் குமிழ்கள்

வடமராட்சி, ஜன.27

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை முன்பாக உள்ள ஆஸ்பத்திரி வீதியில் இரவு வேளையில் மீண்டும் மின் குமிழ்கள் ஒளிரத் தொடங்கியுள்ளன.

மந்திகையில் உள்ள இந்த வீதியில் பொருத்தப் பட்டிருந்த மின் குமிழ்கள் ஒளிராமல் பழுதடைந்திருந்தன. தற்போது இம் மின் குமிழ்கள் திருத்தப் பட்டுள்ளதால் மின் குமிழ்கள் ஒளிரத் தொடங்கியுள்ளன.

(ம-8)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்

## பாலகேசரி கமலாதேவி (தேவி)

(மில் ஒழுங்கை, மல்லாகம்)



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலகேசரி கமலாதேவி 25.01.2013 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் -சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், கந்தையா பாலகேசரியின் அன்புத் துணைவியும், சுரேஸ் (ஆஸ்திரேலியா), சிவாஜினி (சுவிஸ்), சுதாஜினி (ஆஸ்திரேலியா)ஆகியோரின் அன்புத் தாயாரும் ராதிகா, தர்மகுலராஜா, முரளி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆகாஷ், சந்தியா,ஜெனனி, நிலானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மாயனத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில் ஒழுங்கை,
மல்லாகம்.

தகவல்:
க.பாலகேசரி (கணவர்)

(28759)(5-6-7)

## பிரத்தியேக வகுப்புக்கள்

தரம் 5 வரையான Tuition Classes கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏனைய பாடங்கள் தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் வீட்டில் கற்பித்துக் கொடுக்கப்படுகிறது.
தொடர்புகளுக்கு:0778485478.
உரும்பிராய்ச் சந்தி.

(28763)(6.7.4)

## காணி விற்பனைக்கு

அம்பலவாணர் வீதி, உடுவிலில் 4½ பரப்புக் காணி விற்பனைக்குஉண்டு.
தொடர்பு:0778965899, 0014164120406. (கனடா)

(28765)(6.7.4)

# CITY COLLEGE OF ENGLISH

## ENGLISH EXAMINATIONS

## IELTS

BRITISH COUNCIL

### For Student Visa and Migration

IELTS பரீட்சைகள் **16.05.2013** இல் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

* பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகள் 02.02.2013 ஆரம்பம்.
* நீங்கள் எங்கு படித்திருந்தாலும் எமது கல்லூரியில் வந்து பரீட்சைக்குப் பதிவு செய்ய முடியும்.
* IELTS பரீட்சைக்குப் பதிவு செய்யும் போது இலவச நூல்களை நாம் தருவோம்.
* கடந்த காலங்களில் எமது கல்லூரியில் கல்வி கற்றவர்கள் Band 8.5 வரை பெற்றிருக்கிறார்கள்
* உடனடியாக வகுப்பில் இணைந்து பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துங்கள்

வகுப்புகள் ஆரம்பம் **02.02.2013** Classes : Sat, Sun 8.30 - 11.30 am

**IELTS** கற்கப்போதுமான அளவு ஆங்கில அறிவு இல்லையெனில் முதலில் **PET** வகுப்பில் படித்தபின் **IELTS** இல் சேரலாம்.

**IELTS Registration Center for British Council.**

திருமணம் செய்த இல்லத்தரசிகள் அல்லது British பிரஜைகளை திருமணம் செய்ய இருக்கும் அனைவரும் கட்டாயமாக ஆங்கிலத்தில் தேர்ச்சியடைய வேண்டும். UK Border Agency அங்கீகரிக்கும் பாடநெறி Ket (A1, A2) மட்டும்

## UNIVERSITY OF CAMBRIDGE

Would you like to achieve a certificate in English which is valid for life. If so, the Cambridge ESOL high level English language certificates are the best choice for you.



### KEY English Test

**A1 , A2** *U.K Settlement visa* வுக்கான பரீட்சையை *KET* **KEY English Test** நாளாந்த English பயன் பாட்டிற்கு உகந்த பரீட்சை. பாடங்கள் *Reading and Writing Listening & Speaking*. பரீட்சையில் *70%* புள்ளிகள் பெற்று *A2 Certificale 46 - 69* வரையிலா புள்ளிகள பெற்றால் *A1 Certificat* கிடைக்கும்

This exam tests the ability to cope with everyday written and spoken English at a basic, Practical level.

### Perliminary English Test

Leval B1

**PET Perliminary English Test** இது ஓர் **Intermediate Level** பரீட்சையாகும் **For those who want to use English for work and study** நீங்கள் **B1** தகுதியைப் பெறத்தவறமிடத்து **A2 Certificate** கிடைக்கும்

PET tests written and spoken language at an intermediate level in work, study and social situations, for those who want to use English for work and study, PET is an important step towards attaining higher qualifications.

நீங்கள் சரளமாக ஆங்கிலத்தில் எழுத, நாளாந்தக் கருமங்களை ஆங்கிலத்தில் செய்வதற்கு உடனடியாக PET வகுப்புக்களில் சேருங்கள்.

**Cambridge University பரீட்சைகள் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் 14.05.2013 இல் நடைபெறவுள்ளன.**

Barch I - 7.00 a.m - 8.00 a.m
Barch II - 8.30 a.m - 10.30 a.m
Barch III - 10.30 a.m - 12.30 a.m

வகுப்புகள் ஆரம்பம் **04.02.2013**

வகுப்புகள் Mon - Tus - Wed - Thu வாரத்தில் நான்கு நாட்கள் 8 மணித்தியாலம் நடைபெறும்

For registration and further details contact

**CITY COLLEGE OF ENGLISH**

No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.

Tel. 021 2220384 / 077 8803887

(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வீடு வாடகைக்கு

6 அறைகள் கொண்ட 2 மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு.
முகவரி: 386, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ரங்கநாதப் பெருமாள் கோயிலுக்கும், பழையவெலிங்டன் சந்திக்கும் இடையே)
வாடகை 35000/=, முற்பணம் 1200000/= தரப்படுமிடத்து வாடகை மிகவும் குறைக்கப்படும்.
தொலைபேசி இல:0770633116
A.Printhaban
K.V Printers Books
Distributing Center.
(28633)(6.7.12)

# சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களே

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பித்துள்ள Bio Chem International நிறுவனத்தின் 2ஆவது கிளைக் காரியாலயத்தில் Promotion Officer, Executive, Branch Manager ஆகிய வெற்றிடங்கள் உள்ளன.
தகைமை: O/L, A/L. வயது(19-30)
தங்குமிட வசதி இலவசம்.
தொடர்புகளுக்கு:0778724060.
(28748)(6.7.4)

# வேலையாள்கள் தேவை

25,000/= சம்பளத்திற்கு எங்களுடைய க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16-55 வரை ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு, தங்குமிட வசதி உண்டு. குழுக்களாகவும் வரலாம். வரும் அன்றே வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.
அழையுங்கள்: 077 303 2004, அனுராதபுரம்.
(27630)(37.48)

# விற்பனைக்கு

ஆசிரியையின் தனிப் பாவனையில் உள்ள NPGD-xxxx இலக்க Yamaha Mate (50CC) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
(28685)(5.6.7) தொடர்பு:075 657 4272

# 

# சிவபூமி ஞான ஆச்சிரமம் (குப்பிளான்)

# திறப்பு விழா

**காலம் :**
**28.01.2013 திங்கட்கிழமை மு.ப. 10.00மணி**

**செஞ்சொற்செல்வர். கலாநிதி ஆறு.திருமுருகன்**
(தலைவர். சிவபூமி அறக்கட்டளை)

**ஆச்சிரமம் திறந்து வைத்தல்**
**ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள்**
(ஹவாய் சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர்.அமெரிக்கா)

**நிகழ்ச்சி நிரல்**
முற்பகல் 10.00 மணி திருமுறை வழிபாடு
10.05 மணி கோமாத வழிபாடு
10.10 மணி சிவபூமி ஞான ஆச்சிரமத்தை திறந்து வைத்தல்
(ஆன்மீகச் சுடர்ரிஷி தொண்டுநாத சுவாமிகள்)

**வாழ்த்துரைகள்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**
(குருமுதல்வர். நல்லை ஆதீனம்)
**சித்ரூபானந்த சுவாமிகள்**
(முதல்வர்.சாரதா ஆச்சிரமம்-பருத்தித்துறை)
**ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாத சுவாமிகள்**
(அமெரிக்கா)
**சிவப்பணியாளர் முரளிதரன்**
(சிவத்தொண்டன் நிலையம்-யாழ்ப்பாணம்)
**சிவத்திரு ஸ்ரீவேதாவித்தியாசாகர்**
(வேதாதமடம்.கந்தர்மடம்.யாழ்ப்பாணம்)
**சுவாமி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள்**
(சின்மய மிஷன். யாழ்ப்பாணம்)
**அமுதசுரபி மோகனதாஸ் சுவாமிகள்**
(முதல்வர். சந்நிதியான் ஆச்சிரமம்)

**நிறைவுரை**
அன்னதானம்
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**நிர்வாக சபை**
**சிவபூமி ஞான ஆச்சிரமம், குப்பிளான்.**
(28738)(5.6.7) **தொ.பே.: 021 320 1083**

# தகுதிக்கேற்ப தொழில் வாய்ப்புக்கள்

சம்பளம் 38,000/= முதல் எங்கள் பிரதான தொழிற்சாலைகள் மூலம் ஜாம், பிஸ்கட், டொபி, ரயர், கோடியல், தேயிலை, பால்மா, நுளம்புச்சுருள், பீங்கான் உற்பத்தி மற்றும் குளோஸ் உற்பத்தி பகுதியில் 100க்கும் லேபல் ஒட்டுதல் பிரிவுக்கும், தரம் 6 முதல் A/L வரை பயின்ற 17 வயது முதல் 55 வயதுவரையான ஆண்கள், பெண்கள் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம், நண்பர்கள் குழுவாக ஒரே இடத்தில் தொழில் புரியலாம். வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து விசேடமாக இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 071 3460 295
அனுராதபுரம்.
(27632) (45.6.7)

# பணியாள்கள் தேவை

25,000/=, 35,000/=, 40,000/= வரையான சம்பளத்துக்கு எங்கள் தனியார் துறைமுகத்தில் கப்பல் வேலைக்கு 18-55 வயது வரையான ஆண்கள் தேவை.
உணவு, தங்குமிட வசதிகள் உண்டு.
தொடர்பு: 077 3033 803
(27631) (45.6.7)

# மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1979, அவிட்டம்,12இல் செவ்வாய், கி.பா.58 தனியார் துறையில் பணிபுரிபவர், 8,4,2,12 உடையவர்கள்.
(28749)(5.6.7) தொடர்பு:077 852 1630

# விற்பனைக்கு

வெளிநாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட பின்வரும் பொருள்கள் விற்பனைக்குண்டு.
1. ஜாக் முட்டு பைப் -2''
2. கலர் பிறிண்டர் பக்ஸ் மொடல்
தொ.பே.:
077 844 6093,077 601 3566
(28747)(5.6.7)

# Lukshmee Transport

* 9 தொன் சுமை ஏற்றக் கூடிய TATA லொறி வாடகைக்கு விடப்படும்.
* 38 ஆசனங்கள் உடைய அரைச்சொகுசு TATA BUS வாடகைக்கு விடப்படும்.
* Hiace வாகனம் வாடகைக்கு விடப்படும்



சுற்றுலா செல்பவர்கள், பாடசாலைகள், கல்விநிறுவனங்கள், தொண்டுநிறுவனங்கள், ஏனைய விசேடவைபவங்களுக்கு, மிகக் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.



TP.021 567 0256



105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சதாசிவம் மகேசு

(முன்னாள் அதிபர், வட்டுக்கோட்டை)

யாழ். கொழும்புத்துறை, சுவாமியார் வீதியைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் மகேசு 24.01. 2013 வியாழக்கிழமை வட்டுக்கோட்டை யில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-மாணிக்கம் தம்பதியரின் புத்திரனும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, தங்கம்மா, மனோன்மணி, பொன்னம்பலம், மகாலிங்கம், காமாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராமசாமி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், பத்மராணி(பரிஸ்- பிரான்ஸ்), சிவகுமார்(லண்டன்), தர்மராஜ்(றெஜியோ எமிலியா- இத்தாலி), சுந்தரராஜா(லண்டன்), தனராணி(துலூஸ்- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வி.ரி. இலங்கோவன்(பரிஸ்), நேசவதனி(லண்டன்), சுகந்தி (இத்தாலி), தேவகி(லண்டன்), த.சூரியபாலன்(துலூஸ்-பிரான்ஸ்) ஆகி யோரின் அன்பு மாமனும், அநேகா-சுரேஸ், அம்சா, ஓவியா, ஏகன், சந் தோஸா, சாருகா, சிவானி, சீரோன், சியாரா, விந்தியா, அட்சதா, காவியன், சுகந்தன், கஜன், விசாலன் ஆகியோரின் அன்பு பேரனும் சந்தோஷின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2013) ஞாயிற்றுகிழமை மு.ப.10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று சங்கரத்தை வழுக்கையாறு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வட்டுக்கோட்டை தெற்கு, (28692) (4567) குடும்பத்தினர்.

# 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 09.01.1988

இறைவன் அடியில் 30.10.2012

## அமரர் யோகீஸ்வரன் நிஜாந்தன்

கடந்த (30.10.2012) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப த்தலைவரின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும். மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
கைதடி மேற்கு,
நிரந்தர முகவரி:
மறவன்புலோ, சாவகச்சேரி, (28741) (45.6.7)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை இராசதுரை

(இ.போ.ச. முன்னாள் ஊழியர்)

சிலம்புப்புளியடி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வதிவிடமாகவும் தற்போது இல.179/10, வெளிக்குளம், வவுனியாவை வதிவிட மாக வும் கொண்ட சங்கரப்பிள்ளை இராசதுரை நேற்றுமுன்தினம் (25.01.2013) வெள்ளிக் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னாரர் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - பொன்னுப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் அனுசா (வவு னியா), பிறேம்குமார் (ஹொலண்ட்), முகுந்தகுமார் (சுவிஸ்) ஆகி யோரின் அன்புத் தந்தையும் திலகேந்திரன் (கண்ணன், வவுனியா), சன்யா (ஹொலண்ட்), லாவண்யா (சுவிஸ்) ஆகியோரின் மாமனும், இரா ஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, திருவாதிரை மற்றும் சோதிலிங்கம், ஈஸ்வரி, லோகேஸ்வரி, தனேஸ்வரி, ஞானேஸ்வரி, காலஞ்சென்ற நற்குணநாதன் ஆகியோரின் சகோ தரரும் தர்சிகா, லக்சிகா, கோசிகா (வவுனியா), அவனீஸ், அஸ்மிரா (ஹொலண்ட்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (28.01.2013) திங்கட் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
179/10, வெளிக்குளம், வவுனியா. T.P. 0244589997 (C/6053)(2.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 100

சிவன்சுதன்
வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

## வைத்திய மலரின் நூறாவது மலர்வு

பலரினுடைய ஒன்றுபட்ட கூட்டு முயற்சியின் பயனாக நித்திய சுகத்தை நோக்கிய இந்த வைத்தியமலர் தனது நூறாவது அத்தியாயத்தில் வெற்றிகரமாக கால் பதித்திருக்கிறது.

தற்போதைய காலகட்டத்தில் ஆரோக்கியமற்ற உணவு முறையும் போதிய உடற்பயிற்சி இன்மையும் சுகாதாரக் குறைபாடுகளுமே பல மரணங்களுக்கும் நோய்களுக்கும் அடிப்படைக் காரணங்களாக இருக்கின்றன. இந்த ஆரோக்கியமற்ற நிலையை சமாளிப்பதற்கு சமூக மட்டத்தில் நோய் நிலைகள் சம்பந்தமாகவும் நோய்த் தடுப்பு மற்றும் சுகாதார மேம்பாடு சம்பந்தமாகவும் தொடர்ச்சியான அறிவூட்டல் செயற்பாடுகள் செய்ய வேண்டிய ஒரு தேவை இருக்கிறது. இந்தத் தேவையை நன்கு உணர்ந்து உதயன் பத்திரிகை நிறுவனமானது தனது வாரமலரிலே ஒரு முழுப் பக்கத்தை சுகாதார விழிப்புணர்வுக்கென ஒதுக்கி எமது சமூக சுகாதார அறிவூட்டல் முயற்சிக்கு களம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. இதற்காக யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்தின் சார்பாக உதயன் பத்திரிகை நிறுவனத்துக்கு எமது நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பாக இந்தப் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் மூத்த பத்திரிகையாளருமான ம.வ கானமயில்நாதன் அவர்கள் வழங்கிய ஊக்கத்துக்கும் ஆலோசனைகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இந்த வைத்திய மலரில் வெளிவந்த ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இரண்டு நூல்களாக வெளியிடப்பட்டிருக்கின்றன. 'நித்திய சுகத்தை நோக்கி'', ''நூற்றாண்டு கடந்து நீடுழி வாழ'' என்ற பெயர்களுடன் வெளியிடப்பட்டிருக்கின்றன. ''நித்திய சுகத்தை நோக்கி'', நூற்றாண்டு கடந்து நீடுழி வாழ'' என்ற பெயர்களுடன் வெளியிடப்பட்டிருக்கும் இந்த இரண்டு நூல்களையும் யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். இந்த நூல்களின் விற்பனை மூலம் பெறப்படும் பணம் அனைத்தும் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

எமது சொந்த சுகாதாரப் பிரச்சினைகளை உள்வாங்கி அவை சம்பந்தமாகவும் அவற்றின் தீர்வுகள் சம்பந்தமாகவும் இன்னும் பல ஆக்கங்கள் வெளிவர வேண்டும். அவற்றுக்கு ஊடகத்துறையினர் அனைவரும் முன்னுரிமை கொடுக்க முன்வர வேண்டும்.

பொது மக்கள் சுகாதாரம் சம்பந்தமான ஆக்கங்களைப் படிப்பதில் ஆர்வம் காட்ட வேண்டும். நோய்த் தடுப்பு, சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். சுகமான எதிர்காலம் என்ற எமது கனவு நிச்சயம் நனவாகும்.

உதயனின் இந்த வைத்தியமலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி..., நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

## குழந்தைகளுக்கு வக்சீன் கொடுப்பதன் முக்கியத்துவம்



நீங்கள் உங்கள் குழந்தைக்கு நன்மையானவற்றை செய்ய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அவர்களின் வளர்ச்சியில் அக்கறை செலுத்த பல வழிகள் உண்டு. அவை எல்லாவற்றிலும் முக்கியமானது அவர்களது பாதுகாப்பான வளர்ச்சிக்கு நீங்கள் உதவுவதாகும். பாதுகாப்பான வளர்ச்சியில் வக்சீன் கொடுக்கப்படுவது மிகவும் இன்றியமையாதது. இவ்வாறு உரிய காலத்தில் வக்சீன் கொடுப்பதால் உங்கள் பிள்ளைக்கு பின்வரும் நன்மைகள் கிடைக்கின்றன.

**1. நீர்ப்பீடணம் அளித்தல் உங்கள் பிள்ளையின் உயிரைக் காக்கும்**

மருத்துவ விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தால் தற்போது முன்னரை விட பல விதமான நோய்கள் ஏற்படுவதில் இருந்து உங்கள் பிள்ளைக்கு பாதுகாப்பை வழங்குகின்றது. சில வகையான தொற்று நோய்கள் ஆயிரக் கணக்கான பிள்ளைகளின் உயிரைப் பறிக்கக் கூடியன அல்லது அவர்களுக்கு வேறுவழியில் தீங்கு விளைவிக்கக் கூடியன. உதாரணமாக தற்போது போலியோ சொட்டு மருந்து சரியான முறையில் வழங்கப்படுவதன் மூலம் இலங்கையில் இளம்பிள்ளை வாத நோயினால் பீடிக்கப்படுபவர்கள் இல்லை என்றே கூறலாம். இந்த இளம்பிள்ளை வாத நோயானது குழந்தைகளின் அங்கங்களின் செயற்பாட்டை பாதிப்பதுடன் மரணத்தையும் ஏற்படுத்தக் கூடியது.

**2.நீர்ப்பீடணம் அளித்தல் பாதுகாப்பானதும் வினைத்திறன் மிக்கதுமாகும்**

வக்சீன் கொடுக்கும் செயற்திட்டமானது விஞ்ஞான ரீதியாக நன்கு ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே குழந்தைக்கு வழங்கப்படுகிறது. சில சமயங்களில் வக்சீன் கொடுக்கும் போது நோ, தோலில் சிவப்புத் தன்மை, தடிப்புகள் போன்ற அசௌகரியங்கள் ஏற்படலாம். இவ் ஒவ்வாமை விளைவுகளால் ஏற்படும் பாதிப்புகளை விட நோய் ஏற்பட்டு அதனால் ஏற்படும் பக்கவிளைவுகள் தீவிரமானவை. ஆகவே நோய் ஏற்படாமல் தடுக்கும் முக்கியமான செயற்பாட்டை வக்சீன் குழந்தைக்கு வழங்குகின்றது.

**3.நீர்ப்பீடணம் கொடுப்பதன் மூலம் மற்றவர்களுக்கு நோய் பரவாமல் தடுக்கலாம்**

சரியான முறையில் வக்சீன் உரிய காலத்தில் கொடுக்கப்படுவதன் மூலம் உங்கள் பிள்ளைக்கு முழுமையான நீர்ப்பீடண எதிர்ப்பு சக்தி ஏற்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் குக்கல் போன்ற தொற்று நோய்களில் இருந்து முழுமையான பாதுகாப்பு கிடைக்கின்றது. இதன் மூலமாக உங்களது குழந்தைக்கு முழுமையான பாதுகாப்பும் கிடைப்பதுடன் நோய் பரவலைவது தடுக்கப்படுவதுடன் குடும்ப உறுப்பினர்களுக்கு முழுமையான பாதுகாப்பும் கிடைக்கிறது.

**4.நீர்ப்பீடணம் அளிப்பதன் மூலம் உங்கள் குடும்பத்துக்கு பொருளாதார செலவுகளும் நேரமும் மீதப்படுத்தப்படுகிறது**

சரியான முறையில் நீர்ப்பீடணம் அளிப்பதன் மூலம் குழந்தை நோய் வாய்ப்படும் வீதம் குறைவதால் பொருளாதாரச் செலவுகள் குறைவடைவதுடன் உங்களது நேரமும் மீதப்படுத்தப்படுகிறது. குழந்தை நோய் வாய்ப்படின் நீங்கள் வைத்தியசாலைக்கு சில சமயங்களில் வீடுகளிலும் அதிக நேரத்தை குழந்தையுடன் செலவு செய்ய நேரிடும். ஆகவே, நீங்கள் வேலை செய்பவர்களாக இருந்தால் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும். உண்மையில் சரியான முறையில் வக்சீன் கொடுப்பது ஒரு முதலீடு போன்றதாகும். இவ்வாறான வக்சீன் கொடுப்பது பொருளாதார ரீதியில் நலிவடைந்த குடும்ப அங்கத்தவர்களுக்கும் இலவசமாகக் கிடைப்பதாகும்.

**5.நீர்ப்பீடணம் அளித்தல் எதிர்காலச் சந்ததியைப் பாதுகாக்கும்**

சரியான முறையில் நீர்ப்பீடணம் அளித்தல் சில நோய்களைக் குறைக்கின்றது அல்லது இல்லாமல் செய்கின்றது. இதன் மூலமாக எதிர்காலச் சந்ததி ஆரோக்கியம் உள்ளவர்களாக வளர இது உதவுகின்றது. இன்று நீர்ப்பீடணம் அளிப்பதன் மூலம் சின்னம்மை (Small pox) முழுமையாக உலகில் இருந்து ஒழிக்கப்பட்டுவிட்டது.


ஆகவே சின்னம்மையால் உங்கள் பிள்ளைகள் பாதிக்கப்படுவதற்குரிய சந்தர்ப்பம் எதிர்காலத்தில் இல்லை. மேலும் ரூபெல்லா (Rubella) வக்சீன் கொடுப்பதன் மூலம் கர்ப்பிணித் தாய்மார்கள் ஜேர்மன் சின்னமுத்து (German measles) ஏற்படுவதில் இருந்து முழுமையான பாதுகாப்பை பெறுகின்றனர்.

இதன் மூலமாக தாயில் இருந்து வைரஸ் தொற்று குழந்தைக்கு கடத்தப்படுவது தடுக்கப்படுகின்றது. இலங்கையில் தற்போது ஜேர்மன் சின்னமுத்தால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து விட்டது. ஆகவே தொடர்ச்சியாக சரியான முறையில் வக்சீன் முழுமையாக கொடுக்கப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் பலவிதமான நோய்களில் இருந்து பிள்ளைகள் காப்பாற்றப்படுவார்கள் என்ற நம்பிக்கை பெற்றோருக்கு ஏற்படுகின்றது.

ஆகவே பெற்றோரே உங்கள் பிள்ளைக்கு வக்சீன் கொடுப்பதற்கு நீங்கள் என்றும் தயங்க வேண்டாம். உண்மையில் சரியான முறையில் வக்சீன் கொடுப்பது உங்களது பிள்ளைக்கு இன்று நீங்கள் செய்கின்ற சரியான முதலீடு போன்றது.

**கோ.நந்தகுமார்**
**விரிவுரையாளர், தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இளவாலை ஆனைவிழுந்தான் அருள்

# மஹாகும்பாபிஷேக சிற

## இளவாலை அருள் மிகு ஆனை விழுந்தான் ஸ்ரீ விக்கின விநாயகர் ஆலய வரலாறும் வளர்ச்சியும்

ஆனைவிழுந்தான் விநாயகனை பண்போடு
ஏனை நினைவற்று ஏத்தினால்-ஏத்துவரர்
வெவ்வினைகள் தீர்த்து விரும்பும் வர மளித்து
திவ்வியமாம் முத்தி தரும் தான்

கீரிமலை , மாவிட்டபுரம் ஆகிய இடங்கள் சமய வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் தலங்களாகும். இவை வரலாற்றுப் புகழ் மிக்கவை. இவற்றோடு நெருங்கிய தொடர்புடைய ஆலயமாகக் கருதப்படும் ஆனை விழுந்தான் விக்கின விநாயகர் ஆலய கர்ண பரம்பரைக் கதைகள் தொகுக்கப்பட்டு சீர் தூக்கி ஆராயப்பட்டன. இந்த ஆலய சூழலிலிருந்து தொல்லியல் ஆய்வாளர்களின் முயற்சியால் பெறப்பட்ட சான்றுப் பொருள்களையும் ஆலய தலவிருட்சமாகிய அரச மரத்தடியில் உள்ள மண் மேட்டின் பழமையும் சான்றுகளாகக் கொண்டு இவ்வாலய வரலாறு காங்கேசன்துறை கஜாத் துறைப் பிள்ளையார் கோயிலில் உள்ள மூல மூர்த்தியோடு விளங்கும் ஒத்த தன்மையைக் கொண்டு இவ்வாலயம் கி.பி 6-10 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலா மென கருதப்படுகின்றது.

நகுலேஸ்வரா வீதியில் ஆலடிச் சந்தியிலிருந்து மேற்கே செல்லும் வீதியில் ஒருகிலே மீற்றர் தொலைவில் வீதியின் தென் புறத்தில் அமைந்திருப்பது தான் இளவாலை ஆனை விழுந்தான் ஸ்ரீவிக்கின விநாயகர் ஆலயம். சித்திர மேழிச் சந்தியிலிருந்து கிழக்குத் திசையாக ஒருகிலோ மீற்றர் தூரம் பிரயாணம் செய்தும் இவ்வாலயத்தை அடையலாம்.

குதிரை முகம் போன்ற விகாரமான தன் முகமும் குன்ம நோயும் நீங்க வேண்டித் தலயாத்திரையும் தீர்த்த யாத்திரையும் செய்து வந்த சோழ சேனாதிபதியாகிய திசையுகீர சோழனது மகள் தான் மாருதப்புர வீக வல்லி. இப்பொழுது சுழிபுரம் என விளங்கும் சோழி புரத்தில் இறங்கி நகுலேஸ்வரத்துக்குச் செல்லும் வழியில் அவரைச் சுமந்து வந்த யானை ஓரிடத்தில் நின்றது .அவ்விடத்திலே அரசி வீழ்ந்து வணங்க அவருடன் வந்த யனையும் வீழ்ந்து வணங்கியது. அவ்விடத்தில் ஒரு விநாயகர் விக்கிரகம் காணப்பட்டது. ஆனை விழுந்து வணங்கியதால் இவ் விநாயகப் பெருமான் ஆனை விழுந்தான் விநாயகப் பெருமான் என அழைக்கப்பட்டார்.

ஆலய முன்றிலில் நிற்கும் ஆலயத்தின் தல விருட்சமாகிய அரச மரத்தின் அடியிலுள்ள மண்மேடு இவ் ஆலயத்தின் பழமையைப் பறை சாற்றும் இன்னொரு சான்றாகும். ஆனை விழுந்து வணங்கப் பெற்ற விங்க விநாயகர் ஆனை விழுந்தானில் அமைந்துள்ள எம் பெருமானின் இறை தத்துவத்தை விளக்குகின்றது. நகுலேஸ்வர ஆலயச் சூழலில் ஏழு விநாயகர் ஆலயங்களை மாருதப்புரவீக வல்லி அமைத்தார் எனவும் கூறப்படுகின்றது.

1935 ஆம் ஆண்டின் பின் இவ் ஆலயம் ஆகம விதிப்படி அமைக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு நடை பெற்ற கும்பாபிஷேகம் நகுலேஸ்வர அதீன குரு பிரம்மஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் ஐயா அவர்களாலும் அதன் பின் 1999 ஆம் ஆண்டிலே எமது ஆலய குரு சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக் குருக்களாலும் நடத்தப்பட்டது. இவரது அயராத உழைப்பாலும் பெரு முயற்சியாலும் சில வருடங்களின் பின் துவஜா ரோகணம் என அழைக்கப்படும் கொடியேற்றத் திருவிழா எம் பெருமானுக்கு 2001 ஆம் ஆண்டிலே பங்குனி மாத பூரணையை தீர்த்தமாகக் கொண்டு நடைபெற்று வருவதுடன் இன்றைய தினம் நடைபெறும் மகா கும்பாபி ஷேகத்தின் ஓர் அங்கமாக இராஜ கோபுரமும் அமைக்கப் பெற் றுள்ளது. ஆன்ம கோடிகளின் இன்னல் இடர்களை நீக்கி அருள் செய்யும் பொருட்டு சகல வளங்களும் பொருந்திய ஆனை விழுந்தான் ஸ்ரீ விக்கின விநாயகரை வணங்கி வாழ்த்தி வணங்குகின்றோம்.

## விநாயகர் ஆசி கிடைக்கட்டும்



மஹாகும்பாபிஷேகத்தில் பூர்வாங்கக் கிரியைகள் உத்தராங்க கிரியைகள் என்று பிரிக்கப்பட்டிருக்கின்றன. அனுக்கரை முதல் வாஸ்துசாந்தியீறாக பூர்வாங்க கிரியைகளென்றும் மிருத்சங்கிரகணம் முதல் மஹாகும்பாபிஷேகம் வரை உத்தராங்க கிரியைகளாகச் சிறப்பித்து கூறப்படுகின்றன. பன்னிரண்டு வருடத்துக்கு முறை மஹாகும்பாபிஷேகம் செய்ய விதிக்கப்பட்டிருக்கிறது. தினசரி நடத்தப்படும் நித்திய பூஜைகள் வருடமொருமுறை நடத்தும் மஹோற்சவம், பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை நடத்தப்படும் மஹா கும்பாபிஷேகம் ஆலயங்களில் நடைபெறும். சிறப்பான கைங்கரியங்கள் இந்த விதிமுறைக் களை அனுசரித்து இளவாலை ஆனைவிழுந்தான் பிள்ளையார் ஆலயத்திலும் மஹாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியிருக்கிறது. ஆலய நித்திய பூஜை கைங்கரியங்களை ஆற்றிவரும் சிவாசார்யர் மந்திரம்,கிரிரய, பாவனை மூன்றிலும் சிறந்து விளங்கும் பல ஆலயங்களில் மஹாகும்பாபி ஷேகம் மஹோற்சவங்களை நடத்தி வைத்து இளமைக் காலத்திலேயே அனுபவம் பெற்று இருக்கிறார். அவர் நடத்தி வைக்கும் இக் கும்பாபிஷே கத்தின் பயனாக நாடு சுபீட்சம் பெற்று விளங்க ஆனைவிழுந்தான் விநாயகருடைய ஆசி வேண்டி அப் பெருமானை நமஸ்கரிக்கின்றேன்.

தா.மகாதேவக்குருக்கள்.

## பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை



ஈழமணித் திருநாட்டின் சிரசென விளங்கும் யாழ்.நகர் இளவாலையம் பதி யிலே பக்தர்கள் துயர் தீர்க்க வீற்றிருக்கும் சோழ இளவரசி மாருதப்புரவீக வல்லியினால் பூசிக்கப்பெற்ற பழம் பெரும் புகழ்மிக்க ஆனைவிழுந்தான் ஸ்ரீ விக்கின விநாயகப் பெருமானுக்கும் ஏனை பரிவார மூர்த்திகளுக்கும் நடை பெறுகின்ற உத்தம் சம்புரோக்ஷன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக கைங்கரியத்தை நடத்த திருவருள் கிடைத்ததையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்.

கிடைத்தற்கரிய எம் பெருமானின் இப் பெருஞ்சாந்தி விழாவுக்கு உதவிய அனைத்து மஹா பக்த ஜனங்களுக்கும், தொண்டர்களுக்கும் திருவருள் கிடைத்து இவ்வூரும், நாடும் செழிப்புற்று விளங்க எல்லாம் வல்ல ஆனை விழுந்தான் விக்ன விநாயகப் பெருமானின் பாதார விந்தங்களை மனதில் இருத்தி ஆசி கூறி அமைகின்றேன்.

*" லோகா சமஸ்தா சுகினோ பவந்து"*

சிவஸ்ரீ.இராம.பாலச்சந்திரக்குருக்கள்
(ஆலய ஆதீன குரு)





★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★ பிரசுர அனுசரணை

கிருபா மோட்டோஸ் சங்கானை.

நாதன் ஸ்ரோர்ஸ் சுன்னாகம்.

பாலா விவசாய மருந்தகம் சுன்னாகம்.

தாஸ் கலர் லாப் சுன்னாகம்.

தாட்ஷா மல்ரி பெயின்ற் சுன்னாகம்

நீதன் றில்லிங் உயனை, இளவாலை.

கமலேஸ்வரி புடைவையகம், யாழ்ப்பாணம்.

செல்வா உணவகம் இளவாலை.

அம்பாள் மருந்துக்கடை சுன்னாகம்.

சிவகஜன் களஞ்சியம் இளவாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நள்மிகு ஸ்ரீ விக்ன விநாயகர் தேவஸ்தானம்

# றப்பு மலர் – 27.01.2013

## கீரிமலை ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர குருவின் ஆசிச் செய்தி



சைவமும் தமிழும் தழைத் தோங்கும் புண்ணிய சீலர்களாய் விளங்கும் பசும் சோலைகள் சூழப் பெற்ற இளவாலையம்பதியிலே வரலாற்று சிறப்பு மிக்க அருள்மிகு ஆனை விழுந்தான் விக்ன விநாயகப் பெருமானின் மஹாகும்பாபிஷேக நன்னாளில் இவ்விழா சிறப்பான முறையில் நடை பெறவும் இவ்விழாவிலே கலந்து கொள்ளும் மெய்யன்பர்கள் அனைவரும் நலனும் வளமும் பெற்று வாழவும் இம் மண்ணிலே யாவரும் நல்ல வண்ணம் இன் புற்று வாழ்ந்திடவும் ஸ்ரீ நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர பெருமானின் அருள் வேண்டிப் பிரார்த்தித்தித்து ஆசிகூறுகின்றேன்.

ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வர குருக்கள்
(கீரிமலை நகுலேஸ்வர ஆதீன கர்த்தா)

## நல்லாசிகள் கிட்டட்டும்'



அருள்வளம் நிறைந்த அழகிய கிராமம் இளவாலை. சைவச் சான்றோர் வாழ்ந்த இப் புனிதவூரில் ஆனைமுகனப் பெருமானுக்கு அழகிய கோயில் கட்டி நெறிதவறாது முன்னோர் பராமரித்து வந்தனர். ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோயில் என்றால் அறியாதவர் களில்லை. போரின் அனர்த்தங்களால் ஊர்கள், கோயில்கள் பல்வேறு பாதிப்புக்களைச் சந்தித்தமை வரலாறு. இந்நிலையில் இன்று அடியார்களின் முயற்சியால் பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்த மடைகின்றேன். அத்திமுகவனின் மகாகும்பா பிஷேகத்தோடு அப் பகுதி மீண்டும் செழிப்புற்று மக்கள் தம் வீடுகளில் மகிழ்வாய் வாழப் பிரார்த்தித்து நல்லாசியும் வாழ்த்தும் கூறி அமைகின்றேன்.

கலாநிதி ஆறு திருமுருகன், தலைவர்
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்.

## விழா சிறக்கட்டும்

இளவாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் மகோற்சவப் பெருவிழா சிறப்புப் பெற்ற ஆனைவிழுந்தான் விக்கின விநாயகப் பெருமானுக்கு இன்று மகாகும்பாபிஷேகம் நடைபெறுவது இவ்வூர் மக்களை பக்தி வெள்ளத்தில் ஆழ்த்தி அவரது அருளாசி பெறும் பொருட்டாகும். இந்த நன்நாளில் எம் பெருமானின் மலருக்கு ஆசிச் செய்தி கொடுக்கும் பாக்கியம் கிடைத்ததையிட்டு மகிழ்வு பெறுகின்றேன்.

செல்வி மரின்பெனிற்றா பத்திநாதர்.
கிராம அலுவலர், இளவாலை வடக்கு.

## கும்பாபிஷேகம் நன்மை பயக்கும்

ஈழ மணித் திருநாட்டின் சிரசெனப் போற்றப்படும் வலிகாமம் வடக்கில் இளவாலை எனும் கிராமத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்யும் ஆனை விழுந்தான் விநாயகப் பெருமானின் கும்பாவிஷேக சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் அக மகிழ்கின்றேன்.

தனக்கென தனித்துவமான பாரம்பரிய பண்பாடுகளைப் பேணிவரும் இளவாலைக் கிராமமானது விவசாயத்தையே தனது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளது. இவ்வூரில் பார்க்கும் இடமெங்கும் நீக்கமற ஆலயங்கள் காட்சி கொடுத்த வண்ணம் உள்ளமையும், அவ்வூர் மக்கள் சைவ ஆசாரத்ததைப் பேணி வருவதும் கண்கூடு. அந்தவகையில் தொன்மையும் பழமையும் வாய்ந்த இவ்வாலயம் வரலாற்றுப் பெருமையுடன் இயங்குவது யாவரும் அறிந்ததே! எனவே இவ்வாலயம் பல புனரமைப்பு வேலைகளை செய்து கும்பாபிஷேகம் காண்பது அவ்வூருக்கும்,எம் நாட்டிற்கும் நன்மை பயக்கும்.

ஆகவே இவ்வரிய முயற்சிகளில் ஈடுபட்ட ஆலய பரிபாலன சபையினருக்கும், திருப் பணிச்சபையினருக்கும், அவ்வூர் மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருளாட்சி எல்லோருக்கும் கிடைக்க அவரது பாதார விந்தங்களை வணங்கி நிற்கின்றேன்.

*"மேன்மை கொள் சைவ நீதி*
*விளங்குக உலக மெல்லாம்."*

கே.ஸ்ரீமோகனன்
*வலி.வடக்குப் பிரதேச செயலர்*

## வாழ்த்தி வணங்குகின்றோம்

மாருதப்புர வீக வல்லியால் வழிபடப் பெற்ற ஏழு விநாயகர் ஆலயங்களிலே எமது ஆலயமும் ஒன்று. அவர் விழுந்து வணங்கிய வேளை அவருடன் வந்த யானையும் விநாயகரை விழுந்து வணங்கியதால் இவ் ஆலயம் ஆனை விழுந்தான் விக்கின விநாயகர் எனப் பெயர் பெற்றது. அரசும் வேம்பும் தல விருட்சமாக விளங்கும் இவ் ஆலயம் கி.பி 6-10 ஆம் நூற்றாண்டை சேர்ந்ததாக வரலாறு கூறுகின்றது. கீரிமலை மாவிட்டபுரம் ஆகிய வரலாற்றுப் புகழ் பெற்ற தலங்களோடு நெருங்கிய தொடர்புடைய ஆனை விழுந்தான் ஸ்ரீவிக்கின விநாயகப் பெருமானுக்கு இன்று நடைபெறும் கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி கொடுப்பதில் பெரு மகிழ்வு அடைவதோடு எம் பெருமானின் இன்றைய நிகழ்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அடியவர்களையும் வாழ்த்துவதோடு விநாயகரின் அருளாசியும் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

திருப்பணிச்சபை.

## பெரு மகிழ்வடைகின்றோம்

சகல செல்வங்களும் நிறைந்த ஈழமணித்திருநாட்டிலே சைவமும் தமிழும் போற்றும் அறம் வளர்க்கும் சான் றோர்கள், பெரு மக்கள்,தர்ம வான்கள், நல்லோர்கள் என அனைவரும் ஒருமித்து வாழ்ந்து வரும் ஊராம் இளவாலை, இவ்வூரில் எழுந்தருளி வெவ்வினையை வேரறுக்க வல்லனாக விளங்கும் ஆனை விழுந்தான் விக்ன விநாயகருக்கு இன்று கும்பாபிஷேகம் நடை பெறத் திருவருள் பாலித்துள்ளது. நீண்ட பழைமை வாய்ந்த மாருதப்புர வீக வல்லியினால் வழிபாடு செய்யப்பட்ட இவ்வாலயத்தின் அற்புத நிகழ்வுகள் எம்வாயால் சொல்லும் அளவிற்கு அப்பாற்பட்டவை. அத்தகைய எம் பெருமானின் கும்பாபிஷேகம் சிறப்புற நடை பெறுவதற்கு பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை.


## ணையாளர்கள்

ஜெயகிருஷ்ணா
இரும்பகம்
சுன்னாகம்.

கீர்த்தனா
ஸ்ரோர்ஸ்
ஆலடி, இளவாலை.

லிங்கம்
ஸ்ரோர்ஸ்
இளவாலை.

மாருதி மலிரி
சென்ரர்,
இளவாலை.

சாய்ராம்
ஹாட்வெயர்
கட்டட ஒப்பந்தகாரரும்,
பட வரைஞரும்
கே.கே.எஸ்.றோட், தெல்லிப்பழை,
அம்பனை பன்னாலை,
தெல்லிப்பழைச் சந்தி,
தெல்லிப்பழை.

கந்தன்
களஞ்சியம்,
பண்டத்தரிப்பு.

கோகுலன்
மில்
இளவாலை.

பாரதி டிஜிற்றல்
வீடியோ
இளவாலை

சுந்தர்சன்
மானிப்பாய்.


தொகுப்பாசிரியர்:
திருமதி இராஜசுலோசனா வரதராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதம் மிக்க திருநாள் தைப்பூசம்

**இன்று (27.01.2013) தைப்பூசத் திருநாள். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

இறைவன் ஒருவனே. அவன் பல சமயத்தவர்களால் பல்வேறு வடிவங்களில் பெயரிட்டுப் போற்றப்படுகிறான். ஒரு நாமமும் ஓர் உருவமும் இல்லாத இறைவன் அடியவர்கள் எப்பெயர் கொண்டழைத்தாலும் அவர்களுக்கு வரமருளிக் காக்கும் கருணை வள்ளல்.

மனித வாழ்வு சவால்கள் நிறைந்தது. திட்டமிட்ட உயர் நோக்கம் கொண்ட வாழ்க்கைநெறி, வெறும் புலன் இன்பங்கள் மட்டுமன்றி, அறிவும் உணர்வும் கலந்து விளங்கும் வாழ்க்கை நெறியாகும். மானிட வாழ்வை வாழ்வாங்கு வாழும் முறையில் வழிப்படுத்தவே சமயங்கள் யாவும் தோன்றின. இயற்கையோடிசைந்த வாழ்க்கை நெறியினைச் சித்தாந்தம் வரவேற்கிறது.

இந்து மத விரதங்கள் ஒவ்வொன்றுக்கும் பின்னால் புராண வரலாறுகள் உள்ளன. தத்துவங்கள் உள்ளன. விரதத்தின் முக்கிய நோக்கம் மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனோடு நெருக்கமாக இருக்க முயற்சிப்பதாகும். புறச் சுத்தங்களாவன: வீடு வாசல் கழுவிச் சுத்தமாக வைத்திருத்தல், தூய ஆடை அணிதல் முதலியனவாகும். உணவை விடுத்து விரதம் அனுஷ்டித்தல் முதலியவையெல்லாம் அதற்கு உதவும் செயல்களேயாம்.

■ செல்வி. ச.வசந்தராணி

தைப்பூசம் முருகப் பெருமானுக்குரிய விசேட தினமாகும். தை மாதத்தில் வரும் பௌர்ணமியும், பூச நட்சத்திரமும் கூடிவரும் நாள் முருகப் பெருமானைப் போற்றி வழிபடும் புனித தினமாகும்.

இந்தத் தினத்தில் சைவ சமயிகள் விரதம் அனுஷ்டித்து முருகப் பெருமானின் அருள்வேண்டித் துதிப்பர்.

அன்னை பராசக்தி முருகப் பெருமான் கையில் வேலினை வழங்கிய தினமாக இத் தினம் கருதப்படுகிறது.

மக்களது பசிபோக்கி உணவு அளிக்கும் விவசாயிகள், தமது உழைப்பால் விளைந்த நெல்லில் ஒரு பிடி கதிர்களை அறுத்து வந்து கடவுளுக்குப் படைத்துத் தொழுவது இந்தத் தைப்பூசத் தினத்தன்றே. புதிர் எடுத்தல், புதிர் உண்ணல் என இவை இந்துக்களால் பின்பற்றப்படும் நடைமுறைகளாகும்.

இந்தத் தினத்தில் குழந்தைகளுக்கு முடி இறக்குதல், காது குத்துதல் பால் சோறு தீத்துதல், ஏடு தொடங்குதல் போன்ற சுப காரியங்களை நம் முன்னோர் இயற்றி வந்துள்ளனர்.

இந்தத் தினத்தில் பழனி ஆண்டவராக விளங்கும் முருகப் பெருமானையும், பார்வதி அம்பாளையும் ஒருசேரத் துதித்து சித்திகள் பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வு காண இயலுமென்பது சைவ மதத்தவர்களது அசையா நம்பிக்கையாகும். ★

## கும்பாபிஷேகம்

இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ இராம பாலச்சந்திரக் குருக்கள் தலைமையில் காலை 8 மணி தொடக்கம் 9.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (3)

## ஆலயத் திருப்பணிக்கு நிதியுதவி

வலி.வடக்கு, ஜன.27

தெல்லிப்பழை கருகம்பனை அருள்மிகு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயப் புனரமைப்பு பணிக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்பட்டுள்ளது.

சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக இடப்பெயர்வுக்கு உள்ளாகி அண்மைக் காலத்தில் இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த நிலையில் ஆலயத் திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆலயத் திருப்பணிக்கு பல லட்சம் ரூபா தேவையாக இருக்கின்ற போதிலும் ஆலயத்தின் அடிப்படைப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இரண்டு இலட்சம் ரூபா நிதியை தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து வழங்கியுள்ளார். குறிப்பிட்ட நிதி மற்றும் மக்களின் நிதிப் பங்களிப்புடன் ஆலய திருப்பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (3-86)

# தைப்பூசத் திருவிழா

வடமராட்சி, ஜன.27

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை தைப்பூச உற்சவம் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இன்று காலை முதல் மாலை வரை விசேட அபிஷேகம், சண்முகா பூசை, அர்ச்சனை என்பன இடம் பெற்று சுவாமி வீதி உலா வருவார்.

தைப்பூசத் திருநாளில் பக்தர்கள் பலரும் காவடி எடுத்தும் அங்கப் பிரதிஷ்டை செய்தும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள். குழந்தைகளுக்கு முடி இறக்குதல், பால் பருக்குதல், காது குத்துதல் போன்ற நன்மைக் காரியங்களை முருகப் பெருமான் முன்னிலையில் மேற்கொண்டு குழந்தைகளுக்கான நேர்த்தியையும் பெற்றோர்கள் நிறைவேற்றுவர்கள்.

கோயில் சூழலில் உள்ள அன்ன தான மடங்களில் தைப்பூச உற்சவத்துக்கு வந்து செல்லும் பக்தர்களுக்கு வசதியாக அன்னதான ஏற்பாடுகளை மடாலயங்கள் செய் துள்ளன. (3-8)

* * *

யாழ்ப்பாணம், ஜன.27

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் தைப்பூசத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்ப மாகி பிற்பகல் 1 மணிக்கு திருமஞ்சத்தில் அம்பாள் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (3-14)

* * *

அளவெட்டி, ஜன.27

மட்டுவில் கிழக்கு புத்தூர் வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஞான வைரவர் ஆலய புனருத்தாரணம் இன்று தைப்பூச திருநாளில் நடைபெறவுள்ளது. வைரவப் பெருமான் மீண்டும் தனது இருப்பிடத்தில் பாலஸ்தாபனம் செய்து அருள்பாலிக்க உள்ளார்.

தொடர்ந்து பன்னிரு நாள்கள் விசேட பூசைகள் ஆராதனைகள் இடம் பெறவுள்ளன. (3-36)

* * *

வடமராட்சி, ஜன.27

நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயிலில் தைப்பூச உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பகல் விசேட அபி ஷேகம், பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து சுவாமி வீதி உலாவந்து பக்தர் களுக்கு அருட் காட்சி அளிப்பார். (3-8)

* * *

கட்டுவன் மேற்கு தெல்லிப்பழை நாச்சிமார் ஆலயத் தைப்பூசத் திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

பகல் விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வருவார். மக்கள் மீள் குடியமர்ந்த பின்னர் ஆலயத்தில் நடைபெறும் சிறப்பான பூசை இதுவென நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். (3-36)

* * *

யாழ்ப்பாணம், ஜன.27

தைப்பூச தினத்தை முன்னிட்டு தமிழர் பாரம்பரிய நிகழ்வுகள் எள்ளுக்காடு மற்றும் பொன்னநகர் கிராமத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதில் வயல்களில் இருந்து நெற் புதிர் எடுத்தல், பாரம்பரிய விளையாட்டுக்களும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (3-14)

* * *

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்ப்பாண சிறைச்சாலையின் ஏற்பாட்டில் தைப்பூச திருவிழா யாழ். முனீஸ்வரன் ஆலயத்தில் இன்று நடைபெறவுள்ளது.

முற்பகல் 11 மணிக்கு உருத்திரா அபிஷேகத்துடன் பூஜைகள் ஆரம்பமாகி தொடர்ந்து நண்பகல் 12மணிக்கு விசேட பூசை இடம்பெறும். இதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (3-14)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**நாளை**

தை -15 திங்கட் கிழமை 28.01.2013
திதி: பிரதமை மு.ப 11.45 வரை
நட்சத்திரம்: ஆயிலியம்
மாலை 06.29 வரை
சுபநேரம்: 12.36- 02.06 வரை
ராகுகாலம்: 08.06- 09.36 வரை

**மேஷம்:** இன்றையதினம் கடின உழைப்பால் இலக்கை எட்டுவீர்கள். நட்புவழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி சலுகைகள் மூலம் லாபமடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**இடபம்:** துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மிதுனம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத்தில் லாபம் வரும். அலுவலகத்தில் அமைதி நிலவும். திடீர் திருப்பங்கள் ஏற்படும்.

**கடகம்:** உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத் தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும். சகிப்புத் தன்மை தேவை.

**சிங்கம்:** எளிதாக முடிய வேண்டிய விடயங்களைக்கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களிடம் நயமாக பேசுங்கள். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**கன்னி:** எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு கிட்டும். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாள்களைத் தேடுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**துலாம்:** உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் புதிய ஒப்பந்தம் கைச்சாத்தாகும். அலுவலகத்தில் மரியாதை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** பதற்றம் இருக்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். மனநிறைவு கிடைக்கும்.

**தனுசு:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். உடல் நலம் பாதிக்கும். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை வந்து நீங்கும். விட்டுக் கொடுத்து செல்ல வேண்டும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்:** கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் புதிய அதிகாரி உங்களை மதிப்பார்.

**கும்பம்:** எதிர்பாராத பண வரவு உண்டு. வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துகொள்வீர்கள். திடீர் யோகம் கிடைக்கும்.

**மீனம்:** சாதிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் உங்களின் திறமை வெளிப்படும்.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 6 | 4 | | | | | 9 |
| | | | | | 5 | | 4 | |
| 4 | | 5 | 1 | 6 | | | | |
| | | | | 4 | 8 | 5 | 9 | 7 |
| 7 | 4 | | | 5 | | | | |
| 8 | 5 | 9 | 7 | 2 | | | | |
| | | | | 9 | 7 | 1 | | 4 |
| | 7 | | | | | | | |
| 6 | | | | | 4 | 7 | | 8 |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 3 | 6 | 2 | 4 | 8 | 9 | 1 |
| 9 | 2 | 8 | 1 | 7 | 5 | 4 | 3 | 6 |
| 4 | 1 | 6 | 8 | 9 | 3 | 2 | 7 | 5 |
| 3 | 4 | 2 | 9 | 1 | 7 | 5 | 6 | 8 |
| 6 | 8 | 7 | 5 | 3 | 2 | 1 | 4 | 9 |
| 5 | 9 | 1 | 4 | 6 | 8 | 7 | 2 | 3 |
| 8 | 3 | 5 | 2 | 4 | 9 | 6 | 1 | 7 |
| 2 | 6 | 9 | 7 | 5 | 1 | 3 | 8 | 4 |
| 1 | 7 | 4 | 3 | 8 | 6 | 9 | 5 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

பறந்து பறந்து பணம் உழைக்கலாம்.
கணினி ,ஆங்கில அறிவு அவசியம்.
தொடர்பு:0770879900 (27626)(6.7.4)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1983 திருவோணம் மனோதத்துவ வைத்திய நிபுணர் NORWAY CITIZEN மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
தொடர்பு:0718285673. (28710)(6.7.4)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதி, அரசடி ஒழுங்கையில் 4 அறைகள் கொண்ட பெரிய வீடு வாடகைக்கு விடப்படும்.
பெரிய குடும்பம் விரும்பத்தக்கது.
குருபரன்:0777760663. (28726)(6.7.4)

## காணிவிற்பனைக்கு

உடுவில் டச்றோட்டில்.
அமைந்துள்ள 14 பரப்புக் காணியும் 2 கிணறும் வான் பயிர்களும் விற்பனைக்கு உள்ளன.
தொடர்புகளுக்கு:077 6736888. (28570)(6.7.4)

## மணமகள் தேவை

பூசம் 2 ஆம் பாதம் ,1984 இல் பிறந்த, பிரிட்டன் பிரஜாவுரிமை பெற்ற, கௌரவமான தொழில் புரியும் வாய் பேச முடியாத மணமகனுக்கு வாய் பேச முடியாத, படித்த, பண்புள்ள மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
(28545)(6.7.4) தொடர்பு:077 2228944.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப 1976 இல் பிறந்த, விஞ்ஞான பட்டதாரி , அரச உத்தியோக மணமகனுக்கு A/L சித்தியடைந்த அல்லது அதற்கு மேல் கல்வித் தகைமை உடைய, நற்குண முள்ள குடும்பப்பாங்கான, நிறமான அல்லது பொது நிறமான , செந்தளிப்பான, அழகான மண மகள் தேவை. வேலை உள்ளவர் விரும்பத்தக்கது.எனினும்வேலை முக்கியமில்லை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்பு:0750489740. (28732)(6.7.4)

## கார் விற்பனைக்கு

MARUTHI-800 WPKH-XXXXபாவனையிலுள்ள கார் விற்பனைக்குண்டு.(விலை-1200000)
தொடர்பு:0212219411, 0724574739. (28660)(6.7.4)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பம்,1976 பூசம் 1 இல் செவ்வாய், மொத்த கிரக பாவம்30, செவ்வாய் பாவம் 9, B.Sc ஆசிரியருக்கு அரச, வங்கி, நிறுவனங்களில் தொழில் புரியும் மணமகள் தேவை.
T.P:077 9618728.
e-mail kavithasurash@yahoo.com (28725)(6.7.4)

## வீடு வாடகைக்குண்டு

கச்சேரி, நல்லூர் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
N.G.O.விரும்பத்தக்கது.
தொடர்பு:0774705540,0776621654. (28511) (6.7.4)

## காணி விற்பனைக்குண்டு

அச்சுவேலி, இராச வீதி, கைத் தொழில் பேட்டை சந்தியில்10 பரப்பு தோட்டக் காணி (வீடு கட்டக் கூடிய இடம்) விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு :0775802301 (28362)(6.7.11)

## காணி விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழகத்துக்கு அருகில் (இராமநாதன் வீதியில் இருந்து 100 மீற்றருக்குள்) 4 பரப்புக் காணிவிற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)
தொடர்பு: 021 4923 254
077 8716 657
(28657) (45.6.7)

## வரலட்சுமி பிளாஸ்ரிக் வார்ப்புத் தொழிலகம்

சகல விதமான மோட்டார் வாகனங்களுக்கும் பிளாஸ்ரிக் உடைவுகள் ஒட்டுதல், ஸ்பிறே பெயின்ரிங் செய்தல், பைவர் மோல்டிங், பிளேற்றிங் மொப்பிங், கண்ணாடி பொலிசிங் செய்தல் என்பன சிறந்த முறையில் சீர்செய்து கொடுக்கப் படும். (நல்லூர் பின் வீதி)
இல.286/2,அரசடி வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: சி.கேதீஸ்வரன் 077351 2591 (28238)(5-6-7)

# Shakthy microtec

நீங்கள் எதிர்பார்த்திருந்த Branded கணினிகளை **Computer wholesaler**
27.01.2012 ஞாயிற்றுக்கிழமை முதல்
இல.170, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலில் அமைந்துள்ள எமது காட்சியறையில் மிகவும் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

- 19" Monitor Rs. 7,000/-
- 17" Monitor Rs. 6,000/-
- Keyboard & Mouse Rs.800/-
- Web Cammera Rs. 850/-
- Head phone Rs. 350/-
- 15" Monitor Rs. 5,000/-
- Dual Core, Core2Due கணினிகள் 12,000 ரூபாவிலிருந்து...
- Labtop 18,000 ரூபாவிலிருந்து...

இல.170, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.
**Hotline : 077 9120842**
(28733)(5.6.7)

# பதவி வெற்றிடம்

## உதவி நூலகர்

யாழ். மருத்துவச்சங்கம் - நூலகம்
தகுதி உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
கல்வித்தகைமை: க.பொ.த உயர்தரம் சித்தி. (நூலக முகாமைத் துவத்தில் முன் அனுபவம் அல்லது கல்வித்தகைமை விரும்பத்தக்கது.)
வயது : 20 இற்கு மேல்

**விண்ணப்ப முடிவு திகதி: 09.02.2013**
**சுய விபர கோவையுடன் சான்றிதழ் பிரதிகளை**
**நூலகர், யாழ்- மருத்துவச்சங்கம்,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**
என்ற முகவரிக்கு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ சேர்ப்பிக்கவும்.
செயலாளர்.
(C/6034)(6.7.11)

# உடனடி வேலைவாய்ப்பு
# பிரபல தொலைத் தொடர்பாடல்

பிரபல தொலைத் தொடர்பாடல் வலையமைப்பு நிறுவனத்தில் கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

★ விற்பனை பிரதிநிதிகள் (ஆண் / பெண்)
★ இடங்கள்: கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு
★ சம்பள அளவுத்திட்டம்: மாதாந்தம் ரூ.7500/

நிலையான சம்பளத்துடன் மொத்தமாக ரூபா 35000/- இற்கு மேல் ஈட்ட முடியும். தகுதியுடையோர் கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் சுயவிவரக் கோவையுடன் (BioData) சமுகமளிக்கவும்

**தொடர்புகளுக்கு:**
**0722321038**
**R& R TELECOM JAFFNA (Pvt) LTD**
**Etisalat (Partner)**
**127, I M.P.C.S Building**
**K.K.S.ROAD, JAFFNA.**
etisalat
(28737)(6.7.11)

# VACANCY

Required suitble Candidates to our Jaffna office
For more details : Khuzaima : 0773557082

**Ticketing / Reservation**
**Travel Coordinator**

- Minimum 1 years working experience in Travel trade
- Standard fares, Ticketing & GDS or Airline system courses

**Shipping / Cargo**
**Operator**

- Minimum 1 year working experience in Shipping trade

**Account Clerk**

- Female age below 35
- Proficient in Microsoft Office application
- Candidate in and around Jaffna is preferred

*Resumes shouild be : Up to date with relevant / accurate information only, With a recent photo. Salary based on experience*

Foward CV's with two non related referees to :
career@msaleisure.com
or by Register Post :
#77, Maliban Street, Colombo - 11.

msa TRAVELS & TOURS (PVT) LTD
SHIPPING (PVT) LTD
IATA Accredited Agent
TAASL

# INVITATION FOR BIDS

## VISVAMADU FARMER'S MPCS (PVT) LTD

**Bid- 01 Supply, installation and commission of Rice Processing Machines**
**Bid- 02 Supply, installation and commission of Paddy Parboiling system with Boiler**
**Bid- 03 Supply, installation and commission of Paddy Dryer**
**Bid- 04 Supply, installation and of Electrical Items and Wiring in Rice milling plant**

1. The Chairman, Procurement Committee of Visvamadu Farmers's MPCS (Pvt) Ltd., Valluvarpuram , Visvamadu invites sealed bids for the supply and installation of Rice processing Machines, Paddy steaming system with boiler, Paddy dryer and electrical installation. Bid forms could be obtained from the office at Visvamadu Farmers's MPCS (Pvt) Ltd., Valluvarpuram , Visvamadu up to **3.00p.m on 28th January , 2013** on normal working days on payments of a non refundable tender fee of Rs. 1,000/ per set of Bildding Document. Cheques will not be accepted. Bids should be submitted only on Bid forms Obtained as above.

2. The time and dates for issuing, depositing and opening of tender forms are as follows.

| | |
|---|---|
| Issuing of tender forms | **- 28th January 2013 to 3.00 p.m on 05th February 2013.** |
| Depositing of tender forms | **- 2.00 p.m 19th February 2013.** |
| Opening of tender forms | **- 2.00 p.m 19th February 2013.** |

3. Bids should be addressed the Chairman, Procurement Committee of Visvamadh Farmers's MPCS (Pvt) Ltd, Valluvarpuram , Visvamadu. By registered post, to reach him or deposit in the tender box kept at Visvamadu Farmers's MPCS (Pvt) Ltd, Valluvarpuram , Visvamadu. The top left hand corner of the envelop containing the tender should be marked **"BIDS FOR THE SUPPLY OF RICE MILLING MACHINES" CLOSING ON 11.02.2013 AT 2.00P.M.**

4. Bids will be opened at the office at Visvamadu Farmers's MPCS (Pvt) Ltd, Valluvarpuram , Visvamadu on the same day soon after the bid opening. The bidding documents, if received the dead line will be rejected without opening of tenders.

5. For further Details, please contact General Manager, Visvamadh Farmers's MPCS (Pvt) Ltd, Valluvarpuram , Visvamadu on **Tel. 024 3248307, 0776147666.**

**The Chairman/ General Manager,**
Procurement Committee,
Visvamadu Farmers's MPCS (Pvt) Ltd.,
Valluvarpuram , Visvamadu

(C/6035)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு விழா அழைப்பு

## திருமதி A.F.J ரூபசிங்கம்



(ஓய்வு பெற்ற யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி)
தலைவர்- யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம், உபதலைவர் - யாழ் மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம்

திருமதி A.F.J ரூபசிங்கம் அவர்களின் சேவையை பாராட்டும் முகமாக சேவைநலன் பாராட்டு விழா யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இன்று (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு நடைபெறும். இவ்விழாவிற்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம்,
யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம். (28756)(6.7.11)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



உள்ளம் மகிழ
07.08.1945

உள்ளம் நெகிழ
27.01.2010

திருமதி
**சுபத்திராதேவி விவேகானந்தன்**

(சங்கீத வித்துவான், சென்னைப் பல்கலைக்கழகம், ஓய்வு பெற்ற சங்கீத ஆசிரியை)

கடவுள் படைப்பான் என்றால்
எம்மை படைத்தது அம்மா கடவுள் காப்பான் என்றால்
எம்மைக் காத்து வளர்த்தது அம்மா
கடவுள் கருணைப் பெருங்கடல் என்றால்
நான் கண்ட கருணைப் பெருங்கடல் அம்மா
ஆகவே எனக்கு தெரிந்தவரை என் அறிவுக்கு
எட்டியவரை கடவுள் என்றால் அது அம்மா

நினைவுகளுடன்
கணவர் தி.விவேகானந்தன்
(ஓய்வு பெற்ற உள்ளூராட்சி எழுதுநர்)
மக்கள், மருமக்கள்,பேரப்பிள்ளைகள்

அழகொல்லை,அளவெட்டி வடக்கு.
யாழ்ப்பாணம். (28785)(6.7.11)

## வீடு விற்பனைக்கு

இரண்டு பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. உரும்பிராய் சந்தி ஐயப்பன் கோயில் அருகில் உள்ளது. தரகர்கள் தேவையில்லை.
தொடர்பு:077 515 9348
077 553 5188
(27633)(5-6-7)

## காயத்திரி திருமணசேவை

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் ஆண்,பெண் இருபாலாரின் ஜாதகங்கள்எம்மிடம் உள்ளன. பொருத்தம் தேவைப்படுவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
T.P:0778778484.
கோயில் வீதி,நல்லூர், யாழ்ப்பாணம். (28681)(6.7.4)

## வீட்டுத் தளபாடங்கள் விற்பனை

பாவனைக்கு உகந்த வீட்டுத் தளபாடங்கள்,உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:0717561986. (28751)(6.7.4)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1981 ரோகிணி3 ஆம் பாதம் ,கிரக பாவம் 04 ,செவ்வாய் குற்றம் இல்லாத முகாமைத்துவ உதவியாளராக பணி புரியும் மணமகனுக்கு அரசதொழில் செய்யும் மணமகள் விரும்பத்தக்கது.விவரங்களுடன் கீழ் வரும் விலாசத்திற்கு விவரங்களை அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல 4433,
பே/பா உதயன்,
361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (28755)(6.7.4)

## வேலையாள்கள் தேவை

மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் ஊதுபத்திகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு:0776023002. (28750)(6.7.4)

# 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



## கந்தவனம் பொன்னம்மா

தோற்றம்
03★06★1930

மறைவு
28★12★2012

எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

மட்டுவிச்சந்தி,
கல்வயல் வீதி,சாவகச்சேரி.

குடும்பத்தினர். (28754)(7.6.7.4)

# மரண அறிவித்தல்

## பஞ்சாட்சரம் சிவகுமாரன்
(ராஜன்)

கச்சேரி கிழக்கு ஒழுங்கையை வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான பஞ்சாட்சரம் சிவகுமாரன் (ராஜன் -பழைய மாணவன் பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்) 19.01.2013 கனடாவில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம்-கனகவதி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் கனகமணி தம்பதியரின் மருமகனும் திகழ்மதியின்(மதி) அன்புக் கணவரும், துவாரகன், வசீகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்மிலா, மைதிலி ஆகியோரின் மாமனாரும், அமிர்தா, துர்கா ஆகியோரின் பேரனும்,வாலாம்பிகை, கமலாம்பிகை, காலஞ்சென்ற யோகாம்பிகை மற்றும் அமிர்தாம்பிகை (நீலா) ஆகியோரின் அருமைச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21.01.2013 திங்கட்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8911 Woodbine Avenue.
Markham Ont L3R5G1
CANADA. (28713)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

# மங்களகரமான திறப்பு விழா

## தரன் ரேடிங் கொம்பனி

### இல.509, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

FAW வாகனத்தின் இறக்குமதியாளர்களான
**ஸ்ரேலிங் ஓட்டோ மொபைல்(லங்கா) (Pvt)(Ltd.)**
மற்றும்
**கோண பின்வல ரேடிங் கோ (Pvt)(Ltd.)**இன் புதிய மற்றும் மீளமைக்கப்பட்ட யப்பான் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்களுக்கான விநியோகஸ்தர்கள்.

இன்று(27.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.40 மணியளவில்
**அஜித் விமலசூரிய**
(Managing Director-Gona Pinuwala Trading Co.(Pvt)(Ltd.)
Lockta PVC (Pvt.)Ltd.
அவர்களால் கோலாகலமாகத் திறந்து வைக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

(28757)(5.6.7)
உரிமையாளர்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
20.07.1940

மறைவு
28.12.2012

## திருமதி இந்திராணி சிவகுருநாதன் (பூப்பிள்ளை)

**நீரார் விழியொடு நினைத்தேயிருப்போம்**

| | | | |
|---|---|---|---|
| சிவகுரு | மனையாய்ச் | சிறப்பி | னோடே |
| சிவநெறி | வழியில் | செழிப்பாய் | வாழ்ந்து |
| தவமுடை | மழலைகள் | தரணி | பெற்றே |
| அவனியில் | உயர்ந்தே | அனைவரும் | போற்ற |
| அகமகிழ் | வோடு | அறவாழ் | வினிலே |
| இகமதி | லின்போ | டிருஇந்தி | ராணி |
| தாயவள் | பேய்ச்சி | தாள்மற | வாதே |
| நாளும் | பொழுதும் | நாடிப் | பேணி |
| வாழ்வில் | மனையாய் | தாயாய் | மாமியாய் |
| தாழ்வில் | துணையாய் | தயவார் | பாட்டியாய் |
| ஆதர | வோடு | அரவணைத் | தெம்மை |
| வாழுங் | காலம் | வகுத்தவன் | விதியால் |
| தாழும் | இறையின் | தாளை | யடைந்தே |
| ஒருமா | தமது | ஓடிய | போதும் |
| பாரார் | வாழ்வு | பலித்திடு | காலம் |
| நீரார் | விழியொடு | நினைத்தே | யிருப்போம் |

- ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

[illegible]ம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர். (28412)(2-6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாபொல கண்காட்சி – 2013



'கலாபொல 2013' இன் 20 ஆவது வருட நிகழ்வு இம்மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரையும், 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையும் கொழும்பு நெலும்பொக்குண மாவத்தையில் இடம்பெறும்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பிரான்ஸ் தூதுவர் கிறிஸ்ரைன் றொபிகொன்னால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

இந்தக் கண்காட்சியில் ஓவிய ஏல விற்பனை (ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 முதல் நண்பகல் 12 மணி வரை), ஓவியம் தொடர்பான பொதுமக்களுக்கான விரிவுரை (சனிக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை), குழந்தைகளுக்கான ஓவிய பயிற்சிப் பட்டறை (சனிக்கிழமை காலை), கலாசார மகிழ்வூட்டல் நிகழ்வு (சனிக்கிழமை இரவு 7மணி தொடக்கம் இரவு 9 மணி வரை) போன்ற நிகழ்வுகள் இடம்பெறும்.

# யாழ்ப்பாணத்தில் சிகையலங்காரம் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு



சிகையலங்காரம் மற்றும் அழகுக்குறிப்புகள் குறித்து ஏற்பாடு செய்யப்படும் இலவசக் கருத்தரங்கு ஒன்று இன்று காலை 9 மணி முதல் பிப. 2 மணி வரை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த ஏற்பாடு நடவடிக்கைகளை இன்ஸ்டிடியூட் ஒஃப் ஹெயார்டிரெசர்ஸ் அன்ட் பியூட்டிசியன்ஸ் கல்வியகத்துடன் இணைந்து நாட்டிலுள்ள முன்னணி சிகை அலங்காரம் மற்றும் அழகுக்கலை நிபுணர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தக் கருத்தரங்கின் மூலம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிகையலங்காரத்திலும், அழகுக் கலையிலும் ஆர்வமுள்ளவர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கை நெறி குறித்த விளக்கங்கள் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் வழங்கப்படவுள்ளன. இந்தக் கருத்தரங்கில் இலங்கையின் புகழ்பெற்ற சிகையலங்கார நிபுணர்களில் ஒருவரான நயனா கருணாரட்ன அவர்களும் கலந்து கொள்ளவுள்ளார்.

இவர் SLAHAB இன் தாபக தலைவராகவும், உலக சிகையலங்கார நிபுணர்களின் சம்மேளனத்தின் ஆசிய பிராந்திய தலைவராகவும் செயலாற்றி வருகிறார். இந்தக் கருத்தரங்கில், யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த சிகை அலங்கார தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களையும் பங்குபற்றி அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இன்ஸ்டிடியூட் ஒஃப் ஹெயார்டிரெசர்ஸ் அன்ட் பியூட்டிசியன்ஸ் கல்வியகமானது, சிட்டி அன்ட் கில்ட்ஸ் அமைப்பின் வழிகாட்டலின்கீழ், வருமான நோக்கமற்ற அமைப்பாக இயங்கி வருகிறது. சர்வதேச தரங்களுக்கு அமைய, சிகையலங்காரம் மற்றும் அழகியல் கலை துறைகளின் தரங்களைப் பேணும் வகையில் தனது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இந்தக் கல்வியகத்தின் பொறுப்புக்களாக, பயிற்சிப் பட்டறைகள், தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பரீட்சைகளை நடத்தி, அவற்றின் மூலம் சிறந்த ஆளுமையை விருத்தி செய்தல், தரச்சான்றுகளை வழங்கல் மற்றும் பயிற்றுநரை பயிற்றுவித்தல் போன்றன அமைந்துள்ளன.

இந்தக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்படுவது குறித்து பிரபல சிகையலங்கார கலை நிபுணரான நயனா கருணாரட்ன கருத்து தெரிவிக்கையில் "யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள், வெளிநாடுகளுடன் பெருமளவு தொடர்பை இழந்தவர்களாக சுமார் மூன்று தசாப்த காலம் தமது வாழ்க்கையை முன்னெடுத்து வந்திருந்தனர். இந்நிலையில் பெரும்பான்மையானோருக்கு சிகையலங்காரம் மற்றும் அழகியல் கலை குறித்து தமது கவனத்தை செலுத்த வாய்ப்புகள் கிட்டியிருக்காது. ஆயினும் இன்றைய காலகட்டத்தில் இந்த துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களுக்கு சிறந்த வரவேற்பும் கேள்வியும் நிலவுகிறது. இதனை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமது பிள்ளைகளின் எதிர்பார்ப்புகளுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு என்றார். (த)



நீர்வேலியில் புதிதாக அமைக்கப்பட்ட பொன்செல்வ மஹால் என்ற மணி மண்டபத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபனும் அவரது துணைவியார் ரஜனி பிரதீபனும் இணைந்து மணிமண்டபத்தைத் திறந்து வைத்தனர். (த)




# சாரதிகளுக்கு மகாவலி சிமெந்து பயிற்சிப் பட்டறை

கொழும்பு துறைமுகத்திலிருந்து சிமெந்து ஏற்றிச் செல்லும் வாகன சாரதிகள் ஆசனப்பட்டி, பாதுகாப்பு கருவிகளை அணிய வேண்டியதன் அவசியத்தை லபார்ஜ் மகாவலி சிமெந்து நிறுவனம் வலியுறுத்தியுள்ளதுடன் வாகனங்களை செலுத்தும்போது கையடக்க தொலைபேசிப் பாவனை, மதுஅருந்துதல் போன்றவற்றை முற்றாக தவிர்க்குமாறும் கோரியுள்ளது.


கொழும்பு துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள லபார்ஜ் மகாவலி சிமெந்து அலுவலகத்தில் நடைபெற்ற விசேட பயிற்சி செயலமர்விலேயே இத்தகைய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

பல்ஊடக காட்சி மற்றும் செயன்முறை அமர்வுகள் மூலம் நடைபெற்ற செயலமர்வு வீதிப் பாதுகாப்பு தொடர்பான விசேட நிபுணர் டொக்டர் காளிங்க கினிகேயினால் முன்னெடுக்கப்பட்டதுடன் இதற்கான உதவிகளை லபார்ஜ் மகாவலி தனியார் சிமெந்து நிறுவனம் வழங்கியிருந்தது.

லொறிகளை (டயர், விளக்குகள், பிரேக் உள்ளிட்ட கருவிகள்) பராமரிப்பது எவ்வாறு என்பது தொடர்பாக சாரதிகள் அறிவுறுத்தப்பட்டதுடன் சிமெந்து ஏற்றிச்செல்லும்போது அணிய வேண்டிய காலணிகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டனர்.

'பாதுகாப்பாக வாகனம் செலுத்துவது' எவ்வாறு என்பது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அத்துடன் பாதுகாப்பாக வாகனங்களை செலுத்த தவறும் பட்சத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பாக டொக்டர் காளிங்க கினிகே பல்ஊடக காட்சி மூலம் விளக்கப்படுத்தினார்.

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு CBL உதவி



பிரென்டி பூட்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் பிரதான நிறைவேற்று அதிகாரியுமான ஷம்மி கருணாரத்ன உள்ளடங்கிய குழுவினர் ஒவ்வொரு கிராமங்களுக்கும் சென்று 60 இலட்சம் பெறுமதியான உணவுப்பொருள்கள் மற்றும் வேளாண்மை உபகரணங்கள் போன்றவற்றை பகிர்ந்தளித்திருந்தனர்.

தேசிய விவசாயத்துறையை பாதுகாக்க தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் சிபிஎல் நிறுவனம் சுமார் 8,000 தேசிய விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்பினை பேணிவருகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஷம்மி கருணாரத்ன, தேசத்தின் முதுகெலும்பாக இருக்கும் விவசாயிகளை பாதுகாப்பதற்கு, தமது நிறுவனம் எந்நேரமும் தயார் நிலையில் உள்ளது என தெரிவித்தார்.

இத்தகைய அசம்பாவித நிலைமைகளின் போது விவசாயிகளுக்கு ஒத்துழைப்பையும் சரியான வழிகாட்டல்களையும் வழங்குவதை குறிக்கோளாக கொண்டு தமது நிறுவனம் செயற்படுகிறது என்றார்.

உணவுப்பொருள்கள் மற்றும் வேளாண்மை உபகரணங்கள் போன்ற வற்றை வழங்கியது.

மகாவலி எச்.பிரிவைச் சேர்ந்த தலாவ, எப்பாவல, நொச்சியாகாமம், தபுத்தேகம, கல்னேவ, ஹொரிகஸ்வேவ மற்றும் கலங்குட்டிய ஆகிய பிரதேசங்களில் சோயா பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வந்த 1,300 விவசாயிகள் இதனால் நன்மையடைந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிவக்கொழுந்து நவரத்தினம்

சுதுமலை ஈஞ்சடி வைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், லவ்லேன் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து நவரத்தினம் நேற்று (26.01.2013) சனிக்கிழமை காலமானார்

அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், மஞ்சுளாதேவி, சறோஜினிதேவி, சுசீலா, சுலோசனாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (27.01.2013) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் உடுவிலில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

லவ்லேன்,
உடுவில்.

தகவல்:
கனகராசா
(மருமகன்)

## திருமதி நடேசு செல்லம்மா



கொக்குவில், செருக்கப் புலத்தைப் பிறப்பிடமாகவும் நந்தாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடேசு செல்லம்மா நேற்று (26.01.2013) சனிக்கிழமை காலமானார்

அன்னார் சின்னட்டி நடேசுவின் அன்பு மனைவியும் தவரஞ்சிதம் (தவம்), காலஞ்சென்ற செல்வரஞ்சிதம் ஆகியோரின் அன்புத் தாயும், குகனேஸ்வரனின் மாமி யும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சம்பியன் வீதி,
கொக்குவில்.

தகவல்:
நடேசு (கணவன்)
0779204593.
தவம் (மகள்)
குகன் (மருமகன்)
00390103076748

(28770)(6.7.4)

## திருமதி சுப்பிரமணியம் அபிராமிப்பிள்ளை



காரைநகர், களபூமி, விளானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அபி ராமிப் பிள்ளை சுப்பிரமணியம் 24.01.2013 வியாழக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-காசுபதிபிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ் சென்றவரான முருகேசு - கதிராசிப்பிள்ளை தம்பயரின் அன்பு மருமகளும், காலஞ் சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், கணபதிப்பிள்ளை, கந்தையா, சபாரட்ணம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் வசந்தகோகிலம், பாலேந்திரன், இராசமலர், யோகேஸ்வரி, மகேந்திரன், சண்முகரத்தினம் ஆகியோரின் அன்பு தாயாரும் தங்கரத்தினம், V.M.P முருகேசு, இரத்தின பூபதி, கிருஷ்ணவேணி, புவனராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் சுபிதா, கிருத்திகா, அஷ்வின்பிரகாஷ், மகிழினி, தாரணி, ஞானதாட்சாயினி, உமாதர்சினி, நிலேஸ், கிருசா, நிலக்ஷன், சிவகௌரி, சிவகாந்தன், சிவகுமார் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொறளை (Borella) ஜயரட்ண மலர்ச்சாலையில் நேற்று (26.01.2013) சனிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இன்று (27.01.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைத்தவர்களும் அச்சுறுத்தப்பட்டனர்.

தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களான சு.சரவணபவன், சிறீதரன் உள்ளிட்டவர்களும் மற்றும் மன்னார் மறை மாவட்ட ஆயர் வண.இராயப்பு ஜோசப், மன்னார் மாவட்ட நீதிபதி உள்ளிட்டோர் இவ்வாறான அச்சுறுத்தல்களை எதிர்கொண்டவர்களில் சிலர்.

**யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு விடிவில்லை**

கடந்த வருடத்தில் மாவீரர் தினத்தோடு கைதாகிய யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரச்சினையும் சர்வதேசமயப்படுத்தப்பட்ட ஒன்று. இலங்கையைக் கவனித்து வரும் பெரும்பாலான நாடுகள் அதற்கு கண்டனத்தை வெளியிட்டிருந்தன. கைது செய்யப்பட்டமைக்கான சரியான காரணத்தைக் கூறாத அரசும், படைகளும், இந்தக் கைது விடயத்தில் எந்த விதமான ஜனநாயக வழிமுறைகளையும் பின்பற்றவில்லை. அத்தோடு இலங்கையில் ஜனநாயகம் அற்ற ஆட்சி நிலவுகின்றது என்பதை [illegible] அதுபோன்று, அதன் பின்னரான இலங்கை அரசின் நடவடிக்கைகளும் அமைந்திருந்தன.

கைதாகி இரண்டு மாதங்கள் நெருங்குகின்ற நிலையில் அவர்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான முடிவுகள் எதுவும் எட்டப்படாமல் இருக்கின்றது. மாணவர் கைதுடன் வடக்கில் மேலும் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் நிலைகுறித்தும் ஒழுங்கான தீர்வுகள் எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

**ஜனநாயகம் தின்றுவிட்ட நீதித்துறை**

ஜனநாயகம் எல்லை மீறும் சந்தர்ப்பங்களில் அதனைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் நீதித்துறை இலங்கையில் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. ஆட்சியிலிருக்கும் அரசு முன்வைத்த கோரிக்கை ஒன்றை நீதிமன்ற தீர்ப்பொன்றினூடாக நிராகரித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பிரதம நீதியரசரின் பதவியையே பறித்தது அரசு. முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க பதவி விலக்கப்பட்ட முறை தவறானது என அமெரிக்கா கூட எச்சரித்திருந்தமை இந்த விடயத்தில் குறிப்பிடத்தக்கது. அவரின் பதவிப்பறிப்பைத் தொடர்ந்து அரசுக்குச் சார்பான ஒருவர் பிரதம நீதியரசராக்கப்பட்ட விடயமும், இலங்கையின் நீதித்துறை சரிந்து வரும் நிலையும் சர்வதேச கவனிப்பை பெற்றுவருகின்றன.

**புது அமைப்பும், புது கோஷங்களும்**

இவை அனைத்தையும் விட இலங்கையின் மூன்றாவது சிறுபான்மையினராகிய முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களும் அண்மைக்காலமாக அதிகரித்திருக்கின்றது. அரசு சார்ந்த பௌத்த துறவிகளும், அமைச்சர்களும் வெளிப்படையாகவே சிறுபான்மையினத்தவரின் மனங்கள் புண்படக்கூடிய வகையில் செயற்படுகின்றனர். சிறுபான்மையினத்தவருக்கான அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்படும் நிலை தொடர்கின்றது.

தம்புள்ள பள்ளிவாசல் விவகாரத்தை தொடர்ந்து இப்போது பொது பல சேனா அமைப்பு இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை உருவாக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான இனவாத அமைப்புக்களின் ஆபத்து குறித்து தெரிந்திருந்தும் அரசு எந்த விதசட்ட நடவடிக்கைகளையும் குறித்த அமைப்பினர் மீது எடுக்கவில்லை. இவ்வாறு அரசு தொடர்ந்தும் மௌனம் சாதிப்பது இனவாத அமைப்புக்கள் அரசின் நெறிப்படுத்தலில் இயங்குகின்றவை என்ற சந்தேகத்தை பரவலாக ஏற்படுத்தியிருக்கின்றது.

**முடியாத முடிவாக...**

மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள ஐ.நா. சபையின் கூட்டத்தொடரை வெற்றிகரமாக எதிர்கொள்ள இவ்வளவு விடயங்களையும் சமாளிக்க வேண்டிய நிலையுள்ளது. மீதமாக இருக்கின்ற ஒரு மாத கால இடைவெளியில் விட்ட தவறுகள் அனைத்தையும் திருத்திக் கொள்ள முடியாது. அதற்கு அரசு முயற்சிக்கவும் மாட்டாது. ஐ.நா. கேட்கப்போகும் அனைத்துக் கேள்விகளுக்குமான பதிலாகவே நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இராணுவ நீதிமன்றம் மேற்கொண்ட விசாரணைகளின் தீர்ப்பு வெளிவந்திருக்கின்றது. அதில் கூறப்பட்டவைகளை நடைமுறைப்படுத்துவதற்கான அவகாசத்தைக் கோரக்கூடிய சாத்தியங்களே அதிகமாக தென்படுகின்றன. அதற்கு இந்தியாவின் ஆசீர்வாதமும் கிடைக்கப்பெற்றுவிட்டது என்றே எண்ணத் தோன்றுகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துக்கும் காரணம் சீருடை அணிந்தவர்களே

இரா.புத்திரசிகாமணி

நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தி பொது மக்களுக்கும், நாட்டின் இறைமைக்கும் காவலர்களாக இருக்க வேண்டிய பொறுப்புமிக்கவர்கள் தான் சீருடை அணிந்த இராணுவத்தினர்.

அதே போன்று சாந்தி, சமாதானம், கருணை, ஜீவகாருண்யம் என்பனவற்றையே மூல மந்திரமாகக் கொண்டு புத்த பெருமானால் போதிக்கப்பட்ட பௌத்த மதத்தைக் கட்டிக்காக்கவும், அந்த வழியில் மக்களுக்கு உபதேசம் செய்யும் அதி முக்கிய பொறுப்புடன் செயல்பட வேண்டியவர்கள் தான் ஆசாபாசங்களைத் துறந்து துறவிகளான புத்த பிக்குமார்.

ஆனால் இன்று நடப்பது என்ன? சீருடை அணிந்த படையினரைக் கொண்டு தமிழர்களையும், காவி உடை தரித்த பிக்குமாரைக் கொண்டு முஸ்லிம்களையும் அச்சுறுத்தி அடிமைப்படுத்த முனைகின்றனர்.

இவர்களுடைய அடாவடித்தனங்களைத் தட்டிக் கேட்பார் யாரும் இல்லை. காரணம் இவர்கள் அரசின் அனுசரணையுடனும் பொலிஸாரின் பாதுகாப்புடனுமே செய்திருந்தனர். இதைத்தான் அரச பயங்கரவாதம் என்கின்றனரோ?

சீருடையணிந்தவர்களைக் கொண்டு தமிழர்களையும், காவியுடை தரித்தவர்களைக் கொண்டு முஸ்லிம்களையும் அடிமைப்படுத்தி அடக்கி ஆளமுனைகின்றது மஹிந்த ராஜபக்ஷ அரசு. உள்நாட்டில் மட்டுமல்ல, உலக நாடுகளில் இருந்தும் இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

30 வருடகாலப் பயங்கரவாதப் போரை முடித்து விட்டோம். யுத்த பூமியாக இருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி விட்டோம் என்று ஜனாதிபதியும், அமைச்சர்களும் உலகநாடுகள் மத்தியில் பிரசாரப்படுத்தி வருகின்றனர். இந்தப் பிரசார நடவடிக்கைகளுக்காகக் கோடி கோடியாகச் செலவிடுகின்றனர்.

எவ்வளவுதான் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு உண்மை நிலையை மூடிமறைக்க முற்பட்ட போதும் இப்போது உண்மைகள் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டன.

அண்மைக் காலங்களாக இங்கு அதிகரித்து வரும் அடாவடித்தனங்களும், அடக்குமுறைகளும் உலக நாடுகளை இலங்கையின் பக்கம் அதிகம் அக்கறைப்பட வைத்துள்ளது.

போர் முடிந்து மூன்றரை வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும், வடக்கில் வாழும் தமிழ் மக்கள் நிம்மதியாக மூச்சுவிட முடியாத நிலையிலேயே பீதியுடன் வாழ்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் வாழும் பொது மக்களின் எண்ணிக்கையின் மூன்றில் ஒரு பங்கு இராணுவத்தினர், அங்கு நிலை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். அனைத்தும் இராணுவ மயம். எங்கு நோக்கினாலும் சீருடை தரித்த படை வீரர்களே காணப்படுகின்றனர். பாடசாலை அதிபர்கள் முதல் அரச உயர் அதிகாரிகள் வரை அனைவரும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழேயே இயங்கவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளது.

வடபகுதி தமிழ் மக்களுக்கு இடம்பெயர்வுகளும், அகதி வாழ்க்கையும் சர்வசாதாரணமாகி விட்டன. முப்பது வருடப் போர், சுனாமிப் பேரலை அழிவு, வெள்ள அனர்த்தம் என இயற்கையாலும் பாதிக்கப்பட்டவர்கள் எம் மக்கள். உயிரைத்தவிர இழப்பதற்கு எதுவுமே இல்லை எனும் அளவுக்கு இழப்புகளுக்கு முகம் கொடுத்தவர்கள்.

போர் பாதிப்பாலும், சுனாமி பேரலைப் பேரழிவுகளாலும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகவும், மீள்குடியேற்றங்களை மேற்கொள்வதற்காகவும் உலக நாடுகள் கோடி கோடியாக உதவிகளை வாரி வழங்கின. ஆனால் இன்றும் கூட பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையில் விடிவு ஏற்படவில்லை.

எனினும் சுனாமி பேரலையை வைத்து பெரும் அரசியல் தலைகள் தனித் தனியான தொண்டர் அமைப்புக்களை உருவாக்கி நன்மை அடைந்து வருகின்றன. இன்று 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' என்ற அமைப்பை உருவாக்கியவரும் ஓர் அரசியல் தலைவரும். இந்த விவகாரம் உயர்நீதிமன்றம் வரை சென்றதையும் உலகம் அறியும்.

சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட உயிர் இழப்புகளையும், உடைமைகள் அழிப்பையும் மிஞ்சிவிட்டது இறுதிக்கட்ட போரின் போது இராணுவத்தினரால் உருவாக்கப்பட்ட அழிவுகள்.

அகதிமுகாம்கள் என்று எதுவும் இல்லை. இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் மீள் குடியேற்றி விட்டோம் என்று கூறுகின்றனர். பெரிய முகாம்களை மூடிவிட்டு பலநூறு சிறு சிறு முகாம்களை உருவாக்கி உள்ளனர். மீள்குடியேற்றம் என்ற பெயரில் தொடர்ந்தும் இந்த மக்களைத் தற்காலிக கொட்டகைகளிலேயே அடைத்து வைத்துள்ளனர்.

இதற்கு ஓர் உதாரணம் வவுனியா மனிக் பாக் முகாமில் இருந்த மக்களைப் புதுகுடியிருப்பு கேப்பாப்பிலவு காட்டில் தவிக்கவிட்ட சம்பவத்தை எவராலும் மறுக்க முடியாது.

ஒருபக்கம் துப்பாக்கி வேட்டுக்களாலும் பீரங்கித் தாக்குதலாலும் தமிழ் மக்களின் உயிர்களைப் பறித்தவர்கள் இன்று தமிழ் மக்களின் பாரம்பரிய கலாசாரப் பேரழிவுகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளால் புதைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களைத் தேடுகிறோம் என்ற பெயரில் சரித்திர சான்றுகளாக விளங்கிய புராதன கட்டடங்களும் கோயில்களும் குண்டுவீசி தகர்க்கப்பட்டன. இத்தோடு நின்று விடவில்லை. பௌத்தர்களே இல்லாத இடங்களில் எல்லாம் பௌத்த விகாரைகளைக் கட்டுகின்றனர். தமிழர்களின் பாரம்பரிய நிலப்பரப்பில் பகவான் புத்த பெருமானின் சிலைகளை ஊன்றி வருகின்றனர்.

ஒரு பக்கம் சமயத்தை அழித்து வரும் அதே நேரம் தமிழ் மக்களின் கல்வித் துறையிலும் கை வைத்து விட்டனர்.

கல்வி அமைச்சரும் உயர்கல்வி அமைச்சரும் பதவிகளில் இருக்கையில் ஒருசாதாரண சிவில் அதிகாரியின் கட்டளையின் பேரில் இராணுவத்தினர் யாழ்.பல்கலைக்கழகத்திலும் பாடசாலைகளிலும் கால் பதித்து விட்டனர். பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்து அட்டகாசம் புரிந்தவர்கள் இராணுவத்தினர். இப்போது தமிழ் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கின்றனர்.

இந்த இராணுவக் கெடுபிடிகளைக் கண்டிப்பவர்களையும் ஆட்சேபிப்பவர்களையும் புலிச்சாயம் பூசி பூஸா முகாமில் அடைத்து வைத்து சித்திரவதை செய்கின்றனர்.

நாட்டில் எந்தப் பிரதேசத்தில் வாழ்பவர்களாகவும் எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்கள் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டு நீதிமன்ற அனுமதியுடனேயே தடுத்து வைக்க முடியும். ஆனால் வடக்கில் இராணுவத்தினரால் கைது செய்யப்படும் தமிழர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படுவதில்லை. நீதிமன்றங்களிலும் முன்னிலைப்படுத்தப்படுவதில்லை.

கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான எந்த பதிவுகளும் பிரதேச பொலிஸ் நிலையங்களில் இல்லை. எத்தனை பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதும் தெரியவில்லை. கடந்த காலங்களில் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களும் சரண் அடைந்தவர்களும் அப்படியே காணாமல் போனவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கலாம் அல்லவா.

சாந்தி சமாதானம் என்ற தர்ம உபதேசம் செய்த பகவான் புத்த பெருமானின் பிறந்த தினத்தையும் அவர் ஞானம் பெற்ற தினத்தையும் வெசாக் கொண்டாட்டம் என கொண்டாடுகின்றனர். தானதர்மங்களை செய்கின்றனர்.

அப்போது அமைக்கப்படும் வெசாக் அலங்காரப் பந்தல்களிலும் தானசாலைகளிலும் பௌத்த விகாரைகளிலும் ஒலிப்பது இஸ்லாமியரான அமரர் மொஹைதீன் பேக் அவர்களால் பாடப்பட்ட ''புத்தம் சரணம் கச்சாமி'' தர்மம் சரணம் கச்சாமி'' என்ற பாடல் தான். புத்த பகவானே நேரில் வந்து தர்மத்தைப் போதிப்பது போல் அமைந்துள்ளது இப்பாடலின் வரிகள்.

பௌத்தர்கள் [illegible] அழைத்தவர்களும் [illegible] இந்த [illegible] விரும்பி வரவேற்று

**கல்வி அமைச்சரும் உயர்கல்வி அமைச்சரும் பதவிகளில் இருக்கையில் ஒருசாதாரண சிவில் அதிகாரியின் கட்டளையின் பேரில் இராணுவத்தினர் யாழ்.பல்கலைக்கழகத்திலும் பாடசாலைகளிலும் கால் பதித்து விட்டனர். பல்கலைக் கழகத்துக்குள் நுழைந்து அட்டகாசம் புரிந்தவர்கள் இராணுவத்தினர். இப்போது தமிழ் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாக நியமிக்கின்றனர். இந்த இராணுவக் கெடுபிடிகளைக் கண்டிப்பவர் களையும் ஆட்சேபிப்பவர்களையும் புலிச்சாயம் பூசி பூஸா முகாமில் அடைத்து வைத்து சித்திரவதை செய்கின்றனர்.**

மதிப்பளிக்கின்றனர்.

இன, மத, மொழி பேதங்களைக் கடந்து அனைவரும் மதிக்கும் இந்தப்பாடலைப் பாடியவர் ஒரு இஸ்லாமியர் என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஜனாதிபதி முதல் ஏனைய அமைச்சர்கள் கலந்து கொள்ளும் அரசமட்ட சமய நிகழ்வுகளிலும் இப்பாடலுக்கு முக்கிய இடம் அளிக்கப்படுகின்றது என்பதைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். ஒரு இஸ்லாமியரால் அது பாடப்பட்டது என்று எவரும் வெறுக்கவில்லை.

ஆனால் இன்று நடப்பது என்ன? மதகுருமார்களின் ஆசீர்வாதத்தில் இஸ்லாமியப் பள்ளிவாசல்களையும் மத்ரசாக்களையும் தாக்கி அழிக்கின்றனர், தீவைக்கின்றனர்.

ஆரம்பத்தில் அநுராதபுரம் பள்ளிவாசல் தொடர்ந்து தம்புள்ள பள்ளிவாசல் என ஆரம்பித்து தெஹிவளையில் குர்-ஆன் ஓதும் மத்ரசாக்கள் என்றும் தொடர்ச்சியாக இஸ்லாமிய வணக்கஸ்தலங்கள் தாக்கப்படுகின்றன. தூய்மையாகவும் புனித் தன்மையுடனும் தயாரிக்கப்பட்டது என்பதைக் குறிக்கும் ''ஹலால்'' என்ற பதத்தை நீக்க வேண்டும். அதன் மூலம் வசூலிக்கப்படும் பணம் இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களுக்கும் போய்கொள்கின்றது என்று கூறி நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களுக்கு பின்னணி இந்தக் காவி உடை அணிந்த துறவிமார்தான்.

எம்பிலிப்பிட்டிய பொதுச் சந்தையில் முஸ்லிம் வியாபாரிகள் வியாபாரம் செய்யக்கூடாது என அடித்து விரட்டப்பட்டனர். மஹரகம நோலிமிற் நிறுவனத்தின் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இலங்கையில் இனங்களுக்கு எதிரான சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. சகல இனத்தவர்களும் மொழி, மத சுதந்திரத்துடன் வாழ்கின்றனர். எந்த விதமான மனித உரிமை மீறல்களும் இடம்பெறவில்லை. சட்டமும் ஒழுங்கும் உஷர்ஜிதப் படுத்தப்பட்டுள்ளன. கடத்தப்பட்டவர்கள், காணமல் போனார்கள் என்பதெல்லாம் பச்சைப் பொய் கட்டுக் கதை என ஜனாதிபதியும் பாதுகாப்புக்கு பொறுப்பான அவரது சகோதரரும் கூறுகின்றனர்.

அப்படியானால் இங்கு இடம்பெறும் அட்டகாசங்களும் அநியாயங்களும் இவர்களுக்குத் தெரியாதா?

இது ஒரு ஜனநாயக நாடு. இங்கு வாழும் மக்கள் தத்தமது பிரதேசங்களில் இன, மொழி, மத சுதந்திரத்துடன் வாழ உரிமை உண்டு. இதைவிட்டு தமிழ் மக்களை இராணுவத்தைக் கொண்டும் இஸ்லாமியர்களைப் பிக்குமாரையும் கொண்டு அச்சுறுத்தி அடக்கி ஆளமுனையக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவிசார் அரசியலில் இந்தியாவின் குறியும் ஈழத் தமிழர்களும்

■ நிலாந்தன்

விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு ஏறக்குறைய மூன்றே முக்கால் ஆண்டுகளாகிவிட்டன. எனினும் ஈழத் தமிழர்கள் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாட்டில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய திருப்திகரமான மாற்றங்கள் எதையும் அவதானிக்க முடியவில்லை. அண்மையில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு பேட்டி வழங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இதைச் சுட்டிக் காட்டியிருந்தார். விடுதலைப்புலிகள் இல்லாத இன்றைய அரசியல் சூழலில் இந்தியா தன் நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தியாவின் மாறாத இந்த நிலைப்பாட்டுக்கு காரணம் என்ன? விடுதலைப்புலிகள் தான் காரணம் என்றால் அவர்கள் அரங்கிலிருந்து அகற்றப்பட்ட பின் இந்தியா தன் நிலைப்பாட்டை மாற்றியிருந்திருக்க வேண்டும். எனவே, விடுதலைப்புலிகள் அல்லாத வேறொரு பலமான காரணமே இந்தியாவின் அணுகுமுறையை தீர்மானிக்கின்றது என்ற முடிவுக்கு வரலாமாயின் அது என்ன?

முதலில் ஈழத்தமிழர்கள் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். ராஜீய உறவுகளில் "சென்ரிமென்ற்" களுக்கு இடமில்லை. அவை அநேகமாக நலன் சார் உறவுகள் தான். இந்தியா ஈழத்தமிழர்களை தனது புவிசார் நலன்களுக்கூடாகவே பார்க்கிறது. தமிழர்களிடத்தில் அதற்கு தனிப்பட்ட ரீதியில் விருப்போ வெறுப்போ கிடையாது. ஆனால், தமிழ்நாட்டில் இருக்கும் தமிழர்களை தேர்தல் நோக்கு நிலையிலிருந்து கையாள வேண்டிய ஒரு தேவை அதற்கு இருக்கிறது. ஆனால், தமிழ் நாட்டிற்கும் ஈழத் தமிழர்களுக்குமிடையில் உணர்ச்சிகரமான ஒரு பிணைப்பு உண்டு. அதன் காரணமாகவே ஈழத்தமிழர்களைக் கையாளும்போது தமிழ் நாட்டையும் கவனத்தில் எடுக்க வேண்டிய தேவை இந்திய மத்திய அரசுக்கு ஏற்படுகிறது. இதுவும் ஒரு நலன் சார் அணுகுமுறை தான்.

கெடுபிடி போர் காலத்தில் அமெரிக்காவை நோக்கி சாய்ந்திருந்த ஜெயவர்த்தன அரசாங்கத்தை வழிக்கு கொண்டு வர வேண்டிய தேவை மொஸ்கோவுக்கு நெருக்கமாக இருந்த இந்தியாவிற்கு ஏற்பட்டது. எனவே, இலங்கை இனப்பிரச்சினையை அது கையில் எடுத்தது. இந்திய இலங்கை உடன்படிக்கை மூலம் தனது நோக்கம் நிறைவேற்றப்பட்டதும் அது இனப் பிரச்சினையை கைகழுவிவிட்டது.

ஆனால், விடுதலைப்புலிகள் இயக்கம் விட்டுக்கொடுப்பின்றி போராடியதால் இந்தியாவின் நிகழ்ச்சி நிரல் குறிப்பிடத்தக்க அளவுக்கு குழம்பியது. கெடுபிடிப் போர் கால கட்டத்தின் இறுதிப் படை விலகல்களில் ஒன்றாக IPKF இன் படை விலகல் அமைந்தது.

ராஜீவ்காந்தி கொல்லப்பட்டதோடு இந்தியாவிற்கும் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்திற்கும் இடையில் ஒரு சட்டப்பூட்டு போடப்பட்டுவிட்டது. இதில் ஈழத்தமிழர்கள் குறித்து இந்தியாவின் தெரிவுகள் மிகவும் சுருங்கிக் காணப்பட்டன. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவரும் அதன் புலனாய்வுத் துறைப் பொறுப்பாளரும் இந்தியாவில் தேடப்படும் நபர்களாயினர். அதற்குப் பின் விடுதலைப்புலிகள் இயக்கத்தால் இந்தியாவோடு எத்தகைய ஒரு வெளிப்படையான உத்தியோக பூர்வ உறவையும் பேணமுடியாது போயிற்று. ராஜீவ் கொலை என்பது மெய்யான விளக்கத்தின் அடிப்படையில் ஒரு சட்ட விவகாரம் அல்ல. அது ஒரு அரசியல் விவகாரமே. ஆனால், இந்தியா அதை ஒரு சட்ட விவகாரமாகவே அணுகியது. அது ஓர் அரசியல் தீர்மானம் தான்.

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நிலைமைகளை சீர்செய்வதற்குப் பல தடவைகள் முயற்சித்தார். குறிப்பாக ரணில் - பிரபா உடன்படிக்கையின்போது அவர் இந்தியாவில் வந்திறங்குவதற்கு அனுமதி கேட்கப்பட்டது. ஆனால், அதற்கு சட்டப்பூட்டு தடையாக இருந்தது. நாலாம் கட்ட ஈழப் போரை ஒட்டிய காலங்களிலும் பாலசிங்கம் சில முன் முயற்சிகளை மேற்கொண்டதாக கூறப்படுகின்றது.



குறிப்பாக, இந்திய ஊடகமொன்றுக்கு ராஜீவ் கொலை தொடர்பில் அவர் வழங்கிய கருத்துக்கள் வன்னியில் பெரும் சர்ச்சையைக் கிளப்பின. அதன் விளைவாக இயக்கத்தில் அவருடைய முதன்மை ஸ்தானம் குறைக்கப்பட்டதாகவும் ஒரு தகவல் உண்டு. அதனால் மனமுடைந்து காணப்பட்ட நாள்களிலேயே அவருக்குப் புற்றுநோய் தீவிரமடைந்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. அவருக்குப் புற்றுநோய் என்று கண்டுபிடிக்கப்பட்ட பின் விடுதலைப் புலிகளின் தலைவரும் பிரதானிகளும் அவருடன் அதிகம் பரிவோடும் மதிப்போடும் நடந்து கொண்டதாகவும் கூறப்படுகிறது. ஆனால், தான் சார்ந்த இயக்கத்துக்கும் இந்தியாவின் புவிசார் நலன்களுக்குமிடையே போடப்பட்டிருந்த சட்டப்பூட்டை திறக்க முடியாத ஆற்றாமையோடும் நிராசையோடும்தான் அன்ரன் பாலசிங்கம் இறந்துபோனார். நந்திக் கடற்கரையில் புலிகளின் வீழ்ச்சியோடு அந்தச் சட்டப்பூட்டு திறக்கப்பட்டது.

இப்பொழுது சட்டப்பூட்டு இல்லை. ஆனாலும் இந்தியா அதன் அணுகுமுறையை மாற்றிக் கொள்ளவில்லை. ஏன்?

விடுதலைப்புலிகள் இயக்கம் ஓர் "அரசல்லாத தரப்பாக ([illegible] state) இருந்தபோதிலும் கூ[illegible]தப் பிராந்தியத்தில் சக்திமிக்க அரசுகளின் நிகழ்ச்சி நிரல்களை வெற்றிகரமாக குழப்பியிருக்கிறது. முதலில் இந்திய இலங்கை உடன்படிக்கையை முறித்ததன் மூலம் இந்தியாவின் நிழ்ச்சி நிரலைக் குழப்பினார்கள். அதன் பின்னர் ரணில் - பிரபா உடன்படிக்கையை முறிக்கும் விதத்தில் நிலைமைகளை நகர்த்தியதன் மூலம் அதாவது, ரணில் விக்கிரமசிங்காவைத் தோற்கடித்ததன் மூலம் மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரலைக் குழப்பினார்கள். ரணில் தோற்கடிக்கப்பட்ட போது இலங்கைத் தீவில் மேற்கிற்கான கதவுகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு மூடப்பட்டன. அதேசமயம் சீனாவிற்கான கதவுகள் அகலத் திறக்கப்பட்டன.

சீனாவின் செல்வாக்கு மண்டலத்துள் கொழும்பானது மேலும் ஈர்க்கப்படுவதைத் தவிர்ப்பதே அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் முன்னுள்ள சவால்களாகும். கொழும்பை முறிக்காமல் வளைத்தெடுக்க இவ்விரு நாடுகளும் முயற்சிக்கின்றன. இம்முயற்சியில் கொழும்பிற்கும் தனக்குமான நெருக்கத்தை தொடர்ந்தும் பேணுவதற்காகவே புதுடில்லியானது தமிழர்களிடமிருந்து விலகி நிற்பதாகக் காட்டிக்கொள்ள முற்படுகின்றது.

இதன் காரணமாகவே நந்திக் கடலில் சட்டப்பூட்டு உடைக்கப்பட்ட பின்னரும் இந்தியாவானது அதற்கு முன் கடைப்பிடித்த அதே அணுகுமுறையைத் தான் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றது. இலங்கைத்தீவில் மேற்கு நாடுகளின் நிகழ்ச்சி நிரல் குழப்பப்பட்டதால் உடனடியாக அதிகம் நன்மைபெற்ற தரப்பாக சீனாவே காணப்படுகிறது.

ஆனால், எந்த நோக்கத்திற்காக புதுடில்லியானது கொழும்பைத் தொடர்ந்தும் ஆரத்தழுவி வருகின்றதோ அந்த நோக்கத்தில் இன்று வரையிலும் அவர்களால் பூரண வெற்றியைப் பெறமுடியவில்லை. இதனால், இன்றைய வே[illegible] [illegible] தொடர்பான அதன் அணுகுமுறையில் அடிப்படை மாற்றங்கள் எதுவும் தென்படவில்லை. கடந்த மார்ச் மாதம் இந்தியா ஜெனிவாவில், அமெரிக்கா இலங்கைக்கு எதிராக கொண்டு வந்த பிரேரணையை ஆதரித்தது. எனினும் சில பல ஊடல்கள், முகமுறிவுகள் போன்ற எல்லாவற்றுக்கும் அப்பால் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான தேனிலவு முறியாது தொடர்கிறது.

இந்த இடத்தில் ஈழத்தமிழர்கள் ஒரு ராஜீய யதார்த்தத்தை விளங்கிக் கொள்வது நல்லது. இந்தியாவோ அமெரிக்காவோ சீனாவோ எந்தவொரு சக்திமிக்க நாடும் இலங்கை அரசாங்கத்தைத் தான் ஒரு மையமாகக் கருதுகின்றன. தமிழர்களையல்ல. இலங்கை அரசாங்கத்தைக் கையாள்வதில் நெருக்கடிகள் ஏற்படும் போது தமிழர்களை ஒரு கருவியாகப் பயன்படுத்தி அரசாங்கத்தை வழிக்குக் கொண்டு வருவதே இலங்கைத் தீவின் நவீன வரலாற்றின் பெரும் போக்காய் உள்ளது. இப்போக்கில் அவ்வப்போது சிறு விலகல்கள் ஏற்பட்டிருந்தாலும் கூட தமிழர்களை ஒரு மையமாகக் கருதி கையாள்வது என்பது ஒரு பலமான போக்காகவே காணப்படவில்லை.

இந்திய இலங்கை உடன்படிக்கை என்பது தமிழர்களை ஒரு மையமாகவே பொருட்படுத்தவில்லை. ஆனால், ரணில் - பிரபா உடன்படிக்கையானது தமிழ் மையத்தை ஏற்றுக்கொண்டது. ஆனால், அது மேற்கு நாடுகளின் அணுகுமுறைதான். இந்தியா இன்றளவும் கொழும்பைத் தான் ஒரு மையமாகக் கருதுகிறது.

எனவே, கொழும்பை வென்றெடுப்பதற்காக அவ்வப்போது தமிழர்களின் பிரச்சினை கையிலெடுக்கப்படுகிறது.

மேலும் தமிழ் நாட்டில் மத்திய அரசுக்கு எதிரான உணர்வலைகள் அதிகரித்து வருவதையும் அவர்கள் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

வன்னியில் விடுதலைப்புலிகள் ஒரு மையத்தை கட்டியெழுப்பினார்கள். ஆனால், அது நந்திக் கடற்கரையில் தகர்க்கப்பட்டுவிட்டது. அது அதிகாரம் படைத் துறைப் பரிமாணங்களைக் கொண்ட ஒரு மையம். குறைந்தளவு சர்வதேச அங்கீகாரமே அதற்கு இருந்தது. அதற்குப் பிரதான காரணம் இந்தியாதான். இந்தியாவிற்கும் விடுதலைப்புலிகளின் பாதி அரசிற்கும் இடையிலிருந்த சட்டப்பூட்டின் விளைவாக அப்பாதி அரசுக்கு குறைந்தளவு சர்வதேச அங்கீகாரமே கிடைத்தது. ஆனால், இப்பொழுது தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு ஒப்பீட்டளவில் விடுதலைப்புலிகளை விடவும் கூடுதலான சர்வதேச அங்கீகாரம் உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஜனநாயக இருப்பே இதற்குக் காரணம்.

ஜனநாயக ரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவை என்பதே அதன் பிரதான பலமாகும். ஆனால், அது தன் பலத்தையும் வரலாற்றுப் பாத்திரத்தையும் எந்தளவுக்கு விளங்கி வைத்திருக்கிறது? இலங்கைத்தீவில் தன்னை ஒரு தவிர்க்கப்படவியலாத மையமாகக் கட்டியெழுப்பும் விதத்தில் அதன் நிகழ்ச்சி நிரல் காணப்படுகிறதா? இந்தியாவுக்கும் தனக்குமுள்ள சுமுகமான உறவை தங்கு நிலை உறவு என்ற நிலையிலிருந்து நலன்சார் பரஸ்பர உறவு என்ற வளர்ச்சியை நோக்கி இட்டுச்செல்லவல்ல தீர்க்கதரிசனமும் உரிய நிகழ்ச்சி நிரலும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிடம் உண்டா?

13ஆவது திருத்தச் சட்டத்தைக் கடந்துபோவதென்றால் இந்தியா தமிழர்களை ஒரு மையமாகக் கருதினால்தான் அது முடியும். ஈழத்தமிழர்களை இந்தியா ஒரு மையமாக அங்கீகரித்தால்தான் உலக சமூகம் அவ்விதம் செய்யும். இந்தியாவை மீறி ஈழத்தமிழர்களை யாரும் தத்தெடுத்துவிட முடியாது. தென்னாசியாவின் புவிசார் அரசியல் யதார்த்தம் அது. இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தாகி ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களின் பின்னரே யாழ்ப்பாணத்தில் இந்தியாவின் துணைத் தூதரகம் திறக்கப்பட்டது.

கலை பண்பாட்டுத்தளங்களில் அது ஓர் இடையூடாட்ட மையமாகத் திகழ்வதற்கு இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது. தமிழர்களின் அபிப்பிராயத்தை உருவாக்கவல்ல, படித்த, நடுத்தர வர்க்கத்தின் இதயத்தை அது மேலும் நெருங்கிச் செல்லவேண்டியிருக்கிறது.

முன்பொரு காலம் யாழ்ப்பாணத்தின் படித்த நடுத்தர வர்க்கத்தின் கல்வீடுகளிலும், சலூன்களிலும், சனசமூக நிலையங்களிலும் இந்திய தலைவர்களான காந்தி, நேரு நேதாஜி மற்றும் ஆன்மிக வாதிகளான சுவாமி விவேகானந்தர், ரமணர் போன்றோரின் படங்கள் கொழுவப்பட்டிருந்தன. அப்பொழுது யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகம் இருக்கவில்லை.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் விசா வழங்கும் அந்தஸ்துடைய துணைத் தூதரகம் உண்டு. ஆனால், யாழ்ப்பாணத்தின் கல் வீடுகளில் காந்தி, நேரு போன்றோரின் படங்களைக் காண முடிவதில்லை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இசுறு பாடசாலைத் திட்டத்தின் கீழ் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கரவெட்டி விக்கினேஸ்வரா ஆரம்பப் பாடசாலையின் கால்கோள் விழாவை, பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி கல்வி வலய ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் **ஐ.செல்வராசா** மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கிறார். அதிபர் ம.மகாதேதீஸ்வரன், கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட் திரு எஸ்.**டபிள்யூ.** தேவகுமார், விக்கினேஸ்வராக் கல்லூரி அதிபர் க.கனகலிங்கம் ஆகியோர் அருகில் உள்ளனர். புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் மத்தியில் அதிபர் உரையாற்றுகிறார். (ம-8)



கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலில் ஜோதிட விற்பன்னர் அரச விருது வழங்கல் விழா ஜோன்டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. அமைச்சர் டி.பீ.ஏக்கநாயக்காவால் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஜோதிடத் துறையில் சிறப்புற விளங்கும் வேலணை ஜோதிடர் வி.ஏ.சிவராசா "ஜோதிர் வித்யா ரத்னா" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ம)




சங்கானை பட்டர்பிளை சர்வதேச பாடசாலையில் ஒளிவிழாவும் பரிசில் வழங்கலும் அண்மையில் இடம்பெற்றன. நிகழ்வில் இடம்பெற்ற சிறார்களின் கலை நிகழ்வின் ஒரு காட்சி. (ம-29)



நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகத்தால் புராதனப் பொருள்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (ம-14)




வழங்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்று வந்த காசி காண்டப் படிப்பில் கலந்து உரைவாசித்து வந்த அ.தருமலிங்கத்தின் பணியைப் பாராட்டி ஆலய அர்ச்சகர் சிவத்திரு சு.முத்துக்குமாரசாமி உருத்திராட்ச மாலை அணிவிக்கிறார். செய்யுள்களை வாசித்த ஞானி க.சிவசுப்பிரமணியம் மற்றும் பிரமுகர்கள் அமர்ந்திருக்கின்றனர். (ம-28)



வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இன்றுவரை சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக சங்கத்தின் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய பொ.ஸ்ரீ இராமச்சந்திரனுக்கு சங்கத்தால் சேவை நலன் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இதன்போது பணியாளர் ஒருவரால் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றார். முன்னாள் தலைவர் எஸ்.பொன்னம்பலம், தற்போதைய இயக்குநர் சபை உறுப்பினர்களான எஸ்.ஆனந்தமூர்த்தி, எஸ்.இலங்கைநாதன் ஆகியோரும் காணப்படுகின்றனர். (ம-8)



நவாலி கிழக்கில் பல பொது அமைப்புகளின் பிரதிநிதியாக இருந்து சமூக சேவைகளைச் செய்து வரும் செல்லத்துரை மகேந்திரனைப் பாராட்டி நவாலி முதியோர் சங்க ஒன்று கூடல் நிகழ்வில் மானிப்பாய் இந்துக் கல்லூரி உப அதிபர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார். (ம-100)





அரச பணியாளர்களுக்கான விசேட **கண் சிகிச்சை** முகாம் உள்ளூராட்சி அமைச்சின் விசேட ஏற்பாட்டில் கைதடியில் முதியோர் இல்ல வளாகத்தில் இடம்பெற்றது. **அமைச்சின்** கீழ் இயங்கும் சமூகசேவைத் திணைக்களங்களான சமூக சேவைத் திணைக்களம், சிறுவர் நன்னடத்தை திணைக்களம், கைத்தொழில் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம், கிராமிய கைத்தொழில் திணைக்களம் ஆகியவற்றை சேர்ந்த 100 இற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் பயன் பெற்றனர். அவர்களுக்கு கண்கள் பரிசோதிக்கப்பட்டதுடன் தேவையானோருக்கு உடனடியாக கண்ணாடி வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பசிய மரங்களால் நிறைந்த பூமி என்பதால் தென்மராட்சிப் பகுதிக்கு குழைக்காடு என்று பெயர். அந்தப் பகுதியின் மரபார்ந்த விடயங்கள் எமது பண்பாட்டுக்கு வலுச்சேர்ப்பவை. நாகரிகத்தில் அதிவேக உட்புகுதலோடு அத்தகைய மரபுகள் மெல்ல மெல்லத் தமது அடையாளங்களைத் தாமே தொலைக்கத் தொடங்கியுள்ளன. ஞாபகப் பரப்பில் தூறிக் கொண்டிருக்கும் குழைக்காட்டின் துளிகள் இங்கே பகிரப்படுகின்றன.**



# 'அடிப்பார்த்தல்'

## அற்றுப் போகும் தடங்கள்

தென்மராட்சியின் புவியியல் குடா நாட்டின் ஏனைய பகுதிகளில் இருந்தும் வேறுபட்ட தன்மை கொண்டது. மணலும் மணல் சார்ந்த பகுதிகளே இங்கு அதிகம். இந்த மணற் பரப்பே அடிப்பார்த்தலுக்கும் வசதியாக அமைந்து விட்டது. ஏனெனில் களிமண்தரைகள் வருடத்தின் பெரும்பகுதி இறுகிப் போய் கிடக்கும். அங்கு துள்ளிக்குதித்தாலும் பாதத்தின் அடையாளம் பதிவது கடினமே. அப்படித் துள்ளிக்குதிக்கின்ற போது கல்லுப்போல இறுகிக் கிடக்கும் பூமி காலடியை பதம் பார்ப்பதுதான் மிச்சம்.

எப்போதாவது வானம் மனமிரங்கி மழையாக பொழிகின்ற காலத்தில் மட்டும் களிமண் கசிந்து சேறாகிக் கிடக்கும். அந்த பொழுதுகளில்தான் காலடி அடையாளத்தை அங்கு கண்டு கொள்ள முடியும். ஆனால் தென்மராட்சியில் அப்படியல்ல. எப்போதும் காலடித் தடங்களை பதிவதற்காக அந்தப் பிரதேசத்தின் மண் காத்திருக்கும். எல்லோருடைய பாதச் சுவடுகளையும் மிக ஆழமாக பதிவுசெய்துவிடும். ஆகவே, காலடிகளை பின்தொடர்வதன் மூலம் அவற்றுக்குரியவர்களை இனங்கண்டு கொள்ள முடியும்.

எனினும் அடிப்பார்த்தலில் பரிச்சயம் உடையவர்கள் இப்படி பின்தொடர்ந்தெல்லாம் மினக்கெடுவதில்லை. அவர்கள் இன்னாருடைய காலடி இதுவென்று பார்த்தவுடனேயே சொல்லிவிடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் ஊருக்கு ஓரிடண்டு பேராவது இருப்பார்கள். அவர்களில் ஒருவரைப்பற்றிய அனுபவங்களே கடந்த வாரங்களில் இந்தப் பத்தியில் சொல்லப்பட்டிருந்தது. தனியே அடிப்பார்ப்பவர்களை மாத்திரம் நம்பியிராமல் தாமே காலடிகளை வைத்து களவுகளைக் கண்டுபிடித்தவர்களும் தென்மராட்சியில் இருக்கவே செய்தார்கள்.

மனிதர்களுடைய காலடிகளை மாத்திரம் அல்லாது தமது வளர்ப்பு விலங்குகளின் படங்களையும் அடையாளம் வைத்து கண்டுபிடிப்பவர்களும் உண்டு. மேய்ச்சலுக்காக அவிழ்த்துவிடப்படும் மாடுகள் எங்காவது தனித்து வழிதவறிப்போய்விட்டால் அவற்றின் காலடிகளைப் பின்தொடர்ந்து கண்டுபிடிப்பதில் தென்மராட்சி வாசிகள் விண்ணார்கள். தனியே தமது கால்நடைகளின் காலடிகளை மாத்திரமல்லாது பன்றி போன்ற ஏனைய விலங்குகளின் தடங்களையும் வைத்து அவற்றின் நடமாட்டம், பருமன், எண்ணிக்கை என்பவற்றையெல்லாம் கணிக்கும் வல்லமை அவர்களுக்கு இருந்தது. தென்மராட்சிக்காரர்கள் வேட்டையிலும் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். இதன்போதெல்லாம் காலடிகளை வைத்தே தமக்கான இரைகளின் இருப்பிடங்களை மோப்பம் பிடித்து வேட்டையாட முடிந்தது.

செருப்பு வந்த பின் காலடித் தடம் பார்ப்பது கடினமானதாக மாறிப்போய் விட்டது. ஆனாலும் செருப்பு போட்டுக் கொண்டு திருடப் போனாலும் நம்மவர்கள் கண்டு பிடித்து விடுவார்கள். அதாவது புதுச் செருப்பு என்றால் யார் புதுச் செருப்புப் போட்டுக் கொண்டு திரிகின்றார்கள் என அவதானித்து பிடித்து விடுவார்கள்.

புதுச் செருப்பை பாட்டா கடையில் வாங்கிக் கொண்டு கடைக்காரர் காணியிலே பலாப்பழம் வெட்டி மாட்டிக் கொண்டவர்களும் உண்டு.

சின்னராசு கோயிற் கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தார். பாட்டாக் கடைக்காரர் சிறியண்ணை அந்தப்பக்கம் வந்தார்.

''ராசு! புதுச்செருப்பு முந்தநாள் வாங்கிக் கொண்டு எங்கயடா போனனி?''

'' ஓரிடமும் இல்லையண்ணை''

'' எப்பிடியடா பிலாப்பழம்? நல்ல இனிப்போ?''

'' எந்தப் பிலாப்பழம் அண்ணை?''

'' திண்ட உனக்குத்தானே தெரியும்?''

'' என்ன கதைக்கிறியள்?''

'' ஆய்... உனக்கு விளங்கேலை!! யோ?''

'' இல்லை அண்ணை''

'' வடுவா! என்ரை கடையில புதுச் செருப்பு வாங்கிப் போட்டுக் கொண்டு, என்ரை பிலாவில பிலாப்பழம் வெட்டித்திண்டிட்டாய்''

'' அண்ணையான இல்லை''

'' சத்தியம் கட்டிடா பார்ப்பம்''

''சத்தியமா''

''கண்டறியாத சத்தியம்''

'' அண்ணை! நான் மட்டும்தான் புதுச் செருப்பு வாங்கினானோ?''

''ஓம்''

'' செருப்பு வாங்கிறத்துக்கும் பிலாப் பழத்துக்கும் என்ன சம்பந்தமண்ணை?''

''பேயா! புதுச் செருப்பை பிலாவுக்கு கீழே விட்டிட்டு வந்திட்டாய்.''

அப்பதான் சின்னராசவுக்கு உறைத்தது. காலையில் வீட்டில் செருப்பை காணவில்லை. அண்ணன்தான் போட்டுக் கொண்டு போய் விட்டதாக நினைத்தான்.

பிலாக்காய் வெட்டின அவசரத்தில் மரத்துக்கு கீழே விட்டிட்டு வந்தது அப்பதான் ஞாபகம் வந்தது.

''பரவணிக் குணம்'' என்று கூறி விட்டு போய் விட்டார் கடைக்கார சிறியண்ணை.

சின்னராசு கொஞ்ச நேரம் யோசித்துப் பார்த்தான்.

சிறியண்ணை ''பரவணிக்குணம்'' எனறு சொன்னது களவையா? மறதியையா?

அவனது பேரன் சன்னதி முருகன் தம்பிராசாண்ணை ஒரு முறை கண்டாவளைக்கு மாடு சாய்க்க வேட்டி கட்ட மறந்துபோய் கோவணக் கட்டுடன் போய்விட்டார். அப்படி மறதிக்கு பேர் போனவர்.

மற்றும் இந்தத் தொடரில் அவரின் சிறு திருட்டு (மாட்டின் கயிற்றை அவிழ்த்தது) கடந்த வாரம் சொல்லப்பட்டிருந்தது.

ஆகவே சிறியண்ணை சொன்னது எதை? ராசு யோசித்தான். சிரிப்பு வந்தது.

''பிலாப்பழம் இனிப்பா எண்டு பின்னேரம் இந்திராவைக் கேக்க வேணும்'' என்று நினைத்துக் கொண்டான். ஏனென்றால் களவாக வெட்டிய பலாப் பழத்தை யாருக்கும் தெரியாமல் அவளுக்குத் தானே கொடுத்தான்.

*(சுவடுகள் பதியும்)*




# மனிதரிடம் மண்டியிடும் கடவுள்


மனிதர்களைப்
பலியிடத் தெரிந்த
பக்தர்களாகி விட்டீர்கள்

இருட்டுக்களில்
உங்களையே
திருடுகிறீர்கள்!
உங்கள் சுதந்திர வெளிச்சம்
இருட்டுக்கே பலியாகிறது

கடவுள் படைத்தார்
என்று சொல்லிக்கொண்டு
மனிதர்களிடம்
மண்டியிடுங்கள் என
கடவுளை நச்சரிக்கிறீர்கள்

ஜாதிகளுக்கு ஒரு கடவுளென்றும்,
இனங்களுக்கு ஒரு மதங்களென்றும்,
உருவாக்கினீர்கள்

மனிதனின்
முதல்பாவத்திலேயே
கடவுள் காணாமல்
தொலைந்து போனான்



மனித இருதயங்கள்
கடவுளையும்
அவன் கொள்கைகளையும்
எரிக்கும் சுடுகாடாய்
இருக்கிறது

அக்கிரம சிந்தனையை
நெஞ்சிலும்,
அர்ச்சனை தீட்டை
கைகளிலும் ஏந்தியுள்ளீர்கள்

நீங்கள்
ஆன்மீகத்தைத்
தேடுகிறோம் என்று
சிலைகளில்
குடிகொண்டிருந்த
தெய்வீகத்தைத் துரத்துகிறீர்கள்

ஆசைகளையும்,
கோரிக்கைகளையும்,
வேதனைகளையும்,
அடைக்கலங்களையும்,
கடவுள் எனும்
பெயர் கொண்ட
சிலைகளின் மேல்
கொட்டி அபிஷேகம்
செய்கிறீர்கள்

எத்தனையோ
கோடி நாள்ப்பட்ட
பாவங்கள்
நாறுகின்றன
அந்த எச்சங்களை
துவட்டுங்கள்
தவறுகள் மூலமும்,
தப்புக்கள் மூலமும்
கற்றுக் கொண்ட
சிந்தனைகள் போதும்

மனிதம் மிஞ்சட்டும்
மதங்களிடமிருந்து
மனிதத்தை பிரித்தெடுப்போம்

பாலையும் தண்ணீரையும்
அருந்தும் மனிதர்களாய்
இருந்தோம்-இனி
உலகம்
மனிதம் என்னும் பாலைமட்டும்
அருந்தட்டும்!

நெடுந்தீவு-12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்வோம்

இமாலய மலைத்தொடர் உலகின் புவிச்சரிதவியல் சுவர்க்கமாகும்
சீனாவின் துயரம்/ புலம்பல் என்ற பெயரால் குவாங்கோ நதி அழைக்கப்படுகிறது.
ஆசியாவின் மிக நீளமான நதி யாங்கிக்கியாங் ஆகும்.
ஆசியாவின் உறங்கும் இராட்சதன் என சீனா அழைக்கப்படுகிறது.
உலகின் அதி குடியடர்த்தி மிக்க வலயங்கள் இரண்டு ஆசியாவில் உள்ளன.
சார்க் அமைப்பில் எட்டு நாடுகள் உள்ளன.
ஆசியான் அமைப்பில் பத்து நாடுகள் உள்ளன.
பிம்ஸ்டெக் அமைப்பில் ஏழு நாடுகள் உள்ளன.
புவியானது 23.5° இல் சாய்ந்து இருப்பதனாலேயே கிரகணி அலை வடிவப் பாதையாகக் காணப்படுகிறது.
ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க உலகின் முதலாவது பெண் பிரதமர் ஆவார்.

நே.வித்யாசாகர்,
கிளி.ம.வி.

## முயற்சியே முன்னேற்றத்தின் முதற்படி



நாம் எந்த ஒரு செயலையும் செய்ய முயற்சி அவசியம். முயற்சியே முன்னேற்றத்தின் முதற்படி. முயற்சியுள்ள ஒருவன் எத்தகைய காரியமாயிருந்தாலும் அதை வெற்றிகரமாக செய்து முடிப்பான். ஒருவனிடம் உள்ளவற்றில் எந்தவேளையும் அவனிடம் இருக்கிறது எனக் குறிப்பிட்டு கூறக்கூடியது முயற்சியே. ஏனையவற்றை அவன் பெற்றாலும் அதை நிலையாகப் பெற்றவன் எனக் கூறமுடியாது. இதனையே வள்ளுவர் "உடையரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார் உடையது உடையரோமற்று" எனத் தெளிவாகத் திருக்குறளில் கூறியுள்ளார்.

பருத்த உடலைக் கொண்ட யானை சிங்கம் தாக்க முற்பட்டால் அதற்கு அஞ்சும். காரணம் சிங்கத்தின் முயற்சி. இது போலவே முயற்சியற்ற ஒருவர் எவ்வளவு படை பல மிருந்தாலும் உள்ளத்தால் வலிய ஒருவர் முன் தாழ்ந்தவரே ஆவார். முயற்சி உடைய ஒருவன் செல்லுமிடம் எல்லாம் செல்வம் குவியும். எண்ணுவதெல்லாம் உயர்வாகவே எண்ண வேண்டும். அந்த எண்ணம் கை கூடா விடினும் எண்ணுவதைக் கைவிடக் கூடாது போரில் தன் உடலையே மறைக்கு மளவிற்கு அம்புகள் தைத்தாலும் யானை தன் பெருமையை நிலைநிறுத்தும். அது போலவே முயற்சி உடைய ஒருவர் தன்வாழ்வில் ஏற்படும் எத்தகைய இடர்களையும் களைந்து எறிந்து தன் முயற்சியினால் முன்னேறுவார். எவ்வாறு நீர் பூக்களின் உயரம் நீரின் அளவினதாய் உள்ளதோ அது போலவே மக்களின் முயற்சியும் முன்னேற்றம் உடையதாகக் காணப்படும். ஒருவரின் வலிமை முயற்சியே அந்த வலிமை அற்றவன் மரத்தைப் போன்றவன். எனவே சிறார்களாகிய நாம் உள்தளர்ச்சியை அகற்றி முயற்சியில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்தி முன்னேறுவோம். முயற்சியே முன்னேற்றம்.

## சர்வதேச குறியீடுகள்

ஒலிவ் மரத்தின் இலை-சமாதானம்
வெண்புறா-சமாதானம்
சக்கரம்-வளர்ச்சி
தாமரை-பண்பாடு, நாகரிகம்
கறுப்புத்துணி-துக்கம்
எலும்பு நடுவில் மண்டை ஓடு-ஆபத்து
கறுப்புக்கொடி-எதிர்ப்பு
மேல்நோக்கிய செங்குத்தான கொடி-வெற்றி/ஆரம்பம்
செம்பிறை -அரபு நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கம்
செஞ்சிலுவை - செஞ்சிலுவைச் சங்கம்
தீப்பந்தம்- ஒலிம்பிக்
சிவப்புக்கொடி-புரட்சி
மஞ்சள்கொடி (கப்பல்களில்)-தொற்றுநோய்
வெள்ளைக்கொடி-சமாதானம், பௌத்தர்களின் துக்கம்
பச்சை விளக்கு-சாதகம், அனுமதி
மஞ்சள் விளக்கு-ஆயத்தம், தயார் நிலையில்
சிவப்பு முக்கோணம் -குடும்பக்கட்டுப்பாடு
தலைகீழான கொடி - துன்பம்
அரைக் கம்பத்தில் கொடி -, இரங்கல்
கையில் தராசு ஏந்தி கண் கட்டப்பட்ட பெண்-நீதி
உடைந்த கைவிலங்குடன் இரு கைகள்-விடுதலை

நா.ஸ்ரீகிருஷ்ணா
தரம்-4 ஏ, யாழ்ப்பாணக் கல்லூரி.

## செல் பேசி



அறிவியல் தந்த அருங் கொடையாய்
அனைவர் கையிலும் செல்பேசி தம்பி
அவர உலகம் ஆகையால்
அவசியம் ஆனது தொலைபேசி

அடுத்தவர்க்கு இடையூறு இல்லாது - வரும்
அழைப்புக்கள் அனைத்தையும் ஏற்றிடுவாய்
அவசியம் அற்ற அழைப்புக்களை
பயணத்தின் போது தவிர்த்திடுவாய்

உறக்கப் பேசி உன் இருப்போர்
பொறுமையைத் தேடிக் கொள்ளாதே
உனது வேளையில் வேகத்தை உன்
உயர்ந்த விருப்பாய் கொள்ளாதே

அறிவியல் தந்த கொடை கலை தம்பி
அறிவு பூர்வமாய் பயன்படுத்து
அறிவொழ்ந்த செயலால் இப்பூவுலகை
இனிய தம்பி நீ நெறிப்படுத்து

சி.வாரிஸ்வரன்
யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.




இ.ஆர்.ரிந்தியா, தரம்-4சி,
சண்டுக்குளி மகளிர் கல்லூரி



எம்.அரவிந்தா, தரம்-1சி,
கிறீமேடிக்கா சர்வதேச பாடசாலை





அ.சோபிகன், தரம்-10சி,
சாவகச்சேரி இந்துக் கல்லூரி




ஜெ.நர்மதன், தரம்- 5,
கைதடி குருசாமி வித்தி.



ப.பிந்துஜா, தரம்-5,
இராமநாதன் கல்லூரி



நா.விபூஷணசர்மா, தரம்-6,
புத்தளை ம.வி.



உ.அபியோய்சாந், தரம்-1,
உடுவில் மகளிர் கல்லூரி

## விடை தெரியுமா? 195

### உங்களுக்கும் பரிசில்கள்

1. அச்சியந்திரத்தின் தந்தை எனப்படுபவர் யார்?
2. உலகில் மிகப் பிரபல விஞ்ஞான சஞ்சிகையின் பெயர் என்ன?
3. உலக சாரணியர் தினம் எப்போது?
4. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான எல்லைக் கோடு எது?
5. ஜனவரி 9 ஆம் திகதி சவுதியரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட இலங்கைப் பெண்ணின் பெயர் என்ன?

### விடைகள் 193

1. ஹொங்கொங்
2. ஏப்ரல் 18
3. தோனி
4. மியன்மார்
5. மேரிகியூரி

### வெற்றி பெற்றோர் விவரம் (193)

* கு.புவித்ரா, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
* கு.விமலேசன், ஹாட்லிக் கல்லூரி.

### விடை தெரியுமா?

தெரிந்தால் 02.02.2013 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

சிறுவர் கதிருக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்பும் சிறார்கள் "சிறுவர்கதிர்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதல் வந்தும் சொல்லாமல்...

சு.சுபா
4ஆம் கட்டை,
மானிப்பாய்.

காதல் இல்லாத ஒருவரைக் கூட இந்த உலகில் பார்க்க முடியாது. அந்த அளவில் அது ஒரு உன்னதமான ஒரு தெய்வீக உணர்வு. இவ்வாறு காதல் செய்பவர்களில் அதிகம் யோசிப்பவர்கள் யார் என்று பார்த்தால், அது பெண்கள்தான். ஏனெனில் அவர்களுக்கு சற்று பயம் அதிகம். அந்த பயத்தால் தான் அவர்கள் தனக்கு காதல் இருந்தாலும், அதை வெளிப்படுத்த தயங்குகிறார்கள்.

மேலும் பெண்களின் மனமானது ஒரு பூ போன்றது. அதில் அவர்கள் எப்போதும் சந்தோஷம் வேண்டும் என்று தான் விரும்புவார்கள். மேலும் அவர்கள் மனதில் ஒரு சில கேள்விகள், சந்தேகங்கள் எழுவதாலும் அவர்கள் வெளிப்படுத்த மறுக்கிறார்கள். சரி, இப்போது பெண்கள் எதனால் தங்கள் காதலை ஒப்புக் கொள்ள மறுக்கின்றனர் என்ற உண்மையை அனுபவசாலிகள் கூறுகின்றனர். அது என்னவென்று படித்து தெரிந்துகொள்ளுங்களேன்.

பெண்களின் காதலில் முதலில் தடையாக இருப்பது அவர்களது பெற்றோர்கள்தான். ஏனெனில் இத்தனை நாள்கள் தன்னை பெற்று வளர்த்தெடுத்த பெற்றோர் தன் காதலை ஒப்புக் கொள்ளவில்லையெனில் என்ன செய்வது என்ற ஒரு பயம், எப்போதுமே அவர்களது மனதில் இருக்கும்.

இதனால் அவர்கள் தங்கள் மனதில் காதல் இருந்தாலும், அதனை வெளிப்படுத்தாமல், மனதிலேயே வைத்துக் கொள்வர்.

பொதுவாக பெண்கள் காதல் செய்துவிட்டால், காதலிப்பவரையே மணக்க வேண்டும் என்று நினைப்பார்கள். அது நடக்காவிட்டால், பின் அவர்கள் மனதை கல்லாக்கிக் கொண்டு பெற்றோர் சொல்பவரை திருமணம் செய்து கொள்ள வேண்டும். இவை அனைத்தும் வேண்டுமா என்று நினைத்து, அந்த காதலை மனதிலேயே புதைத்துவிடுவர்.

நமது சமுதாயம் கூட பெண்களின் காதலை வெளிப்படுத்துவதற்கு ஒருவித தடையாக உள்ளது என்றும் சொல்லலாம். ஏனெனில் நமது சமுதாயத்தில் ஜாதி, மதம் போன்றவற்றை அதிகம் பார்ப்பது வழக்கம். இதனால் எவரும் விரும்பியவர்களை மணக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அதிலும் ஒரு இந்து பெண், கிறிஸ்துவ ஆணை மணந்துவிட்டால், அந்த சமுதாயம் அதனை வித்தியாசமாக பார்ப்பதோடு, தவறாக பேசுவதால், வீட்டில் இருக்கும் பெற்றோர்களும் அவர்களை ஏற்க மறுக்கின்றனர். இதுவும் பெண்களின் காதலுக்கு தடையாக உள்ளது. ஆண்கள் தைரியத்துடன் பார்க்கலாம் என்று இருப்பார்கள். ஆனால் பெண்கள் அத்தகையவர்கள் அல்ல.

சில பெண்கள் தைரியத்துடன் காதலித்து தான் திருமணம் செய்து கொள்ளலாம் என்று இருப்பார்கள். ஆனால் சில ஆண்கள் காதலித்து மணப்பதற்கு தைரியமின்றி, காதலித்தப் பின் அவர்களை விட்டு போய்விடுவார்களோ என்ற எண்ணத்தில், காதல் தனக்கு வந்தாலும் மனதை கல்லாக்கிக் கொண்டு வெளிப்படுத்த தயங்குவார்கள். இந்த விஷயத்தில் பெண்களுக்கு நம்பிக்கை இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

மேற்கூறிய காரணங்களாலேயே பெண்கள் தங்கள் மனதில் காதல் மலர்ந்தாலும், அவற்றை மறைத்து மனதிலேயே புதைத்துவிடுகின்றனர்.



# பெண் கல்வியினால் ஏற்படும் பயன்கள்....

★ஒரு பெண் கல்வி கற்பதன் மூலம் அவள் தன்னை முதலில் திருத்திக் கொண்டு, சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்கிறாள்.

★ தன் கணவனோடு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவள் அறிந்து கொள்வதன் மூலம் குடும்பத்தில் ஏற்படும் அதிகபட்ச பிரச்சனைகளைத் தீர்த்து மகிழ்வான குடும்ப சூழ்நிலையை உருவாக்கி ஒரு ஆண் சமூகத்திற்கு செய்ய வேண்டிய கடைமைகளை சிறப்பாக செய்ய பெண் உதவியாக, உந்து சக்தியாக இருப்பாள்.

★ தன் உறவினர்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமோ அப்படி நடந்து உறவினர்களுக்கு மத்தியில் ஒருங்கிணைப்பை உருவாக்குவதன் மூலம் சமூகத்திலும் ஒருங்கிணைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.


★ தன்னுடைய குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்து அதன் மூலம் எதிர்கால சமுதாயத்தை உருவாக்குவதில் அதிக பங்கு வகிக்கின்றார்கள்.

★ பெண்கள் தங்களது நியாயமான உரிமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். பெண்களுக்கே உரிய அச்சம், மடம், ஞானம் ஆகிய சிறப்புக்கள் கல்வி அறிவால் மேலும் பலப்படும்.

பெண்களுக்கு கல்வியறிவு நிச்சயம் தேவை அது முழு சமுதாய முன்னேற்றத்திற்கு உதவும் . இன்று பெண்கள் எப்படி எல்லாம் அலைக்கழிக்கப்படுகிறார்கள் என்றால் வரதட்சணை கொடுமை, அடக்குமுறை, பாலியல் துன்புறுத்தல்கள், சிறைக் கொடுமைகள் போன்று எத்தனை எத்தனையோ சுமைகளை சுமந்து கொண்டிருக்கிறார்கள். இவைகளிலிருந்து விடுபட்டு நம் நியாயமான கோரிக்கைகளைப் பெற கல்வி மிக மிக அவசியமானதாக இருக்கிறது.

# மனிதம் தொலைத்து....

மனிதம் தொலைத்து மானிடம் அலையுமென்று ஆதி இறைவன் அடிக்கணக்கு போட்டு வைத்தான். தொலைத்த மனிதம் தோண்டி எடுப்பதற்காய் அன்பின் வடிவில் அன்னையை அனுப்பி வைத்தான். சோதனைக்களம் கண்டு விளையாட பிள்ளையும் பிறக்க வைத்தான். அன்னை அன்பு உலகம் பரவ மனிதன் கழகங்கள் அமைத்து வைத்தான். தோல்வித் தண்ணீர் முகத்தில் பட்டு அன்னை அமைவிடமாய் முதியோர் இல்லம் மனிதன் அமைத்து வைத்தான்..





திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் "திலகம்", உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரிந்துவிழுந்த பெருமாள் —36

எஸ்.எம்.கோபாலரத்தினம்

ஏற்கனவே கோயில் திருப்பணிகளிலும் பஜனைகளிலும் ஈடுபட்டு வந்த தியாகு இதன் பின் ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு கொண்டார். ஆயர்பாடி சோதிடர் மயில்வாகனம் அவர்களுடன் பஜனைகளிலும் ஆன்மிகவாதங்களிலும் பங்குகொண்டார், அதிகம் ஈடுபாடு கொண்டார். ஆயர்பாடி சோதிடர் மயில்வாகனம் அவர்களுடன் பஜனைகளில் ஈடுபடலானார். பஜனைக் குழுக்கள் பலவுண்டு. தேவாரம், புராணம், திருவாய்மொழி என அவற்றில் ஊறினார். பெருமாள் கோயிலில் பஜனை, திருவிழாக் காலங்களில் திருவாய்மொழி பாடுதல் மற்றும் கோயில்களில் பஜனை செய்வார். கோயில் முன் மண்டபத்தில் மேலே தாமரைப் பூ அமைப்பில் வர்ணத்தில் காட்சியளிக்கும் வேலைப்பாடு தியாகுவின் கைவண்ணம். அவர் கட்டடக் கலைஞராகவும் பெயர் பெற்றார். தியாகராஜாவின் சேவையை மதித்த வெங்கடேசவரதராஜப் பெருமாள் கோயிலில் படித்த மதிப்புமிக்க அறங்காவலர்களாக இருந்தவர்கள் தியாகுவை கோயில் ஓதுவாராக அங்கீகரித்தனர். அவரும் தமது பணியைச் சிறப்பாகப் பக்தியுடன் செய்து வந்தார்.

1985 ஆம் ஆண்டின் பின் அறங்காவலர்களாக வந்தவர்கள் திடீரென மாற்றம் கொண்டு வந்தனர். சில வருடங்களாக கொழும்பில் தங்கியிருக்கும் தியாகராஜா திருவிழாக்காலம் வந்து பணிபுரிவார். 2002 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன் வருடாந்த உற்சவத்தின் கொடியேற்றத் திருவிழாவுக்கு வந்து பிரதம குருக்கள் தீபாராதனை முடிந்து ''திருவாய்மொழி பாடுக'' என்று சொன்னதும் தலைக்கு மேல் கரம் கூப்பியபடி தியாகு, சூரியப் பிரபையில் அலங்கரிக்கப்பட்டிருந்த ஸ்ரீ வெங்கடேசன் முன் திருவாய்மொழி பாட வந்தார். அங்கு முன்பு அறங்காவலராக இருந்தவர், இவர் நம்பிமகாதேவனைப் போல் யாருடனும் நெருங்கிப் பழகாதவர். அதிகம் பேசவும் மாட்டார். வைத்தீஸ்வராவில் என்னுடன் கொஞ்சநாள் படித்தவர். கோயிலுக்கு உரிமையுள்ளவர் என்ற பெருமை கொண்டவரான வை.நா.செ.நாராயணசாமி கையில் திருவாய்மொழிப் புத்தகத்துடன் தியாகுவிடம் அவசரமாக வந்து நீங்கள் படிக்க வேண்டாம். நாங்கள் படிக்கிறோம் என்று முகத்தில் அறைந்த மாதிரிச் சொன்னார். திருவிழா முதல்நாள் காலை தொடங்கியதிலிருந்து கோயிலுக்குள் வசந்த மண்டபத்தின் முன்பாகத் தான் எல்லோரும் நின்றோம். அப்போதே தியாகுவிடம் சொல்லியிருக்கலாம். தியாகு முகம் வாடியபோதும் எதுவும் பதில் சொல்லாமல் ''எல்லாம் புதுமாற்றமாயிருக்கிறது'' என்று மெதுவாகச் சொன்னபடியே பின்னகர்ந்தார். நானும் ஸ்ரீ ரங்கனும் அந்த இடத்தில் நின்றோம். ''இது அவமானப்படுத்தும் செயல்'' என்று ஸ்ரீரங்கனிடம் நான் சொன்னேன். வழமைபோல் ஸ்ரீரங்கன் எதுவும் பேசாமல் அந்தச் சம்பவத்தை விரும்பவில்லையென்பதை முகக் குறிப்பில் காட்டினான். நாராயணசாமியின் செயலை புதிய அறங்காவலர்கள் பெருமையுடன் பார்த்து நின்றனர். தியாகுவுக்கு காளாஞ்சி மரியாதையாவது செய்திருக்கலாம் என்று ஸ்ரீரங்கனிடம் சொன்னேன்.

**அழுக்கடையான் நன்றாகக் கொம்பு போடக் கூடிய வன். இவர் காவத் தொடங்கியதும் பின் கொம்புப் பக்கம் அம்மானும் தெய்வேந்திரமும் போடு வார்கள். கொம்பு போட முயற்சித்தார்களோ தெரியாது. தெய்வேந்திரம் உயரமானவரா தலால் அவர் கொம்பு போட முடியாது. என்ன நடந்தது என்பது தெரியாமல் பின் கொம்பு கீழே விழவும் முன்கொம்பும் சறுக்கியது , வாகனம் சரிந்து நின்றது.**



## அந்த நாள் ஞாபகம்..

பெருமாள் கோயில் வருடாந்த உற்சவத்தின் போது நான்காம் நாளில் ஆஞ்சநேயர் திருவிழா நடக்கும். நான் சிறு வயதில் பார்த்த அதே ஆஞ்சநேயர்தான் இன்றும் இருக்கிறார். இடையிடையே அவருக்கு வர்ணம் தீட்டி புதுப்பொலிவுடன் காட்சியளிக்கச் செய்து விடுவார்கள். அந்தக் காலத்தில் இந்த ஆஞ்சநேயர் திருவிழா விசேடமாகப் பேசப்படும் திருவிழா. கட்டடப் பொருள் விற்பனையாளர்களான என்.வைத்திலிங்கம் கம்பனியார் இந்தத் திருவிழா உபயகாரர்கள். அன்று இரவு காமாட்சி சுந்தரம் தனித்தவில் மற்றும் சிறந்த நாதஸ்வரம்; வாண வேடிக்கைகள் இவை மட்டுமல்ல ஆஞ்சநேயர் மீது முத்துச் சப்பரம் அமைத்து அதன் மீது சுவாமி அமர்ந்திருப்பதாக அலங்காரம் செய்யப்படும். ஆஞ்சநேயர் மீது ஸ்ரீராமர்தான் வீற்றிருக்க வேண்டும்.

ஆஞ்சநேயரும், முத்துச் சப்பரத்தில் சுவாமி வீற்றிருப்பதும் கண்ணிறைந்த காட்சியாக இருக்கும். 1945 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன் இந்தத் திருவிழாவில் சுவாமி எழுந்தருளி தெற்கு வாசல் வரை உலா வந்துவிட்டார். சுவாமியை சகடையில் வைக்கக் கூடாது நாங்கள் கொம்பு போடுவோம். (கொம்பு என்பது வாகனம் கட்டப்பட்டிருக்கும் நீண்ட உருண்டையான மரம்) வாகனத்துடன் சுவாமியை காவிச் செல்வதை கொம்பு போடுவது என்று சொல்லப்படும். (அப்பொழுது நாங்கள் சிறுவர்களாகையால் கொம்புக்குக் கிட்டவும் போக அனுமதிக்கமாட்டார்கள்) எங்களுக்குச் சிறிது வயது மூத்தவர்கள், உயரமானவர்கள், உடற் தகுதியுடையவர்கள் காவுவார்கள். ஆஞ்சநேயரில் சுவாமி தெற்கு வாசலுக்கு வந்த சமயம் ''யாழ்ப்பாணச் சண்டியன்'' என்ற அழுக்கடைச் சண்முகம், அம்மான் தம்பிராசா, கொட்டடித் தெய்வேந்திரம் ஆகியோர் வந்தார்கள். முன் கொம்புக்குச் சென்ற அழுக்கடையான் தான் காவுவதாகச் சொல்லி தனது கழுத்தைக் கொம்பில் வைக்க முயற்சிக்கவும் கொம்பு போட்டுக் கொண்டிருந்தவர் கொடுக்க மறுக்கவும் சில விநாடிகள் இழுபறி நடந்தாலும் சண்முகம் கழுத்தில் கொம்பை வைத்து நடக்கத் தொடங்கினான். அழுக்கடையான் நன்றாகக் கொம்பு போடக் கூடியவன். இவர் காவத் தொடங்கியதும் பின் கொம்புப் பக்கம் அம்மானும் தெய்வேந்திரமும் போடுவார்கள். கொம்பு போட முயற்சித்தார்களோ தெரியாது. தெய்வேந்திரம் உயரமானவராதலால் அவர் கொம்பு போட முடியாது. என்ன நடந்தது என்பது தெரியாமல் பின் கொம்பு கீழே விழவும் முன்கொம்பும் சறுக்கியது , வாகனம் சரிந்து நின்றது. சுவாமியும் சரிய நேர்ந்தது. நின்றவர்கள் எல்லோரும் கோவிந்தா! பெருமாளே! எனக் கதறினர். உடன் எல்லோரும் வாகனத்தை சுவாமியுடன் நிமிர்த்திவிட்டார்கள். சுவாமி விக்கிரகங்கள் அசையவில்லை. ''ஐயோ, நான் விழுத்தவில்லை, பெருமாள் சாமி சத்தியமாய் நான் சுவாமியை விழுத்தவில்லை'' என்று சத்தமாகச் சத்தமிட்டான் அழுக்கடையான். அவன் விழுத்தவில்லை என்பது அறிந்ததே. பின்கொம்பு விழுந்ததும் முன்கொம்பு நிற்க முடியாது சரிந்தது தான் உண்மை ஆனால் பெருமாள் கோயில் திருவிழாவில் அழுக்கடையான் சுவாமியை விழுத்திப்போட்டான் என்பதே யாழ்ப்பாணத்தில் மறுநாள் எங்கும் பரவியகதை.

(நினைவுகள் நீளும்.....)

## தாய் நிலம் 2

-சடாகோபன்



மழைக்கால மேகங்கள்
மூடிக்கிழிந்த
மார்கழி முடிந்து
தை பிறந்திருக்கிறது

நீருக்கு மேலுயர்ந்து
கதிர்தள்ளிய பயிர்களை
மேய்கிற விழிகளில்
மேவுகிற ஞாபகங்கள்

எங்கள் அரிசியை
நாங்களே விளைவித்தோம்
எங்கள் ஆடைகளை
நாங்களே நெய்தோம்
எங்களுக்கானவற்றை
நாங்களே ஆக்கினோம்

எங்கள் நிலங்களை
காளைகளும் மண்புழுக்களும்
உழுதன

எங்கள் தோட்டங்களில்
செம்பகங்கள்
பூச்சிகளைப் பொறுக்கின

வேலிப் பூவரசில்
புலுனிகள் விளையாடின

மாவிலும் முருங்கையிலும்
கிளிகளும் அணில்களும்
இசைவுற அசைந்தன

வேப்பம் துளிரிலும்
தென்னங்கீற்றிலும்
தென்றல் நடனமாடியது...

வண்ணத்துப் பூச்சிகளும்
தேனீக்களும்
பூக்களை காய்களாக்க
கனித் தோட்டமாய்
எங்கள் வளவு

நினைவுகளை விழுத்திவிட்டு
திறக்கிற கண்கள்
கம்பளப் பாதையில்
வழுக்கியோடுகின்றன

வீதிகளின்
எல்லா பார்வைகளிலும்
விழுகின்றன
விளம்பரப்பலகைகள்

எங்கள் தோட்டப்
பெருவெளிகளில்
வெருளிப்பொம்மைகள்
காவல் நின்றவரை
வந்தனவா
இந்த விளம்பரப்பலகைகள்?

எப்போது நாங்கள்
சந்தைகளாக்கப்பட்டோம்?
எப்போது நாங்கள்
மந்தைகளாக்கப்பட்டோம்?

அந்தக் குண்டுகளையும்
அந்த ஷெல்களையும்
அந்தத் துப்பாக்கி
வேட்டுகளையும் விட
வலிமையானவை
இந்த விளம்பரப்பலகைகள்

எப்போது நாங்கள்
சந்தைகளாக்கப்பட்டோம்?
எப்போது நாங்கள்
மந்தைகளாக்கப்பட்டோம்....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாஸ்கா கோடுகள்:

## இன்னும் அவிழாத முடிச்சு

மதுவிழி

உச்சாணிக் கொப்பில் ஏறியிருந்து கொண்டு உலகையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கும் அறிவியல் கண்டுபிடிப்புக்களையும் புதிய தொழில்நுட்ப வசதிகளையும் பார்த்து நீ என்ன தான் செய்தாலும் என் நிழலைக்கூட உன்னால கண்டுபிடிக்க முடியாது என்று யாராவது சொன்னால் எப்படியிருக்கும்..?

அப்படியொரு நிலைமையைத்தான் அறிவியலுக்கு கொடுத்திருக்கின்றன, இந்த நாஸ்கா கோடுகள்.பல்வேறு ஆராய்ச்சிகள்,தொல்லியலாளர்களின் பகீரதப்பிரயத்தனங்கள்,எண்ணுக் கணக்கற்ற வாதப்பிரதிவாதங்கள்,ஊகங்கள், ம்கூம்!எதற்குமே மசிவதாயில்லை அவை. ஒருவேளை நான் தான் நாஸா என்பதை பழையதாக நாஸ்கா என்று சொல்கிறேனோ என்று நீங்கள் நினைத்தால் அது மகா தவறு.சந்தேகமேயில்லை.நாஸா அல்ல நாஸ்கா கோடுகள் தான்.

சரி..அது என்ன நாஸ்கா கோடுகள் என்று உங்களுக்குள் எழுகின்ற சந்தேகத்துக்கு முதலில் விளக்கத்தைத் தந்துவிட்டு மேலே செல்லலாம். அமெரிக்கா என்றதுமே எங்கள் எல்லோருக்குமே ஞாபகம் வருவது ஐக்கிய அமெரிக்காவைத் தான். ஆனால் அதையும்தாண்டி மிகப்பெரியதொரு பிரதேசம் தென்னமெரிக்காவாக விரிந்துகிடப்பது யாருக்குமே ஞாபகத்துக்கு வருவதில்லை. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தென்னமெரிக்க பிரதேசத்துக்கும் இந்த நாஸ்கா கோடுகளிற்கும் தொடர்பு இருக்கிறது. அதாவது தென்னமெரிக்காவிலுள்ள பெரு நாட்டின் தலைநகர் லிமாவுக்கு தெற்கே நாஸ்கா பாலைவனப்பகுதியில் பல்பா,பம்பாஸ் சமவெளிகளுக்கிடையே சுமார் 500 சதுர கிலோமீற்றர்கள் பரப்பளவுடைய(நன்றாக கவனியுங்கள் சதுர மீற்றர்களல்ல சதுர கிலோமீற்றர்கள்)மிகப் பெரிய நிலப்பரப்பில் காணப்படுகின்ற கோடுகளும் சித்திர வடிவங்களுமே இந்த நாஸ்கா கோடுகள்.

அட போங்கப்பா!நாங்க வரையாத கோடுகளும் சித்திரமுமா..? வெறும் சித்திரத்துக்கா இவ்வளவு விளக்கம் என்று நீங்கள் சலித்துப்போனால் அது சிறுபிள்ளைத்தனமாக இருக்கும்.ஏனென்றால் அறிவியல்நிபுணர்களும் ஆராய்ச்சியாளர்களும் கூட மண்டையைப் பிய்த்துக்கொண்டு ஓடித்திரிகிற ஒரு விடயத்தை நீங்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளாவிட்டால் வேறு எவ்வாறு சொல்லமுடியும்..? சரி அது ஒருபுறமிருக்க, அப்படி என்ன அவிழாத முடிச்சுக்கள்,விடுபடாத மர்மங்கள் அதிலிருக்கிறது எனப் பார்த்துவிட்டு நாமும் கீறலாமா இல்லையா என்பதை பிறகு சிந்திக்கலாம்.

1927ஆம் ஆண்டு விமானத்தில் பறந்து கொண்டிருந்த போது தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டதே இந்தக் கோடுகள். உயரே பயணிக்கின்ற போதுதான் இவை விதவிதமான கோடுகளாகவும் வடிவங்களாகவும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. சாதாரணமாக தரையில் இருக்கின்றபோது அவை தெரியாது.ஏனெனில் மிகவும் நீள அகலம் கூடிய பிரதேசங்களாக இவை இருப்பதால் சாதாரணமாகத் தரையிலிருப்பவர்களுக்கு தாங்கள் நிற்பது இந்தக் கோடுகள் மேல் தான் என்பதோ அல்லது குறித்த வடிவங்கள் மேல் தான் என்பதோ புரியாது. உயரே பயணம் செய்கின்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் தான் அவற்றை கோடுகள் என்றே வடிவங்கள் என்றே அடையாளம் செய்யமுடியும்.அந்தளவுக்கு அவை மிகப் பெரிய உருவ வடிவமைப்பைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

அவ்வாறு வரையப்பட்டிருக்கின்ற இக்கோடுகள் மிகவும் நேர்த்தியான முறையில் நேராக வரையப்பட்டிருப்பது தான் எல்லோரையும் வியப்பில் ஆழ்த்துகிறது.இந்தச் சித்திரங்கள்,கோடுகள் 3 வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

1.நேர்கோடுகள்

2.கேத்திர கணிதமுறையிலான வடிவங்கள்

3.மிருகங்கள்,பறவைகள் போன்ற உருவங்கள்

இதில் 800க்கும் அதிக கோடுகள்,கேத்திர கணித வரைபுகள். 100இற்கும் மேற்பட்ட உருவங்கள் என்பன காணப்படுகின்றன.அவற்றில் 50க்கும் மேற்பட்ட உருவங்கள் மிகவும் பிரமாண்டமாக வரையப்பட்டுள்ளன. ஒரு கம்மிங் பறவை வடிவ உருவம் 2 கால்பந்தாட்ட மைதானளவுக்கு பெரிதாக வரையப்பட்டுள்ளது.நாஸ்கா கலாசார மக்களால் சிலவேளை வரையப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் இக் கோடுகளும் உருவங்களும் கி.பி.600-கி.பி.400காலத்தில் வரையப்பட்டிருக்கலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள். எல்லாம் சரி.இப்போதென்றால் புளொட்டர்போன்றவற்றை வைத்துக்கொண்டு இவ்வளவு பிரமாண்டமான படங்களை வரைந்துவிட முடியும்.ஆனால், எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்தவர்கள் எவ்வாறு எந்தக்கருவிகளும்,தொழில்நுட்ப உபகரணங்களுமின்றி அச்சுப்பிசகாமல் இந்தக் கோடுகளை வரைந்திருப்பார்கள் என்ற கேள்வியோடு எதற்காக வரைந்திருப்பார்கள்?அப்படி என்ன தேவை இருந்திருக்கும் என்ற கேள்வியும் கூடவே உதிரியாக எழுகிறதில்லையா?

இதற்கான விடையைத்தேடித்தான் விறைத்துப் போயிருக்கிறது இந்தத் தொல்லியல் உலகம். இந்தச் சித்திரங்கள் எல்லாமே புதிரானவையாக இருந்தாலும் அவற்றில் இரண்டு ஆய்வாராய்ச்சியாளர்களை பைத்தியநிலைக்கே கொண்டுபோய் விட்டிருக்கிறது. அதிலொன்று விமானஓடுபாதை போன்று 2கிலோமீற்றர் அளவுக்கு நீளமாக இருக்கின்ற பாதை போன்ற அமைப்பு. மற்றயது,கையை மேலே தூக்கி எதையோ வானத்தை நோக்கி காட்டிக்காட்டியபடி ஒரு மலையில் வரையப்பட்டிருக்கும் மனித அமைப்பு.(அதற்கு The astronaut என்று பெயரும் வைத்திருக்கிறார்கள்) இவை இரண்டும் தான் இப்போது மிக அதிகமாக ஆய்வுக்குள்ளாகின்ற சித்திரங்களாக இருக்கின்றன. அதாவது விமானவோடுபாதை போன்ற அமைப்பிலிருப்பவை உண்மையில் அந்தக்கைய பாதைகளாகவே இருக்கலாமா?இரண்டாவது அந்த கையை தூக்கியபடி வானை நோக்கி காட்டிக் காட்டியபடி இருக்கும் மனிதன்,யாரோ ஒருவருக்கு ஏதோவொரு அடையாளத்தை காட்டுவதாக அல்லது ஏதோவொரு செய்தியை தெரிவிப்பதாக இருக்கலாமா..?வேற்றுக்கிரக வாசிகளுக்கும் இப்பிரதேசத்துக்கும் ஒருவேளை அத்தகைய தொடர்பேதும் இருந்திருக்கலாமா?என்ற கேள்விகள் இப்போது ஆய்வாளர்களிடம் பரவலாகக்காணப்படுகிறது.


இந்தக் கோடுகள் முடிகின்ற இடங்களில் மரப்பட்டைகளை வைத்து மிக நிதானத்துடன் செய்யப்பட்டிருக்கிறது.1இன்ச் தொடக்கம் சில இடங்களில் 6 இன்ச் வரை ஆழமுள்ளவையாக இவை நேர்த்தியாக ஆக்கப்பட்டிருக்கிறது.அந்த மரக்கட்டைகளை வைத்துக்கொண்டுதான் இந்த ஓவியங்களின் காலப்பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.இந்த புதிர்த்தேசத்தின் மர்மங்களைக் கண்டுபிடிக்க ஆய்வுகளை மேற்கொண்ட மரியா ரெய்சின்ற அறிஞர் 12 ஆண்டுகால ஆய்வை செய்து தன் வாழ்நாளையும் கூட முடித்துக்கொண்டிருக்கிறார் இப்பிரதேசத்தில். அதன் பின்னர் 1994ஆம் ஆண்டு யுனெஸ்கோ இப்பிரதேசத்தை உலக தொல்லியல் பாரம்பரியதளமாக பிரகடனப்படுத்தியிருக்கிறது.

இதில் இன்னுமொரு திருப்பம் என்னவென்றால் இந்த நாஸ்கா பிரதேசம் மாயன்கள் வாழ்ந்த பிரதேசத்தை அண்டிய பகுதியாக காணப்படுகிறது. மாயன்களுடைய ஆற்றல்,திறமை எவ்வாறு இருந்திருக்ககூடும் என்ற ஆய்வுகள் நடந்துகொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் நாஸ்காவினுடைய புலப்படாத மர்மம் இன்னுமொரு திருப்பமாக இருக்கிறது.

ஒருவேளை ஏலியன்களுக்கும் இதற்கும் தொடர்பு இருந்திருக்கலாமா என்ற சந்தேகம் எழுவது கூட தவிர்க்கமுடியாததாகிறது.முன்னர்


(11 ஆம் பக்கம் பார்க்க)

“இதற்கான விடையைத் தேடித்தான் விறைத்துப் போயிருக்கிறது இந்தத் தொல்லியல் உலகம். இந்தச் சித்திரங்கள் எல்லாமே புதிரானவையாக இருந்தாலும் அவற்றில் இரண்டு ஆராய்ச்சியாளர்களை பைத்திய நிலைக்கே கொண்டுபோய் விட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 250



அனுப்புபவர் பெயர்:...........................................

விலாசம்:...........................................

...........................................

கையொப்பம்:...........................................

### இடமிருந்து வலம்

1.ஒத்தாசை வழங்கும் மாது
3. காந்தியின் ஆச்சிரமம்
7. மணப்பெண்ணுக்கு பெற்றோர் வழங்கும் வெகுமதி.
9.துளியாய் விழும் சாரல்
10. உடலை இயக்குவது
11.இது உடல் உட்பாகம்
12. மணம்
14. பகுதி
15.நிலம்
16.சவம்
18. உறைப்பு
19. தலையெழுத்து
20. இத்தகைய மனமே பொன் செய்யும்
21. சாக
22. உழும் கருவி
23. நல்வினை

### மேலிருந்து கீழ்

1. ஆசி
2.எவர்
3.சரிதம்
4.கோந்து
5. செஞ்சந்தனம்
6. எருதின் ஏரி
8. கைப்பற்றுதல்
11.கொடை
13.பொதி
14.அம்பு
16. அடிப்பது இதனால்
17. வேதனம்
18.செவி
19. புலர
20.யுத்தம்
21.ஒலி எழுப்புவது

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ், மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 248 க்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1) சம்பவம் (4) கவி (6) கரு (7) ஆண்டு (8) மகரந்தம் (11) தறி (12) துவி (13) மாலை (14) புதல்வன் (16) ஈதல் (18) சாரல் (19) தலிபான் (21) கல்விமான் (22) தினை

**மேலிருந்து கீழ்**

(1) சம்மதம் (2) பகர (3) வருந்துதல் (4) கண் (5) விடுதலை (7) ஆம் (9) கறி (10) தவில் (13) மான் (14) புதல்வி (15) வலி (16) ஈரல் (17)கன்னை (18) சாக (19) தன் (20) பாதி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/-, ரூபா 250/-, ரூபா 200=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 250**
*நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்]லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன் கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், (06.02.2013) ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம்போட்டி இல.250இல் வெற்றி பெறுவோர்களது விபரம் 10.02.2013 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 248 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**வி.ஹரிகரன்,**
**மே/பா. த.விநோதரன்,**
முதலாம் வட்டாரம், முள்ளியவளை.

**2 ஆம் பரிசு**
**ஞா.சாரங்கா,**
இடைக்குறிச்சி கிழக்கு, வரணி.

**3 ஆம் பரிசு**
**நவகுலன் ஹரிஷ்ராம்,**
பத்திரகாளி கோயிலடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**4 ஆம் பரிசு**
**க.திரிகா,**
கிளி/ பளை மத்திய கல்லூரி, பளை.

**5 ஆம் பரிசு**
**பு.துவாரகன்,**
யா/ மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை.

**பாராட்டுப் பெறுவோர்**

**கெ.சுவர்ணலதா,**
கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம், வட்டக்கச்சி, கிளிநொச்சி.

**ம.செளந்தரேஸ்வரி,**
இல.114, யாழ்.வீதி,மானிப்பாய்.

**வி.றோஜிதன் தர்மிகா,**
தர்மிகா நகைமாடம், கோயிற்சந்தை, கரவெட்டி.

*பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் தபால் மூலம் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால் ஊடாக அனுப்பிவைக்கப்படும்.*

## குல்லாப் புரட்டுக்கள் குலமானம் காத்திடாது

கொதிக்கிறது எங்கள் உதிரம்- சோதரரே
உங்கள் சோதரியின் கொடு மரணம் கண்டு
புரிகிறதா இப்பொழுது
அடக்குமுறையின் வலி என்னவென்று
சொல்லாமல் கொள்ளாமல்
வந்த சோதனையால்
துடிக்கிறது எங்கள் தாய்க்குலம்
எல்லாப் புகழும் இறைவனுக்கே
என்ற உங்கள் தாரக மந்திரம்
செல்லாக் காசாகிப் போக விடலாமா?
சேர்ந்து நின்று குரல் கொடுத்து
தனியொரு சோதரியை
காக்கக் கதியற்றவர்களாய் போனீரே!
கலங்கித் தவிக்கிறது எங்கள் இதயம்
நீங்கள் எங்கள் மொழி பேசுபவர்கள்
என்பதால் மட்டுமல்ல
மனிதம் எங்களுக்குள்
இன்னும் மரணித்துவிடவில்லை என்பதனால்
வலிகளைச் சுமந்த எங்களுக்குத்தான்
உங்கள் வலியின் வேதனை புரியும்
அழுவதும் தொழுவதும் தான்
எங்கள் தலைவிதியோ!
அல்லாவே சர்வ வல்லோனே
பதில் கூறுமையா!
அடக்குமுறைகளைத் தகர்த்தெறிய
ஒருமுறை நீர்
பரத்திலிருந்து இறங்கி வந்து
புனிதப் போர் புரியுமையா?
எழுந்திடுவீர் சோதரரே
உங்கள் உறக்கங்களைக் கலைத்து
தொழுகையில் சேர்ந்து நின்று சபதமெடுங்கள்
தோன்றாத் துணையாக நிற்பார் அல்லா
உங்கள் தோளோடு தோழாக
கோடரிக் காம்புகளும்
குல்லாம் புரட்டும் அரசியலாளர்களும்
உங்கள் குலமானம் காக்க
உதவமாட்டார் உணர்ந்திடுவீர்.


-வாசன்

## எறும்புகள்

எங்குமே கொட்டித் தீர்க்காத
கடும் மழையின் பின்னர்
அந்த எறும்புகளின்
இருப்பிடங்கள்
தொலைத்திருக்கின்றன
பல எறும்புகள்
காணாமல் போயிருக்கின்றன
எறும்புகளின் இருப்பிடங்கள்
புதை குழியாய்
மாறியிருக்கின்றன
இழப்புகளோடும்
வலிகளோடும் எறும்புகளின்
மீள் குடியேற்றம்
புதிய எறும்புகளின்
ஆக்கிரமிப்பின் மத்தியில்
இந்த எறும்புகள்
இருப்பிடத்தை தேடியபடி...
இருண்டுபோன வானம்
மழை வருவதற்கான
அறிகுறி...
ஆனால் இங்கே
எப்போதும் வானம்
இருண்டே இருக்கிறது

ஆ.முல்லைதிவ்யன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெடுந் தொடர்

35

# அடிமைகளின் மீட்பர்

## ஆபிரஹாம் லிங்கன்

ஜனாதிபதிதான். ஆனால் என்ன? ஸ்பிரிங்ஃபீல்டில் இருந்தவரை என்ன செய்துகொண்டிருந்தாரோ, அதையே தொடர்ந்து செய்தார். பசுமாட்டை மேய்ச்சல் நிலத்துக்கு ஓட்டிப்போனார். பால் கறந்தார். குதிரையைக் குளிப்பாட்டினார். விறகுவெட்டி, சமையலறைக்குக் கொண்டு வந்து போட்டார்.

வொஷிங்டனுக்குக் கிளம்பும் நேரம் வந்தது. ஸ்பிரிங்ஃபீல்டில் இருந்த வீட்டை வாடகைக்கு விட்டார். சில பொருள்களை விற்றார். சார்லஸ்டன் நகரிலிருந்த சிற்றன்னையைப் போய்ப் பார்த்து, விடைபெற்றுக் கொண்டார்.

தன் பழைய நண்பர்களைச் சந்திக்க விரும்புவதாக 'ஜர்னல்' என்ற பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தார். அவரது எளிய வீட்டுக்கு குறிப்பிட்ட நாளில், அவரது நண்பர்கள் வந்து குழுமினார்கள். ஒன்றல்ல, இரண்டல்ல எழுநூறுபேர். எல்லோரிடமும் கைகுலுக்கி விடைபெற்றுக் கொண்டார்.

ஸ்பிரிங்ஃபீல்டிலிருந்த தம்முடைய வழக்கறிஞர் அலுவலகத்துக்குப் போனார். அங்கிருந்த அவரது சாய்வு நாற்காலியில் சாய்ந்து அமர்ந்து கொண்டு, ரொம்பநேரம் மௌனமாக இருந்தார். பதினாறு ஆண்டுகாலம் வழக்கறிஞர் தொழிலில் கூட்டாளியாக இருந்த ஹெர்ண்டனுடன் பழைய கதைகளை எல்லாம் பேசினார். அவருக்கு மிகவும் பிடித்த சில புத்தகங்களை மட்டும் அலுவலகத்தில் இருந்து எடுத்துக் கொண்டார். கிளம்பினார். வாசலில் லிங்கனின் பெயரும் ஹெர்ண்டனின் பெயரும் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை தொங்கிக் கொண்டிருந்தது.

லிங்கன், ஹெர்ண்டனிடம் சொன்னார் "இந்தப் பெயர்ப் பலகை இங்கேயே தொங்கிக் கொண்டிருக்கட்டும். நான் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால், லிங்கன்- ஹெர்ண்டன் கம்பனியை மூடிவிட்டதாக யாரும் நினைத்து விடக் கூடாது. ஒருவேளை நான் திரும்பி வந்தால், பழையபடி நாம் நமது கூட்டுத் தொழிலைத் தொடங்குவோம்" லிங்கனிடம் சொத்து இருந்தாலும் ரொக்கமாகக் கையில் பணம் எதுவும் வைத்திருக்கவில்லை. கடன் வாங்கித்தான் வொஷிங்டனுக்குப் போனார். தன்னுடைய பொருள்களையெல்லாம் மூடைகட்டினார். ஒரு வெள்ளைத்தாளில், "ஆபிரஹாம் லிங்கன், வெள்ளை மாளிகை, வொஷிங்டன் டி.சி" என்று எழுதி ரயிலில் ஏற்றினார். தாம் பயணம் செய்ய வேண்டிய ரயில் பெட்டியில் ஏறிக் கொண்டார். அன்றைக்கு நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. அந்த மழையிலும் அவரை வழியனுப்ப மக்கள் கூட்டமாக ரயில் நிலையத்தில் திரண்டிருந்தனர்.

வொஷிங்டனுக்குச் செல்லும் வழியில் அவரது பேச்சைக் கேட்கவும் அவரைப் பார்க்கவும் நிறையபேர் விரும்பினார்கள். அதற்கு வசதியாக லிங்கன் சென்ற ரயில் சுற்றுப் பாதையில் சென்றது. கிளீவ்லேண்ட், பஃபலோ, பிட்ஸ்பர்க், டிராய் ஆகிய ரயில் நிலையங்களில் லிங்கன் உரையாற்றினார். நியூயோர்க் மாநிலத்தில் ரயில் நுழைந்தபோது, அந்தச் செய்தி வந்தது. 'அலபாமா மாநிலத்தில் இருக்கும் அரசு மாளிகையில், அமெரிக்காவிலிருந்து பிரிந்துபோன மாநிலங்களின் ஜனாதிபதியாக ஜெஃபர்சன் டேவிஸ் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

அடிமை முறையை ஆதரித்து வந்த தென்பகுதித் தலைவர்கள் ஒன்றுகூடி, ஒரு சிறப்பு மாநாட்டை நடத்தி தங்களுக்கென்று ஒரு புதிய அரசை உருவாக்கிக் கொண்டார்கள். தோட்ட முதலாளியும் மிகப்பெரிய பணக்காரருமான கர்னல் ஜெஃபர்சன் டேவிஸ் அந்த அரசுக்கு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

இந்தப் புதிய அரசின், உதவி ஜனாதிபதி சொன்ன ஓர் அறிவிப்பு, எல்லோரையும் கொந்தளிப்பின் உச்சத்துக்கே கொண்டுபோனது. "நீக்ரோ என்பவன் வெள்ளை மனிதனுக்குச் சமமாக மாட்டான். அடிமைத்தனம் அவனுடைய இயற்கை, எங்களுடைய புதிய அரசின் மிக முக்கியமான கொள்கை, இந்த மகத்தான உண்மையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது"

இந்தப் புதிய அரசின் பிரகடனத்தால் அமெரிக்கா இரண்டு அரசுகள், இரண்டு ஜனாதிபதிகள், இரண்டு வெள்ளை மாளிகைகள், இரண்டு இராணுவங்கள் எனப் பிளவுபட்டது. அமெரிக்கா உடைந்துபோவதை லிங்கன் விரும்பவில்லை. இன்னும் ஜனாதிபதியாகப் பொறுப்புக் கூட ஏற்கவில்லை. அதற்குள் இப்படி நடந்துவிட்டது.

"பால்டிமூர் வழியாக லிங்கன் செல்லும் போது, அவரைக் கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியிருக்கிறார்கள்." இப்படி ஒரு செய்தியை லிங்கன் ஃபிலடெல்பியாவில் இருந்தபோது, அமெரிக்காவின் உளவு நிறுவனத் தலைவர் பிங்கர்டன் வந்து சொன்னார். முதலில் லிங்கன் இதை நம்பவில்லை. நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில், பால்டிமூர் வழியாகச் செல்லும்போது, மாறுவேடத்தில் சென்றார். அந்தச் சதித்திட்டம் வதந்தியல்ல; உண்மைதான் என்பதை லிங்கனும் உணர்ந்துகொண்டார். காரணம், அவர் வந்த வழியெல்லாம் எல்லா ஊர்களிலும் அவருக்கு அதிகாரபூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டிருந்தது. பால்டிமூரில் மட்டும் அந்தச் சுவடே இல்லை. ★

லிங்கனிடம் சொத்து இருந்தாலும் ரொக்கமாகக் கையில் பணம் எதுவும் வைத்திருக்கவில்லை. கடன் வாங்கித்தான் வொஷிங்டனுக்குப் போனார்.

■ பா.உண்மை

# நாஸ்கா கோடுகள்:



(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவேளை ஏலியன்களுக்கும் இதற்கும் தொடர்பு இருந்திருக்கலாமா என்ற சந்தேகம் எழுவது கூட தவிர்க்கமுடியாததாகிறது. முன்னர் கூறிய அந்தச் சித்திரங்களிற்கூட ஒரு சித்திரம் கைவிரலை மேலே சுட்டிக் காட்டியபடி இருப்பதாக இருந்ததை இங்கு கவனத்திற்கொள்ளலாம். இன்னொரு சித்திரம் ஒரு கையில் 4 விரல்களும் மற்றைய கையில் 6 விரல்களும் உள்ளவாறு வரையப்பட்டுள்ளது. அவர்கள் தான் பிழையாக வரைந்து விட்டார்களோ என்று நாம் நினைத்துக்கொண்டாலும் இத்தனை நேர்த்தியாக எவ்வளவோ தூரங்களுக்கே நேர்கோடுகளையும் கேத்திர கணித வரைபுகளையும் வரைந்தவர்கள் தெரிந்தும் பிழை விட்டிருப்பார்கள் என்பதை இலகுவாக ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. இவ்வாறு அந்தச் சித்திரங்கள் ஒவ்வொன்றும் எங்களுக்குப் புரியாத ஆனால் யாருக்கோ புரிந்திருக்கக்கூடிய ஏதோவொரு தகவலைச் சொல்லிக் கொண்டு தானிருக்கிறது. ஒருவேளை அது ஏலியன்களுக்காக இருக்கலாமோ என்று விஞ்ஞானமும் சந்தேகப்படத்தான் செய்கிறது.

அடபோங்கப்பா.. ஏலியன்கள் என்று விஞ்ஞானம் சந்தேகிக்குதா என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் நாங்கள் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பூமியில் ஏலியன்கள் இல்லை என்று தான் விஞ்ஞானம் சொல்கிறதே தவிர, இந்த பிரபஞ்சத்தில் ஏலியன்களே இல்லை என்று விஞ்ஞானம் சொல்லவில்லை. அதனாற்றான் மிக அதிகளவில் மில்லியன் டொலர் கணக்கில் பணம் செலவழித்து கலிபோர்னியா மாநிலத்தில் 42 அதியுயர் தொழினுட்பங்களைக் கொண்ட ரெலஸ்கோப்களை நிறுவி வேறு எங்கிருந்தாவது ஏலியன்கள் அல்லது [illegible] கள் வருகிறதா என்பதை ஆய்வு செய்கிறார்கள்.

அதற்கு பணச்செலவை பொறுப்பெடுத்துக்கொண்டவர் உங்களுக்கு எனக்கு எல்லோருக்குமே தெரிந்த மைக்ரோசொப்டின் இணை இயக்குநர் பவுல் அலன் தான். அதனால் அந்த திட்டம் அலன் ரெலஸ்கோப் அரே என அழைக்கப்படுகிறது.

இத்தனையும் சொன்னதுக்கு பிறகும் அந்தக் கோடுகளை யார் வரைந்திருக்கக்கூடும் என்று என்னை நீங்கள் கேட்டால் மன்னிக்க வேண்டும். தொடரும் தொடர் மர்மங்களில் உலகில் இன்னும் உண்மைகாணப்படாத மூன்று மிஸ்ட்ரிகள் உண்டு.

ஆனாலும் அறிவியல் இன்னும் வியக்கின்ற மூன்று மிஸ்ட்ரிகள் உண்டு. ஒன்று கிறிஸ்டல் மண்டையோடுகள், இரண்டாவது சோளச் சித்திரங்கள், மூன்றாவது நாஸ்கா கோடுகள்.

இவற்றின் முடிச்சுக்கள் எப்போது அவிழப்போகிறது என்பது தான் அறிவியல் உலகுக்கும் எனக்கும் இப்போது உங்களுக்கும் இருக்கின்ற கேள்வி..? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேனுஷா

பள்ளிப்பருவத்தின் பருவங்கொடாத வயதில் துள்ளித் திரிந்த நாட்கள் இன்னும் கண்ணுக்குள்ளே பசுமையாய் தெரிந்தன. கால ஓட்டத்திலே அகப்பட்டு பிறந்தும் மடிந்தும் நிலையற்ற வாழ்க்கையை வாழ்ந்துகொண்டிருக்கின்ற மனிதர்கள் இன்பம் என்ற மாயக்குளத்தில் தடம்புரண்டு தங்களை அழியாத ஆத்மாக்கள் என்று நினைத்துக்கொண்டிருப்பது தான் என்ன கொடுமை?

"தம்பி கணேசன்! எங்கையடா போனனை... உந்தக்கையைக்காட்டு இந்த எண்ணையை போட்டு விடுறன். இரண்டு நாள் தொடர்ந்து போட வீக்கம் வத்திப்போகும்..இந்தா கையை இப்பிடிக்கொண்டா பார்ப்பம்.

"ஏனம்மா... ஏன் இதுக்கு உந்த எண்ணையைப்போட்டா சரிவருமா? நான் ஒருக்கா ஆஸ்பத்திரியில நாளைக்கு காட்டிக்கொண்டு வாறன். உந்த எண்ணையைப் போட்டனெண்டா கொழுக்கிப்புழு மாதிரி கிடக்கிற வீக்கம் கொழுக்கட்டை மாதிரி ஆயிடும். நான் தான் நாளைக்கு போறனே டொக்ரரை கேட்டுட்டு பிறகு போடலாம் அம்மா.."

"என்னவோ ராசா.. எனக்கு உன்ர கையைப் பாக்கப் பயமாக்கிடக்கு. எங்கையெண்டாலும் போய் உதைமாத்தினாப் போதும். முந்தியெண்டா நாங்கள் எந்த வீக்கத்திற்கும் இந்த விளக்கெண்ணையைப்போட்டா மாறிடும். இப்பத்தைப் பெடியள் இதை நம்புதுகளில்லை.." என முணுமுணுத்துக்கொண்டே தாய் சிவகாமி அடுக்களையினுள் நுழைந்தாள்.

ஐம்பது வருடங்களை இந்தப் புவியிலே வாழ்ந்து முடித்துவிட்டாள். அவளுடைய கணவன் ஐந்து வருடங்களிற்கு முன் நோயினால் இறந்து விட்டிருந்தார். ஆனாலும் கணேசன், காயத்திரி என்ற இரண்டு முத்துக்களை துணையாகக்கொடுத்துவிட்டு போயிருந்தார். கணவன் பெரிதான உத்தியோகம் ஏதும் பார்க்கவில்லை. தினம் தினம் மண்ணோடு போராட்டம் நடத்துகின்ற விவசாயிகளுள் ஒருவர். வீட்டுவறுமை கணேசனையும் விவசாயத்தில் ஈடுபட வைத்தது. தங்கை காயத்திரியைப் படிக்க வைக்க நகரப்பாடசாலை ஒன்றிலே சேர்த்து விட்டிருந்தான். தன் தாய்க்காகவும், தங்கைக்காகவுமே தன் வாழ்வை அர்ப்பணிக்கத்துணிந்தவன். இதற்காக கால நேரம் பார்க்காது உழைத்துக்கொண்டிருந்தான்.

"காயத்திரி காயத்திரி இஞ்சை வாம்மா! பொழுதுபட்டுப்போகுது உந்தக்கடையில போய் மண்ணெண்ணை வாங்கிக்கொண்டு வா. முந்த நாள் வேண்டினது முடிஞ்சுது" என்று கூறிவிட்டு மறுபடியும் சறுசுறுப்பானாள். முப்பது வருடங்களாக மூன்று கால் அடுப்போடும் புகையோடும் தினம் தினம் போராட்டம் நடத்துவதிலேயே தன் வாழ்நாளைக்கழித்துவிட்டாள்.

கணேசன் புரண்டு படுத்தான். இன்னும் கைகளில் வலிமாறாதிருப்பதை உணர்ந்தான். மெல்லத்தன் கைகளை எடுத்து வீக்கங்களை உற்று நோக்கினான். அந்த வீக்கங்கள் அவனுக்கு எதையோ ஞாபகப்படுத்துவது போல இருந்தது. அந்த ஒவ்வொரு வீக்கங்களிற்கூடாக அவனது ஜீவநாடியே ஒடுங்கிப்போன சிவபாதத்தின் முகம் ஆயிரம் விம்பங்களாக மனத்திரையில் விரிந்தன. அவனது உணர்வுகள் விக்கித்து நின்றது. மனம் கொந்தளிப்பால் எண்ண அலைகள் சுழன்று கொண்டிருந்தன..

"டிங் டிங் டிங்"

பாடசாலை ஆரம்பமாகும் மணி அடித்தது. மாணவர்கள் உடற்பயிற்சிக்காக மைதானத்தை நோக்கி அவசரமாகச் சென்று கொண்டிருந்தனர்.

"அடமாடு இஞ்சாலை வா. கொப்பியும் கொண்டு வெளிக்கிட்டுடுவியள் ஸ்கூலுக்கெண்டு நாயள் உங்களுக்கேன் படிப்பு? நீஏன்ரா பிந்திவந்தனி? கிட்ட வா..கிட்ட வா.."

சேர் சேர் அடிக்காதீங்க சேர். அம்மாக்கு காய்ச்சல். அதனாலை சமைக்க பிந்திப்போச்சு சேர். இனிமேல் வேளைக்கு வருவன்

"அம்மாவுக்கு காய்ச்சலா? ஏன் நீ தான் வைத்தியம் பார்த்தியா? காய்ச்சல் எத்தனை பாகையிலை அடிக்குதெண்டு பார்க்கலையா?ஏன்ரா நான் எத்தின வரிச சேவிஸ் தெரியுமா? எனக்கே கதை விடுறியா? நான் அடிக்கிற அடியில உனக்கு நூற்றிரண்டில காய்ச்சல் அடிக்குதோ இல்லையோ பார்.."

"சேர் சேர் அடிக்காதீங்க சேர். ஆஆ..அம்மா..."

அவன் தன் முதுகை தடவியவாறே அழுது கொண்டு வகுப்பிற்கு ஓடினான். அவனது பார்வையில் மிரட்சி தெரிந்தது.

"வராத மாணவர்களை அதிபர் காரியாலயத்திற்கு அனுப்புமாறு வகுப்பாசிரியர்களைக்கேட்டுக் கொள்கிறேன்" என ஒலிபெருக்கியில் அறிவித்துவிட்டு மேசையில் அமர்ந்தார். அவரது முகத்தில் அதிகாரப்பெருமிதம் தெரிந்தது. மாணவர்களிற்கு அடிப்பதையும் தன்னைக் கண்டு அவர்கள் பயப்படுவதையும் கண்டு பெருமை அடைந்தார்.

வராத மாணவர்கள் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளைப்போல் நடு நடுங்கிக்கொண்டே வரிசையாக காரியாலயத்தின் முன் வந்து நின்றனர். அதிபருடைய பலமான கைகள் தங்கள் தலையைப்பதம் பார்க்கப்போகிறது என்பதில் அவர்களிற்கு துளியும் சந்தேகமில்லை. அத்தனை முகங்களுள் ஒரு முகமாய் கணேசனும் நின்று கொண்டிருந்தான். அவன் அணிந்திருந்த வெள்ளை நிறம் மங்கிப்போன சட்டையே அவனது குடும்ப நிலையைத் தெளிவாக உணர்த்தின. ஆனால் வறுமையைக் கேவலமாகப் பார்க்கின்ற இன்றைய சமுதாயத்திலே அவன் மனம் அல்லாடிக் கொண்டிருந்தது. தினம் தினம் நொந்து வெந்து கொண்டிருந்தது.

"இத்தனை கேவலமான மனிதர்களுக்குள்ளேயும் வாழத்தான் வேண்டுமா?" தற்கொலை செய்து கொள்வோமா என்று கூட பல முறை அவன் மனமுடைந்து அசட்டுத்தனமாக யோசித்திருக்கிறான். ஆனால் அவனின் பாசமான தாயின் முகம் அவன் நெஞ்சில் தோன்றிநிற்கும் போது எல்லாவற்றையும் மறந்து காலத்தைக் கழித்தான்.

"அட கிழடுகள் உங்களுக்கென்ன உத்தியோகமோ வீட்டில? கெதியா உள்ளுக்கை வாங்கோ..உந்தக்கடிதத்தை எல்லாம் குப்பையில போடுங்கோ. நான் கடிதம் பார்க்க மாட்டன் ஒவ்வொருத்தரா வாங்கோ"

கணேசன் முதலில் போனான்.

"ஏய் கழுதை..உன்னைப்பற்றி கன கேஸ் இருக்குது. இஞ்சாலை வா.."

"சேர் சேர் அடிக்காதீங்க சேர்!"

அதிபர் சிவபாதத்தின் ஒருமுகம் பல முகமாய் தெரிந்தன. தாங்க முடியாத வலி. மயக்கம் வருவது போல் உணர்ந்தான். மெல்ல வெளியேற முற்பட்டான்.

"டேய் இஞ்சை வா. உன்ரை சப்பாத்தை எல்லாம் எங்கை? இதென்ன விடுகாலியள மேய்க்கிற இடமெண்டா வாறனியள்? எங்கையடா சப்பாத்தும் ரையும்? ஓடு..எனக்கு ஒரு கதையும் சொல்ல வேண்டாம். வீட்ட போய் பெற்றாரை கூட்டிக்கொண்டு வா.."

"சேர் உண்மையில எனக்கு காய்ச்சல் ஆஸ்பத்திரியில காட்டினான். மலேரி எண்டு சொன்னவை. ஆஸ்பத்திரில த துண்டு கொண்டு வந்தனான் சேர்"

"ஓடுறா வெளியிலைஉனக்கு என்ன தி ஆசிரியர்களே எனக்கு முன்னால வரப்ப வினம். நீ எனக்கே காரணம் சொல்லுறி ஓடு..உனக்கு இந்த பள்ளிக்கூடத்தில இடமில்

அடித்துக்கலைத்துக்கொண்டே க சனை பாடசாலை வாயிலால் வெளி துரத்தினார். அவன் அழுது கொண் வீட்டை நோக்கி நடந்தான். தாய் சிவக இடியப்பம் விற்றுத்தான் அவர்களுடை அன்றாடம் வெறுமையாகும் வயிறு ஓர



நிறைந்து கொண்டிருந்தது.

"அம்மாஆஆஆ. அம்மாஆ.. ஆ..அ..அ.."

"என்னடா கணேசன்! பள்ளிக்கூடத்திற்கு போகலையா? ஏன் அழுகிறாய்? இதென்ன கையெல்லாம் வீங்கிக் கிடக்கு..என்ரை ராசா என்ன நடந்தது?"

மனம் பதறி அவனை அணைத்துக் கொண் கேட்டாள். பாவம்..ஏழைத்தாயல்லவ அவள் அழுதே விட்டாள். தன் மக உடம்பிலே உள்ள தழும்புகளிற்கு எண்ண போட்டு ஒத்தடம் கொடுத்தாள். பத்து மா சுமந்து பிள்ளையைப் பெற்று வளர்ப்பவளி தானே தங்கள் பிள்ளைகளின் அரு தெரியும். ஒவ்வொரு பெற்றோரும் தத் பிள்ளைகளிற்கு துன்பம் வரும் போது த

> "ஓடுறா வெளியிலைஉனக்கு என்ன திமிர். ஆசிரியர்களே எனக்கு முன்னால வரப்பயப்படு வினம். நீ எனக்கே காரணம் சொல்லுறியா? ஓடு..உனக்கு இந்த பள்ளிக்கூடத்தில இடமில்லை." அடித்துக்கலைத்துக்கொண்டே கணேசனை பாடசாலை வாயிலால் வெளியே துரத்தினார். அவன் அழுது கொண்டே வீட்டை நோக்கி நடந்தான்.



# மானுடத்தின் பெயரால்........

சட்டத்தரணி சி.கனகசிங்கம்

வாட்டும் வறுமையில் வதங்கிய பெற்றோர்
காட்டிய கருணை அன்புக் கடன் தீர்க்க - காலன்
ஓட்டிய விமானம் ஏறிக் கடல் கடந்து பாலைதனில்
நாட்டினாள் பாதம் பாலை நாலு பணம் சேர்க்க

நேற்றுவரை நிமிர்ந்த தலை! நேரிய பார்வை - அயர்வு
ஆற்ற நேரமில்லை! கடும் உழைப்பு நாளெல்லாம்
தோட்டம் கிடைத்தது கை நிறைக்க வல்ல (வறு)மை குறைக்க
காட்டமாய் செவிதெறிக்க கோட்ட பழிக்கு கணக்கில்லை

பாவை தலைதனில் சுமந்த பணி ஏராளம்
பால் பருக்கி பராமரிக்க பச்சிளசை ஏற்றாளாம்
நோ கடுக்க நாவறள நெடுநேரம் அருகிருந்து
கால் மடியில் வைத்தே கவனித்த பச்சிளசு - அன்று

பால் சுவைத்த பரவசத்தால் பந்தாட்டம் போல்
கால் உதைத்து களித்துப் புரண்ட போது

தூக்கியது தாமரை நாசியைப் பாலின் இரு துளி
தூக்கிய திணறலின் துவண்டு மடிந்தது அச்சிறு
நாக்குளற நங்கை றிசானா ஓங்க ஒலித்தாள் அவலம்

போச
பாதகி
சாதல்
உயி
மயிரி

"இல்
கல்
மறுநு

பச்சி
பக்கத்
எக்கா
உயிர்

தற்கெ
இச்ச
சடுதி
எடுப

கொய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...காய்ச்சல் சேர்.
...மலேரியா
...த்திரில தந்த
...ர்''
...என்ன திமிர்.
...வரப்பயப்படு
...சொல்லுறியா?
...இடமில்லை''
...ண்டே கணே
...ல் வெளியே
...கொண்டே
...ய் சிவகாமி
...வர்களுடைய
...யிறு ஓரளவு


இதை உணர்வர். மற்றையவர்களின் பிள்ளை துன்பப்படும் போது மட்டும் ஏதாவது பழி போட்டு விடுவார்கள்.

"அதுகள் உப்பிடித்தான். ஒண்டும் தெரியாது. அந்தப்பெடியனும் ஒரே குழப்படி.. அவனுக்கு உது காணாது"

இன்னும் சொல்வார்கள். ஆனால் தமது பிள்ளைக்கு துன்பம் வரும்போது பார்த்துக்கொண்டு இருப்பார்களா?

மனங்களால் நொந்து சொல்ல முடியாத வலிகளால் காயம்பட்ட நெஞ்சினை தமது வார்த்தைகளால் கூறு போட்டு விடுவதில் வல்லவர்கள் பலர் இருக்கிறார்கள். சமுதாயம் ஏன் இப்படி இருக்கிறது? கலியுகம் என்று சொல்வது இது தானா? துன்பத்தால் வருந்துபவர்க்கு உதவியோ ஆறுதலோ கூறாவிட்டாலும் அவர்களை மீண்டும் மீண்டும் துன்பப்படுத்துவது தானா மனிதநேயம்?

# நாங்கள் ஏழைகள்



மனிதத்தன்மையே இல்லாதவர்கள் எப்படி மனிதராக இருக்க முடியும்? மனிதன் என்றாலே மனிதநேயமுள்ளவன் என்று தானே அர்த்தம்.

சிவகாமி கணேசனையும் அழைத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாக பாடசாலையை நோக்கி நடந்தாள். பாடசாலைக்குள் நுழைந்து அதிபர் அலுவலகத்திற்கு முன்னால் நின்றாள். அதிபரோ கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. நேரம் ம[illegible]த்தை தாண்டியது.

"யார் நீங்க? ஏன் வந்தனீங்க? அதிகாரம் தொனிக்க எழுந்த அந்தக் குரல் கண்டு எட்டுத்திக்கும் அதிர்ந்தன.."

"சேர் நான் கணேசன்ரை அம்மா. அவனுக்கு உண்மையில மலேரியாக் காய்ச்சல் சேர். அதுனாலதான் வரமுடியலை.."

"சீ..சீசீ உதென்ன நல்ல சாட்டு. இஞ்சை பாருங்கோ காய்ச்சல் ஒரு வருத்தமில்லை. படிக்கிற பிள்ளைக்கு ஒரு சாட்டில்லை. ஒரு டீசன்ற் டிசிப்பிளின் தெரியாத பட்டிக்காடாய் இருக்கிறியள். சப்பாத்து ரை இல்லாம நான் அனுமதிக்க மாட்டன். சப்பாத்து ரை வேண்டி ஒழுங்கா அனுப்புங்கோ.!"

அவளிற்கு வேர்த்து வியர்த்தது. பொலிஸால் விசாரணை செய்யப்படுவது போல உணர்ந்தாள். கணேசனையும் கூட்டிக்கொண்டு நடந்தாள் அந்தத் தெரு வழியே..

காலையில் விற்பதற்காக சமைத்து வைத்திருந்த இடியப்பங்கள் காய்ந்து போய்க் கிடந்தன அவளது உள்ளத்தைப் போலவே.. இனி இவற்றை எப்படி விற்க முடியும்? ஒருவேளை பசி தீர சாப்பிடவே அவர்கள் பெரும் பாடுபட வேண்டியிருந்தது. முதல்நாள் இடியப்பம் விற்று வரும் இலாபமே இவர்களுடைய அடுத்த நாள் சாப்பாடு. ஆனால் இனி என்னசெய்யமுடியும்? அன்று காய்ந்துபோன இடியப்பங்களை அவர்களை தவிர வேறு யாரும் சாப்பிட்டிருக்க மாட்டார்கள்.

அடுத்த நாள் விடிந்தது. ஆனால் ஒவ்வொரு விடியலுமே அவர்களுடைய வாழ்க்கையின் வறுமையை விடுவிக்கவே நினைத்ததில்லை. அவள் சப்பாத்திற்கு எங்கே போவாள்? இந்த சமுதாயம் அவளிற்கு உதவி செய்யுமா? இல்லை.. உபத்திரவம் வேண்டுமானால் செய்வார்கள்.

"என் மகன் படிக்க வேண்டும்" என் மகன் படிக்க வேண்டும் அவள் மனம் அங்கலாய்த்துக்கொண்டிருந்தது.

"இந்தா கணேசன் இதில நூற்றிஐம்பது ரூபாய் இருக்கு. ரையை வேண்டு. சப்பாத்துக்கு இப்ப காசில்லையடா மோனை. இன்னும்கொஞ்ச நாளையால வேண்டலாம்."

இவள் இடியப்பம் விற்கும் முதல் காசையே எடுத்து அவனிடம் கொடுத்திருந்தாள். சிற்றூழியர் ஒருவரிடம் பணத்தைக் கொடுத்து ரையை வாங்கினான். தன் சக மாணவர்களின் துணையுடன் கட்டிக்கொண்டான். டியை தனக்கு அழகாக இருப்பதாக எண்ணி மகிழ்ச்சியுடன் காணப்பட்டான். காலை உடற்பயிற்சி முடிந்ததும் மாணவர்கள் வகுப்பிற்கு செல்ல முற்பட்டனர். "சப்பாத்து ரை போடாத எல்லோரும் ஓவ்வீசுக்குப்போங்கோ"

ஓர் ஆசிரியரின் கம்பீரமான குரல் கேட்டதும் கணேசனின் குதூகல மண்பானை நிலத்தில் விழுந்தது போல் சுக்குநூறாக உடைந்து மறைந்தது. அதிபரின் நெருப்புப் பார்வை அவன் நெஞ்சில் குத்துவது போல இருந்தது.

ஓடிவிடலாமா?....இல்லை..நான் படிக்க வேண்டும். என்ரை அம்மாவைக்காப்பாற்ற வேண்டும்.

"டேய் இஞ்சாலை வா. உனக்கென்ன சிங்களமே சொல்லுறது? எங்கையடா சப்பாத்து?"

கணேசனைக் கண்டவுடன் அதிபர் உறுமிக் கொண்டு எழுந்தார். "சேர் சேர் ரை வாங்கத்தான் காசு காணும் சேர். கொஞ்ச நாளையாலை சப்பாத்து வாங்குறன் சேர்." "கொஞ்ச நாள் உந்த மண்ணாங்கட்டி கதையெல்லாம் வேண்டாம் எனக்கு"

"ஐயோ நோகுது சேர் ஆ ஆ ஆ..அ அ அன்னை அப்பா"

கைகளால் எங்கே தடவுவது என்று தெரியாதளவிற்கு உடம்பு முழுவதும் வலித்தது. உடல் முழுவதும் தழும்புகள். உடலை விட மனம் அதிகமாகவே வலித்தது.

"வீட்டை ஓடு. சப்பாத்து ரை இல்லாம இங்கை வந்து எனக்கு கரச்சல் கொடுக்காத. உனக்கு படிப்புத்தேவையில்லை. உங்களுக்கெல்லாம் மாடுமேய்க்கிறது அல்லது தோட்டங்கொத்துறது தான் சரி"

புத்தகப்பையையும் எடுத்துக்கொண்டு களைப்புடன் வீட்டை நோக்கி நடந்தான்.

"என்ரை அம்மா எவ்வளவு கஸ்ரப்படுறா எனக்காக? சப்பாத்துப்போடாமல் பள்ளிக்கூடம் போகேலாது. அம்மாட்டயும் காசில்ல. அவவையும் இனி காசு கேட்டு வருத்தக்கூடாது. மனிதத்தன்மையே இல்லாத இவங்களோடை பள்ளிக்கூடத்திலை என்னைப்போல ஏழை மாணவர்கள் படிக்க முடியாது. இனியும் என்னாலை அடிவாங்கவோ அவமானப்படவோ ஏலாது"

வீடு பூட்டியிருந்தது. தங்கை பள்ளிக்குச்சென்றிருந்தாள். தாய் உழைப்பிற்காகச் சென்றிருந்தாள். கையிலிருந்த புத்தகப்பையைக் கீழே வைத்தான். உடற்காயம் மனக்காயம் இரண்டையும் இறக்கி வைத்தது போலிருந்தது அவனிற்கு.. திண்ணையில் கிடந்த தந்தையின் மண்வெட்டியை எடுத்து தோளில் போட்டுக் கொண்டு தோட்டத்தை நோக்கி நடந்தான் கணேசன்.

"உனக்கு படிப்புத்தேவையில்லை. உங்களுக்கெல்லாம் மாடுமேய்க்கிறது அல்லது தோட்டங்கொத்துறதுதான்சரி" அதிபரின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன.

"கணேசன் கணேசன் ஆஸ்பத்திரிக்கு போகோணும். எழும்படா" தாயின் வார்த்தைகள் காதைத் தொட்டதும் பொழுது விடிந்ததை உணர்ந்தான்.

"அம்மா! தண்ணி இறைக்கோணும் தோட்டத்துக்கு. இல்லாட்டி காய்ஞ்சு போகும். ஓடிப்போய் இறைச்சுப் போட்டு வாறன் கூறிக்கொண்டே மண்வெட்டியைத்தூக்கிக் கொண்டு நடந்தான் தோட்டத்தை நோக்கி. அவன் சுமைதாங்கியல்லவா???????

...ஏன்
...பல்லாம்
...சா என்னடா
...துக்கொண்டே
...தாயல்லவா..
...தன் மகனது
...ற்கு எண்ணை
...பத்து மாதம்
...ளாப்பவளிற்கு
...ின் அருமை
...றாரும் தத்தம்
...போது தான்

---

போக்காது ஒரு கணம் புகுந்தாள் அங்கு எஜமானி!
பாதகி! பச்சிளம் உயிர் பறித்த இராட்சசி!
சாதல் உனக்கு நாளை சர்வ நிச்சயம்!
உயிர் எடுத்தவளே! உயிர் கொடு!
மயிராயிற்றா என் மழலை உயிர் உனக்கு!

"இல்லை அம்மா இல்லை" என் சொல் கேளுங்கள்
கல் நெஞ்சள் வாய் 'கதைக்காதே' எனப் பிளிறிற்று
மறுநாள் மன்றில் றிசானா 'மதிநீதி' எதிர்பார்த்து

பச்சிளசின் உயிர்போன அக்கணம்
பக்கத்திருந்தவள் நீதானே?
எக்காரணமும் கூறாதே எமன் நீதான்
உயிர் எடுத்தவள் நீ! உன்னுயிர் விடு

தற்செயல் சம்பவம் தற்காப்புச் செயல்
இச்சை இசைவின்றி சித்தம் குழம்பிய செயல்
சடுதியாய் மூட்டிய கடுங்கோபம் இவை இலகுவில்
எடுபடாக் காப்புக்கள் இந்நீதி மன்றில்

கொய்து விடுங்கள் கொலையாளி இவள் தலையை
குறித்தோம் அதற்கு நாம் இதோ ஒருநாள்
கொய்த சிரத்தை கூர்வாள் முனை ஏற்றி
'கொலைகாரி இவள்' எனக் கூவுங்கள் உலகறிய
கருணை எல்லை கேளாதீர் இது எம் கடும் ஆணை

அன்னையை, அத்தனை அருளை உடன் பிறப்பை!
எண்ணி உருகி ஊன் நடுங்க
சென்னிதனை செங்குருதியில் தோய்க்க அரங்கின்
மண்ணில் மண்டியிட்டு நின்றாள் மலர்ப்பிஞ்சு றிசானா

குனிந்த தலை கனமாய் நெஞ்சில் விழுந்த அடியால் நிமிர
கனிந்த மறுகணம் கழுத்தில் 'சதக்' என்ற குரூரம்!
உருண்டது தலை அதனை உள்ளெடுத்தது வாளின் முனை
"எல்லோரும் பாருங்கள் எமன் இந்தச் சிறுக்கி"
"அல்லாஹு அக்பர்" அரங்கிருந்தோர் கூச்சல்

பிஞ்சே றிசானா பிய்ந்ததோ உன் தலை
கஞ்சர் கல்நெஞ்சம் கவர்ந்தது இன்னுயிரை
ஆய்ந்தறியாத் தீர்ப்பு அளவு நோக்காத் தண்டனை
வடித்த மடமை குடித்த அரபு நீதி
ஒடித்திடத் துடித்தெழு மானிடமே துவம்சம் செய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறலாம் வாங்க!

ராகவன் அல்பி




உங்கள் வாழ்க்கைத் திட்டம் வேடிக்கை நிறைந்ததாகவும் இருக்க வேண்டும், முழுக் கவனத்துடன் செயற்படுவதாகவும் இருக்க வேண்டும். எங்கள் வேலை நேரத்தைத் திட்டமிடுவதைப் போலவே, ஓய்வு நேரத்தையும் திட்டமிட வேண்டும். 24 மணி நேரமும் வேலை செய்வதைத் தவிர்த்து விடுவதுடன் உங்களின் ஆர்வமும் பல்வேறு விடயங்களில் இருந்தால் உங்கள் வாழ்க்கை அனுபவமும் விரிவானதாக இருக்கும்.

வேலை செய்யாத போது அந்த நேரம் உங்களுக்கானது. அப்போது ஓய்வாக இருக்கலாம். பொழுதுபோக்குகளில் மகிழ்ச்சி அடையலாம்; விடுமுறை எடுத்துக் கொள்ளலாம்; உங்களுக்கு விருப்பமானதைக் கற்றுக் கொள்ளலாம். நம்மில் பெரும்பாலானவர்களுக்கு ஓய்வு நேரம் என்பது அலுவலகம் விட்டு வரும் மாலை நேரம், வார இறுதி நாள்கள் இவைதான். குறுகிய கால ஓய்வு மட்டுமே இருப்பதால் தான் அதைச் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டியதாகிறது.

ஓய்வு என்பது உங்களுக்காக மட்டுமே என்பது முக்கியமானது. அதுபோன்ற தருணத்தில் உங்களுக்குப் பிடித்தமான, உங்களுக்குச் சரி யென்று படும் விடயங்களை மட்டும் செய்யலாம். ஓய்வு நேரத்தையும் எப்போது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்பது போன்று இருப்பதும் நல்லதுதான். பெரும் நெருக்கடியான வேலைக்கு மத்தியில் கிடைக்கும் சிறு பொழுதைக் கூட நீங்கள் ஓய்வு நேரமாக மாற்றிக் கொள்ளலாம்.

**பொழுதுபோக்குகள்**- நமக்கு ஆர்வம் இருப்பதால் மட்டும் செய்யும் விடயங்கள்தான் பொழுதுபோக்கு. சில பொழுது போக்குகளே நமக்கு வாடிக்கையாக, வியாபாரமாக மாறிவிடக் கூடும். சிலரது பொழுது போக்குகள் வாழ்நாள் முழுவதும் நீடித்த ஆர்வமாக இருக்கும். சிலருக்கு இது நேரத்தைக் கடத்தும் பொழுது போக்காக மட்டும் இருக்கும்.

**சமையல்**- உங்களுக்கு சமையல் நன்றாக வருமென்றால் சமைத்துப் பார்க்கலாம். சமைப்பதற்குப் பயன்படுத்தும் எல்லாப் பொருள்களையும் புதிதாக, தூயதாக வாங்குவது உணவை இன்னும் சிறந்த சுவையுடையதாக ஆக்கும். இதற்காக சமையல் புத்தகங்கள் வாங்க வேண்டியதில்லை. இணையத்தளத்திலே ஏகப்பட்ட சமையல் குறிப்புக்கள் உள்ளன.

**தோட்ட வேலை**- பூக்கள், காய்கறிகளைத்தரும் தாவரங்களை வளர்க்கும் மகிழ்ச்சியை இழக்கின்றீர்கள் என்று தோன்றுகிறதா? அப்படியானால் தோட்டம் போடலாம். அப்படியே சொல்ல வேண்டுமென்றால், அது உங்களை பூமியுடன் இணைக்கிறது. வெட்ட வெளியில் தூய காற்றை சுவாசித்தபடி வேலை செய்யலாம்.

**நல்ல உடல் தகுதியுடன் இருத்தல்**- உங்களின் ஓய்வு நேரத்தை உடல் திறனை வலுப்படுத்தப் பயன்படுத்துவது நல்ல யோசனை. ஜிம்முக்குப் போகத் தயக்கமாக இருந்தால் நீண்ட தூர நடைப்பயிற்சி செய்யுங்கள். எல்லா உடற்பயிற்சிகளும் நல்லதுதான்.

**வாசிப்பு**- உங்களுக்கு ஏற்கனவே படிக்கும் பழக்கம் இருக்கிறது இல்லையா? ஏன் புதிய வகையான விடயங்களைப் படிக்கக் கூடாது? நல்ல புனைகதை, திரைப்படத்தை விடப் பரபரப்பு ஊட்டுவதாக இருக்கும். வாசகர் வட்டத்தை உருவாக்கிக் கூடி வாசிக்கலாம். வாசித்து முடித்த பிறகு அது பற்றி விவாதிக்கலாம். அப்படிச் செய்வது நம் மனதுக்கு இனிமையானதாக அமைவதுடன் அறிவும் விசாலமாகும்.

**இசை**- நம்மில் சிலர் இசையை உருவாக்குவோம், பலர் இசையைக் கேட்பவர்களாக இருப்போம். நீங்கள் ஏன் இசையைக் கற்றுக் கொள்ள முயற்சி செய்யக் கூடாது? உங்களின் எல்லைகளை விரிவாக்கும் வகையில் ஏன் புதிய விடயங்களைச் செய்யக்கூடாது. இசை பல ஆச்சரியங்களையும் புதிய அனுபவங்களையும் ஏற்படுத்தும்.

**எழுத்து**- நீங்கள் வளரும் எழுத்தாளர்? உங்களின் ஆர்வம் கவிதையா, பாடலா? ஏன் புனைகதை எழுதக் கூடாது. மற்ற விடயங்களைப் போல பயிற்சி செய்ய நன்றாக வந்துவிடும். சிறுகதைகளையும் கவிதைகளையும் பிரசுரிக்கும் பல்வேறு பத்திரிகைகள் உள்ளன. அந்தப் பத்திரிகைகளுக்கு உங்கள் படைப்புகளை அனுப்புங்கள்.

**செல்லப் பிராணிகள்**- பூனை, நாய் வளர்ப்பதற்குப் பதிலாக மீன், முயல் வளர்ப்பது நல்ல மாற்று ஆர்வமூட்டும் விடயமாகும். வளர்ப்புப் பிராணிகள் நூற்றுக்கணக்கில் உள்ளன. அதில் உங்களுக்கு விருப்பமானதைத் தேர்ந்தெடுத்து வளர்க்கலாம். வளர்ப்புப் பிராணிகள் என்பது வெறும் பொழுதுபோக்கு என்பதைத் தாண்டி, அவை உங்களின் குடும்ப உறுப்பினர்களாக மாறிவிடும்.

**குடும்ப வரலாறு**- நீங்கள் எந்த வம்சாவளியைச் சேர்ந்தவர்? சாதாரண குடும்பமா? அல்லது மன்னர் பரம்பரையா? இது பற்றி எப்போதாவது சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? நீங்கள் ஏன் உங்கள் குடும்ப வரலாற்றைத் தெரிந்துகொள்ளக் கூடாது.

**கைவினைப் பொருள்கள்**- கையால் செய்த வாழ்த்து அட்டைகள் போன்றவற்றை விற்பனை செய்தால் அனைவரும் வாங்கி வரவேற்பார்கள். உங்கள் கைகளாலேயே செய்வதால் அது உங்களுக்குப் பெரும் திருப்தியைத் தரும். அதற்கு மலிவாக எளிதில் கிடைக்கும் பொருள்களையே பயன்படுத்தலாம். இதற்கு அதிக செலவும் ஆகாது.

**பொருள்களைச் சேகரித்தல்**- உங்களுக்கு விருப்பமான பொருள்களைச் சேகரித்து வைப்பது குறித்து ஏன் யோசிக்கக் கூடாது? பழைய பொருள்கள் ஏலம் விடும் இடத்துக்குச் சென்றால் அங்கு பல்வேறு விதமான பொருள்களும் கிடைக்கும். ஒரு கட்டத்தில் அதிக அளவில் பொருள்கள் சேர்ந்துவிடும்போது அவற்றை விற்று அதிக லாபம் கூடப் பெறலாம்.

ஓய்வு என்பது உங்களுக்காக மட்டுமே என்பது முக்கியமானது. அதுபோன்ற தருணத்தில் உங்களுக்குப் பிடித்தமான, உங்களுக்குச் சரி யென்று படும் விடயங்களை மட்டும் செய்யலாம். பெரும் நெருக்கடியான வேலைக்கு மத்தியில் கிடைக்கும் சிறு பொழுதைக் கூட நீங்கள் ஓய்வு நேரமாக மாற்றிக் கொள்ளலாம்.

# மாறிய சீருடைகள்



கவிஞர் த. பருத்தி:தாசன்

கத்திக்கு,
கைலாகு கொடுத்திருக்கிறார்கள்
கற்பவதிகள்..!
கருகிய கண்ணீரையும்
குருதி குளித்ததையும்
கோரத்தையும் மறந்து
மனத்தை அடகு வைத்தார்களோ
மானத்தை ஈடு வைத்தார்களோ..?
மனிதாபிமானிகளுக்குத்தான் வெளிச்சம்
காட்டிக் கொடுப்புகளின்
வேட்டைக்கார வடிவத்தைக் காட்ட
வரிந்து கட்டிக் கொண்டு
வரிசையில் நிற்கிறார்கள்
தாய்க்குலத்தின் தராதரம் மறந்தவர்கள்
வீட்டுக்கழைத்து விருந்து கொடுத்தவர்கள்
பாழாய்ப் போனவர்க்கு
பாயாய் கிடக்கிறார்கள் (போனார்கள்)
பாவாடை,சேலையை
கழற்றியெறிந்து விட்டு – எங்கள்
பச்சிளம் பிள்ளைகளை
பயப்படுத்தவோ..?
படுகொலையின் சீருடைக்குள்
புகுந்து கொண்டார்கள்...!
வளர்த்த நாய்க்கு வாலையறுத்து விட்டு
வாசல் தாண்டியவர்கள்
[illegible] தேவையான...
[illegible] கொள்ளுங்கள்
இவர்கள் நேற்று வரைக்கும் தான் தமிழர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி...

**27.01.2013 முதல் 02.02.2013 வரை**

தருபவர் - வித்தியா

**மேஷம்**- உங்கள் செயல் திறமைகளை குறைத்து மதிப்பிட்டவர்கள் வியக்கும் வகையில் வாழ்வில் முன்னேற்றம் பெறுவீர்கள். இளைய சகோதரர், உங்கள் வார்த்தையை மதித்து, கூடுதல் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். உத்தியோகத்தர்களுக்கு தாமதமான சலுகை எளிதில் வந்து சேரும். மாணவர்கள், ஞாபகத்திறன் வளர்ந்து தர தேர்ச்சியில் சாதனை நிகழ்த்துவர்.

**இடபம்**- உங்கள் மனதில் பல நாள்களாக இருந்த கவலை ஒன்று, தீர்வதற்கான நல்ல நேரம் பிறந்து விட்டது. யார் எமக்கு நன்மை செய்பவர் என்பதை உணர்ந்து செயற்படுவீர்கள். முயற்சி சிறந்து கூடுதல் வெற்றி கிடைக்கும். எதிரி இடம்மாறி போகிற நன்னிலை உண்டு. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் தமக்குரிய பொறுப்பை உணர்ந்து செயற்படுவதால் இலக்கு நிறைவேறும். மாணவர்கள் கூடுதல் பயிற்சி முறையால் மட்டுமே, படிப்பில் எதிர்பார்த்த தேர்ச்சி வீதம் பெறலாம்.

**மிதுனம்**- மனதில் உள்ள தாழ்வு மனப்பான்மையை அகற்றுவதால், முயற்சிகளுக்கான பலன் உரிய வகையில் கிடைக்கும். நிர்ப்பந்த பணக்கடனில், ஒருபகுதியைச் செலுத்துவீர்கள். பெருந்தன்மை குணம் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனையை சீராக்க அதிக கண்காணிப்புடன் செயற்படுவீர்கள். பணியாளர்கள், குடும்பத் தேவைகளை நிறைவேற்றக் கூடுதல் பணிவாய்ப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்வர். மாணவர்கள், அக்கறையுடன் படித்து திட்டமிட்ட தேர்ச்சி இலக்கை அடைவர்.

**கடகம்**- உடல்நல ஆரோக்கியத்தைத் தகுந்த முறையில் பராமரித்து கொள்வதால், பணிகளை நிறைவேற்றுகிற ஆர்வம் மனதில் வளரும். சுற்றுப்புற சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து செயற்படுவீர்கள். இல்லறத் துணையின் கருத்துக்களை மதிப்பதால், குடும்ப ஒற்றுமை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் சராசரி அனுகூலம் பாதுகாக்க மாற்று உபாயம் உதவும். அரசியல்வாதிகள், விவகார பேச்சுகளில் ஈடுபடுவதைத் தவிர்ப்பதால் நன்மை உண்டு. பணிபுரியும் மாணவர்கள், கவனமுடன் படிப்பதால் மட்டுமே தேர்ச்சி வீதம் சீராகும்.

**சிங்கம்**- ஆரம்பிக்கும் நற்காரியம் அத்தனையும், கூடுதல் நன்மையை பெற்றுத்தரும். சமூகத்தில் உங்கள் மீதான மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். கூடுதல் சொத்து வாங்க தாராள பணவசதி அமைந்து துணை நிற்கும். இல்லறத் துணை, குடும்ப எதிர்கால நலன் குறித்த ஆலோசனை சொல்வார். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணிபுரிவீர்கள். இயந்திரத் தொழிற்சாலை பணியாளர்கள், கூடுதல் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வர். மாணவர்கள், ஆர்வமுடன் படித்து தர தேர்ச்சி வீதத்தில் புதிய சாதனை நிகழ்த்துவர்.

**கன்னி**-பேச்சில் நிதானமும், செயல்களின் பின்விளைவும் உணர்ந்து நடப்பது நல்லது. எதிர் மனப்பாங்கு உள்ளவர்களிடம் விலகுவதால் பணச் செலவு, காலவிரயம் ஆகியவற்றைத் தவிர்க்கலாம். நண்பர்களின் உதவி தக்க தருணத்தில் கிடைத்து, மனதுக்கு நெகிழ்வைத் தரும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற மந்த கதியைத் தகுந்த முயற்சியினால் சரி செய்வது நல்லது. பணியாளர்கள், குடும்ப தேவைகளுக்காக சிறு அளவில் பணக்கடன் பெறுவர். மாணவர்கள் விளையாட்டு பயிற்சிகளில் பாதுகாப்பு நடைமுறை, தவறாமல் பின்பற்ற வேண்டும்.

**துலாம்**- மனக்குழப்பம் உண்டாகும். உங்கள் நலன் விரும்புவோரின் சிறந்த ஆலோசனைப்படி செயற்படுவது நன்மை பெற உதவும். சமூக நிகழ்வுகளை அறிவதில் ஆர்வம் குறையும். உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவு வகையைத் தவிர்ப்பது நல்லது. இல்லறத்துணையின் உறவினர்கள் நல்மனத்துடன் உதவுவர். தொழில், வியாபாரத்தில் உருவாகிற இடையூறைச் சரி செய்வீர்கள். உத்தியோகத்தர், பணி சிறக்க நிர்வாகத்திடம் சில ஆலோசனை சொல்வர். மாணவர்கள் தகுந்தப் பயிற்சியினால் மட்டுமே எதிர்பார்த்த தேர்ச்சி இலக்கை அடைய முடியும்.

**விருச்சிகம்**- பேச்சில் வசீகரமும் செயல்களில் நேர்த்தியும் நிறைந்திருக்கும். நண்பருடன் வாகன பயணத்தில் மிதவேகத்தைப் பின்பற்றுவது நல்லது. இல்லறத்துணை, உங்களின் கௌரவத்தை உயர்த்தும் வகையில் குடும்பப் பணிகளை மேற்கொள்வார். தொழில், வியாபாரத்தில் மேன்மை பெற எதிர்பார்த்த அரசு உதவி கிடைக்கும். பணியாளர்கள், கூடுதல் வேலைவாய்ப்பை ஏற்று பணவரவில் முன்னேற்றம் காண்பர். மாணவர்கள் வெளிவட்டாரப் பழக்கம் குறைப்பதால் படிப்பில் கவனமும் சீரான தேர்ச்சி விகிதமும் உருவாகும்.

**தனுசு** - பகட்டான செயல்களில் ஈடுபடுவதால் பணசேமிப்பு குறைவதும், சிலர் கடன் பெறுவதுமான நிலைமை இருக்கும். இல்லறத் துணையின் கூடுதல் அன்பு, பாசம் கிடைத்து மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபார நடைமுறையில் சிறு அளவில் மாற்றம் செய்து, எதிர்பார்த்த நன்மையைப் பெறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு நண்பரின் உதவியால் சில அனுகூலம் வந்து சேரும். மாணவர்கள் கல்வியில் கவனம் தேவை.

**மகரம்** -மனதில் ஒருமுகத் தன்மையுடன் செயற்பட்டு, முக்கியமான விடயங்களில் நல்ல தீர்வு பெறுவீர்கள். கூடுதல் உழைப்பினால் கிடைக்கிற பணவரவை அத்தியாவசிய செலவுகளுக்குப் பயன்படுத்துவீர்கள். கல்வி, வேலைவாய்ப்பில் எதிர்பார்ப்பு எளிதாக நிறைவேறும். எதிரியிடம் சமயோசிதமாக விலகி சிரமம் அணுகாமல் தவிர்ப்பீர்கள். இல்லறத்துணை வாழ்வில் உருவாகிற கஷ்டங்களை உணர்ந்து உறுதுணையாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதன கூடுதல் உழைப்பு என்ற நடைமுறையைப் பின்பற்றுவீர்கள். அரசியல்வாதிகள், விவகார பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டாம்.

**கும்பம்**-மனதில் உருவாகிற ஆடம்பர எண்ணங்களினால் தேவையற்ற பணச் செலவு உருவாகும். இதனால், சிலர் சேமிப்பு பணத்தையும் செலவு செய்கிற நிலை ஏற்படும். கவனம் தேவை. இல்லறத்துணை சேமிப்பு பணத்தை பயன்படுத்தி, குடும்பத்தின் அத்தியாவசிய தேவையை நிறைவேற்ற உதவுவார். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராமல் உருவாகிற சிரமத்தைச் சரி செய்வதால் நீண்ட காலம் பெற்ற அனுகூல தன்மைகளை எளிதில் பாதுகாக்கலாம். மாணவர்கள், கல்வியில் மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டும்.

**மீனம்**- உங்களின் புதிய முயற்சிகளில் வியத்தகு அளவிலான நன்மை கிடைக்கும். பிறர் மனம், சூழ்நிலை உணர்ந்து செயற்பட்டு பெற்ற நற்பெயரை பாதுகாத்திடுவீர்கள். எதிரி தன் சொந்த சிரமங்களால், உங்களை விட்டு விலகுகிற புதிய சூழ்நிலை உருவாகும். இல்லறத்துணை உங்கள் மீது அ[illegible] நடந்து கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் [illegible] பெறுவீர்கள். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து சிறந்த தேர்ச்சி பெறுவர்.




# நான் குற்றமற்றவள்

அடுப்பு நெருப்பெல்லாம்
அன்னையின்
கண்ணீர் வெள்ளத்தால்
காலமெல்லாம்
அணைந்த செய்தியை
சுமை கொண்ட
இதயத்தோடு
சுமந்த காலைப்பொழுதில்
இரவாகியும்
பசியோடு
நித்திரையிழந்த
இரவுப் பொழுதுகளுக்கு
முற்றுப்புள்ளி
தேவை.
என்ற எண்ணங்கள்
பல தடவைகள்
அவள்இதயத்தில்
கோலம் பல போட்டது
வறுமையினை
கட்டியணைத்து
வாழ்வதை விட
வறுமையகற்ற
வழி தேடி... என
எண்ணத்தில்
முளைத்து நின்றது
நிலா முற்றத்துக்கு
விடை கொடுத்து
உறவுகளின் கண்ணீர்
மழையில் நனைந்து
நலிந்த குடும்பம்
நன்றாய் வாழ என
கடல் கடந்து
வாள் மிதந்து
கண்காணா தேசம்
வந்து நின்றாள் ரிஷானா
பாலகி பசியால் வாடும்
தன் உறவுகளுக்கு
பசியாற்றும் கனவோடு
பாலகிக்கு
பாலூட்டி
பாவியாகிவிட்டாள்
கண்ணீர் கோடகள்
பால் மணமாற
முகத்தில்
இறைவன் படைத்த
உயிர் அவள்,
பாவம் வாழத் துடித்தாள்
வாழ்வோடு....
ஏமாற்றப்பட்டாள்
உள்ளத்தில் அவள்
சுமந்த எதிர்பார்ப்பு
பாலைவன கானல்
நீரானது.....
கண்கள் கண்ணீரை
இந்த வாழ் மட்டும்
''மன்னித்து விடுங்கள்
நான் குற்றமற்றவள்''
என தலைகுனிந்தாள்
மண்மாதாவை
புதுரோஜா மலர்
மண்டியிட்ட போது
(அ)நீதியின் கரங்கள்
ஏந்திய வாள் ஒரு கணம்
குருதியை சுவைத்து
மௌனமான போது
அவள் தலை மட்டும்
உடலில் இருந்து
பிரிந்து
உருண்டு நிமிர்ந்து
''நான் குற்றமற்றவள்''
என்றது மீண்டும்

ரமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



63 அசை போட ஒரு விடயம்

# பாவனைக்கு வரும் பழங்கால மின்சாரக் கார்

■ ரம்பன்

பெற்றோல் மற்றும் டீசல் போன்ற எரி பொருள்களின் விலைகள் உலக சந்தையில் அடிக்கடி அதிகரிப்பதனால் பெற்றோலிய பொருள்களையே தமது அபிவிருத்திப் பணிகளுக்கு நம்பியிருக்கும் நாடுகள் பிரச்சினைக்குள்ளாவது ஒரு புறமிருக்க இந்தப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளின் நிபந்தனைகளுக்கும் உள்ளாக நேர்கின்றது. அதுமட்டுமல்ல எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் ஒன்று சேர்ந்து கொண்டு உலகப் பொருளாதாரத்தையே ஆட்டிப் படைக்கும் நிலை கூட ஏற்படலாம் என்ற அச்சம் பல நாடுகளில் நிலவுகின்றது.

எனவேதான் பெற்றோலியப் பொருள்களை விட மிக மலிவான எரிபொருள்களை கண்டுபிடிக்கும் ஆர்வம் இப்போது உலகில் அதிகரித்து வருகின்றது.

சூரிய ஒளியிலிருந்து பெறப்படும் மின்சாரத்தை எரிபொருள்களாகப் பாவிப்பதற்கான முயற்சிகள் ஒருபுறமிருக்க வேறு வகைகளில் பெறப்படும் மின்சாரத்தையும் கூட பெற்றோலிய எரிபொருளுக்கு மாற்றீடாகப் பயன்படுத்தும் முயற்சிகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக வாகனங்களை பெற்றோலியப் பொருள்களுக்குப் பதிலாக உள்நாட்டிலேயே உற்பத்தியாகும் மின்சாரத்தை வாகனங்களின் இயக்கத்துக்குப் பாவிக்கலாம் என்ற கருத்து மேலோங்கி வருகின்றது.

விமானங்களை இயக்குவதற்கு மிக விலை கூடிய எரி பொருள் தேவைப்படுகிறது. அதிலும் கூட சூரியகலங்களைப் பாவிப்பது பற்றி ஆராய்ச்சிகள் நடக்கின்றன.

உள்நாடுகளில் உற்பத்தியாகும் நீர் மின்சக்தி போலவே சூரிய ஒளி மின்சாரமும் காலப் போக்கில் பெற்றோலிய எரிபொருள்களுக்கு மாற்றீடாகப் பயன்படுத்தப்படும் காலம் ஒன்று விரைவில் வரும் போல் தோன்றுகின்றது.

### மின் கார்களின் ஆரம்பம்

பெற்றோலியப் பொருள்கள் அதிகமாகக் கிடைக்காத முன்னொருகாலத்தில் நீராவியே எல்லா வித வாகனங்களிலும் எரிபொருளாகப் பயன்பட்டதுண்டு. அதுவும் நிலக்கரியினால் தான் நீராவி உருவாக்கப் பட்டது. நிலக்கரியில் உருவாக்கப்படும் நீராவியினால் தான் பெரும்பாலான ரயில்கள் ஓடின. பின்னர் டீசல் எஞ்சின்கள் வந்ததும் நிலக்கரிக்கு மவுசு குறைந்தது. நிலக்கரிக்குமுன் நீராவியந்திரங்களை இயக்குவதற்கு விறகுக் கட்டைகளே பயன்படுத்தப்பட்டன. இப்பொழுது மின்சாரத்தில் இயங்கும் ரயில்கள் பாவனைக்கு வந்துள்ளதால் நிலக்கரியைப் போலவே காலப்போக்கில் டீசல் பாவனையும் குறையலாம். பெற்றோல், டீசல் இல்லாத காலத்தில் லொறிகள் போன்ற வாகனங்களும் நீராவியில் தான் செலுத்தப்பட்டன. அதற்கு விறகுக் கட்டைகள் பயன்படுத்தப்பட்டன. சமீபகாலம் வரை வீதி திருத்துவதற்காக உபயோகிக்கப்பட்ட ஸ்டீம் எஞ்சின், பார ஊர்திகள் கூட விறகினால் தண்ணீர் சூடாக்கப்பட்டு அதிலிருந்து கிடைத்த நீராவியினாலேயே இயக்கப் பட்டன. அவை இப்போது டீசலினால் இயக்கப்படுகின்றன.

இன்று நீராவிக்கு பெரும்பாலும் விடை கொடுத்தாகிவிட்டது. டீசல், பெற்றோல் பாவனையும் ஓரளவுக்கு குறைந்து வருகின்றது. அதற்குப் பதிலாக சூரிய ஒளியும் வேறுவகையில் கிடைக்கும் மின்சாரமும் பயன்பாட்டுக்கு வந்து கொண்டிருக்கின்றது.

மின்சாரத்தில் இயங்கும் டிராம் வண்டிகள், ரொலி பஸ்கள் எல்லாம் முன்பு கொழும்பில் பல வீதிகளில் ஓடியதுண்டு. அவைகளை டீசலும் பெற்றோலும் ஒழித்துக்கட்டி விட்டன என்றாலும் பெற்றோல், டீசல் தட்டுப்பாடும் அதனால் ஏற்படும் சிக்கல்களும் அதிகரிப்பதால் விரைவில் மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களுக்கே அதிக மவுசு ஏற்படும் போல் தெரிகின்றது. ஆனால் பெரிய வாகனங்களை வீதிகளில் ஓட்டுவதானால் அதற்கான மின் வயர்கள் வீதிகளின் கரைகளில் அமைக்க வேண்டியிருக்கும். அந்த மின் வயர்களுடன் இணைக்கப்பட்டிருக்கும் விசையின் மூலமே வாகனங்கள் வீதிகளில் ஓடுவதை பார்த்திருக்கின்றோம். அதிலும் மின்சார துண்டிப்பு ஏற்படும் போது வாகனங்கள் அந்த இடத்திலேயே நிற்க வேண்டியேற்படுவதுண்டு. அதனால் அவ்வாறான சிக்கல்கள் ஏற்படாத விதத்தில் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கக்கூடிய மின் கலங்கள் (பற்றரிகள்) கண்டுபிடித்தாக வேண்டும். இப்போது மிதிவண்டிகளை மின்சாரத்தில் ஓடும் வகையில் வடிவமைக்கின்றார்கள். விரைவில் மோட்டார் சைக்கிள்களும் வரலாம். ஸ்கூட்டர் வகை மோட்டார் சைக்கிள்கள் ஏற்கனவே வந்துவிட்டன. ஆனால் இவைகள் ஒரு குறிப்பிட்ட நேரம் அளவில் அடிக்கடி மின்சாரம் ஏற்றப்பட வேண்டும்.

> **“டிட்ரொயிட் மின்கார்கள் 100 ஆண்டுகளுக்கு முன்பே வரவேற்பு பெற்றிருந்தன. அந்த நிறுவனம் மிக அப்போது வெற்றிகரமாக செயற்பட்டது. இப்பொழுது வெளிப்பட்டுள்ள இந்தக் காரானது அவர்கள் உற்பத்தி செய்த மிக முந்திய வடிவமாகும். 1920 ஆம் ஆண்டுகளில் அது மிகவும் புகழ் பெற்றிருந்தது. இதில் இப்போதும் பழைய அமைப்புகள் அப்படியே இருக்கின்றன.”**

வெகுநேரம் தாக்குப்பிடித்து மற்றும் வெகுதூரம் ஓடக்கூடிய வாகனங்கள் வருமானால் பெற்றோலியப் பொருள்களில் தங்கியிருப்பதை வெகுவாகக் குறைக்க முடியும். அவ்வாறான முயற்சியொன்று சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றுள்ளது. ஆனால் பெற்றோலியப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்க ஆரம்பித்ததும் முளையிலேயே கிள்ளப்பட்டுவிட்டது.

அவ்வாறு சுமார் 103 ஆண்டுகளுக்கு முன் பாவனைக்கு வந்து பெற்றோலியப் பொருள்களின் வரவால் மூலையில் விடுக்கப்பட்டிருந்த ஒரு மின்சாரக் கார் மீண்டும் வீதியில் ஓட வந்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாகும்.

அந்தக் காரானது இப்பொழுது துருப்பிடித்து கிடந்தாலும் காலத்துக்கு முந்திய தயாரிப்பு என்ற வகையில் இப்பொழுது சுமார் 50 ஆயிரம் பவுணுக்கு விற்கப்பட இருப்பதாக தகவல் வந்துள்ளது.

எதிர்காலத்தில் மின்சாரக் கார்களுக்கே வீதிகளில் அதிக வரவேற்பு இருக்கப்போகிறது என்பதற்கு கட்டியம் கூறுவதாக இந்த 20 ஆம் நூற்றாண்டு காணப்படுகின்றது.

அந்தக் கார் 25 மைல் வேகத்தில் ஓடக்கூடியதாக உருவாக்கப்பட்டிருந்தது. 100 மைல் தூரம் ஓடக்கூடிய அதற்கு சம 6 அடி உயரமான மின் கலம் பொருத்தப்பட்டு ஒவ்வொரு பிரயாணத்துக்கு முன்னரும் மின்சாரம் நிரப்ப வேண்டிருந்தது. இந்தக் காரின் தயாரிப்பு பெற்றோலியக் கார்கள் அதிகமாக பாவனைக்கு வந்ததால் 1920 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டு விட்டது. அந்தக் காலத்தில் அதன் விற்பனை விலை 1500 பவுண். இப்போதைய கணிப்பில் 85,000 பவுணாகும்.

தற்காலத்தில் தயாரிக்கப்பட்டுவரும் நிஸான் லீப்(NISSAN LEAF) போன்ற மின்சாரக் கார்களுக்கு 25,000 பவுண் விலை மதிக்கப்படுகின்றது. 20 ஆம்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பெற்றோலிய பொருள்களில் இயங்கும் கார்களை விட மின்சாரத்தில் இயங்கும் கார்களுக்கே மக்கள் மத்தியில் அதிக வரவேற்பு காணப்பட்டது. அதற்குக் காரணம் இயக்குவதற்கு இலகுவாக இருந்ததுடன் அவை சத்தம் குறைந்தும் காணப்பட்டன.

இந்தக் காரணங்களுக்காகவே போர்ட் மோட்டார் நிறுவனத்தின் உரிமையாளர் ஹென்றி போர்ட் தமது மனைவியின் பாவிப்புக்கென இரண்டு மின்சாரக் கார்களை வாங்கியிருந்தாராம். மின்சாரக் கார்கள் தொடர்பாக ஹொன்ஹாமஸ் ஏல விற்பனை நிறுவனத்தைச் சேர்ந்த ரூபேர்ட் பன்னர் என்ற கார்கள் தொடர்பான நிபுணர் கூறுகையில் மின்சாரக் கார்களுக்கு இப்போது நல்ல மவுசு ஏற்பட்டு வருகிறது. ஆனால் டிட்ரொயிட் மின்கார்கள் 100 ஆண்டுகளுக்கு முன்பே வரவேற்பு பெற்றிருந்தன. அந்த நிறுவனம் மிக அப்போது வெற்றிகரமாக செயற்பட்டது. இப்பொழுது வெளிப்பட்டுள்ள இந்தக் காரானது அவர்கள் உற்பத்தி செய்த மிக முந்திய வடிவமாகும். 1920 ஆம் ஆண்டுகளில் அது மிகவும் புகழ் பெற்றிருந்தது. இதில் இப்போதும் பழைய அமைப்புகள் அப்படியே இருக்கின்றன. தயாரிப்பு நின்றுவிட்டதால் இது பல காலமாக பழம் பொருள் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றது என்றார். இந்தக் காரை இப்போது வாங்கப் போகிறவருக்கு அது பயனளிப்பதாக இருக்கும். அவரைப் பார்த்து வேறு பலரும் இம்மாதிரி கார்களை வாங்க விரும்புவார்கள்.

மின்சாரக்கார்கள் பழைய படி மீண்டும் அதிகமாக வீதிகளில் ஓடத் தொங்குமானால் அவை வெகுதூரம் தடையின்றி ஓடுவதற்கான மின்சார வசதிகள் செய்யப் படுவது அவசியமாகும். அவைகளில் பொருத்தப்படும் பற்றரிகள் வெகுநேரம் தாக்குப் பிடிக்க கூடியவையாக இருக்க வேண்டும். பெற்றோல் நிரப்பு நிலையங்கள் போன்று ஆங்காங்கே மின்சார நிரப்பு நிலையங்கள் அமைக்கப்படுவதும் அவசியமாகும். அவ்வாறு அமையுமெனில் பெற்றோலியப் பொருள் பாவனை வெகுவாகக் குறைவது ஒரு புறமிருக்க அவைகளால் ஏற்படும் அரசியல் பொருளாதார தாக்கங்களிலிருந்தும் நாடுகள் விடுபட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபுரிமை நகரமாக

# யாழ்ப்பாணம்

ம.திருக்குமரன்


**மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாத்தல் எனும் பாரம்பரியமான விதிமுறைகள், அணுகுமுறைகளுக்கு அப்பாற் சென்று நகர அபிவிருத்தியின் பரந்த இலக்குகளை அடைவதற்கான ஒரு கருவியாக பண்டைய கட்டுமானங்கள், வரலாற்றிடங்கள், இயற்கைமரபுரிமைச் சொத்துக்கள், வழக்காறுகளை அவற்றின் பண்பாட்டுச் சூழலும், பண்பாட்டுப் பெறுமானமும் சிதையா வண்ணம் பாதுகாத்தல் என்ற எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டுள்ள செயற்றிட்டமாக இது அமைகிறது.**

**நமது பெருமை மிகுந்த மரபுரிமை**

மரபுரிமைச் சொத்துக்களில், மரபுரிமை நகரங்களின் இடம் முக்கியமானது. அண்மைக் காலத்தில் மரபுரிமை நகரங்கள் (Heritage cities) பற்றிய கவனக்குவிப்பு உலகமட்டத்தில் பெரியளவில் அதிகரித்துள்ளது. நகர மரபுரிமையைப் பாதுகாத்தலும் - முகாமை செய்தலும் என்பதை அடிப்படையாகக் கொண்ட இச் செயற்பாட்டில் அதிகம் தன்னை இணைத்துக் கொண்டுள்ள யுனெஸ்கோ (UNESCO) இதன் பொருட்டாக மரபுரிமைச் செயற்பாடுகளோடு தொடர்புடைய அமைப்புக்களான ICOMOS, IUCN, ICCROM என்பவற்றோடு, கட்டடக்கலை,- திட்டமிடல் அமைப்புக்களான UIA, IFLA மற்றும் OWHC எனப்படும் மரபுரிமை நகரங்களின் கூட்டமைப்பு, உலக வங்கி, ஐக்கியநாடுகள் சபையின் சுழற்றிட்டம், உலக ஞாபகப் பெருஞ்சின்ன நிதியம் ஆகிய பல அமைப்புக்களை உட்படுத்திய வரலாற்று நகர நிலவுருசார் முன்னெடுப்பை வரலாற்று நகரங்களை பேணிப் பாதுகாத்தல் தொடர்பில் கட்டமைத்துள்ளது. 2011 நவம்பர் மாதத்தில் கூடிய ஐ.நா பொதுக்குழு நகர மரபுரிமையை பாதுகாத்தல் தொடர்பிலான புதிய திட்ட முன்மொழிவை வரைந்தது. குறிப்பாக இது மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாத்தல் எனும் பாரம்பரியமான விதிமுறைகள், அணுகுமுறைகளுக்கு அப்பாற் சென்று நகர அபிவிருத்தியின் பரந்த இலக்குகளை அடைவதற்கான ஒரு கருவியாக பண்டைய கட்டுமானங்கள், வரலாற்றிடங்கள், இயற்கைமரபுரிமைச் சொத்துக்கள், வழக்காறுகளை அவற்றின் பண்பாட்டுச் சூழலும், பண்பாட்டுப் பெறுமானமும் சிதையா வண்ணம் பாதுகாத்தல் என்ற எண்ணக் கருக்களை அடிப்படையாகக் கொண்டுள்ள செயற்றிட்டமாக இது அமைகிறது.



மாளிகை மனை (மந்திரி மனை) - யாழ்ப்பாணம்



கண்டி தலதா மாளிகை

விரித்துக் கூறுவதாக இருந்தால் எதிர்காலத்திற்காக மரபுரிமையைக் (heritage for future) கையாளும் ஒரு சிறந்த - தேர்ந்த திட்டமிடல் முறையை இந்தச் செயற்றிட்டம் வலியுறுத்துகிறது. இவ்வகையில் மரபுரிமைகளைப் பாதுகாத்தலுடன் கூடிய அபிவிருத்தி (development with conservation) என்ற திட்டமிடல் எண்ணக்கரு அவர்களால் முதன்மைப்படுத்தப்படுகிறது. அவ்வகையில் குறித்த வரலாற்று நகரத்தின் இயற்கை, பண்பாடு மற்றும் மனித வளங்களை சரியாக இனங்காணல், அவற்றை அவற்றின் தனிச் சிறப்பியல்புகளோடு சமூக பண்பாட்டு அபிவிருத்தியின் மூல விசையாக மாற்றல் என்ற திட்டமிடல் வடிவமைப்பினை முன்னிறுத்தும் இவ்வெண்ணக்கரு, இச்செயற்பாட்டினை அரசு, அரசசார்பற்ற ஆர்வல அமைப்புக்கள், பொதுமக்கள் ஆகியோரின் பரந்த பிரக்ஞைபூர்வமான பங்களிப்புடன் கூடிய செயற்பாடாகக் கட்டியெழுப்பல் என்பனவற்றை இத்திட்டமிடல் கொண்டிருக்கவேண்டுமென எதிர்பார்க்கிறது.

மேலும் விரித்துக் கூறுவதானால், இந் நடைமுறையானது மரபுரிமைகளைப் பாதுகாத்தலுக்கான பாரம்பரியமான அரும்பொருளகப்படுத்தல் (museumization) நடைமுறைக்கு எதிரிடையானது - பதிலாக நடைமுறைச் சமூக பொருளாதார மாற்றங்கள், எதிர்காலத் தேவைப்பாடுகள் மத்தியில் மரபுரிமைகளை வாழும் பேறுகளாக்கல் (living heritage) என்பதை இது அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதாவது மரபுரிமைச் சொத்துக்களை அதன் பண்பாட்டுப் பெறுமானம், வெளிப்பாட்டுப் பெறுமானம் என்பன கெடா வண்ணம் இன்றைய நாட்தேவைகளின் அடிப்படையில் பயன்படுத்திக் கொள்ளல் - புதியவற்றின் தவிர்க்க முடியாத, பெருமைமிக்க செயற்பாட்டுப் பகுதியாக பழையதை கொண்டிருத்தல் என்பனவற்றை இதனடிப்படையாகக் கொண்டது. உலகம் முழுவதும் இவ்வகையில் நூறுக்கு மேற்பட்ட மரபுரிமை நகரங்கள் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையில் கண்டி நகரம் உலக மரபுரிமை நகரமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**தலதா மாளிகை, கண்டி**

கடந்த வருடம் இந்தியத் தலைநகரமான தில்லி (Delhi) யுனெஸ்கோவின் உலக மரபுரிமை நகரப் பட்டியற்படுத்தலை நோக்கி முதற்கட்டமாக அதன் தற்காலிகப் பட்டியலாக்கினுள் எடுத்துவரப்பட்டுள்ளது. மேற்படி செயற்பாட்டின் முன்னணி உழைப்பாளரும், கலைக்கும், பண்பாட்டிற்குமான இந்திய தேசிய அறக்கட்டளை (INTACH) அமைப்பின் தாபக உறுப்பினர்களுள் ஒருவரும், தில்லி நகரப் பெருந்திட்ட உருவாக்கத்தில் முக்கியமான பங்காளியும், கட்டடக் கலைஞரும், நகர வடிவமைப்பாளரும், மரபுரிமைச் சொத்துப் பேணுகை தொடர்பிலான சிறப்பறிவாளருமான ஏ.ஜி.கிருஸ்ண மேனன் தனிப்பட்ட இலங்கைப் பயணத்தின் பகுதியாக கடந்த சில வாரங்கள் முன்பதாக யாழ்ப்பாணம் வந்திருந்தார். அப்போது மேற்படி துறைகள் சார் யாழ்ப்பாணச் செயற்பாட்டாளர்களோடும், ஆர்வலர்களோடும் தமது செயற்பாடுகள் - எண்ணங்கள் - அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தார். குறிப்பாக தில்லியை மரபுரிமை நகரமாக ஆக்குதல் தொடர்பிலான அவரது செயற்பாட்டனுபவங்கள் பரந்த ஆழமான சிந்திப்பிற்கான வாயில்களை திறப்பனவாக அமைந்தன. குறிப்பாக மரபுரிமைச் சொத்தொன்று காணப்படுமிடத்தில் அதனை ஒரு பக்கத்தில் வைத்து விட்டு புதிய நகர நிர்மாணத்தை செய்வதல்ல: பதிலாக மேற்படி மரபுரிமைச் சொத்திலிருந்தே



மலேசியா

(19 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

த. அஜந்தகுமார்



# இயற்கையின் மொழிதல்



## மலையகப் பெண் எழுத்தாளர் பிரமிளா பிரதீபனின் கதைகள் - ஒரு பகிர்வு

இன்றைய உலகமயமாக்கல் சூழலிலும் விரைவான பெண்ணியத்தின் வளர்ச்சிப் பின்னணியிலும் தன் பண்பாட்டைக் காப்பதிலும் வெளிப்படுத்துவதிலும் ஒரு பெண் படைப்பாளி எதிர்க்கும் இடம் பற்றிய அறிகை அவசியமானது.

பேண் என்ற அடியில் இருந்தே பெண் என்ற சொல் பிறந்ததென்பர். பண்பாட்டை குடும்பத்தை, ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதில் அவற்றில் பரவசம் அடைவதில் பிரச்சினைகளை அதிகம் முகங் கொள்வதில் பெண் தலையாய பாத்திரமாக விளங்குகின்றாள்.

புதிய புதிய கோட்பாடுகளுக்குள் தன்னைப் புகுத்திக்கொண்டாலும் சுயமிழக்காத யதார்த்தத்தின் கதவுகளை உடைந்து தள்ளாத இயற்கையோடு பிணைத்துக் கொள்வதில் பெண் முனைப்புடன் இருக்க வேண்டும்.

இயற்கையோடு இணைந்து இசைந்து தான் எழில்கொண்டு மகிழ் வெய்துகின்றவளாகவும் தனது பண்பாட்டின் ஒவ்வாமைப் பக்கங்களை கிழித்தெறியும் ஆவேசம் கொண்டவளாகவும் விளங்கவேண்டும்.

தான் வாழும் பண்பாட்டின் உயிர்த்துடிப்போடு தனது அனுபவங்களை பிரச்சினைகளை அவள் பேசும் அழகு எம்மை அந்த இடத்தில் அந்தப் பிரச்சினையில் கலந்துவிடச் செய்கின்றது.

மலையகத்தின் புதிய பெண் படைப்பாளிகளில் கவனத்தைக் கோரிவரும் படைப்பாளியான பிரமிளா பிரதீபனின் சிறுகதைகள் பற்றிய அனுபவத்தை இப்பத்தி பேசுகின்றது.

பீலிக்கரை (2007), பாக்குப்பட்டை (2010) என்ற இரு சிறுகதைத் தொகுதிகளை இவர் வெளியிட்டுள்ளார். பீலிக்கரையில் 12 சிறுகதைகளும் பாக்குப்பட்டையில் 18 சிறுகதைகளுமாக மொத்தம் 30 சிறுகதைகளை இவர் தந்துள்ளார்.

இவரின் பெரும்பாலான இந்தச் சிறுகதைகள் மலையகப் பின்னணியில் தனது அனுபவத்தோடு விரிந்து செல்கின்றன.

இதனை எனது கதையில் வரும் பாத்திரங்கள் வெறும் கற்பனையல்ல அவர்கள் என்னுடன் உறவாடுபவர்கள் என்னைப் பாதிக்கச் செய்தவர்கள். அன்றாடம் நான் கண்டு மனதிற்குள் பதித்துக்கொண்ட புதியவர்கள். இவர்களின் உணர்வுகள்தான் என் கதைகளில் பரவியிருக்கிறது. எனது ஒவ்வொரு வரிகளும் என்னால் உணர்ந்து அனுபவித்து எழுதப்பட்டவைகள் என்று அவரே கூறிவிடுகின்றார்!

மலையக மக்களின் பிரச்சினைகளை, துன்பங்களை, அவர்கள் அடக்கப்படும் முறைகளை, அவர்களின் சடங்குகளுக்கு வரும் ஆபத்துகளை மிக எளிமையாக அவர்கதைகள் பேசுகின்றன. அதில் அவரது குரல் அதிகாரத்திற்கு எதிராக ஓங்கி ஒலிக்காவிட்டாலும் அடங்கியேனும் ஒலிக்கிறது என்பது முக்கியமானது. கூலி, இளிச்சான், சென்மகட்டிசாமி, மஞ்சள் நீராட்டல் ஆகிய கதைகள் அந்தவகையின. கூலி கதையின் சிறுவர்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு நல்ல விறகு சேர்த்துக் கொண்டு போக விறகு சரியில்லை என்று சாதாரணமாய் சொல்லிவிட்டு 20 ரூபாவுக்குப் பதிலாக 15 ரூபா கொடுக்க கதைசொல்லிப் பாத்திரம் அதைப் புறக்கணித்து விடுகின்றது.

'இளிச்சான்' -கதையிலே கங்காணி இளிச்சானுக்கு திருமணம் செய்து வைக்கவோ கொழும்புக் கூட்டிப்போகிறேன் என ஆசையூட்டிவிட்டு இறுதியில் அவனை அங்கு விற்றுவிட்டு வருகிறார். அங்கே வெளியில் நின்ற போது இளிச்சான் கொடுத்த ஒரு பணிசுக்காக நாய் அவனை உரசுகிறது. இவ்வளவு நாளும் கூலியின்றி சாப்பாட்டிற்கு மட்டும் வேலை செய்த அவன் மனதை பற்றி யோசியாது 'இயந்திரம்' என்று யோசித்த முதலாளிகளின் இதயமற்ற செயலைக் கூறுகின்றார்.

'சென்மகட்டிசாமி' கதையிலே எந்த விதமான அதிகாரமும் இல்லாமல் எல்லோரும் சேர்ந்து படையலிட்டு பலிகொடுத்து சாமி கும்பிட்டு மகிழ்ச்சியோடிருக்க 'வேலை செய்யாமல் கூத்தடிக்கிறார்கள்' என்று அவர்களின் ஒருநாள் மகிழ்ச்சிக்கும் ஆப்பு வைக்கப்படுகிறது. தமது வேலையையே பிரதானமாகக் கருதி தொழிலாளர்களின் சடங்கையோ மகிழ்ச்சியையோ எண்ணிப்பார்க்காத 'துரைத்தனத்தை' கூறுகிறார். 'அவளால் என்ன பேசிவிட முடியும்.......... எல்லோரும் கூடி மகிழும் சென்மகட்டி விழாவை இப்படிச் செய்துவிட்டார்களே' என்று பாக்கியம் ஏங்குவதுடன் கதைமுடிகிறது.

'மஞ்சள் நீராட்டல்' கதையிலே கோயிலின் கடைசித் திருவிழா அன்று மஞ்சள் நீரூற்றி விளையாடியபோது சுப்பிரமணியின் கடைசி மகன் சங்கர், துரையின் ஜீப்பிற்கு ஊற்றி விடுகின்றான். குழந்தையின் அச்செயலுக்குத் தண்டனையாய் வேலையிலிருந்து இரண்டு நாள்கள் சுப்பிரமணி நிறுத்தப்படுகின்றான். முதலில் கவலைப்பட்டாலும் 'யாருடா அவன் பைத்தியக்காரன்! வேல நிப்பாட்டிட்டா... போனா போகுது கோடி கொடுத்தாலும் இந்தச் சந்தோசம் கிடைக்குமா?' என்று மஞ்சள் நீராட்டலில் அவனும் இணைந்து கொள்கின்றான்.

தொழிலாளர்களைப் புரிந்து கொள்ளாத சிறுவனின் செயல் தானே என்று மன்னிக்கத் தெரியாத 'துரைத்தனம்' அதை அண்டிக்கொடுத்த, கங்காணியின் அரக்கத்தனம் வெளிப்படுத்தப்படுகின்றது. 'இன்னாம்பி' என்ற கதையும் கூலி குறைத்து மலையக சிறுவர்களை ஏமாற்றுவதைக் கூறுகிறது.

மலையக தொழிலாளர்களின் இந்தப் பிரச்சினைகளை பேசும் கதைகளிலே புரட்சிகள் எதனையும் செய்வதில்லையென்றாலும் தன்னளவான எதிர்ப்புகளை பாத்திரங்கள் வெளிப்படுத்துகின்றன. சில இடங்களில் அடங்கிவிடுகின்றன. இதுதான் யதார்த்தம் என்கின்ற போது கதைகளில் புரட்சியை ஏற்படுத்தி எதுவும் நிகழ்ந்து விடப்போவதில்லைத் தானே.

'மறைவைத் தேடி' என்ற கதை சிறிய லயக் காம்பறா வாழ்க்கையின் அவலத்தை கூறுவது. புதிதாகத் திருமணமானவர்கள் 'இடைஞ்சலான காம்பறாவில் சேரமுடியாமல் தவிப்பதையும் இறுதியில் மலைக்கு விறகு பொறுக்கும் சாட்டில் சென்று அங்கே சேர்வதையும் கூறுகிறார்.

[illegible]

ஒரு நீண்ட அறை, அதை மூன்றாகப் பிரித்த முன்பகுதி இஸ்தோப்பாகவும் நடுப்பகுதி கட்டில், துணிமணிகள் போடும் பெட்டியாகவும் கடைசிப்பகுதி குசினியாகவும் பாவிக்கப்படுவது தான் இங்கு வழமை'.

'வீடென்ற சொல்லுக்கு அப்பாற்பட்ட இந்தக் காம்பறாவில் தன்னைப்போல் இப்படி எத்தனை ஆயிரம் பேர் அவஸ்தைப்படுகிறார்களோ?,

என்ற வரிகள் மலையக மக்களின் பிரச்சினையை நம்முன் நிறுத்துகின்றன. சுவாரஸ்யமான கருவின் மூலம் இந்தப்பிரச்சினையை இவர் அழகாக வெளிப்படுத்தியுள்ளார்.

அதிகாரவர்க்கம் ஒருபுறம் சுரண்டுகிறது என்றால் கசிப்புக் காய்ச்சுபவர்கள் இன்னொரு பக்கம் சுரண்டி துன்பக்கிடங்கில் ஆழ்த்துவதை 'கசிப்புக்காரன்' கதை பேசுகின்றது.

மலையக மக்களின் பிரச்சினைகளை மாத்திரம் அன்றி அந்தப் பண்பாடுகளையும் இயற்கையில் தன்னைக் கரைக்கும் பெண்ணின் மனதையும் ஜீவகாருண்யம் நிறைந்த உறவுமுறைகளையும் அழகாகப் பேசுகின்றார்.

வாழைப்பட்டையிலே நீரோடும் பீலிக்கரை யோரப்பக்கத்தில் நிற்கும் பலா மரம், கதை பேசும் பௌர்ணமி நிலவு, வீறுகொண்ட காற்றின் நர்த்தனம், சுதந்திரக் குளியல் என்று ஒவ்வொரு கதையிலும் இயற்கையை இரசிக்கும், அதனோடு சேரும் பெண்மையின் மனம் அழகாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பலாமரம் தறிக்கப்படுகிறது என்னும் போது துடிக்கிறது. கோழி பலியிடப்படப்போகிறது என்னும் போது அழுகிறது. மாடு புண் வந்ததால் கசாப்புக்கடைக் காரனுக்கு விற்கப்பட்ட போது திகைக்கிறது. பலா மரத்தையும் கோழியையும் காப்பாற்றுகிறது இவரது கதைகள். ஆனால் 'சஞ்சுகம்மா' என்னும் மாட்டினை விற்பதைத் தடுக்கமுடியவில்லை இதில் எல்லாம் பெண்மையின் இயல்பையும் சிறுவர்களின் ஆசைகளையும் கதை சொல்லியின் மனிதாபிமானத்தையும் காணமுடிகின்றது.

ஹின்சி என்ற சிறுமியின் இயற்கை நேசமும் சின்ன ஆசைகளும் ஏனைய பிள்ளைகளோடு தன்னை ஒப்பிட்டு அடையும் சஞ்சலமும் ஓயாது முரண்படும் அடிபடும் பெற்றோரை திருத்தி விடுவதை கூறும் கதைதான் 'பௌர்ணமி நிலவு'.

"எனக்கும் நிறைய பிடிக்கும்பா உங்களைவிட அம்மாவை விட பானு, ரமேஷ், சீதா.. இவங்களைவிட ஏன் இந்த பொம்மையை விட ரொம்ப பிடிக்கும் அங்க பாருங்க.. நிலா எவ்வளவு அழகா

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையின்மை:
## விட்டு விலகும் பெருங்கதையாடல்

ந.மயூரரூபன்

அனைத்துவகை அறிவுசார் துறைகளுக்குமிடையே கட்புலனாகா நிலையில் ஒரு தொடர்பு நிலை பேணப்பட்டு வருகிறது என்பதை அல்லது ஒரு மறைமுகமான ஒருங்கிணைப்பு இருக்கிறது என்பதை 'காண்ட்' மையமாகக் கொண்ட சிந்தனைக் குழுமம், ஹேகலை அடிப்படையாகக் கொண்ட ஹேகலியம் மற்றும் மார்க்ஸிசம் போன்ற பெரும் சிந்தனைப் பாரம்பரியம் வலியுறுத்தி வருகிறது.

இங்கு மனித குலம் மீட்சியடைதல் என்னும் கிறிஸ்தவ மீட்சி முதல் மார்க்ஸியத்தின் கற்பனை உலகுவரை அடக்கும். ஆனால் இந்தக் கோட்பாடுகள் இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர் தமது 'நம்பகத்தை' இழந்துவிட்டன என லியோடார்ட் குறிப்பிடுகிறார். இன்னொரு வகையில் இதனை பின்நவீனத்தன்மையை மிகை நிலைக் கதையாடல்கள் (Mata Narratives) மீதான அவநம்பிக்கை என 'கிறிஸ்தோப்பர் பட்லர்' குறிப்பிடுகிறார்.

பொதுவாக பின் நவீனத்துவக் கோட்பாட்டின் முக்கியமான பகுதி அவநம்பிக்கை சார்ந்தது. அதனைத் தொடர்ந்து பேணி வருவது. ஆனால் மிகை நிலைக் கதையாடல்களாக அமைவன எல்லாம் கலாசார சூழமைவுகளை நியமப்படுத்துவதாகவும் அதற்குரிய அதிகாரத் தளத்தை வழங்குவனவாகவுமே இருந்து வந்துள்ளன.

போர் ஓர் இனம் கொண்ட பெரும் அதிர்ச்சி என்பவற்றால் முழுமையாகப் பொதுமைப்படுத்தக் கூடிய அனைத்தின் மீதும் அவநம்பிக்கை கொள்வது, இன்றைய எழுத்தாளர்களின் இயல்பாகவும் கட்டமைந்தது. இதுவே பொதுவாக பின்நவீனத்துவ குணமாகவும் கணிக்கப்படுகிறது.

இந்த நிலையானது, குறித்த பெருங்கதையாடல்களுடன் பொருத்த முடியாதவர்கள் - அடக்கப்பட்டவர்கள் - விளிம்புநிலைப்படுத்தப்பட்டவர்கள் மீதான அக்கறையை சார்பு நிலையை ஏற்படுத்துவதாக அமைந்தது. மேலாதிக்கப் பெருங்கதையாடல்களுக்கான எதிர்ப்பு - எதிர்நிலை கட்டமைந்து கொள்கிறது. இந்த அடிப்படையில் ஈழத்து தமிழ் பாடல்களின் தன்மையை கவிதைகளில் இவ்வகையான போக்கினை பெருங்கதையாடல்களுக்கான எதிர்ப்பாக அடையாளம் காணமுடியும். குறிப்பாக கடந்த அண்மித்த காலங்களில் வெளியான கவிதைகள்; குறித்த ஏதேச்சதிகாரத்தைக் கேள்விக்குட்படுத்துவதாகவும் - பெரும்பான்மை இனம் கொண்டுள்ள பொதுக்கருத்தியல் சார் கதையாடல்களுடன் பொருத்த முடியாதுதாகவும் அடக்கப்பட்ட சிறுபான்மை இனம் மீதான அக்கறையை வெளிப்படுத்துவதாகவும் அமைந்திருப்பதை நாம் கண்டுகொள்ள முடியும்.

இங்கு ஃபூக்கோ சொல்லுகின்ற மூல அறிவு என்பது, இந்த பெருங்கதையாடல் எதிர்ப்பு அல்லது அவநம்பிக்கையைக் கட்டமைப்பதில் என்ன பாத்திரத்தை வகிக்கப் போகிறது என்பதையும் சில கவிதைகளினூடு காண்போம். மூல அறிவு என்பது சில பொருள்களின், சில இயல்புகள் தொடர்பாக எமக்கு கற்பிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அறிவு. இது எமது சிந்தனையைத் தடை செய்யும் அந்நிலைச் சேகரமாகவும் அமையும்.



*தேவதைகாள்!*
*அர்த்தமிழந்துபோன எங்களுக்கான*
*துயர் மிகுந்த பிரார்த்தனைகளையும்*
*மீளத்தாரும்.*
*வாழ்வினைத் தொலைத்தலையும்*
*பைத்தியக்காரனின் நாள்குறிப்புகளில்*
*அவற்றினைச் சேமித்தல் வேண்டும்*

[ஓவியத்தின் கோடுகளில் நீளும் வாழ்ந்து போனவனின் குறிப்பு, தானா விஷ்ணு]



*கூடி நின்று கூத்துப் பார்த்துவிட்டு*
*விலகிப் போகும் மழைமேகம்*
*தூறலோவென ஐயங்கிளம்பிய*
*மந்தாரம் விலக*
*சிரிக்கும் வெயில்*
*புழுதியள்ளிப் பறக்கும் காற்றிற்கும்*
*வேடிக்கையாகிறது*
*நிலத்தின் வேதனை*

*[இருப்பு ந.சத்தியபாலன்]*

*வெறிச்சோடின ஒரு நூறாயிரம் ஆண்டுகள்*
*இனிக்காரணமில்லை*
*காத்திருக்க எவருமில்லை என்றபோதும்*
*பின்னும் கிடந்தழுந்தின நாள்கள்*
*தாய்வெந்து முதுமை கிடந்த இடத்தில்*
*அவனில்லை*
*அவரில்லை*
*எவருமில்லை*

*[தாயுரை-2 பா.அகிலன்]*

இந்த மூன்று கவிதைகளின் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகள் அவநம்பிக்கையால் நிறைந்தது. வாழ்வினைத் தொலைத்தலையும் பைத்தியக்காரன் என தானா விஷ்ணுவும், இருப்பு என்பது வேடிக்கையாகிறது வேதனையாக என ந.சத்தியபாலனும், எவருமில்லை பாழ் என பா.அகிலனும் மிகை நிலைக் கதையாடல்களின் எதிரணியில் நின்று அவநம்பிக்கை எனும் பின் நவீனத்துவ சொல்லாடலின் ஒரு பகுதியை சொல்லுகிறார்கள். இங்கு போரின் பின்னரான வாழ்வின் இருப்பு, அடக்கப்பட்ட வாழ்விழந்து போன மக்களின் இருப்பு பேசப்படுகிறது. இது, எமது பெருங்கதையாடல்கள் இதுவரை தந்த நம்பிக்கையுடன் பொருந்தாத ஒன்று.

ஆனால் படைப்பாளிகள் கொண்டுள்ள மூல அறிவு இந்தக் கவிதைகளில் தம்மை எப்படி உருவாக்கியிருக்கின்றன என்பதை இந்தக் கவிதைப் பகுதிகளின் வழியாகப் பார்க்க முடியும். பொதுவான கருத்தியல் தளம் சிறுபான்மையினருக்கு குறித்த தன்னிமைசார் மூல அறிவை-சார்பு நிலையை கட்டமைத்துவிடும் இயல்பு கொண்டது. இருந்தும் ஒரு வகையில் தன்னினம் சார் மூல அறிவை உள்வாங்கியதாகவே இவை அமைந்திருக்கின்றன. அதேபோல் சில சொற்கள் தரும் மூல அறிவு என்பது பொதுத்தளம் கொண்டது. தேவதைகாள், 'கூடி நின்று கூத்துப் பார்த்துவிட்டு, பாழ்' என இவர்களின் சொற்கள் இயல்பான வழக்கில், சமூக வாழ்வு தருகின்ற அர்த்தங்களைத் தருகின்ற மூல அறிவுச் சொற்களாக அமைந்துவிடுகின்றன. இவை பொதுப்புத்திக்கான ஒரு தளத்தை உருவாக்கினாலும் போர் முடிந்த பின்னர் அகவய நிலை கட்டமைத்துக்கொள்ளும் அவநம்பிக்கையை தொட்டுச் செல்லும் மனப்படிமங்களாக அமைந்துள்ளன. இவை பெருங்கதையாடல்கள் கொண்டுள்ள அதிகாரக் கோட்பாடு நியமப்படுத்தல்களையும், கலாசார கருத்தொருமையையும் விட்டு விலகிச் செல்லும் சாலையிலேயே பயணிக்கின்றன.

# மரபுரிமை நகரமாக.....

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவ்விடத்தின் வடிவமைப்பானது ஆரம்பமாகவேண்டும் என்ற சிந்தனையை அவர் கொண்டிருந்தார்.

**ஹுமாயூன் கல்லறை, தில்லி**

துரதிர்ஷ்டவசமாக நம்மைச் சுற்றி இவ்வகைப்பட்ட செயற்பாடுகள் நிகழ்ந்து கொண்டிருக்கையில், தீவிரமான நகர வடிவமைப்பாளர்களால் இன்று பண்பாட்டுத் தனியடையாளமற்ற ''கட்டடக் காடாக'' விமர்சிக்கப்படும் சிங்கப்பூரை எமக்கான முன்மாதிரியாக நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இதில் மேலும் சுவாரஸ்யமான விடயமென்னவெனில் சிங்கப்பூர், டுபாய் போன்ற மரபுரிமைகள் இல்லாதவிடங்கள் அதையுணர்ந்து அதற்கான முதலீடுகளுக்காக அதிக சிரத்தையையும், பணத்தையும் செலவிட்டுக் கொண்டிருக்கையில் நாமோ இவை எதுவுமறியாமல் யன்னலை இறுகப்பூட்டிவிட்டு அமர்ந்திருக்கிறோம்.

இவற்றின் பின்னணியில் நின்று யோசிக்கும் போது யாழ்ப்பாணம் இதன் பலவேறு அம்சங்கள் காரணமாகவும் ஒரு மரபுரிமை நகரமாக [illegible] செய்யப்படக்கூடிய நிலையிலேயே உள்ளது. சந்தேகமின்றி நீண்ட [illegible] பாரம், அது சமைத்துள்ள இயற்கை, பண்பாட்டு மரபுரிமைகள், மனித வளங்கள் என்பனவற்றை அது கொண்டேயுள்ளது, என்றபோதும் முப்பதுவருடப் போர், இன்றுவரை எம்மிடையே தொடரும் மரபுரிமை தொடர்பான அசட்டை, இவை தொடர்பிற் செயற்பட வேண்டியவர்களின் வாளாதிருத்தல் அல்லது வெவ்வேறு துறைசார்-திணைக்களங்கள்சார் இணை தொழிற்பாடின்மை முதலான பல காரணங்களால் எஞ்சியிருக்கும் மரபுரிமைகளையும் இழக்கும் நிலைக்கு நாம் வந்துவிட்டிருக்கிறோம். இப்போது கூட நாம் விழித்தால் உலக மரபுரிமைப் பட்டியலுள் யாழ்ப்பாணத்தையும் இடம்பெற வைக்க முயற்சிக்கலாம். அதற்கான பெரிய தேவை பரந்துபட்ட விழிப்புருவாக்கம், மத்திய திட்டமிடுகை - [illegible] குழுவாதங்கள் [illegible] குறைந்தபட்சம் மற்றவர்களை செவிமடுக்கும் மாண்பு. ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரொனல்டோவின் மறுபக்கம்

■ டிலீப்

விளையாட்டு வீரர்கள் எப்போதுமே பிரசித்தமானவர்கள். அத்துடன் அவர்களது வருவாயும் ஏனையோரைத் திக்குமுக்காடச் செய்யும் வகையில் அமைந்திருக்கும். ஆனால் விளையாட்டு வீரர்கள் ஒவ்வொருவரினதும் கடந்து வந்த பாதைகளைத் திரும்பிப் பார்த்தால் ஆச்சரியங்கள் நிறைந்ததாகவே இருக்கும்.

சர்வதேச ரீதியில் பெயரைச் சம்பாதித்துக் கொண்ட பல பிரபல வீரர்கள் தங்களது திறமைகள் மூலமே முன்னுக்கு வந்தவர்கள். சலுகைகள் மூலம் சர்வதேச அணிகளுக்குள் நுழைந்தவர்கள் யாராலும் திரும்பிப் பார்க்கப்படுவதில்லை. தங்களது திறமைகளை நிரூபிப்பதற்கு ஒவ்வொரு வீரர்களும் மிகக் கடுமையாகப் பாடுபடுகின்றனர். ஒவ்வொருவரும் தங்களுக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பிடித்து முன்னுக்கு வர முயல்கின்றனர். அதிர்ஷ்டத்தால் கிடைக்கின்ற வாய்ப்பையும் பயன்படுத்தி தங்களையும் சர்வதேச அணியில் இணைத்துக் கொள்ளவே ஆசைப்படுகின்றனர்.

போர்த்துக்கல் அணியின் நட்சத்திர கால்பந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவின் கடந்த காலமும் அவ்வாறானதொன்றே. 1985 ஆம் ஆண்டு பிறந்த ரொனால்டோ இன்று உதைபந்து அரங்கில் விலை மதிக்க முடியாத வீரர். போட்டி போட்டுக் கொண்டு உதைபந்துக் கழகங்கள் அவரை வாங்க நிற்கின்றன. ஆனால் ரொனால்டோவின் மறுபக்கம் யாருக்கும் கிடைக்காதது.

பல விசித்திரமான மனிதர்களையும், இப்படிப்பட்ட மனிதர்களையும் இந்த உலகம் கொண்டிருக்கின்றது என்று எண்ணத்தோன்றுமளவுக்கு இந்தக் கதையில் பல திருப்பங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

''18 வயதுக்குக் கீழ்ப்பட்டோருக்கான இறுதி ஆட்டமொன்றில் நாம் இருவரும் எமது அணிக்காக விளையாட இருந்தோம். இருவருமே சிறப்பாக விளையாடுபவர்களாக இருந்தோம். இந்தச் சந்தர்ப்பத்தில் போட்டியைப் பார்வையிடுவதற்காக வருகை தந்த 'ஸ்போர்ட் லிப்ஸன்' (SportLipson) விளையாட்டுக் கழக முகாமையாளர் யார் அதிக கோல்களைப் போடுகின்றனரோ அவரைத் தனது அணிக்காக இணைத்துக் கொள்வதாக வாக்களித்தார்.

போட்டியில் 3-0 கோல் வித்தியாசத்தில் எமது அணி வெற்றி பெற்றது. முதல் கோலை நானும் இரண்டாவது கோலை எனது நண்பன் அல்பர்ட்டும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தோம்.

மூன்றாவது கோலின் போது அனைவரையும் ஆச்சரியத்துக்குட்படுத்திய ஒரு நிகழ்வு நேர்ந்தது. அல்பர்ட் கோல் காப்பாளரையும் தாண்டி பந்தைக் கொண்டு சென்றிருந்தார், நானும் அவருக்குப் பின்னால் ஓடிக் கொண்டிருந்தேன். கோலைப் பெற்றுக்கொள்வதற்கு, அல்பர்ட் பந்தைக் கலால் தட்டி விடுவது போதுமானதாக இருந்தது. ஆனால் அவர் பந்தை எனக்குப் 'பாஸ்' பண்ணி கோல் போடும் வாய்ப்பை எனக்களித்தார்.

போட்டி முடிவடைந்த பின்னர் நான் அவரிடம் அவ்வாறு செய்தமைக்கான காரணத்தைக் கேட்டேன். 'எம்மில் நீயே மிகச் சிறப்பாக விளையாடக் கூடியவன், எனவே கழகத்தில் சேர்வதற்கு என்னை விட நீயே அதிக தகுதியானவன்' என்று பதிலளித்தார்.''

இவ்வாறு ரொனால்டோ பத்திரிகையாளர் ஒருவரின் நேர்காணலில் தெரிவித்திருந்தார். ரொனால்டோவின் இந்த அறிவிப்பின் பின்னர் பத்திரிகையாளர் நிகழ்வின் உண்மை நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அல்பர்ட்டை நாடினார்.

அல்பர்ட் ''ஆம் நிகழ்வு உண்மையானதே, அந்த நிகழ்வுக்குப் பின்னர் ரொனால்டோ விளையாட்டுத் துறையில் தொடர்ந்து முன்னேறினார், நான் வேறு தொழில்களில் தேர்ச்சி அற்றவன் என்பதால் வேலை வாய்ப்பற்று இருக்கின்றேன்'' என்று பதிலளித்தார்.

அப்பொழுது பத்திரிகையாளர் ''அவ்வாறெனில் வீட்டுத்தேவைகளுக்கான பணத்தையும், இந்தப் பெரிய வீட்டையும், வீட்டுக்கு முன்னால் நிற்கும் புது மொடல் காரையும் தொழிலின்றி எவ்வாறு பெற்றுக்கொண்டீர்கள்?'' என்ற கேள்விக்கு அல்பர்ட் அளித்த பதில் ''அனைத்தையும் தெளிவுபடுத்துவதாக இருந்தது. அனைத்துமே கிறிஸ்டியானோ ரொனால்டோவிடமிருந்து..!!'' என்றிருந்தது அவரது பதில்.



தனக்குக் கிடைத்த பொன்னான வாய்ப்பை அல்பர்ட் விட்டுக் கொடுத்ததனால்தான் இன்றைய உதைபந்தாட்ட உலகம் ரொனால்டோ என்ற வீரனைக் காண்கின்றது.

இன்னும் எத்தனையோ ரொனால்டோக்கள் இருப்பார்கள். ஆனால் அல்பர்ட்கள்தான் உலகில் இப்போது இல்லை.

(நண்பனின் பதிவிலிருந்து)

★ ★ ★

# இயற்கையின்....

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுத்தமா பிரகாசமா.. எனக்கு நிறைய பிடிக்குதுப்பா ' நிலா பார்த்துக்கிட்டே படுக்கணும். அம்மா என் தலையை கோதிக்கிட்டே கதை சொல்லணும், உங்க மடியில் இருந்து சாப்பிடணும், அப்புறம் மூணு பேருமா பாட்டுப்பாடணும் ஓடிப்பிடித்து விளையாடணும், தலையணை சண்டை போடணும், பூக்கன்று வளர்க்கணும். இப்படி நிறைய ஆசையிருக்குப்பா ஆனா எதுவுமே உங்களுக்கு தெரியாது. கேட்கவும் மாட்டீங்க, பானுவோட அம்மாவும் அப்பாவும் சண்டை போடவே மாட்டாங்களாம், அவக்கு எவ்வளவு சந்தோசம் தெரியுமா?'' என்ற குழந்தையின் வார்த்தைகள் மிக ஆழமானவை.

கதாசிரியரின் உளவியல் ஆழத்தையும் குழந்தைகள் தொடர்பான எண்ணங்களில் பெற்றோர் குழந்தைகளை கவனிக்காத உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத தன்மையைக் காட்டுகின்றது.

பெண்ணின் இயல்புகளை பல்வேறு பெண் பாத்திரங்களை எமக்கு அறிமுகப்படுத்தி பேச வைக்கிறார்.

தாயாக, மனைவியாக, வயதுக்கு வந்த பெண்ணாக, ஆசிரியையாக, காதலியாக அழகற்ற ஒருத்தியாக, முதிர் கன்னியாக அவர் காட்டும் பெண்கள் பலர். அவர்கள் சந்திப்பனவும் எடுக்கும் முடிவுகளும் கதாசிரியரின் ஆளுமையை நிரூபிப்பன.

'இதோ எந்தன் நெஞ்சோடு' கதையில் கணவனை இழந்த பெண் அவர் நினைவில் ஏங்கித் துடிக்கிறாள். திடீரென வரும் அவள் பள்ளித்தோழன் தன்னை திருமணம் செய்யும்படி

கேட்க கணவன் இறந்தும் விடாப்பிடியாக தாலி, குங்குமத்தை அணிந்திருக்கும் தன்னை சமூகம்,ஏன் அம்மாவும் என்ன பேசுவார்களோ என அஞ்சுகிறாள். விதவையான தாய் அவள் உணர்வை அறிந்து அவளுக்குத் திருமணம் செய்து வைக்க முடிவு எடுக்கிறாள். இது 'யுகசந்தி' கதையில் கீதாவின் மறுமண முடிவை ஆதரிக்கும் கௌரிப்பாட்டியைக் கண்முன் நிறுத்துகின்றது.

'மரத்தில் இருந்து விழுந்த வனை மாடு முட்டியகதையாய் இது என்ன கொடுமையான சட்டங்கள்' என்று தாலியை குங்குமத்தை இழக்காத துணிச்சலையும்

'அப்பா போனபின் உப்பு சாப்பிடுவதையே நிறுத்திய விரதக்காரி அவள். தன்னைப் போலவே மகளும் இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கிறாளோ.

என்று இவள் நினைக்க தாய் எடுக்கும் முடிவு, தான் விதவைக் கோலத்தால் பட்ட துன்பத்தை மகள் படக்கூடாது என்ற பாசத்தையும், சமூகம் மீதான எதிர்ப்பையும் காட்டுகிறது.

'சபலம்' என்ற கதை 35 வயதாகியும் கறுப்பு என்றும் பெரிய உடல்வாகு என்றும் முதிர் கன்னியாயே உள்ள பெண்ணொருத்தி இரவுப் பஸ் பிரயாணம் ஒன்றில் அருகில் இருந்த ஆண் ஒருவனின் தீண்டலால் சபலம் அடைந்து அத்தீண்டலை இரகசியமாய் விரும்பும் தடுமாறும் பெண்ணின் மனதைக் கூறுகிறது.

'என்ன செய்ய நானும் ஒரு பெண்தானே எனக்கும் உடலியல் தேவைகள் இருப்பதில் பிழையில்லையே.

கிடைத்த ஓரிரு ஸ்பரிச சந்தர்ப்பங்களையும் என் கற்பைக் காப்பாற்றும் ஆசையில் [illegible] இனியும் [illegible]. பாவம் என் உடல் கொஞ்சம் அனுபவித்துத்தான் பார்க்கட்டுமே கற்போடு இருந்தென்ன? சிலையா வடிக்கப் போகிறார்கள்?' என்று பேசுகிறாள். இது அவளை முதிர் கன்னி ஆக்கிவிட்டு அந்தரங்க ஆசைகளை நிறைவேற்ற வழிசெய்யா சமுதாயத்தின் மீதான சாட்டை அடி எனலாம். பிரமிளா தெளிவத்தை ஜோசப் கூறியது போல் 'அதிர்வுகளைக் கூட ஓர் அநாயாசமான எளிமையுடன் வெளிப்படுத்திவிடுகிறாள்'

வயதுக்கு வந்ததும் அவள் மீது கட்டுப்பாடுகள் திணிக்கப்படுவதை புரியவில்லை, காற்று மாதம் ஆகிய கதைகள் பேசுகின்றன. சிறுமியின் மனநிலையை ஏக்கத்தோடு இக்கதைகள் பேசுகின்றன.

இவர் காட்டும் மாந்தர்கள் எம் மனதுக்குள் புகுந்து சித்திரவதை செய்கின்றார்கள். 'அப்பம்மாவின் மூக்குத்தி' கதையை முடிக்கும் விதம் இவரின் அங்கத உணர்வையும் கோபத்தையும் காட்டுகிறது.

இவரின் சிறுவர்களின் பின்னால் நாங்களும் ஓடுகிறோம். பெண்ணின் உணர்வுகளோடு கலக்கின்றோம். தனிமைத் தாகத்தில் துடிக்கும் கிறுக்குக் கிழவனோடு நாமும் துடிக்கிறோம் மீலிக்கரையில் நாமும் குளிக்கும் சுகம் பெறுகிறோம்.

மலையகத்தின் இப்புதிய வரவான பிரமிளாவுக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது. எளிமையாக 'கஷ்டங்களை' சொல்லும் இவரது ஆற்றல் அனுபவம் இன்னும் வளம் பெறட்டும்.

'நான் தனியாகப் போகிறேன்' சுமைகளுடன் ஒரு சிறகு ஆகிய கதைகள் கணவனின் புரிந்துணர்வை அன்பை அவாவும் ஒரு பெண்ணின் பொதுவான பிரியமான பதிவுகளாக அமைகின்றன.

யாரைத்தான் நம்புவதோ, குளியல் புரியவில்லை ஆகிய கதைகளில் பெண்ணைப் பாலியல் பண்டமாகப் பார்க்கும் ஆணின் வக்கிரம் கூறப்படுகின்றது. அதில் எல்லாம் தன் எதிர்ப்பைக் காட்டாமல் கதா ஆசிரியர் விலகுகின்றார்.

'கங்கா' என்ற கதை குறியீடு கலந்த நல்ல கதை எனலாம். கஜீ பாய்தல் விளையாட்டில் இரண்டு அணிகளுக்கும் சமமான ஆள் இல்லாவிட்டால் மரத்தின் கம்பு வைத்து சமப்படுத்துவார்கள். அதற்குப் பெயர்தான் கங்கா, ஒருவர் அவுட் ஆனதும் கம்பை எறிந்துவிட்டு அதற்குப் பதிலாக விளையாடலாம். கங்கா அப்போது மதிப்புக் கெடுகிறது. சீனாவின் தகப்பன் அவன் தாயை 'கங்காவாக' பயன்படுத்துவதை இலாவகமாக கூறுகிறார்.

இவரது கதைகள் மலையகப் பண்பாடுகளோடு கலந்தவை. இயற்கையோடு, விளையாட்டுக்களோடு, கருணையோடு கலந்து இவர் கதை சொல்லுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்துவரும் வீதி விபத்துக்கள்

## அசமந்தப் போக்கில் அதிகாரிகள்

பஞ்சவர்ணன்



### கருத்து 1

தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. போக்குவரத்து விதிமுறைகளை மீறுவதே முக்கிய காரணங்களில் ஒன்றாக இருக்கின்றது. போக்குவரத்தைக் கண்காணிக்கின்ற துறையினரது சேவையிலே குறைபாடு இருக்கின்றதோ என்ற சந்தேகத்தை இது உண்டாக்குவது இயல்பே. பூர்த்தி செய்வதும் கூட இதற்குக் காரணமாகி விடுகின்றது. போக்குவரத்து விதியை ஒருவர் மீறும் போது அப்பாவியான இன்னொருவரும் பாதிப்புக்கு உள்ளாவது பரிதாபமானதே! எனவே போக்குவரத்து விதி முறைகளை சாரதிகள் சரிவரப் பின்பற்ற வேண்டும், அதனை மனச்சாட்சிக்கு கட்டுப்பட்டு பொலிஸார் சரிவரக் கண்காணித்தல் வேண்டும். இவ்வாறான இறுக்கமான போக்குவரத்துக் கட்டுப்பாடு காணப்படுமானால் வெகுவான வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்கின்றார் பொது மகன் ஒருவர்.

### கருத்து 2

யாழ்ப்பாணத்தில் தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன. மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் இதில் கூடிய அளவில் காணப்படுகின்றன. அதிலும் விபத்துக்கு உள்ளாவோரில் இளைஞரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதுடன் மாலை நேரங்களில் ஏற்படும் விபத்துக்களுக்கு, போதை நிலைமையே முக்கிய பங்கு வகிக்கின்றது. என்கிறார் சட்ட வைத்திய அதிகாரி சிவரூபன். முதலாவது நபருடைய கருத்தும் இரண்டாவது நபருடைய கருத்தும் சட்ட விதிகளுடன் சம்பந்தப்பட்டுள்ளது. இளைஞர்களிடையே ஏற்படும் விபத்துக்கள் பெரிதளவாக இருப்பதற்கு காரணம் அவர்களின் வயது ஆகும். சிந்தனையைத் தாண்டிய வேகம், விவேகம் அற்ற செயற்பாடு, அதற்கும் மேலாகப் போதை நிலை என்பன காரணமாகின்றன. இவை தடுக்கப்படக் கூடியன. தடுக்க வேண்டியவர்கள், கண்காணிக்க வேண்டியவர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்யும் பொழுது விபத்துக்களைக் கணிசமாகக் குறைக்கலாம். அதையும் தாண்டி சாரதிகளின் மனநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

### வாழ்க்கையைக் காக்க வேண்டும்

உதாரணமாக தலைக்கவசம் அணிந்து மோட்டார் சைக்கிள் ஓட வேண்டும் என்பது சட்டம். ஆனால் நாம் சட்டத்திற்காகவே தலைக்கவசம் அணிகிறோம். நம்மைப் பாதுகாப்பதற்கு சட்டம் வகுக்கப்பட்டது. சட்டத்தை மதிக்காமல், கெட்டித்தனமாக, பொலிஸில் பிடிபடாமல் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள் ஓடிவந்து கெட்டித்தனம் காட்டுவது முட்டாள்தனமான செயலாகும். மோட்டார் சைக்கிளில் செல்லும் போது பலர் தமது சிறுபிள்ளைகளுக்கு தலைக்கவசம் அணிவிப்பதில்லை. அது மட்டுமல்லாமல் ஒரு தடவை அடிபட்ட தலைக்கவசத்தை மறுதடவை பாவித்தல் கூடாது. ஏனெனில் அதனுள் காணப்படும் பாதுகாப்பு வலைப்பின்னல் இழை வடிவங்கள் ஒருதடவை அடிபட்டதும் சேதமடைந்து விடும். அவை கண்ணிற்கு வெளியே தென்படமாட்டாது. இப்படியான அறிவுறுத்தல்கள் தெரியப்படுத்தப்படல் வேண்டும்.

### பாடசாலையில் கற்பிக்க வேண்டியது

போக்குவரத்து விதி முறைகள் பற்றியும் விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள், அவ்வாறான காட்சிகள் என்பவற்றையும், விபத்துக்களால் ஏற்படும் பாதிப்புக்கள், அங்கவீனங்கள், மூளைப்பாதிப்புக்கள் என்பன பற்றியும் பாடசாலைமட்டத்திலேயே கல்வியூட்டப்பட வேண்டும் என்கிறார் சட்ட வைத்திய அதிகாரி. பரீட்சைக்கான கல்வி முறைமட்டும் இப்பொழுது பாடசாலைகளில் காணப்படுகின்றன. இவற்றால் மாணவர்களுக்கு வாழ்க்கைக்கு வேண்டிய விடயங்கள் கிடைப்பதில்லை. சிலமணிநேரத்தை இப்படியான கல்வி முறைக்காகப் பாடசாலைகள் ஒதுக்குமானால் அவர்களும், அவர்களது குடும்பங்களும் கூட விபத்துக்களில் இருந்து தப்ப வாய்ப்பாக அமையும். இப்படியான கல்வி முறை முக்கியமாக நடைமுறைப்படுத்த வேண்டியது சாரதிப் பயிற்சிப் பாடசாலைகளிலேயே ஆகும். ஆனால் அவர்கள் வியாபார சிந்தனையாளர்களாகக் காணப்படுவது வேதனைக்குரியதே. இப்படியான கல்வி முறையை அங்கே அமுல்படுத்தப்படுமானால் மேலும் ஒருபடி முன்னேற்றம் காணலாம்.

### வீதி ஒழுங்கை கடைப்பிடித்தல்

காப்பற் வீதிகளாக மாற்றம் காணும் போது ,அதில் பயணிக்கும் வாகனங்களும் வேகம் காணுகின்றன.எனவே காப்பற் வீதிகளில் வீதிச் சமிக்ஞைகள்,எல்லைக்கோடுகள் வீதிக் குறியீடுகள்,அறிவுறுத்தல் பலகைகள் ,போக்குவரத்துப் பொலிஸாரின் கண்காணிப்பு போன்றவையும் உடன் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.நகரப் பகுதியில் ஒரு வழிப்பாதைகள் காணப்படுகின்றன.அதனை மீறுபவர்கள் பலரையும் காணக்கூடியதாக உள்ளது. இவற்றை கட்டுப்படுத்தாவிடின் விபத்துக்களின் அதிகரிப்பை தவிர்க்க முடியாமல் தான் போகும்.

### முன்னேற வேண்டிய சுகாதாரத் துறை

விபத்துக்குள்ளான பெரும்பாலானவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே அனுமதிக்கப்படுவதாக புள்ளி விவரங்கள் கூறுகின்றன. கடந்த வருடம் அனுமதிக்கப்பட்டவர்களது எண்ணிக்கை முன்னைய ஆண்டுகளை விட பலமடங்காக அதிகரித்துள்ளது. ஆனால் வைத்தியசாலையில் தனியான விபத்துச் சிகிச்சைப் பிரிவு இல்லாமல் காணப்படுவது பெரிய குறைபாடே . எனவே விபத்துச் சிகிச்சைப் பிரிவினை சுகாதாரத் தரப்பினர் உடனடியாக ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை புள்ளி விவரங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன. விபத்துக்குள்ளாகும் பெரும்பாலானவர்களின் தலைப் பகுதியிலேயே காயங்கள் உண்டாகின்றன. இதனால் மூளை,நரம்பு மண்டலங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. அவர்களுக்கு அவசர சிகிச்சை வழங்குவதற்குரிய நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் இங்கு இல்லாததும் நிவர்த்தி செய்யப்பட வேண்டியதே.

### கவர்ச்சி தரும் விளம்பரங்களால் தூண்டப்படும் இளையோர்

விளம்பரப்படுத்தல்களும் கூட விபத்துக்களுக்கு காரணமாகின்றன உதாரணமாக எதிர்பாலாரைக் கவரக்கூடியதாக மோட்டார் சைக்கிள் விளம்பரங்களால் இளவயதினர் உந்தப்படுகின்றனர். விளம்பரப்படத்தில் பார்த்தது போல் தாமும் கடன்பட்டும்,வெளிநாட்டுப் பணத்திலும் மோட்டார் வாகனங்களை வாங்கி கவர்ச்சிகாட்டி ஓட்ட,உந்தி விழுந்து மூக்குடைபட்டவர்களும் பலபேர் . அதுமட்டும் அல்லாமல் கவர்ச்சிகரமாக வீதி ஓரங்களில் காணப்படும் விளம்பரப் பதாகைகளை ஏறலாந்திப் பார்த்து முன்னால் வருபவருடன் விபத்துக்குள்ளாகி விழுந்தவர்களும் ஏராளம்.

### புள்ளி விபரங்கள் கூறும் செய்திகள்

தேசிய ரீதியில் விபத்துக்களின் எண்ணிக்கை

| ஆண்டு | காயமடைந்தவர்கள் | இறந்தவர்கள் |
|---|---|---|
| 2010 | 37 653 | 2721 |
| 2011 | 37 000 | 2500 |

யாழ். போதனா வைத்தியசாலையில் விபத்துக்குள்ளாகி அனுமதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை

| ஆண்டு | காயமடைந்து அனுமதிக்கப்பட்டோர் எண்ணிக்கை |
|---|---|
| 2004 | 1960 |
| 2005 | 2493 |
| 2006 | 858 |
| 2007 | 307 |
| 2008 | 340 |
| 2009 | 454 |
| 2010 | 713 |
| 2011 | 1090 |
| 2012 | 2974 |

ஒருவர் தனது தொழிலில் தவறு விடுபவராக இருந்தால்,அவருக்கு அத் தொழிலை பயிற்றுவித்த தொழில் பயிற்சி நிலையத்துக்கும் அத்தவறில் பங்கு உண்டென்று கருதுவதற்கு இடமுண்டு எனலாம்.

வீதிப்போக்கு வரத்து ஒழுங்கு விதிகள் தெரியாதவர்களும் சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பது வேடிக்கையானதே.மோட்டார் சைக்கிள் மட்டும் ஓடத்தெரிந்த ஒருவர், சகல வாகனங்களுக்குமான அனுமதிப் பத்திரம் வைத்திருக்கும் விந்தையும் நாட்டில் உண்டு. நாம் தான் சிறந்த பயிற்சிப் பாடசாலை என விளம்பரப்படுத்தலுக்கு முன்நிற்பவர்கள், அவர்களூடாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றவர் தவறாக வாகனம் செலுத்தி விபத்திற்குள்ளாகும் போது அதையும் பகிரங்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒருவர் தவறாக வாகனத்தைச் செலுத்தி விபத்திற்குள்ளாகும் போது அவருக்கு தண்டனையை வழங்குவதுடன், அவரை விசாரிப்பதுடன் பயிற்றுவிப்போரும் விசாரிக்கப்படுவதன்மூலம் விபத்துக்களை ஓரளவில் குறைக்கலாம் அல்லவா?

கடந்த ஆண்டில் யாழ்.போதனா வைத்தியசாலையைத் தவிர, யாழ்.மாவட்ட அரச வைத்தியசாலைகளில் வீதி விபத்துக் காரணமாக அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் ஆயிரத்தைத் தாண்டி உள்ளதாக அவற்றின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. விபத்தின் போது ஸ்தலத்தில் இறந்தவர்கள், தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை இதில் அடங்கவில்லை.


புள்ளி விவரங்களின் படி 2010 ஆம் ஆண்டிலும் பார்க்க 2011 ஆம் ஆண்டில் தேசிய ரீதியில் விபத்துக்களின் எண்ணிக்கையில் பெரியளவு மாற்றம் காணப்படவில்லை. ஆனால் யாழ்.குடாநாட்டில் ஆண்டு தோறும் மிகவும் உயர்வடைந்து காணப்படுகிறது. இலங்கையில் பி.ப.4.00 மணிக்கும் 9.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் கூடிய அளவு வீதி விபத்துக்கள் இடம் பெறுவதாகவும், 20-40 வயதுக்கு இடைப்பட்டவர்களே இதில் உள்ளடங்குவதாகவும் தேசிய ரீதியில் நடைபெற்ற ஆய்வுகள் கூறுகின்றன.

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் 4000 இற்கும் மேற்பட்டவர்கள் விபத்துக்கள் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதன்படி யாழ்ப்பாணத்தில் நாளொன்றுக்கு சராசரியாக 12இற்கும் மேற்பட்டவர்கள் விபத்துக்காரணமாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவதாக புள்ளி விவரங்கள் ஊடாக அறியமுடிகிறது. இலங்கையில் விபத்துக்களுக்கு முகம் கொடுக்கும் பிரதேசங்களில் முன்னிலையில் நிற்கும் பிரதேசங்களில் ஒன்றாக யாழ்ப்பாணம் இடம் பிடித்துள்ளது. அதுமட்டுமல்லாது ஏ-9 வீதி மூடப்பட்டிருந்த போது விபத்துக்கள் வெகுவாகக் குறைந்து இருந்ததையும் புள்ளி விபரம் காட்டுகிறது. கடந்த வருடம் பலமடங்காக முன் எப்போதும் இல்லாதவாறு வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளது. இது ஆபத்தின் அடையாளம். இதைத் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்னின்று உழைப்பார்களா? ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரசேகரஆஷாத்

# கூடு விட்டுக் கூடுபாயும் பயங்கரவாதச் சட்டம்



"இச்சட்டத்தின் மூலம் பொலிஸார் சில குற்றங்கள் தொடர்பாக நீதிமன்ற அனுமதியின்றியே சந்தேக நபர்களை பொலிஸ் நிலையத்தில் 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை செய்ய முடியும். கடந்த 100 ஆண்டுகளாக இருந்து வந்த சட்டத்தின் படி ஒருவரைப் பொலிஸ் நிலையத்தில் 24 மணிநேரமே தடுத்து வைக்க முடியும்.

அண்மையில் முன்னாள் பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டாரநாயக்க அவர்களை பதவியிலிருந்து நீக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்பாக அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் தனது வன்மையான அதிருப்தியை வெளியிட்டது. அப்போது ஊடகவியலாளர்களால் இலங்கைக்கு வழங்கப்படும் அமெரிக்க உதவிகள் பற்றிக் கேள்வி எழுப்பப்பட்ட போது 2012 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நிதியுதவிகள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டுக்கான நிதியுதவி தொடர்பாக அவ்விடயம் தற்சமயம் பரிசீலனையில் இருப்பதாகவும், அது தொடர்பாக இச்சமயத்தில் பதிலளிக்க முடியாதெனவும் தெரிவிக்கப்பட்டது.

இச் செய்தி வெளிவந்ததை அடுத்து இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் அமெரிக்கா இலங்கைக்கான உதவிகளை நிறுத்தினால் தங்களுக்கு சீனா உதவி வழங்கும் என சவால் விட்டுள்ளார். இலங்கையின் வெளியுறவுக் கொள்கை தொடர்பாகவும் சர்வதேசத்துடனான உறவுகள் குறித்தும் ஒரு அரச பணியாளரான பாதுகாப்புச் செயலாளர் தீர்மானமெடுக்கவோ கருத்து வெளியிடவோ உரிமை உண்டா எனக் கேள்வி எழலாம். ஆனால் அவர் அப்படி நடந்து கொள்வது இதுதான் முதற்தடவையல்ல.

தற்சமயம் இலங்கையில் குடிசார் உரிமைகள் தொடர்பாகக் காட்டப்படும் அக்கறை போதுமானதாக இல்லையெனவும் கருத்துகளை வெளிப்படுத்தல், மனித உரிமைச் செயற்பாடுகள், சுதந்திரமான நீதித்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் என்பன தொடர்பான உரிமைகள் அனுமதிக்கப்படுவது திருப்திகரமாக இல்லையெனவும் அமெரிக்க தரப்பிலிருந்து காட்டமான ஒரு கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இப்படியாக இலங்கையில் ஜனநாயக வழிமுறைகள் நிராகரிக்கப்படுவது தொடர்பாக அமெரிக்கா, கனடா, பிரிட்டன் போன்ற பல நாடுகளிலிருந்தும் கண்டனங்கள் எழும் வேளையில் இலங்கை நாடாளுமன்றத்தில் மேலும் ஒரு புதுச்சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் மூலம் பொலிஸார் சில குற்றங்கள் தொடர்பாக நீதிமன்ற அனுமதியின்றியே சந்தேக நபர்களை பொலிஸ் நிலையத்தில் 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரணை செய்ய முடியும். கடந்த 100 ஆண்டுகளாக இருந்து வந்த சட்டத்தின் படி ஒருவரைப் பொலிஸ் நிலையத்தில் 24 மணிநேரமே தடுத்து வைக்கமுடியும்.

ஞாயிறு காரம்

ஏற்கனவே அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் என்பன மூலம் ஒருவரைக் கைது செய்யவும், நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படாமலே எவ்வளவு காலமும் தடுத்து வைத்து விசாரிக்கவும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

போர் முடிவுக்கு வந்த பின்பு தொடர்ந்து விடுக்கப்பட்ட சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது. ஆனால் அதன் சில விதிகள் பயங்கரவாத தடைச் சட்டத்திற்குள் புகுத்தப்பட்டன. தற்சமயம் நாடாளுமன்றத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தால் வழங்கப்பட்ட சில அதிகாரங்கள் சாதாரணக் குற்றவியல் நீதிச் சட்டத்தில் புகுத்தப்பட்டு விட்டன.

அதாவது பொலிஸாரோ அல்லது புலனாய்வுப் பிரிவினரோ ஒருவரைத் தடுத்து வைத்து தொடர்ச்சியாக சித்திரவதைகளுக்கு உட்படுத்தவும் தாங்கள் விரும்பும் வகையிலான ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெறவும் இக்காலவரை அவசரகாலச்சட்டம், பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற விசேட சட்டங்கள் வழங்கிய அதிகாரங்களை இப்போது சாதாரண குற்றவியல் சட்டங்கள் வழங்குகின்றன.

இன்னும் சொல்லப் போனால் இத்தகைய மனித குல விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் சட்டம் மாறி சட்டத்திற்கு கூடு விட்டுக் கூடுபாய்வதற்கு நிலை பெற்றுக் கோலோச்சுகின்றன.

குற்றவியல் நடவடிக்கைக் கோவை விசேட ஏற்பாடுகள் சட்டம் நாடாளுமன்றத்தில் 77 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. மூன்றில் இரண்டுக்கு அதிகமான பெரும்பான்மையைக் கொண்ட ஒரு அரசாங்கம் 77 மேலதிக வாக்குகளால் ஒரு பிரேரணையை நிறைவேற்றுவது அப்படி ஒன்றும் பெரிய அதிசயமொன்று சொல்லி விட முடியாது.

இச்சட்டம் 15 குற்றச்சாட்டுகளுக்கு மட்டுமே பொருந்தும் எனவும் இதைப் பிரயோகிக்க ஒரு உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் அல்லது அதற்கு மேம்பட்ட அதிகாரம் உள்ளவரின் அனுமதி தேவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள குற்றங்கள் ஏற்கனவே உள்ள சட்டங்கள் மூலம் விசாரிக்கப்பட்டு வந்தன. அப்படி விசாரணையை நடத்தி முடிக்க அவகாசம் போதாத பட்சத்தில் நீதிமன்றத்தின் அனுமதியுடன் தடுத்து வைக்கப்படும் வாய்ப்பும் வழங்கப்பட்டிருந்தது. இப்போது 24 மணி நேரம் தடுத்து வைப்பை நீடிக்கும் அதிகாரம் நீதிமன்றத்திலிருந்து பறித்தெடுக்கப்பட்டு பொலிஸ் உயர் பீடத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நீதிச்சேவை தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தேசிய அளவிலும் சர்வதேச மட்டத்திலும் கடும் விமர்சனங்களுக்கு உட்பட்டுள்ள நிலையில் நீதிமன்றுக்கு உள்ள அதிகாரங்களுள் ஒன்று பறிக்கப்பட்டு பொலிஸ் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசராக முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டதை அடுத்து இலங்கையின் நீதிச்சேவைகள் சுயாதீனத்தன்மையை இழந்த முடமாக்கப்பட்டு விட்டதாகக் கண்டனங்கள் எழுந்தன. ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் காணாமற் போன ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட வெளிநாடு ஒன்றில் உயிருடன் இருப்பதாகத் தெரிவித்த அவர் இலங்கையில் ஒரு நீதிபதி முன் பிரகீத் எங்குள்ளார் என்பது கடவுளுக்குத் தான் தெரியும் எனக் கூறியது தொடர்பாகக் குறிப்பிட்ட பிரகீத்தின் மனைவி இப்படியான ஒருவர் பிரதம நீதியரசரானால் நீதிகிட்டுமா எனக் கேள்வி எழுப்பியிருந்தார்.

அது மட்டுமன்றி காணாமற் போனோர் தொடர்பான அமைப்புகள் எதிர்ப்புகளையும் கண்டனங்களையும் அதிபேருமே பீரிஸ் தொடர்பான தமது நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தியுள்ளனர்.

மொஹான் பீரிஸ் அவர்களின் நியமனம் போன்றே இந்தச் சட்டமூலமும் நீதித்துறையைப் பலவீனப்படுத்தும் ஒன்றாகவே பலரும் கூறுகின்றனர்.

ஏற்கனவே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு, தேசியப் புலனாய்வுக் கட்டமைப்பு இராணுவப் புலனாய்வுப் பிரிவு போன்ற விசேட அதிகாரம் கொண்ட அமைப்புகள் எவரையும் கைது செய்யவும், காலவரையின்றித் தடுத்து வைத்து விசாரணை செய்யவும் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றியே புனர்வாழ்வு என்ற பேரில் தடை முகாம்களுக்கு அனுப்பவும் அதிகாரம் கொண்டுள்ளன. இப்பிரிவுகளில் விசாரணை என்பது கொடிய சித்திரவதைகளுக்கு உட்படுத்தி ஒப்புதல் வாக்கு மூலம் பெறுதல் என்பதே அர்த்தமாகும் இப்படியான விசாரணைகளில் கொல்லப்படுபவர்கள் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிடுவார்கள்.

இப்போது குற்றவியல் நடவடிக்கைச் சட்டக்கோவையின் விசேட ஏற்பாடுகள் அதிகாரங்களை சாதாரண பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்குகிறது.

நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித் துறைக்குமிடையே எழுந்த முரண்பாட்டில், நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நீதித்துறையின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு முட்டுக்கட்டை போட்டு விட்டது. இதற்கெதிரான போராட்டங்கள் தொடர்ந்த போதிலும் நீதித்துறை நிறைவேற்று அதிகாரத்துடன் இணைந்து போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு விட்டது. அதற்குப் பொருத்தமானவராகவே பிரதம நீதியரசரின் நியமனம் அமைந்துள்ளது என்ற குற்றச்சாட்டையும் எவரும் இலகுவில் மறந்து விட முடியாது. இவ்வாறு நீதித்துறை பலவீனப்படுத்தப்படும் ஒரு நிலையில் மறுபுறத்தில் இச் சட்டத்தின் மூலம் பொலிஸாரின் அதிகாரம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆயுதப்படையினருக்கு ஏற்கனவே அதிக அதிகாரம் வழங்கப்பட்டது மட்டுமன்றி சிவில் நிர்வாகத்திலும் அவர்களின் தலையீடுகள் அதிகரித்துள்ளன குறிப்பாக கிழக்கின் ஆளுநர், திருமலை அரச அதிபர், வடமாகாண சபையின் ஆளுநர் ஆகியோர் இராணுவ அதிகாரிகளே மேலும் வடக்கில் ஒவ்வொரு சிவில் நிர்வாக விடயங்களிலும் படையினரின் தலையீடு இருக்கிறது.

ஒட்டுமொத்தத்தில் இது ஒரு சர்வாதிகார அரசியல் அதிகாரத்தை நோக்கி நகர்த்தப்படுவது தெளிவாகவே வெளிப்படுத்தப்படுகிறது. இதற்கமையவே சட்டவிதிகள் கூடு விட்டுக் கூடு பாய்கின்றன. பொலிஸ், ஆயுதப்படை என்பன பலப்படுத்தப்படுகின்றன.

தமிழ் மக்கள் மீதும் முஸ்லிம் மக்கள் மீதும் புலிகள் மீள் எழுகிறார்கள் எனவும், அல்-கெய்தா ஊடுருவி விட்டது எனவும் சில மாயைகளை சிங்கள மக்கள் முன்காட்டி அவர்கள் உட்பட முழு நாட்டையுமே ஒரு சர்வதிகாரப் படுகுழியில் தள்ளும் சதி முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கூடு விட்டுக் கூடு பாயும் சட்டங்கள் அவர்களின் கழுத்தையும் நெரிக்கும் நாள்கள் வெகு தொலைவில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாதமும் தமிழ் திரையுலகமும்

■ தகவோன்

இந்தியாவிலே பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கு எதிராக போராட இரண்டு அமைப்புக்கள் இருக்கின்றன. முதல் தரப்பினர் காஷ்மீர் எல்லையில் நின்று உயிரைதுச்சமென நினைத்து போராடுகின்ற ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர். மற்றைய தரப்பினர் தமிழ்நாட்டில் நின்று தமது திரைப்படங்களுக்கு கூடாக போராடுகின்றதமிழ் திரையுலகத்தினர்.

தமிழ் திரையுலகத்தில் தீவிர வாதிகளையொழிப்பதில் பேர் போனவர் நடிகர் விஜயகாந். இவரால் தவறவிடப்பட்ட தீவிர வாதிகளை அக்சன் கிங் அர்ஜீன் சுட்டுத்தள்ளிவிடுவார். இதில் விஜயகாந் தீவிர அரசியலில் இறங்கியதாலும், அர்ஜீன் மங்காத்தாவில் கொள்ளை யிட்ட பணத்துடன் வெளிநாடு ஒன்றில் தஞ்சம் புகுந்ததாலும் தீவிரவாதிகள் அளவு கணக்கில்லாமல் பெருகிவிட்டனர். இதைக் கண்டுமனம் பொறுக்கமுடியாது இது வரையில் உள்ளூர் ரவுடிகளை மட்டும் துவம்சம் செய்து வந்த நமது இளையதளபதி விஜய் வேலாயுதம், துப்பாக்கி படங்களின் மூலம் தீவிரவாதிகளை அழிக்கும் புதிய அவதாரம் எடுத்திருக்கின்றார். தற்போது உலக நாயகன் கமலஹாசன் இந்தியாவில் உள்ள தீவிர வாதிகளை மட்டும் அழித்தால் போதாது உலகம் முழுவதிலுமுள்ள தீவிரவாதிகளை அழிக்க எண்ணி விஸ்வரூபமெடுத்து அமெரிக்காவிற்கு புறப்பட்டுள்ளார். ஆனால் இதனை அனுமதிக்க முடியாதென இஸ்லாமிய அமைப்புக்கள் கமலிற்கு தடையாகநிற்கின்றன.

★ ★ ★

தமிழ் திரையுலகத்தில் காலத்திற்கு காலம் தீவிரவாதத்தினைகருவாகக் கொண்ட திரைப்படங்கள் வெளிவருவதுண்டு. இங்கு உள்ள பிரச்சினையாதெனில் தீவிர வாதக் கதைக் கருவைக் கொண்ட கதைகளில் வில்லன்களாக இஸ்லாமியர்கள் சித்திரிக்கப்படுவதே. தீவிரவாதிகள் என்றால் இஸ்லாமியர்கள் என்ற எண்ணத்தினை திரைப்படத் துறையினர் மக்கள் மத்தியில் விதைப்பதாகவும், இதனால் இந்தியாவில் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை பாதிக்கப்படும் என இஸ்லாமிய அமைப்புக்கள் தொடர்ச்சியாக குற்றஞ் சுமத்தி வருகின்றன. இவர்களின் கருத்தில் ஓரளவிற்கு உண்மையும் இருக்கத்தான் செய்கின்றது.

### இஸ்லாமியர்கள் மட்டும் தான் தீவிரவாதிகளா?

இந்தியாவை எதிர்த்து தனியே பாகிஸ்தான் தீவிரவாதிகள் மட்டும் போராடவில்லை. இந்தியாவில் மாவோயிஸ்டுகள், உள்ளூர் கிளர்ச்சிக்காரர்கள் என பலவிதமான குழுக்கள் இயங்கி வருகின்றன. அவை பற்றிய கதைக் களங்களில் தயாரிப்பாளர்கள் பொதுவாக கவனம் செலுத்துவதில்லை. எனினும் கடந்த வருடங்களில் மாவோயிஸ்டுகளை மையமாகக் கொண்ட "ஜோர்" என்ற திரைப்படமும் தமிழ் நாட்டை கலக்கியசந்தனக் கடத்தல் வீரப்பனின் கதையை மையமாகக் கொண்ட 'இராவணன்' திரைப்படமும் வெளியாகியிருந்தமை இங்கு கவனிக்கத்தக்கதாகும். இவ்வாறான ஒரு சில விரல் விட்டு எண்ணக்கூடிய படங்களை தவிர பலபடங்கள் முஸ்லிம்களை

### விஸ்வரூபம் - ஆரம்பம் முதலே பிரச்சினை

தற்போதுகமலின் விஸ்வரூபம் திரைப்படம் வெளியிடப்படுவதற்கு முன்னரே இச் சர்ச்சையில் சிக்கியிருக்கின்றது. தமிழ்த் திரையுலகில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக கோலோச்சி வரும் கமலஹாசன், விஸ்வரூபம் படத்தை வெள்ளித் திரையில் வெளியிடுவதற்கு முந்தைய தினம், டி.டி.எச் தொழில்நுட்பத்தில் வெளியிடுவதென அறிவித்தது முதலே பிரச்சினைகளும் விஸ்வரூபமெடுக்கத் தொடங்கி விட்டன.

கமலஹாசனின் இந்த புதுமையான முடிவுக்கு திரையரங்க உரிமையாளர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததால், தனது முடிவை சற்றே கமல் மாற்றிக் கொண்டார். திரை யரங்கு உரிமையாளர்களுக்கு பாதிப்பில்லாத வகையில் தனது திரைப்படம் வெளியாகும் என்று கமல் அறிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து விஸ் வரூபம் முஸ்லிம்களுக்கு எதிரான படம் என்ற கருத்து முன் வைக்கப்பட்டது. தனது படம் முஸ்லிம்களை தவறாக சித்தரிக்கவில்லை என கமலஹாசன் தெரிவித்திருந்தார். எனினும் எதிரானகுரல்கள் வலுப்பெறவே படத்தை பார்த்தால் ஆதரிப்பார்கள் என்று திடமாக நம்பிய கமல் இஸ்லாமிய தலைவர்களை கூட்டிப் படத்தை காட்டியிருக்கிறார். ஆனால் கமலின் எண்ணத்திற்குமாறாக பார்த்தவர்கள் பலர் இப்போது படத்தை வெளியிட வேண்டாம் என்று போராடி வருகின்றார்கள். இதனைச் சாட்டாக வைத்து தமிழக அரசும் படத்தினை வெளியிட தற்காலிக தடையுத்தரவு பிறப்பித்திருக்கின்றது. வருகின்ற 28 ஆம் திகதி நீதிமன்றத்தினால் இறுதி முடிவு எடுக்கப்படும் என தெரிகின்றது.

### மத்தியதணிக்கைக் குழு அனுமதித்தும் தமிழகத்தில் தடை

விஸ்வரூபம் திரைப்படத்தை இந்தியாவில் திரையிட இந்திய மத்திய தணிக்கை குழு அனுமதியளித்திருக்கின்றது. மத்திய தணிக்கைக்குழு ஏற்கனவே படத்திற்கு அனுமதி அளித்த நிலையில், ஒருபடத்தைத்தடை செய்ய மாநிலஅரசுக்குஅதிகாரம் இல்லை என மத்திய தொலைத் தொடர்புஅமைச்சர் மணிஷ் திவாரி கூறியுள்ளார்.

இதையும் மீறி தமிழக அரசு தடையுத்தரவு பிறப்பித்திருப்பது பலத்த சந்தேகங்களை தோற்றுவித்துள்ளது. அரசியல் காரணங்களுக்காகவே இத்தடையுத்தரவு விதிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் பலமாக நிலவுகின்றது. தமிழகத்தின் சில இடங்களில் படத்தைத்திரையிடும் உரிமையைகருணாநிதியின் பேரன் உதயநிதி ஸ்டாலின் பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ரிசானாவின் படுகொலையை நியாயப் படுத்திய இஸ்லாமிய மதவாதிகள் அடுத்தகட்டமாக விசுவரூபத்தைகையில் எடுத் திருக்கிறார்கள். அமெரிக்காவின் அடியாளாகசெயல்படும் சவூதி அரேபியாவின் செயற்பாடு களை பாராட்டும் இவர்கள் அதே அமெரிக்காவின் ஆசியோடு வரும் இந்தப் படத்தை கடுமையாக எதிர்க்கின்றார்கள்.

### இலங்கையில் படத்தை பார்க்காமலேயே தடை

இதில் நகைப்பிற்குரிய விடயம் என்னவென்றால் இலங்கையும் விஸ்வரூபத்திற்கு இடைக் காலத் தடை விதித்திருக்கின்றமையாகும். ரிசானாபடுகொலை செய்யப்பட்டு பல நாட்களாகியும் மூதூர் மக்களை எட்டிப்பார்க்காத முஸ்லிம் தலைமைகள் தற்போதுதமிழ் திரைப்படம் என்பதற்காக இந்தப் படத்தை எதிர்ப்பதாகவே தெரிகின்றது. இந்தியாவில் நடைபெறுகின்ற போராட்டங்கள் படத்தை பார்த்த பின்னரே உக்கிரமடைந்தது.

ஆனால் இலங்கையில் படத்தை பார்க்காமல் தடையுத்தரவு விதிக்கப்பட்டிருக்கின்றமை பலத்தசந்தேகங்களை ஏற்படுத்துகின்றது. பலலட்சம் ரூபாய் முதலீடு செய்துள்ள திரைப்பட உரிமையாளர்கள் என்னசெய்வதென்று தெரியாமல் திகைத்துநிற்கின்றார்கள்.

மதக்கலவரம் ஒன்று ஏற்பட ஒரு திரைப்படம் மட்டுமே காரணமாக முடியுமா? முடியுமென்றால் செப்ரெம்பர் 11 தாக்குதல், மும்பாய் தாக்குதல் என்பவற்றிற்கு எந்தத் திரைப்படம் காரணமாக இருந்தது.? இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தும் காட்சிகள் இருக்குமென்றால் அந்தத் திரைப்படத்தைவெளியிட இந்தியமத்திய தணிக்கைத்துறை அனுமதி அளித்தது எப்படி? என்ற கேள்விகள் இயல்பாகவே எழுகின்றன.

---

■ உசிலாமணி

# உள்நாட்டில் பறிக்கப்பட்ட உயிர்களின் உறவுகளுக்கு உதவிடும் மனம் எப்போது வரும்?

சாப்பிடுவதைத் தவிர வேறு எதற்குமே வாய் திறவாத, உலக நாடுகளுக்கெல்லாம் பொதுவானவரான பான் கீ மூனைக் கூட வாய் திறக்க வைத்தது ஓர் உயிர். ஏன் உலகில் மனிதாபிமானம் உள்ளவர்கள் என்று காட்டிக் கொள்பவர்கள் எல்லாம் கதறியது கூட அந்த ஓர் உயிருக்காகத் தான். வேறு யாருமல்ல, ரிசானா நபீக்கின் அந்த உயிர்.

ஆனால் அந்த உயிரை காப்பாற்ற அந்தச் சமூகம் முன்வரவில்லை. ஆனாலும் எல்லாம் முடிந்த பின்னர் எங்கள் 'உத்தம' ஜனாதிபதி அந்தக் குடும்பத்துக்காக தனது இரங்கலைத் தெரிவித்திருக்கின்றார். அத்துடன்மட்டுமன்றி 'இரக்க குணமுள்ள' எங்கள் ஜனாதிபதி உதவித் தொகையும் வழங்கியிருக்கின்றார். அந்த உயிரின் மதிப்பு வெறும் பத்து லட்சம்தான் என்பதை சொல்லாமல் சொல்லியிருக் கின்றார் அந்த உத்தமர்.

எது எவ்வாறு இருப்பினும் வறுமையிலுள்ள அந்தக் குடும்பத்துக்கு - இன்னொரு நாட்டவனால் பறிக்கப்பட்ட உயிருக்கு - உதவி வழங்கியது வரவேற்கத்தக்கது.

சவூதி அரேபிய நாட்டு அரசால் - அந்த நாட்டின் சட்டத்துக்கு அமைவாக குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு - ரிசானாவுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. ஓர் உயிர் பறிக்கப்பட்டது. ஆனால் எங்கள் ஈழமண்ணில் எத்தனை உயிர்கள் பறிக்கப்பட்டன. அந்த உயிர் களுக்கு எப்போது இந்த உதவி ?

பயங்கரவாதிகளிடமிருந்து மக்களை விடுவிப்பதாக தெரிவித்து இலங்கை அரசு மேற் கொண்ட போரில் அப்பாவிப் பொதுமக்கள் லட்சக்கணக்கில் கொன்று குவிக்கப்பட்டனர். எதுவுமே



> சவூதி அரேபிய நாட்டு அரசால் — அந்த நாட்டின் சட்டத்துக்கு அமைவாக குற்றச் சாட்டு நிரூபிக் கப்பட்டு — ரிசானா வுக்கு மரண தண் டனை நிறைவேற்றப் பட்டது. ஓர் உயிர் பறிக்கப்பட்டது. ஆனால் எங்கள் ஈழமண்ணில் எத்தனை உயிர்கள் பறிக்கப் பட்டன. அந்த உயிர் களுக்கு எப்போது இந்த உதவி ?

அறியாத பிஞ்சுக் குழந்தைகள் குண்டு மழையினுள் சிக்கி தங்களின் வாழ்வினை முடித்துக் கொண்டனர். கருவோடு சமாதியான பிஞ்சுகள் எத்தனை? விலை மதிக்க முடியாத உயிர்கள் முள்ளிவாய்க்காலில் கொத்துக் குண்டுகளால் கொத்தாகப் பறிக்கப்பட்டன.

உயிர் பறிப்புக்கள் [illegible] பட்டது நிதர்சனமான உண்மையாக உள்ள போதும், இதனை அரசு மறுத்தே வருகின்றது. மக்கள் உயிரிழப்புக் கள் இறுதிக் கட்டப் போரில் இடம் பெறவில்லையென்றும் அது வாதிட்டு வருகின்றது. இந்த நிலை யிலேயே சவூதி அரசால் பறிக்கப்பட்ட உயிருக்காக உதவி வழங்கி, தன்னை உத்தமராக காட்ட நாட்டின் தலைவர் முயற்சித்திருக்கிறாரோ [illegible] உண்மையிலேயே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மனிதாபிமானம் மிகுந்தவராக இருப்பின், தனது அரசால் பறிக்கப்பட்ட உயிர்களுக்கு, அந்தப் பாதிப்பால் வாழ் வாதாரத்தை இழந்து நடுத் தெருவில் நிற்கும் தமிழ் மக்களுக்கு உதவிகள் வழங்க வேண்டும். காவு கொள்ளப்பட்ட ஒவ் வொரு உயிரையும் திருப்பிக் கொடுக்க முடியாவிட்டாலும், அதனால் பாதிக்கப் பட்ட உறவுகளின் வாழ்க்கையை முன் னேற்றுவதற்கு உதவிகள் வழங்க வேண்டியது தவிர்க்க முடியாதது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு இளம் இரத்தம் பாய்ச்சும் முயற்சி

ரெங்கன்

## வெற்றி பெறுவாரா ராகுல் காந்தி



“ மாபெரும் தியாகிகளாலும் உன்னதமான தலைவர்களாலும் கட்டிக் காத்து வளர்க்கப்பட்டு தேசத்துக்கு விடுதலையைப் பெற்றுக்கொடுத்த பழம்பெரும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு இடைநடுவில் ஏற்பட்டுவிட்ட விழுக்காடுகளைச் சரிசெய்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவரும் முயற்சிக்கு அடி எடுத்து வைக்கப்பட்டுள்ளது. அது எந்தளவுக்கு வெற்றி தரும் என்பதை எதிர்காலம்தான் எடுத்தியம்பும்.

உலக நடப்புகள் ஒரு பார்வை

இந்திய அரசியலில் குறிப்பாக மத்திய அரசிலும் ஆளும் கட்சியிலும் பெரும் மாற்றங்களுக்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. இது காலத்தின் தேவைமட்டுமல்ல இந்திய அரசியல் பாரம்பரியத்தில் இயற்கையாக எழவேண்டிய பரிணாம வளர்ச்சியின் அறிகுறியாகவும் இருக்கலாம்.

இந்திய சுதந்திரத்துக்காக போராடிய தலைவர்கள் நிச்சயமாக இன்று இருக்கும் நிலையில் இந்திய நாடு இருக்க வேண்டும் என்று கனவுகூட கண்டிருக்கமாட்டார்கள்.

சாதி, சமய, இன மற்றும் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளில் இருந்து அந்த நாட்டை மீட்டெடுப்பதற்கு அவர்கள் கனவு கண்டார்கள்.

**“முப்பது கோடி சனங்களின் சங்கம் முழுமைக்கும் பொது உடைமை ஒப்பிலா சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை”**

அன்று முப்பது கோடியாக இருந்த இந்திய சமுதாயம் இன்று பல முப்பதுகளை தாண்டி சென்றுவிட்டது என்றாலும் பாரதி பாடுவதுபோல் முழுவதும் பொது உடைமையைக் கொண்ட சமுதாயம் மலரவில்லை. உலகத்துக்கு ஒரு புதுமையாக விளங்க வேண்டும் என்று அவர்கள் கண்ட பாரதமும் தோன்றவில்லை.

சாதி சமயப் பூசல்கள், இனப்போராட்டங்கள், அரசியல் தாழ்வுகள், வளர்ந்தது மட்டுமல்ல எங்கும் ஊழல் எதிலும் லஞ்சம் என்றாகிவிட்டது. லஞ்சமும் ஊழலும் உயர்மட்டங்களில் இருந்து கீழ்மட்டம் வரை பெரும் நோயாக புரையோடிக் கிடக்கிறது.

பெரும் தலைவர்கள், அதிகாரிகள், பொறுப்பிலுள்ள தலைவர்கள் அனைவருமே அரசியல் போக்கிரித்தனங்களில் மிஞ்சியவர்களாகவும் லஞ்ச ஊழல்களில் மூழ்கியவர்களாகவும் காணப்படுகிறார்கள். இந்தியாவிலுள்ள எந்த ஒரு மாநிலத்திலும் லஞ்ச ஊழல்களில் சிக்காத தலைவர் என்று குறிப்பிடக்கூடிய தலைவர் இல்லை என்ற நிலை தோன்றியிருக்கிறது.

தமிழ் நாட்டில் இப்போது பதவியிலுள்ள முதலமைச்சர் ஜெயலலிதா மீது வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்தார் என்ற குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு இன்னமும் விசாரணையில் இருக்கின்றது. பல முன்னாள், இந்நாள் அமைச்சர்கள் மீது லஞ்ச ஊழல் வழக்குகள் நிலுவையில் உள்ளன. கர்நாடகத்தில் முதல்வராக இருந்த எடியூரப்பா ஊழல் காரணமாக பதவி இழக்க நேர்ந்தது.

நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுத் தந்தவர்களான மகாத்மாகாந்தி, லோகமான்ய கங்காதர திலகர், லாலா லஜபதிராய் போன்றவர்களும் இந்தியாவின் முதல் பிரதமமந்திரியாக பதவி வகித்த பண்டிட் ஜவஹர்லால் நேரு, முதல் ஜனாதிபதியாகத் திகழ்ந்த பாபு ராஜேந்திர பிரசாத் போன்ற தலைவர்கள் இன்றைய இந்தியாவின் நிலை கண்டு கண்ணீர் வடிப்பார்கள் என்று சொல்லத்தேவையில்லை.

இந்த நிலையில் தான் புதிய மாற்றம் ஒன்றுக்கு அங்கு கட்டியம் கூறுவதுபோல் இந்தியாவுக்கு சுதந்திரம் பெற்றுத் தந்த இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்கும் வகையில் சில மாற்றங்கள் தோன்றியுள்ளன. அந்தக் கட்சியின் தலைமைத்துவத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் வயதான தலைவர்கள் ஒதுக்கப்பட்டு கட்சியின் முக்கிய பொறுப்புகளுக்கு இளம் இரத்தம் பாய்ச்சுவதற்கான முயற்சி இடம்பெற்று வருகின்றது. அந்த வகையிலேயே இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இதுவரை இருந்து வந்துள்ள ராகுல்காந்தி கட்சியின் துணைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று கூறுவது பொருந்தும்.

அண்மையில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தேசிய மாநாட்டில் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக ராகுல்காந்தி தெரிவு செய்யப்பட்டார்.

கட்சிக்கு சகல மட்டங்களிலும் இளமை இரத்தம் பாய்ச்சி முழுவீச்சில் அதனை வளர்த்தெடுப்பதற்கான முதல் முயற்சி இதுவென பலரும் கருதுகிறார்கள்.

ஜவஹர்லால் நேரு, இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி அதன் பின் சோனியாகாந்தி என்று குடும்ப வாரிசுகளின் கையிலிருந்து இப்போது காங்கிரஸ் கட்சியின் தலைமை அடுத்த தலைமுறையாக இன்னுமொரு வாரிசிடம் கையளிக்கப்படுகின்றது.

நேருவை போல், இந்திராவைப் போல் இந்தியாவின் தலைசிறந்த தலைவராக தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு மட்டுமன்றி நாட்டின் சகல மாநிலங்களிலும் அதனை வளர்த்தெடுக்க வேண்டிய அவசியம் [illegible]

முன்னைய [illegible] பெறுவதற்கு கையாண்ட முறைகளைத் தெரிந்து அறிந்து காலத்துக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்வதுடன், அவர்கள் காலத்தில் இடம்பெற்று விட்ட தவறுகளையும் கண்டறிந்து கட்சியை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு அவரிடம் கையளிக்கப்படுகின்றது.

### இளையோர் வரவேற்பு

பெரிய பொறுப்புகளை ஏற்க மறுத்து வந்துள்ள ராகுல் இப்போது கட்சியின் துணைத் தலைவர் பொறுப்பை ஏற்றிருப்பது இளைய தலைமுறையினர் மத்தியில் பெரும் வரவேற்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அந்த வகையிலேயே அவர் புதிய பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவும் அமைந்திருந்தது.

அரசியலில் இளைஞர்களுக்குரிய இடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்திப் பேசிய அவர், இளைஞர்கள் ஏன் கோபமுற்றுள்ளார்கள்? என்பதாக ஒரு கேள்வியை எழுப்பினார். அவரே பதிலும் வழங்கினார். இளைஞர்கள் கோபமுற்றிருக்கிறார்கள் ஏனென்றால் அரசியல் துறையிலிருந்து அவர்கள் அன்னியமாக்கப்பட்டுள்ளார்கள். ஒதுக்குப்புறமாக நின்று கொண்டு பெரிய அதிகார எடுப்பில் போகும் வாகனங்களைப் பார்க்கிறார்கள். அவர்களின் தொழில்வாய்ப்புகளுக்கான தேவைகளை நாம் எதிர்கொண்டாக வேண்டும்என்றார் ராகுல்.

அகில இந்திய காங்கிரஸ் ஜெய்ப்பூர் மாநாட்டில் துணைத் தலைவர் பதவியேற்புக்கு பின் அவர் பேசுகையில், காங்கிரஸ் கட்சி இப்போது என் வாழ்க்கையாகிவிட்டது. மற்றும் இந்திய மக்களும் என் வாழ்க்கையாகிவிட்டார்கள் என்றார்.

இந்திய மக்களுக்காகவும், இந்தக் கட்சிக்காகவும் நான் போராடுவேன். என்னிடமுள்ள எல்லாவற்றையும் கொண்டு போராடுவேன். உங்கள் அனைவரையும் இதில் இணைந்து கொண்டு போராட வரும்படி அழைக்கின்றேன் என்றார். மாநாட்டில் கூடியிருந்தவர்கள் முழக்கம் போல் ஆரவாரம் செய்து வரவேற்றார்கள். அங்கே [illegible] ராகுலின் [illegible] சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர்கள் மற்றும் கட்சியின் பெரும் தலைவர்கள் எல்லாம் அமர்ந்திருந்தார்கள். உரையின் பின்னர் ராகுல் தமது தாயைக் கட்டித் தழுவிக்கொண்டார். பின்னர் பிரதமரையும் தழுவிக் கொண்டார். பெரும் தலைவர்கள் எல்லாம் வந்து அவரைத் தழுவிக் கொண்டார்கள்.

### அதிகாரம் ஒருவரிடம் குவிந்துள்ளது

ராகுல் தமது பேச்சில் காங்கிரஸில் உள்ள மற்றும் பொதுவாக தலைவர்களை பின்வருமாறு சாடினார். ஒரு சிலர் தான் மத்தியில் மிகப் பெரிதாகக் குவிந்து கிடக்கும் அதிகாரங்களையும் அரசியல் வசதிகளையும் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கீழ்நிலையிலிருக்கும் மக்களை நாம் வலுப்படுத்துகிறோம் இல்லை. அமைப்பு முறைக்கு அப்பால் தாங்கள் இருப்பதாக மக்கள் நினைக்கிறார்கள். அது ஏனென்றால் நாம் அறிவாளிகளை அங்கீகரிப்பதில்லை. பதவிகளை மட்டும் தான் நாம் மதிக்கிறோம். பதவி இல்லாவிடில் ஒன்றுமே இல்லாதவராகிவிடும் நிலை. ஏன் மக்கள் ஆத்திரமுற்றிருக்கிறார்கள். அமைப்பு முறையில் இருந்து அவர்கள் அன்னியப்படுத்தப்பட்டிருப்பதே காரணம். அவர்களின் கருத்துக்கள் காலில் போட்டு மிதிக்கப்படுகின்றன. எமது அமைப்பு முறை, நீதித்துறை, கல்வி, அரசியல், நிர்வாகம் எல்லாமே அறிவாளிகளை வெளியில் இருக்கும்படி செய்யும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளன.

அடிக்கடி ஆரவாரத்துடன் சபை மேவரால் பாராட்டுக்குள்ளான 40 நிமிட நேரப் பேச்சில் அரசியல் தலைவர்களை பின்வருமாறு கண்டித்தார்.

ஊழலில் ஊறிப்போனவர்கள் எழுந்து நின்று ஊழல் ஒழிப்பைப் பற்றி பேசுகிறார்கள். அன்றாடம் பெண்களை அவமதித்துக் கொண்டிருப்பவர்கள் பெண்களை வலுவூட்டுவது பற்றி பேசுகிறார்கள் என்றார். அவர் மேலும் கூறுகையில், பெரும்பான்மை வயதுடைய நிலையிலுள்ள இளம் இந்தியாவானது எதிர்காலத்தில் ஆட்சித்துறை, தீர்மானம் எடுத்தல், நிர்வாகம் மற்றும் அரசியலில் அதிக பங்களிப்பைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

இதற்குரிய பதிலானது முற்றுமுழுதாக அமைப்பு முறையைமாற்றி அமைப்பதுதான். அமைப்பு முறை பற்றி நாம் மீளவும் சிந்திக்க வேண்டும். அவைகளை முற்றுமுழுதாக சீர்திருத்தி அமைக்க வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் பணியாள் தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள நுண்கலைக் கல்லூரிக்கு சுத்திகரிப்பும், பராமரிப்பும் செய்யக்கூடிய பெண் பணியாள் தேவை. மானிப்பாய்க்கு அண்மையில் உள்ளவர்கள் மட்டும், 04.02.2013 திங்கட்கிழமை பி.ப 3 மணி முதல் 6 மணிக்கிடையில் நேரில் வரவும்.

தொடர்பு: நடேஸ்வராலயா நுண்கலைக்கல்லூரி,
278, யாழ்ப்பாண வீதி,
(வில்லியம் மேதர் தேவாலயம் முன்பாக மானிப்பாய் மகளிர்கல்லூரி அருகில்)
மானிப்பாய்.
(28475)(6.7.11)

## நிர்வாக உதவியாளர் தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள நுண்கலைக் கல்லூரிக்கு, பெண் நிர்வாக உதவியாளர் (Administrative assistant) தேவை. நுண்கலையறிவு, நிர்வாக அனுபவம், ஆங்கில அறிவு ஓய்வு பெற்ற அலுவலர், கல்லூரிக்கு அண்மையில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
சான்றிதழ்களுடன் 04.02.2013 திங்கட்கிழமை பி.ப 3 மணி முதல் 6 மணிக்கிடையில் சமூகமளிக்கவும்.

தொடர்பு: நடேஸ்வராலயா நுண்கலைக்கல்லூரி,
278, யாழ்ப்பாண வீதி,
(வில்லியம் மேதர் தேவாலயம் முன்பாக மானிப்பாய் மகளிர்கல்லூரி அருகில்)
மானிப்பாய்.
(28477)(6.7.11)

## காணி விற்பனைக்கு

நல்லூர், அரசடி வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நல்லூர் கோயிலிலிருந்து 500m தூரத்திற்குள் உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0770048439
(28624)(6.711)

## பயிற்சி வகுப்பு

சர்வதேச வர்த்தக சந்தையில் பார்வையிட்ட பலரின் கோரிக்கைக் கிணங்க செப்புத் தகட்டில் புடைப்புச் சித்திரப் பயிற்சிக் கூடத்தில் வரும் (02.02.2013) சனிக்கிழமை பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது.
தொடர்பு: 0775115553
958/36, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
(28507)(6.711)















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DANISH REFUGEE COUNCIL

DRC's Sri Lanka program was initiated in 1998 and aims to support durable solutions for Internally Displaced Persons (IDP's) in the north and east of the country. The program includes activities in the sectors of infrastructure rehabilitation, and emergency relief, assisting IDP's as well as returning populations. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Jaffna, Mullaitivu and a liaison office in Colombo.

**Legal Officer – Mullaitivu**

The Legal Field Officer will work as a member of the Mullaitivu and Kilinochchi district team under the leadership of the Head of Office with the support from the country project team. He/ She will play a proactive role in awareness raising/ training, social mobilization, and support to vulnerable groups.

The position is in Mullaitivu with frequent travel within the district and occasionally to other districts.

**Requirements/Qualifications:**

- Law degree;
- Experience in legal representation in courts & dealing with clients;
- Experience with the legal system of Sri Lanka
- Experience working in the legal field, e.g. in a law office or legal aid capacity.
- Experience in Knowledge of IDP/returnee context and of vulnerable groups
- Fluency in English and Tamil & very good writing skills in English and Tamil.
- Ability to reside, work and travel in Killinochchi and Mullaitivu districts
- Ability to creatively overcome infrastructural limitations.
- Liaise with local authorities when needed and in accordance with DRC guidelines and regulations

**Applicants:**

- Interested candidates with required experience/qualifications are invited to submit their CV along with two non-related referees electronically to recruitment@drc-lk.org or via hardcopy to DRC, No. No.77, 1st Cross Street, Vavuniya in Word or PDF format no later than February 8th, 2013 indicating your name and the title of the position in the subject line of the e-mail. For the position of HR/Admin Officer CV's should be accompanied with a cover letter stating why you will fit for this position (maximum 200 words)
- Please note that DRC is not to be held responsible for late transmission or non timely receipt of the application.
- Only short listed candidates will be contacted.
- Successful applicants should be able to start work on short notice.
- The recruitment process will consist of written tests and interviews to be held in Vavuniya.
- Individuals of all ethnic backgrounds are encouraged to apply. As an equal opportunity employer, DRC also strongly encourages the application of women.
- Canvassing in any form will be a disqualification. (28736)(2.6.)

DANISH REFUGEE COUNCIL

DRC's Sri Lanka program was initiated in 1998 and aims to support durable solutions for Internally Displaced Persons (IDP's) in the north and east of the country. The program includes activities in the sectors of emergency relief, durable solutions, and assisting IDP's as well as returning populations. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Jaffna, Killinochchi and a liaison office in Colombo.

**Field Officer – Mullaitivu**

The Field Officer will work as a member of the Mullaitivu district team under the leadership of the Head of Office/District Coordinator/Program/Project Manager with the support from the country team. He/ She will play a proactive role in community development activities.

The position is based in Kilinochchi / Mullaitivu with daily travel within the district and occasionally to other districts.

**Qualifications:**

- University Degree in law, political science, economics or related fielcs, previous experience with DRC in a similar capacity or 5+ years relevant experience in NGO or INGO with participatory community development.
- Strong background in community development or related fields
- Experience in designing/organizing training programs for rural communities.
- Knowledge of Government structure.
- Confidence and ability to liaise with government authorities, UN agencies, NGO's and communities.
- Written and spoken English & Tamil.
- Flexibility, enthusiasm and a creative approach.
- Good knowledge of international humanitarian standards, including guiding principles on internal, sphere standards, etc.
- Computer skills in MS office, reporting and representation skills.
- Women are strongly encouraged to apply.

**Applicants:**

- Interested candidates with required experience/qualifications are invited to submit their CV along with two non-related referees, at least one of which should be a current or former supervisor, electronically to recruitment@drc-lk.org or via hardcopy to DRC, No. No.77, 1st Cross Street, Vavuniya in Word or PDF format no later than February 8th, 2013 indicating your name and the title of the position in the subject line of the e-mail. Applications will be considered on a rolling basis and the position may be filled prior to the closing date
- Please note that DRC is not to be held responsible for late transmission or non timely receipt of the application.
- Only short listed candidates will be contacted.
- Successful applicants should be able to start work on short notice.
- The recruitment process will consist of written tests and interviews to be held in Kilinochchi/Mullaitivu.
- Individuals of all ethnic backgrounds are encouraged to apply. As an equal opportunity employer, DRC also strongly encourages the application of women.
- Canvassing in any form will be a disqualification.

# வேலை வாய்ப்பு
# மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்கு
# வீட்டுப் பணிப்பெண்கள்

**இலங்கையில் சர்வதேச தரச்சான்றிதல் பெற்ற ஒரே நிறுவனத்தின் புதிய முயற்சி**

# சிங்கப்பூர் சம்பளம்-47,500/= மலேசியா சம்பளம்-36,500/=

AL/1216/9/12

AL/1216/8/12

**முற்றிலும் இலவசம்**

* உணவு * தங்குமிடம் * மருத்துவம்
* காப்புறுதி * விமானப் பயணச்சீட்டு

SI

L.L 1216

# சியோ இன்டர்நேஷனல்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம்

இல77, பீபல்ஸ் பார்க் கொம்லெக்ஸ். கொழும்பு-11

ISO 9001 BUREAU VERITAS Certification 1828 UKAS QUALITY MANAGEMENT 008

தொலைபேசி- 0727 977 977, 0727 318822, 0722 364 670

பக்ஸ்- 011 5345723 ஈமெயில்- info@siojobs.com இணையம்- www.siojobs.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 மாத
நிலையான
வைப்பு

15.5%
நிலையான வைப்பு

16.5%

உயர் நம்பிக்கை
உயர் சலுகைகள்
உயர் பாதுகாப்பு

| காலம் | மாதாந்தம் | | வருடாந்தம் | | முதிர்வு | |
|---|---|---|---|---|---|---|
| மாதம் | சாதாரண | வ.லொ.வ.வீ | சாதாரண | வ.லொ.வ.வீ | சாதாரண | வ.லொ.வ.வீ |
| 1 | 14.75% | 15.79% | | | 14.75% | 15.79% |
| 3 | 14.85% | 15.90% | | | 15.00% | 15.87% |
| 6 | 15.00% | 16.08% | | | 15.25% | 15.83% |
| 12 | 15.25% | 16.36% | 15.50% | 15.50% | 15.50% | 15.50% |
| 24 | 15.50% | 16.65% | 15.75% | 15.75% | 16.00% | 14.89% |
| 36 | 15.75% | 16.94% | 16.00% | 16.00% | 16.25% | 14.15% |
| 48 | 16.00% | 17.23% | 16.25% | 16.25% | 16.35% | 13.41% |
| 60 | 16.25% | 17.52% | 16.35% | 16.35% | 16.50% | 12.79% |

சிரேஷ்ட பிரஜைகளுக்கு 1% மேலதிக வட்டி
(55 வயதிற்கு மேற்பட்ட)

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்

லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பி.எல்.சி
மின்னஞ்சல்: lofin@lankaorix.com
இணையத்தளம்: www.lankaorix.com

துரித அழைப்பு
0773815602

# முத்து உருவாகும் விதம்

இயற்கையின் அதிசயங்களுள் ஒன்று, முத்து. எங்கோ கடலடியில் விளையும் முத்து, அழகுப் பெண்களின் கழுத்தை அலங்கரிக்கிறது.

முத்து உருவாகும் விதம் தெரியுமா உங்களுக்கு? முத்துச் சிப்பி என்ற உயிரினத்திடம் இருந்து முத்து கிடைக்கிறது. அந்த உயிரினத்தில் இருந்து முத்து கிடைப்பது வியப்பூட்டும் விடயம்.

கடல் நீரில் உள்ள கால்சியம் கார்பனேட் என்ற தாதுப் பொருளையும் மற்றும் சில அங்கப் பொருள்களையும் சிப்பி உட்கொள்வதால் முத்து தோன்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிப்பியினுள் முத்து சென்றுவிட்டால் அதற்கு ஓர் உறுத்தல் ஏற்பட்டு, தன்னிடம் உள்ள நாக்கர் என்ற ஒருவிதத் திரவத்தை அதன் மீது சுரந்து மூடிவிடும். அதைத் தெரிந்துகொண்ட சீனர்கள், சிப்பி வாய் திறந்திருக்கும்போது அதனுள், ஈயத்தால் செய்த சிறு புத்தர் சிலையைப் புகுத்தினார்கள். சிறிது காலம் கழித்து சிப்பியைத் திறந்து பார்க்கும்போது, முத்துத் திரவத்தால் புத்தர் சிலை பொதியப்பட்டிருக்கும். ஜப்பானியர்கள், சிப்பியின் வாய் வழியாகச் சிறு தானியத்தை உள்ளே தள்ளிவிடுவார்கள். அவ்வாறு தள்ளப்பட்ட தானியத்தின் மீது நாக்கர் திரவம் படிந்து, நன்கு விளைந்த முத்தாக வெளியில் எடுக்கப்படும்.

இனி, உயர்ந்த முத்துகள் எப்படி உருவாகின்றன என்று பார்க்கலாம். கடலில் உள்ள சில புல்லுருவிகள் (தம்மால் நேரடியாக உணவுப் பொருள்களை உருவாக்க முடியாமல் சத்துக்காக பிற தாவர இனங்களைச் சார்ந்திருப்பவை) சில நேரங்களில் சிப்பியின் வாய் வழியாக உள்ளே தவறிச் சென்று விடுகின்றன.

அப்போது சிப்பியின் உட்பாகத்தில் ஓர் உறுத்தல் ஏற்பட்டு, நாக்கர் திரவத்தை அதன் மீது பொழியும். அவ்வாறு பொழியும்போது அந்தப் புல்லுருவி மடிந்துவிடும். அதன் மீது நாக்கர் திரவம் பல அடுக்குகளில் படிந்துவிட, அது விலை உயர்ந்த முத்தாக மாறிவிடுகிறது. இந்த முறையிலேயே சிறு மணல் துகள்கள் உள்ளே சென்றாலும் அது முத்தாகிவிடுகிறது. ஆனால் முந்தைய முறையில் உற்பத்தியாகும் முத்துதான் மிகுந்த விலை மதிப்பு உடையதாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண்களின் கண்ணீர் அவர்களைப் பாதுகாக்கிறது

பெண்கள் தங்களது அழுகையால் காரியம் சாதிக்க கூடியவர்கள் என்று கூறப்படுவதுண்டு. ஒருவரின் காதலியோ அல்லது மனைவியோ அழும்போது அதனை அவரால் தாங்கி கொள்ள முடிவதில்லை.




எவ்வளவு கல் நெஞ்சு படைத்தவராக இருந்தாலும் அவரையும் கரையச் செய்து விடும் பெண்களின் அழுகை. இதற்கு அறிவியல் ஆய்வின் அடிப்படையில் விளக்கம் பெறும்போது, பெண்களின் கண்ணீரில் ஒரு வித வேதிப்பொருள் காணப்படுகிறது.

அது அவர்களை பார்க்கும்போது களையிழந்து காணப்படுவது போல் தோன்ற செய்கிறது. அழும் பெண்ணின் முகம் இந்த வேதிப்பொருளால் பொலிவு இழப்பதால் அவரது துணை அதனை பார்ப்பதற்கு விரும்புவதில்லை.

மேலும் கண்ணீரில் காணப்படும் வேதிப்பொருள் அவர்களை மறைமுகமாக பாதுகாக்கிறது. எவ்வாறென்றால் அழுவதை பார்க்கும் ஆண்களில் வன்முறையை தூண்டும் டெஸ்டோஸ்டீரான் அளவை அது வெகுவாக குறைக்கிறது எனவும் ஆய்வு தெரிவிக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எத்தகைய நாய்கள் உங்களுக்குப் பொருத்தம்?

நிறைய பேருக்கு செல்லப் பிராணிகள் வளர்ப்பது மிகவும் பிடிக்கும். குறிப்பாக நாய் வளர்ப்பது என்றால் ரொம்பவே பிடிக்கும். அதிலும் முதியவராக இருந்தால், தனிமை அதிகமாக இருக்கும். நிறைய நேரம் தனிமையிலேயே நேரத்தை கழிப்பதாக இருக்கும். இதனால் வீட்டில் தனியாக இருக்கும் போது, யாராவது வீட்டிற்கு வந்தாலும், சில நேரங்களில் தெரியாது. எனவே அத்தகைய வயதில் ஏதேனும் ஒரு செல்லப் பிராணியை வளர்த்தால், தனிமையை தவிர்ப்பதோடு, பாதுகாப்பும் அதிகமாக இருக்கும். அதிலும் முதியவர்களுக்கு நாய்கள் தான் உதவியாக இருக்கும். நாய்களில் பல வகைகள் உள்ளன. சில நாய்கள் நன்கு சுறுசுறுப்போடு, எப்போதும் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டே இருக்கும். மேலும் அத்தகைய நாய்கள் தன்னை வளர்ப்பவர்கள் கூட விளையாட வேண்டும் என்று ஆசைப் படும். அத்தகைய நாய்கள் முதியவர்களுக்கு சரியாக இருக்காது. ஆனால் ஒரு சில நாய்கள் நன்கு சிறியதாக, அழகாக, சரியான பாதுகாப்பைத் தரும் வகையில் இருக்கும். இப்போது முதியவர்களுக்கு எந்த மாதிரியான, எத்தகைய நாய்கள் பொருத்தமாக இருக்கும் என்று பட்டிய லிட்டு அதன்படி நாயை வாங்கி வளர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் எண்ணியபடி நாய் உங்களுக்கு உறுதுணையாக இருக்கும்.

Singapore இல் வேலை
வாய்ப்புடன் கூடிய
Hotel Management பயிற்சி

Spot Admission

ஒரே வேலை நாளில் Offer Letter தரப்படும்.
28 நாட்களில் Student Pass Visa கிடைக்கும்.

Certificate Levelக்கு - ஒரு வருட விசா.
Diploma Levelக்கு - 1 1/4 வருட விசா.
HND Levalக்கு - 2 வருட விசா.

Skill Pass கிடைத்த பின்பு PR கிடைக்கும் வாய்ப்பு.

Application Closing Date :- 31/01/2013

BRISTOL BUSINESS SCHOOL
5001 Beach Road
#04-03 Golden Mile
Complex
Singapore 199588

Regional Manager
No :01, 2nd Lane,
Power House Road,
Jaffna.
T.P - 0212219787

தொடர்புகளுக்கு - 0777751362 / 0773448706 / 0772521070

MAG
saves lives builds futures

**VACANCY – Deminer MDD team, Vavuniya**
**(Internal/External Advertisement - Contract Position)**

The Mines Advisory Group (MAG) is a British non-governmental organization undertaking humanitarian mine action across the world. MAG is operational in Sri Lanka to contribute to the safe social and economic development at a national, regional and local level by reducing the risk presented by remnants of conflict. MAG is looking for suitably skilled and experienced candidates to provide manual demining activities to support its ongoing operations.

1. PURPOSE:
The Deminer is responsible for carrying out demining, demarcation and miscellaneous team tasks in accordance with and adhering to SOP's, drills and procedures.

2. EXPERIENCE:
Minimum of two year experience as a Deminer.
Being able to communicate Sinhalese is essential; also speaking Tamil will be advantageous.
The suitable candidate should also be in possession of a valid driver's license, free of endorsements.
Previous experience working with Mine Detection Dogs (MDD) will be advantageous.

3. RESPONSIBILITIES:
Operations
- The individual understands and adheres to SOP's and drills and procedures
- The individual carries out his/her duties as directed by the supervisor.
- The individual is to carry out Quality Assurance checks as required by SOP's.
- The individual correctly uses and maintains all equipment in his charge in compliance with SOP's
- The individual wears the required protective clothing for the task in the correct manner in compliance with SOP's
- That his/her actions do not prejudice the safety, security or professional standing of MAG and its employees (as per the MAG contract of employment)
- He/she works as part as a team and helps to foster team spirit.
- He/she is able to travel and remain in the field during operational deployment.
- He/she carries out any other operational tasks as directed to meet operational requirements

General
- Work within the framework of MAG's core values, promoting its ethos and mission statement.
- Ensure familiarity with and adhere to all MAG policies and procedures.
- Undertake and apply learning from appropriate training and development programmes.
- Undertake any other duties appropriate to the post as may be required.

An attractive remuneration package including EPF, ETF and medical insurance benefits is offered to the right candidate. Interested candidates should send a CV and covering letter explaining his/ her experience in relation to the requirements of the role, together with details of two non-related referees to the following address:

Sector Manager
Mines Advisory Group (MAG)
133, 1st Lane, Kovil Road, Kurumankadu, Vavuniya
Please indicate, "Post applied for" on the top left hand side of the envelope.
Email: ashokkumar@magsrilanka.org (include "Post applied for" in the subject line)

Closing date for applications: 11th February 2013 at 17:00

Only short listed candidates will be contacted. This post is on a renewable contract basis, subject to donor funding. MAG is an equal opportunities employer, women are encouraged to apply.

(27626) (2.6.)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

eSri Lanka
smart people smart island

ICTA
ideas actioned

# "நெனசல - அறிவகம்"
# வட மாகாணத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையங்களை நிறுவுவதற்கான நிகழ்ச்சி திட்டம்

இ-இலங்கை, நிகழ்ச்சி திட்டமானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி நாட்டின் பொருளாதரத்தை அபிவிருத்தி செய்து வறுமையை ஒழித்து மக்களின் வாழ்க்கை தரத்தை கட்டியெழுப்புவதற்காக இலங்கை அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சியாகும். "நெனசல-அறிவகம்" நிகழ்ச்சி திட்டமானது கிராமிய சமூகத்தை தகவல் தொழில்நுட்பத்தால் வலுப்படுத்தும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். கிராமப் புறங்களின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு நெனசல திட்டத்தின் கீழ் நிகழ்ச்சித் திட்டம் தற்போது நாடு பூராகவும் 690 ற்கும் மேற்பட்ட நெனசல-அறிவக நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

மேற்படி வட மாகாணத்தில் நெனசல அறிவக நிலையங்களை நிறுவுவதற்கான தகவல் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறான பரந்த திட்டத்தில் தங்களது சமூக சங்கங்களையும் நிறுவனங்களையும் இணைப்பதன் மூலம் உங்களது கிராமத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கலாம்.

ஆர்வமுள்ள சமூக சங்கங்கள், சமூக நிறுவனங்கள் செயற்திட்டத்திற்கான ஆவணங்களை தங்களது பிரதேச செயலகத்துடன் அல்லது எமது நிறுவனத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். www.icta.lk இணையத்தளத்திலும் பதிவிறக்கம் செய்யலாம். பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்களை குறித்த திகதிக்கு முன்னர் கீழ் காணும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் அல்லது நேரடியாக ஒப்படைக்கவும்.

இச் செயற்திட்டத்திற்கான விண்ணப்பங்களை தெளிவான முறையில் பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்களும் செயற்திட்ட மீளாய்வு அமர்வுகளும் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

யாழ்பாணம் மாவட்ட செயலகத்தில் 07-02-2013
காலை 10:30 மணி முதல் 11:30 வரை

வவுனியா மாவட்ட செயலகத்தில் 08-02-2013
காலை 10:30 மணி முதல் 11:30 வரை

(கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்தவர்கள் மேல்கண்ட ஏதேனும் ஓரிடத்தில் கலந்துகொள்ளவும்).

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர், கிராம சேவகர் பிரிவில் வெற்றிகரமாக இயங்கும் சமூக சங்கங்களுக்கும் மற்றும் சமூக நிறுவனங்களுக்கும் முன்மொழிவு விண்ணப்பங்களை அனுப்ப முடியும். (கிராமிய அபிவிருத்தி சங்கம், மாதர் சங்கம், விளையாட்டு சங்கம் போன்ற பதிவு செய்யப்பட்ட கூட்டமைப்பு, அறக்கட்டளைகள், சபைகள், அமைப்புகள், பொது நூலகம், வணக்கஸ்தலங்கள் மற்றும் அனைத்து கிராம மேம்பாட்டு சமூக சங்கங்கள்)

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | கி: சே பிரிவு இல | கிராம சேவகர் பிரிவு |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | J49 | ஊர்காவற்துறை |
| | சங்கானை | J162 | அராலி தெற்கு |
| | சண்டிலிப்பாய் | J146 | பண்டத்தரிப்பு |
| | | J155 | இளவாலை |
| | தெல்லிப்பழை | J230 | தந்தை செல்வபுரம் |
| | உடுவில் | J196 | சுன்னாகம் தெற்கு |
| | கோப்பாய் | J268 | நீர்வேலி தெற்கு |
| | | J285 | அச்சவேலி வடக்கு |
| | கரவெட்டி | J353 | உடுப்பிட்டி வடக்கு |
| | பருத்தித்துறை | J401 | பருத்தித்துறை |
| | சாவகச்சேரி | J327 | கொடிகாமம் மத்தி |
| | | J343 | வரணி இயற்றாலை |
| | | J300 | சாவகச்சேரி நகரம் |
| | நல்லூர் | J114 | திருநெல்வேலி மத்தி வடக்கு |
| | | J118 | கோண்டாவில் மத்தி கிழக்கு |
| | யாழ்ப்பாணம் | J69 | றெக்கிளமேசன் மேற்கு |
| | | J87 | மூர் வீதி வடக்கு |
| | வேலணை | J10 | அல்லைப்பிட்டி |
| | நெடுந்தீவு | J3 | நெடுந்தீவு மத்தி மேற்கு |
| | காரைநகர் | J42 | காரை கிழக்கு |
| கிளிநொச்சி | பச்சிலைப்பள்ளி | KN87 | பளை நகர் |
| | கண்டாவளை | KN57 | புன்னைநீராவி |
| | கரைச்சி | KN08 | பாரதிபுரம் |
| | பூநகரி | KN66 | மட்டுவில்நாடு மேற்கு |
| முல்லைத்தீவு | மாந்தை கிழக்கு | MUL/09 | பாண்டியன் குளம் |
| | புதுக்குடியிருப்பு | MUL/41 | புதுக்குடியிருப்பு மேற்கு |
| | ஒட்டுசுட்டான் | MUL/75 | திருமுறிகண்டி |
| | கரைதுரைப்பற்று | MUL/103 | முள்ளியவளை மேற்கு |
| வவுனியா | வவுனியா வடக்கு | 225 | கனகராயன்குளம் தெற்கு |
| | வவுனியா தெற்கு | 212C | அவுசதப்பிட்டி |
| | வவுனியா | 214E | பண்டாரிக்குளம் |
| | | 215A | மகாரம்பைக்குளம் |
| | | 218D | சாஸ்திரிகூழாங்குளம் |
| | வெண்கலசெட்டிகுளம் | 210 | முதலியார்குளம் |
| மன்னார் | மன்னார் நகரம் | MN/65 | எருக்கலம்பிட்டி கிழக்கு |
| | | MN/81 | மூர் வீதி |
| | மாந்தை மேற்கு | MN/22 | அடம்பன் |
| | மடு | MN/38 | பெரிய பண்டிவிரிச்சான் மேற்கு |
| | நானாட்டான் | MN/99 | வங்காலை கிழக்கு |
| | முசலி | MN/144 | சிலாவத்துறை |

செயற்திட்டங்களை அனுப்ப வேண்டிய கடைசி திகதி: 27-02-2013


மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள எம்மை தொடர்பு கொள்ளவும்.
"நெனசல-அறிவகம்" நிகழ்ச்சி திட்டம் - வட மாகாணம்

இலங்கை தகவல் தொடர்பாடல தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA)
இல. 160/24, கிரிமண்டல மாவத்தை, கொழும்பு 05.
தொலை பேசி: 011-2369099 தொலை நகல்: 011-2368387
மின்னஞ்சல்: nenasala.helpdesk@icta.lk, இணையத்தளம்: www.icta.lk

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சின்னத்தம்பி கிருஷ்ணர்



மண்மகிழ
02.04.1910

விண்நெகிழ
08.02.2012

திதி: 27.01.2013

வட்டுக்கோட்டை வடக்கு, கற்பகர் சோலையைப் பிறப்பிடமாகவும், தொல்புரம் கிழக்கு மடத்துப் பிள்ளையார் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் சின்னத்தம்பி கிருஷ்ணர்**

அவர்கள் 02.04.1910 இல் இம் மண்ணில் தோன்றி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து தன் சுற்றம் சூழ பிறந்த வீடும் புகுந்த வீடும் பெருமைப்பட வாழ்ந்த ஒரு பெருமகனாவார். இவர் தன் வீட்டுக்கு முன்பாக உள்ள வீரபத்திரர் ஆலயத்தில் உள்ள வைரவர் ஆலயத்தைச் சிறப்புற அமைத்து சிவப்பணி புரிந்த தொண்டராவார். மேலும் இவர் 100 ஆவது ஆண்டு நிறைவுதினம் வலி. மேற்கு பிரதேச செயலர் மண்டபத்தில் கொண்டாடப்பட்ட முதியோர் தின விழாவின்போது கௌரவிக்கப்பட்ட சிறப்புக்கு உரித்தானவர். இவர் வாழ்ந்த காலத்தில் பல கட்டடத்தொழில் விற்பன்னர்களையும் உருவாக்கியமைக்கு புங்குடுதீவுநகரில் இவரின் கைவண்ணத்தால் உருவாகிய வீடுகளே சான்றாகும். இத்தகு மேன்மைகள் வாய்க்கப்பெற்ற இவர் 08.02.2012 இல் அமரத்துவம் அடைந்தார். இவரின் ஆண்டுத் திதி 27.01.2013 இன்றாகும். இவரின் ஆன்மா சாந்தியடைய அவரின் கொப்பாட்டப் பிள்ளைகள் சிரகப் பிரார்த்தனை செய்கின்றார்கள்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்.
வட்டுக்கோட்டை.

(26722)(2.6.7)

## மனிதர் போன்று சத்தம் எழுப்பும் திமிங்கிலம்

பெலுகா வகை திமிங்கிலங்கள் மனிதர் போன்று சத்தமிடுவதைக் கண்டு அமெரிக்க ஆய்வாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

பொதுவாக டொல்பின் மீன்களே மனிதர்கள் போன்று ஒலி எழுப்புவதாக நம்பப்பட்டு வந்தது. எந்த விலங்கும் இவ்வாறு தன்னிச்சையாக மனிதர் போன்று ஒலி எழுப்புவதில்லை.

ஆனால் திமிங்கிலங்கள் பற்றி ஆராய்ச்சி நடத்திவரும் அமெரிக்காவின் தேசிய கடல் பாலூட்டி அமைப்பு பெலுகா வகை திமிங்கிலங்கள் மனிதர் போன்று சத்தம் எழுப்புவதை கண்டறிந்துள்ளனர். இந்த திமிங்கிலங்கள் வாய் மூடிய நிலையில் மெதுவாக மனிதர்களைப் போன்று சத்தமிடுவதாக கூறியுள்ளனர். மனிதர்கள் சத்தத்தை ஞாபகம் வைத்து அதுபோன்று பேசுவதற்கு அவை தனது குரல்வளை அமைப்புகளை மாற்றுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். பேசுவதற்கு ஏதுவான அமைப்பை பெற்றுள்ள இந்த திமிங்கிலங்களை மனிதர் போன்று ஒலி எழுப்பப் பழக்குவது அவ்வளவு எளிதான காரியம் இல்லை என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.





0215671111
advt@uthayan.com
உதயன் விளம்பர தொடர்புகளுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org